3.60B

954

V23';:
N
99036.

# சிவாஜி

## மராத்திய குலோத்தாரணன்

3603/954

சென்னை
அர்ச். காபிரியேல் உயர்தரக் கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
இலந்தையடிக் கவுணிய

இரா. சிவ. சாம்பசிவ சர்மா
எழுதியது

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்
1-1 சம்புதாஸ் தெரு
ஜ்யார்ஜ்டவுன் சென்னை

பதிப்புரிமை] [விலை அணா 10

J.V.C. Press
1-1 Sembudoss St
MADRAS
3603
9SY

# நான்முகம்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டின் மறச்சுவை மிக்க மன்னர்களின் சரிதங்களோ, வீரர்களின் சரிதங்களோ மக்களால் இன்றியமையாது வேண்டப்படுவனவாம்.

மேனாட்டாரால் போற்றிப் புகழப்பட்ட நெப்போலியன் போனபார்ட்டியின் சரித்திரத்தைக் கேட்டிராதவர் யாரே? அவன் சரித்திரத்தைப் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் உடல்சிலிர்த்து மயிர்க்குச்செறிந்து தேசப்பற்று என்னும் பித்துக்கொண்டவர்களாய்ச் சுயேச்சையான வீரவாழ்க்கையை ஒவ்வொருவரும் அடைய விரும்புகின்றனர் அன்றோ?

ஒருநாட்டின் மேன்மை அந்நாட்டு வீரர்களாலன்றோ காக்கப்படுகின்றது!

இந்நாடு மேன்மையுறவேண்டுமென்றால் இந்திய வீரர்களின் சரித்திரங்களும் இன்றியமையாது வேண்டப்படுவனவாம்.

இந்நாட்டின் சுயேச்சாதிபத்தியத்தை நிலைநாட்ட மிக்கபாடுபட்ட வீரசிகாமணி 'சிவாஜி' என்னும் மன்னன் ஆவன்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாகிய சிவாஜி, தன் குலத்திற்கே ஒப்பற்ற புகழைக் 'குன்றின்மேலிட்ட விளக்கென' நிலைநாட்டிய குலோத்தாரணன் என்பதை யாவரே அறியாதார்? அவன் சரிதம் வீரச்சுவையை யூட்டும்; தேசப்பற்றை மிகுவிக்கும்; சூழ்ச்சியின் அகலத்தை விளக்கும்; ஒற்றுமையைப் பெருக்கும்; மதாபிமானத்தையும், குலாபிமானத்தையும் உண்டாக்கும்; நன்னெறியைக் கடைப்பிடித்தொழுகுமாறு செய்யும்: மற்றும்; படிப்போர்க்கு அளவிலா இன்பத்தையும் அளிக்கும்.

ஆதலின், அத்தகைய வீரமன்னது சரிதையைத் தாய்நாட்டின் மீது வைத்துள்ள பற்றின் அறிகுறியாக யான் எழுதியுள்ளேன். இதனைத் தமிழுலகம் விருப்போடு ஏற்றுக்கொள்ளும் என்பது எனது துணிபு. குற்றங் காணிற் பொறுக்க.

பொதுமறையகம்
சென்னை

இங்ஙனம்
இரா. சிவ. சா. சர்மன்

## BIBLIOGRAPHY


1. The Life of Shivaji
   by N. S. Takakhav M.A.
2. A History of the Maratta People
3. Shivaji and his Times
   by Jadhunath Sarkar M.A.
4. Selections from State Papers
   Bombay Maratta Series Vol. I.

and few other books.




## பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னோர் வரலாறு ... ... | 1 |
| 2. | ஷாஜியின் திருமணமும் சிவாஜியின் பிறப்பும் ... ... ... | 11 |
| 3. | சிவாஜியின் இளமைப் பருவம் ... | 24 |
| 4. | ஷாஜி சிறைப்படலும் மீட்சியும்... ... | 37 |
| 5. | சிவாஜியும் மொகலாயரும் ... ... | 50 |
| 6. | சிவாஜியும் பீஜபூரும் ... ... | 64 |
| 7. | சிவாஜியும் செயிஷ்டகானும் ... ... | 73 |
| 8. | சூரத்தின் முதற் கொள்ளை ... ... | 78 |
| 9. | ஜயசிங்கன் சூழ்ச்சிகள் ... ... | 86 |
| 10. | புரந்தர முற்றுகை ... ... | 90 |
| 11. | புரந்தர உடன்படிக்கை ... ... | 101 |
| 12. | சிவாஜி சிறைப்படுதலும் மீளுதலும் ... | 109 |
| 13. | இழந்தன பெறல் ... ... | 117 |
| 14. | சிவாஜி முடிபுனைந்து கொள்ளல் ... | 125 |
| 15. | கீழ்க் கொங்கண, கன்னடயுத்தங்கள் ... | 135 |
| 16. | கடற்கரை அல்லது ஜின்ஜீரா யுத்தம் ... | 140 |
| 17. | கர்நாடகப் போர் அல்லது தென்னிந்தியப் படையெடுப்பு ... ... ... | 148 |
| 18. | இறுதிக்காலம் ... ... ... | 158 |
| 19. | அரசியலும் குணாதிசயங்களும் ... | 162 |



உ

# சிவாஜி

## மராத்திய குலோத்தாரணன்

---

### 1. முன்னோர் வரலாறு

விண்முட்டும் வியன்பெருஞ் சிகரங்களையுடைய மலைகளால் சூழப்பட்டது மஹாராஷ்டிர தேசம். நதம், நதி எனப்படும் இருவகை ஆறுகள் உற்பத்தியாவதற்கு அத்தேசமே ஏற்றதாக அமைந்துள்ளது. இயற்கை அரண்களாகிய மலைகளும், சமவெளிகளும், வானுற ஓங்கி வளர்ந்த மரங்கள் நிறைந்த காடுகளும், காட்டாறுகளும் அந்நாட்டை அழகு படுத்துவனவாகும். மற்றும், பெருங் கோட்டைகள் கட்டுவதற் கேற்ற குன்றுகள் பல செறிந்திட விளங்குவது அத்தேசமே. மஹாராஷ்டிர தேசம் நீர்வளம் மிக்கது. பயிர்த்தொழில் செழித்தோங்குவதற்கு அத்தேசத்தில் வசதிகள் பல இருந்தனவெனினும் மலைநாடாதலின் குடிகளின் உழைப்பும் பெரிதும் வேண்டுவதே. இயற்கை

வனப்பு மிக்கு விளங்கும் மஹாராஷ்டிர தேசம் கண்களுக்கு ஒரு விருந்து என்றே கூறலாம். அத்தேசத்து மக்களுடைய வளர்ச்சி, உடல்வலி, உழைப்பு, குணம் முதலியனவற்றிற்கு அத்தேசமே காரணமாக விளங்கியது.

மஹாராஷ்டிரர்கள் உடல்வலி படைத்தவர்கள். காடுகளும் மலைகளும் நிறைந்த தேசத்தவர்கள் ஆகலால் மஹாராஷ்டிரர்கள் தனிப்பட்ட வாழ்க்கையை உடையவர்களாய் இருந்தனர். போக்கு வரவுக்குரிய சாதனங்கள் அத்தேசத்தில் விசேஷமாக இல்லை. மக்கள் செல்வ நிலையில் மேம்பட்டவர்களல்லராயினும், சுதந்திர உணர்ச்சியுள்ளவர்களாயும், சமூக வாழ்க்கையைச் சீர்த்திருத்தும் விருப்பமுடையவர்களாயும், போரில் ஆற்றலைத் தோற்றுவிப்பவர்களாயும் இருந்தனர். உண்மையும், வீரமும், ஒற்றுமையும் அவர்களிடம் மிக்குவிளங்கின. பிறநாடுகளோடு வர்த்தக சம்பந்தம் விசேஷமாகப் பெற்றிராமையால் தனிப்பட்ட வாழ்க்கையை அவர்கள் நடத்தி வந்தனர். சிறந்த பட்டணங்கள் பல அத்தேசத்தில் இல்லை. கிராம வாழ்க்கையையே மஹாராஷ்டிரர்கள் மகிழ்ந்து போற்றி வந்தனர்.

எல்லோரா என்பது மஹாராஷ்டிர தேசத்திலிருந்த அழகமைந்த கிராமங்கள் பலவற்றுள் ஒன்று. அச்சிற்றூர் நீர்வளம் மிக்கது. எங்கும் கரும்பும், கோதுமையும், செந்நெல்லும் ஓங்கி வளர்ந்த வயல்களால் சூழப் பெற்றது. அவ்வூரிலிருந்தவர்கள் பயிர்த்தொழிலைச் செவ்வையாக நடத்தி வந்தனர். அவ்வூருக்கு அருகில் மலைத்தொடர்கள் அழகு பெறச் சூழ்ந்திருந்தன. இயற்கை வனப்பு மிக்க அச்சிற்றூர் அதனைக் கண்ணுற்றோர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மை வாய்ந்தது.

முழு மண்டலத்தோடு சந்திரன் அமுத மொத்த நிலவினை விரித்து யாவரையும் மகிழ்வித்து ஒரு நாள் பிரகாசித்



துக் கொண்டிருந்தான். அன்று ஒரு கழனியை இருவர் காவல் புரிந்து வந்தனர். பருத்த சரீரத்தாலும், உயர்ந்த கம்பீரமான தோற்றத்தாலும், நடை உடைகளினாலும் மராத்திய வீரர்கள் என்று அவர்களைக் காண்போர் எளிதில் கூறிவிடுவர். அவர்கள் உருவத்திலும் உடையிலும் ஒரே விதமாகக் காணப்பட்டனர். அவர்கள் இருவரும் சகோதரர்கள்; ஒருவர் காவல் புரியும்போது மற்றவர் நித்திரை செய்வதும், நித்திரை செய்தவர் காவல் புரியும்போது காவல் புரிந்தவர் நித்திரை செய்வதுமாக அவர்கள் தம்முள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர்.

ஒரு சமயம் மூத்தவனான மாலோஜி காவல் புரிய வேண்டிய காலம் வந்தது. விதோஜி நித்திரை புரியச் சென்றான்.

மாலோஜி கழனியைச் சுற்றி வந்து கொண்டிருந்தான். பால் போல் வெண்ணிலவு பரந்து வீசிக்கொண்டிருந்தது. சுற்றிக்கொண்டே உற்று நோக்கிக் கொண்டிருந்த மாலோஜியின் கண்களுக்கு அழகிய கரம் ஒன்று, ஒரு புற்றினின்றும் வெளியே தோன்றிற்று. அக்கரம் நிலத்திலிருந்து புற்றிலிருந்து வெளிப்பட்டதென்பதை மாலோஜி உற்று நோக்கி அறிந்து கொண்டான். அக்கரம் விலையுயர்ந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாலோஜி நின்று உற்று நோக்கியதும் அக்கரம் மறைந்தது. அக்கரம் தோன்றி மறைந்தது மின்னொளி தோன்றி மறைந்ததைப் போலிருந்தது. மாலோஜி திகைப்படைந்து தான் கண்டது கனவோ நனவோ என்று ஐயுற்றான். விரைந்து சென்று தன் தம்பி விதோஜியை எழுப்பிக் கண்டதை அவன் நவின்றான். விதோஜி அதனைப் பொய்யென்றே எண்ணினான்; நெடுநேரம் மாலோஜி காவல் புரிந்ததால் அவனைப் படுத்துறங்கும்படி கூறிவிட்டுத் தான் காவல் புரியலானான்.

மாலோஜி படுத்துக்கொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் அயர்ந்து தூங்கி விட்டான். மாலோஜி தனக்குப் பின்புறமாக ஓர் அழகிய பெண் நிற்பதாகக் கனவு கண்டான். அப்பெண் இளம்பருவத்தை யுடையவளாகவும், பவழங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும், முகத்தை வெள்ளைத் துணியால் மூடிக்கொண்டவளாயும், நெற்றியிற் சிவந்த திலகமுடையவளாயும் கனவில் தோன்றினாள். அவள் மாலோஜியின் காதில் "எழுந்திரு! விழித்துக்கொள். உன் குடும்பத்தின் முன்னேற்றத்திலும், உன் காரியங்களிலும், எனக்கு விருப்பமும் கவலையும் ஏற்பட்டிருக்கின்றன. நான் கூறுகிறபடி நீ இப்பொழுது நடக்கவேண்டும். இவ்வயலில் ஒரு பாம்புப்புற்று இருக்கின்றது. அப்புற்றில் ஒரு பாம்பு இருக்கிறது. நானே அப்பாம்பு. நீ அங்குச் சென்று அப்பாம்பைப் பூசை செய். அதனைத் தொந்திரவு செய்யாதே. அதனை வேண்டிக் கொள்வாயானால் அது அவ்விடம் விட்டு விலகும். பின் நீ அப்புற்றைத் தோண்டினால் ஏழு பானைகள் நிறையப் பொன் நாணயங்கள் இருப்பதைக் காண்பாய். அவற்றை எடுத்து நல்வழியிற் செலவிடுவாயாக. நான் உன்னுடைய சந்ததியார்களை அரசராக்க எண்ணங்கொண்டுள்ளேன்" என்று கூறியதாகவும் மாலோஜி கனவு கண்டான். மாலோஜி கண்விழித்து நோக்கக் கனவில் தோன்றிய பவானி தேவியும் மறைந்தாள்.

மாலோஜி தம்பியைக் கூவிக் கண்ட கனவைக் கூறினான். விதோஜி அதனை நம்பவில்லை. என்றாலும் மாலோஜியின் வேண்டுகோளுக்கு அவன் இணங்கினான். அன்றிரவே அவர்களிருவரும் முறைப்படி அப்புற்றுப் பாம்பை ஆராதித்தனர். பின், அப்புற்றை இருவரும் தோண்டினார்கள். சிறிது ஆழமாகத் தோண்டியதும் கனவிற் கூறியபடி ஏழு பானைகள் நிரம்பப் பொன் நாணயங்கள் பிரகாசிப்பதை இருவரும்



கண்டு வியப்புற்றனர். மாலோஜி தேவியின் திருவருளை வியந்தான். மனத் தளர்ச்சி யடைந்திருந்த அவர்களுக்குத் தைரியமும் ஊக்கமு முண்டாயிற்று. எவ்விதத்திலாயினும் யாதவராவின் புதல்வியைத் தன் மைந்தனுக்கு மணம் முடித்து வைப்பதென அக்கணமே மாலோஜி உறுதி செய்து கொண்டான். பின், அத்திரவியங்களை ஒரு வண்டியிலேற்றிக்கொண்டு தம்மில்லம் சேர்ந்து அவற்றை ஓரிடத்தில் அவ்விருவரும் புதைத்து வைத்தனர். இவ்விரு சகோதரர்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

ஹிங்கினி, தேவல்கோன், பார்டி என்ற மூன்று கிராமங்களும் பூனா ஜில்லாவில் உள்ளன. அவை மூன்றுக்கும் பாபாஜி பான்ஸ்லே என்பவர் மணியகாரனாக இருந்தார். அவருக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தனர். மூத்தவன் பெயர் மாலோஜி பான்ஸ்லே, இளையவன் பெயர் வீதோஜி பான்ஸ்லே. குடும்பத்திற்கு நேர்ந்த யாதோ ஓர் இடையூற்றால் அவ்விருவரும் தத்தம் குடும்பங்களுடன் வெளியேறினர். அவர்கள், தௌலதாபாத் ஜில்லாவைச் சேர்ந்த எல்லோரா என்னும் கிராமத்தை யடைந்து, அங்குச் சில நிலங்களை உழுது பயிரிட்டுச் சீவனம் செய்து வந்தனர். அத்தொழில் குடும்பத்திற்குப் போதிய அளவு பொருள் வருவாயைக் கொடாமையினால் அவர்கள் உத்தியோகஞ் செய்து ஜீவிக்க முயன்றனர். ஆகலின் அவர்கள் எல்லோராவை விடுத்துச் சோங்கர் என்னும் நகருக்குச் சென்றனர். நைஸாம் ஷாகி என்னும் அரசனின்கீழ்ப் பன்னீராயிரம் சேனாவீரர்களுக்குத் தலைவனாக "மான் ஸுபேதார்" எனப்படும் உத்தியோக உரிமை வகித்து விளங்கிய லுக்கோஜி என்பவரை அவர்கள் அடைந்தனர். அவர்கள் அவரிடத்தில் காலாட்படையில் வீரர்களாக அமர்ந்தனர். அவர்களுக்கு அக்காலத்திய வழக்கப்படி மாதமொன்றிற்கு ஐந்து

பகோடாவும் (1 பகோடா என்பது ரூ. 3-10-0); தினசரி உணவுப் பொருட் செலவும் அளிக்கப்பட்டன. அவர்கள் அங்குத் தங்கள் குடும்பத்துடன் இனிது காலங்கழித்து வந்தனர்.

இளையவனான விதோஜிக்கு எட்டுக் குழந்தைகள் பிறந்தன. அவர்களில் கிலோஜி, மூலோஜி என்ற இருவரே பிரபலமடைந்தனர். மற்றவர்களைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. மூத்தவனான மாலோஜிக்கு நெடுங்காலம் புத்திரப் பேறு இல்லாமல் இருந்தது. அதனால் அவன் மனைவி வருந்தி ஆமத் நகரிலிருந்த ஷா ஷர்வ் என்னும் முகமதிய சந்நியாசி ஒருவரை அடைந்து தனக்குப் புத்திரப்பேறு அளிக்குமாறு வேண்டினாள். அப்பெரியாரின் அருளால் புத்திர பாக்கியத்தைப் பெற்றால் அவருடைய நாமத்தையே அக்குழந்தைக் கிடுவதாயும் அவள் உறுதி செய்து கொண்டாள். சில வருஷங்கள் கடந்தன; அப்பெரியாருடைய அருளால் மாலோஜியின் மனைவி இரண்டு புத்திரர்களை ஈன்றெடுத்தாள். அவள், தான் கொண்ட உறுதிப்படி முதற் குழந்தைக்கு ஷாஜி என்றும், இரண்டாவது குழந்தைக்கு ஷர்ப்ஜி என்றும் பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தாள்.

ஷாஜி மிக்க அழகு வாய்ந்தவன். அவனைக் கண்டும் அவன் கூறும் மழலைச் சொற்களைக் கேட்டும் இன்புறாதவர்கள் இல்லை. லுக்கோஜி யாதவராவ் ஷாஜியினிடம் நிறைந்த அன்பு வைத்திருந்தார். யாதவராவ் ஷாஜியின் அழகினாலும், அறிவினாலும், அழகிய சொற்களினாலும் கவரப்பட்டு அவனை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து அரண்மனையின் அந்தப்புரத்திற்கும் அழைத்துச் செல்வார். யாதவராவிற்கு ஜீஜாபாய் என்ற ஒரு பெண் குழந்தை இருந்தது. அக்குழந்தை உருவிற்றிரு எனும்படி கண்கவர் வனப்புடையது. ஷாஜியும் ஜீஜாபாயும் இன்பமாக விளையாடுவதைக்



கண்டு யாதவராவ் மனமிக மகிழ்வார். இளமைப் பருவத்திலேயே ஷாஜியும் ஜீஜாபாயும் மனமொத்த அன்புடையவர்களானார்கள். அந்நிலையில் ஷாஜிக்கு வயது ஐந்து; ஜீஜாபாய்க்கு வயது மூன்று.

அந்த வருடம் "ஹோளி" என்னும் பண்டிகை வந்தது. மராத்தியர்கள் அப்பண்டிகையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். அது அவர்களுக்கு ஒரு முக்கியமான பண்டிகையாகும். யாதவராவ் அந்தப் பண்டிகை தினத்தன்று சேனையிலுள்ளவர்களுக்கும், மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களுக்கும் ஒரு விருந்தளித்தார். அங்குக் கச்சேரிகளும், ஆடல் பாடல்களும் நிகழ்ந்தன. அப்பொழுது ஷாஜியும் ஜீஜாபாயும் அவைகளை எல்லாம் கண்டு ஆனந்தித்துக்கொண்டிருந்தனர். யாதவராவ் அவ்விரு குழந்தைகளையும் தம் மடியின்மீது எடுத்து வைத்துக் கொண்டார். அவர் அக்குழந்தைகள் இருவரிடத்தும் "குலால்" என்னும் சிவப்புப் பொடியைக் கொடுத்து அங்கிருந்தவர்கள்மீது தூவச் சொன்னார். அவர்களும் அவ்வாறே செய்தனர். அவர்கள் களித்துத் தூவி வருவதைக் கண்டு யாதவராவ் பேருவகைக் கடலுட் படிந்தார். பின், அவர் அக்குழந்தைகள் இருவரையும் ஒரு முறை கடைக்கண்ணால் பார்த்துவிட்டுச் சபையோரை நோக்கி, "மிக்க அழகுடைய செல்வி ஜீஜாபாயைக் கடவுள் எனக்கு அளித்துள்ளார். ஷாஜி அவளுடைய கணவனாவதற்குப் போதிய அழகும், அறிவும், ஆற்றலும், அன்பும் உடையவனே" என்று கூறினார்.

அவற்றையெல்லாம் அங்கு அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்த மாலோஜியும் விதோஜியும், யாதவராவ் பேருவகையாற் கூறியதை உண்மையெனக் கொண்டு எழுந்து சபையோரை நோக்கி, "இன்று நம் தலைவர் கூறியவற்றை நீங்கள் கேட்டீர்கள். மண நிச்சயத்திற்கு நீங்களே சாக்ஷி. ஜீஜாபாய்,

எங்கள் புதல்வன் ஷாஜிக்கு மனைவியானாள். சிறந்த மதிப்பும், வாய்மையும் உடைய நம் தலைவர் சபை யறியக் கூறியவைகளை நிறைவேற்ற ஒருபோதும் மறக்கமாட்டார். அவையும் பழுதுபடா" என்றனர். அவர்கள் வாய்மொழியைக் கேட்ட யாதவராவ் பதில் ஒன்றும் கூறாது சபை கலைந்ததும் தம் புதல்வியோடு கவலைகொண்ட மனத்தினராய் அந்தப்புரம் சென்றார். அன்று அவர் வழக்கம்போல் ஷாஜியை அழைத்துச் செல்லவில்லை.

யாதவராவ் அந்தப் புரத்தை அடையுமுன்னரே அங்குள்ளார்களுக்கெல்லாம் அன்று சபையில் நடந்தவை யாவும் தெரிந்தன. யாதவராவ் அந்தப் புரத்திற்குள் நுழைந்ததும் அங்கிருந்த மாதர்கள், மாலோஜியையும் விதோஜியையும் சமகௌரவம் பாராட்டித் தம் புத்திரியை ஷாஜிக்கு மணம் செய்விக்கும்படி கேட்க இடங்கொடுத்ததைப் பற்றி அவரைக் கோபித்துக் கொண்டனர். அவர்களுக்கு அவ்வளவு சிறப்பும் சுதந்திரமும் கொடுத்ததைப் பற்றி அவர்கள் வருந்தினார்கள். உணவின் பொருட்டு உழைத்து ஜீவனம் செய்ய வந்த பரதேசிகள் அவர்கள் என்பதை யாதவராவிற்கு அங்கிருந்தோர் நினைப்பூட்டினர். ஜீஜாபாய்க்குத் தகுதியான தலைவர்களும், தேச பரிபாலகர்களும் இல்லையோ ! என்று அவர்கள் யாதவராவை வினவினர். ஷாஜிக்கு ஜீஜாபாயை மணம் செய்து வைப்பது இழிவுடைமை ஆகும் என்று அவர்கள் இடித்துரைத்தனர். அவர்கள் கூறியவற்றையெல்லாம் கேட்ட யாதவராவ், உண்மையாக ஜீஜாபாயை ஷாஜிக்கு மணம் செய்து வைக்கத் தாம் கருதவில்லையென்றும், தற்செயலாய் வாய்தவறிக் கூறியவைகளை நிறைவேற்றப் போவதில்லை என்றும், இந்துக்கள் முறைப்படி விவாக நிச்சய தாம்பூலம் மாற்றப்படவில்லையென்றும், மாலோஜியும் விதோஜியும் சபையிற் கூறியபடி தம்மிடம்



கூறமாட்டார்கள் என்றும், அவர்கள் சபையில் விநோதமாகக் கூறிய சொற்களை உறுதியாகக் கொண்டதற்காக அவர்களை வேலையினின்றும் நீக்கிவிடுவதாகவுங் கூறி அந்தப்புர மாதர்களை ஒருவாறு தேற்றினார்.

மறுநாள் வழக்கப்படி யாதவராவ் எல்லோரையும் விருந்திற் கழைத்தார். முதல் நாள் நடந்தவற்றை மாலோஜியும் விதோஜியும் உறுதியாகக் கொண்டமையால் விவாகம் நடைபெறும் வரையில் முறைப்படி அவ்வீட்டில் விருந்துண்பதில்லை என்று தெரிவித்தார்கள். அவ்வார்த்தைகளைக் கேட்ட யாதவராவ் சினங்கொண்டு விருந்து முடிந்த பின் உத்தியோக சாலைக்குச் சென்று குமாஸ்தாவை அவர்கள் சம்பளக் கணக்கைத் தீர்த்து அவர்களுக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்; பின் மாலோஜியையும் விதோஜியையும் அழைத்து அவர்களை வேலையினின்றும் நீக்கிவிட்டதாகவும் கூறினார். ஜீஜாபாயை ஷாஜி மணக்கத் தகுந்தவன் அல்லன் என்றும், அவர்கள் ஒரு தினத்திற்குள் அவ்வூரைவிட்டு அகல வேண்டுமென்றும் யாதவராவ் கூறினார்.

யாதவராவின் கட்டளைப்படி மலோஜியும் விதோஜியும் தத்தம் குடும்பங்களுடன் பழையபடி எல்லோராவை அடைந்தனர். அங்கு முன்போல் பயிர்த்தொழில் செய்து ஜீவனம் செய்வாராயினர். ஆயினும் அவர்கள் குடும்ப முன்னேற்றத்தையே பெரிதும் நாடி நின்றனர். அவ்வாறு மீண்டு வந்து பயிர்த்தொழில் செய்து வருங் காலத்திற்றான் (மாசி) மகமாதத்தில் பதினைந்தாம் தேதியன்று அவர்களுக்குப் புதையல் கிடைத்தது. அவர்கள் காலையில் எழுந்து நீராடித் தினக் கடன்களை முடித்து உணவருந்தி வேலைக்குச் செல்வார்கள். ஏகாதசியன்று பட்டினி கிடந்து துவாதசியன்று அதிகாலையில் அந்தணர்களுக்கு உணவளித்துப் பின் அவர்

கள் உண்பார்கள். அவர்கள் பவானி தேவியைக் குலதெய்வமாகப் பூசித்து வந்தனர். அவர்களுடைய நல்லொழுக்கத்தையும் சிறந்த பக்தியையும் கண்டே பவானி தேவி அவர்களுக்கு அப்புதையலை யளித்தனள் போலும்!



## 2. ஷாஜியின் திருமணமும் சிவாஜியின் பிறப்பும்

மாலோஜியும் விதோஜியும் கஷ்ட ஜீவனமே நடத்தி வந்தனர். ஆயினும் ஷாஜிக்கு ஜீஜாபாயையே மணம் செய்விப்பதெனத் தீர்மானித்தனர். அவர்களுக்குப் புதையல் கிடைத்தது ஊக்கத்தை அதிகப்படுத்திற்று. மற்றும், "உன் விருப்பம் நிறைவேறும்" என்று பவானிதேவி கனவிற் கூறிய மொழிகள் அவர்களுக்கு மனவெழுச்சியை உண்டாக்கின. அவர்கள் குடும்ப நிலங்களைக் காப்பாற்ற வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு மனைவி மக்களை வேறொரு வீட்டிலிருக்கும்படி ஏற்பாடுகள் செய்தனர். பின், மாலோஜியும் விதோஜியும் சமர்குண்டி என்று வழங்கும் ஷிரிகுண்டிக்குச் சென்று அங்கு வசித்துவந்த பண்டித சேஷாவாநாயக் என்பவரைப் பார்த்தார்கள். அவர் நிறைந்த பொருளும் சிறந்த மதிப்பும் உடையவர். சகோதரர்கள் இருவரும் அவரிடத்தில் நடந்ததை நவின்று தங்களுக்கு உதவி புரியுமாறு வேண்டினர். அவரும் அவர்களுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து அவர்களுக்கு உதவி புரிவதாக வாக்களித்தார். அப்பொழுது அவர்களுக்குள் ஓர் உடன்படிக்கை உண்டாயிற்று. மாலோஜியும் அவன் வழித்தோன்றல்களும் கனவின்படி தேவியின் திருவருளால் அரசும் பலமும் பெற்றால் நாயக் வம்சத்தவரைத் தம் பொக்கிஷதாரராய் நியமிப்பது என்பதே அவ்வுடன்படிக்கையில் கண்டிருந்த விஷயமாகும். சகோதரர்கள் இருவரும் அவ்வாறே செய்வதாய்ச் சத்தியமும் செய்தார்கள். பின்னர் அப்பிரபு அவர்களை உண்பித்து நல்லாடைகளளித்து உபசரித்தார். பின் அவர், அவர்களைக் குதிரைகள் நிற்குமிடத்திற்கு அழைத்துச் சென்று ஆயிரம் குதிரைகளை வாங்கி அவைகளுக்கு வேண்டிய சேணம் முதலியவைகளை

யும், பல்லக்கு, கூடாரம், முதலியவைகளையும் வாங்கிக் கொடுத்தார். விரைவில் ஒரு படையும் சேர்க்கப்பட்டது.

அக்காலத்தில் மஹாராஷ்டிர தேசத்தில் வானங்பால், நிம்பல்கர், பால்தங்கர் என்று மூன்று கொள்ளைக் கூட்டத்துத் தலைவர்கள் இருந்தனர். அவர்களிடம் பன்னீராயிரம் வீரர்கள் அடங்கிய சேனை ஒன்று இருந்தது. சகோதரர் இருவருக்கும் அவர்கள் உதவி பெரும் பயன் அளிக்கும் என்று தோன்றிற்று. ஆகலின் முதலில் அவர்களிடம் ஒரு தூதனை அனுப்பினர். பின் மாலோஜி விதோஜி இருவரும் தாமே நேரிற் சென்றனர். இருவரும் அவர்களுக்குரிய வணக்கத்தைச் செய்து தங்கள் கருத்தைக் கூறி இரண்டாயிரம் வீரர்கள் அடங்கிய சேனையை அளித்து உதவி புரியுமாறு வேண்டினர். மூன்று கொள்ளைக் கூட்டத்துத் தலைவர்களும் அவர்கள் விரும்பியபடியே இரண்டாயிரம் வீரர்களை அளித்ததுமன்றி எச்சமயத்திலும் உதவுவதாகவும் வாக்களித்தனர். இவ்விதமாகச் சகோதரர்கள் இருவரும் மூவாயிரம் படைவீரர்களுடன் புறப்பட்டு முதன் முதலில் ஷிங்கோண்டி என்னும் கிராமத்தின்மீது படையெடுத்தனர். அதை வென்று அங்கேயே தம் சாமான்களை வைத்துவிட்டு முக்கியமாக வேண்டிய சாமான்களுடன் பல கிராமங்களின் வழியாகச் சென்று கோதாவிரி நதியைக் கடந்தனர். அங்கு ஓரிடத்தில் இரு பன்றிகளைக் கொன்று ஒவ்வொன்றின் கழுத்திலும் ஒவ்வொரு கடிதத்தைக் கட்டி அவைகளைத் தௌலதாபாத்துக் கருகாமையிலுள்ள, ஒரு பள்ளிவாசலிடம் கொண்டுவந்து போட்டுவிட்டு அந்த இரவில் கோதாவிரி நதியைக் கடந்து பால்டன் என்னும் இடத்திலிருந்த வனங்பாலை அடைந்தார்கள்.

பன்றிகளின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கடிதத்தில், எழுதியிருந்ததாவது:—"லுக்கோஜி யாதவராவ், யாவரும்



அறிய ஒரு பெரிய சபையில் தன் புதல்வி ஜீஜாபாயை எங்கள் புதல்வன் ஷாஜிக்கு மணம் செய்து கொடுப்பதாகக் கூறிப் பின் தான் சொன்ன வார்த்தைப்படி நடக்க மறுத்துவிட்டார். எங்களையும் வேலையினின்று நீக்கினார். எங்களைக் குடும்பத்துடன் வெளியேறும்படி கட்டளையிட்டார். ஆகையால் யரதவராவ் சொன்ன சொற்படி விவாகத்தை நடத்தி வைக்குமாறு அரசன் செய்தால் நன்மையாகும். இல்லையேல் அத்தேசத்திலுள்ள ஒவ்வொரு பள்ளிவாசலிலும் இறந்த பன்றி இருக்கும்" என்பதே.

மறுநாட்காலையில் ஊர் ஜனங்கள் தங்கள் வழக்கப்படி கடவுளுக்கு வழிபாடு செய்ய அப்பள்ளி வாசலுக்குச் சென்றனர். அங்கு இரண்டு உயிரிழந்த பன்றிகள் கடிதத்துடனிருப்பதை யவர்கள் கண்டனர்; கோபம் பொங்கி எழுந்தது. இருப்பினும் அரசனிருக்கையில் தாமாக ஒன்றுஞ் செய்யக் கூடாதென்று உடனே அவைகளை யெடுத்துச் சென்று நைசாம் ஷாவிடம் தாம் கண்டது கண்டபடி அவர்கள் முறையிட்டனர். அவை சுல்தானின் கோபத்தை மிகுதிப்படுத்தின. சுல்தான் கடிதத்தைப் படித்தான். அவனுக்கு யாதவராவின்மீது அடங்காக் கோபமேற்பட்டது. அவன் உடனே சில குதிரை வீரர்களை விளித்து யாதவராவை அப்போதிருக்கும் நிலையிலேயே கொண்டுவரும்படி கட்டளையிட்டான். உடனே குதிரைப்படை புறப்பட்டுச் சென்று சிந்துகர் நகரைச் சேர்ந்தது. அப்பொழுது யாதவராவ் பாதிச் சாப்பாட்டில் இருந்தார். இருந்தாலென்ன? சுல்தானின் உத்தரவு தெரிவிக்கப்பட்டது. பாவம்! அவர் சாப்பாட்டை முடித்துப் புறப்படுவதற்கும் அனுமதி யளிக்கப்படவில்லை. அரைச் சாப்பாட்டிலேயே அவரைத் தௌலதாபாத்துக் கழைத்து வந்து விட்டார்கள்.

யாதவராவ் சுல்தான்முன் சென்றதும் முறைப்படி

வணக்கஞ் செய்து ஒரு புறமாக ஒதுங்கி நின்றான். சுல்தானுக்கிருந்த கோபம் சொல்லிமுடியாது. ஆகையால் அவரிடம் ஒன்றும் கேட்காமல் இறந்த பன்றிகளைக் காண்பித்து, இரு கடிதங்களையும் கொடுத்தான். யாதவராவும் அதைப் படித்தறிந்தார். பின் சுல்தான் யாதவராவை நோக்கி, ''இவ்விதம் நீரன்றி வேறொரு தலைவனோ மற்றெவனோ செய்திருப்பின் அவனை அக்கணமே எம் யானையை விட்டு இடறச் செய்து கொன்றிருப்போம். நீர் மரியாதையும் பெருமதிப்பும், சத்தியமு முடையவராதலினாலும், உம்மிடத்து நமக்குப் பிரிய முளதாதலினாலும் உம்மை யிம்முறை மன்னித்தோம். உடனே நும் புதல்வி ஜீஜாபாயை, ஷாஜிக்கு விவாகம் செய்விப்பீராக. இவ்வாறு மறுமுறை மாலோஜியும் விதோஜியும் செய்வார்களானால் உம்முடைய தலை கொய்யப்படும். ஆகையால் கூறியபடி செய்யும்'' என்று கட்டளையிட்டான். யாதவராவ் அக்கட்டளையைக் கேட்டுத் திகைப்புற்றார். என் செய்வார்! கட்டளைப்படி செய்யலாமென்றாலோ ஷாஜி தன் நிலைக்கு மிகவும் தாழ்ந்தவன். அதனையுங் கருதாது செய்து விடலாமென்றாலோ திரும்பித் தன்னில்லம் செல்லவும் முடியாது. கடைசியாக அதற்கும் அவர் ஒரு சூழ்ச்சியைக் கண்டார். உடனே வாய்பொத்திச் சுல்தானை நோக்கி, ''அரசே! தங்கள் கட்டளைப்படி உடனே ஜிஜாபாயை ஷாஜிக்கு மணம் புரிவிக்கின்றேன். ஆனால் ஒரு வேண்டுகோள் உண்டு. அதைக் கேட்டருளல் வேண்டும்'' என்று யாதவராவ் கூறிப் பணிந்தார். சுல்தானும், தமக்கு முதலில் பணிந்துவிட்டதைக் கண்டு உவகை கொண்டு அவ்வேண்டுகோள் யாதெனக் கேட்டான். யாதவராவ், 'அரசே! மாலோஜியையும் விதோஜியையும் எனக்குச் சமான நிலையை யுடையவர்களாகத் தங்கள் சேனையில் பன்னீராயிரம் வீரர்களுக்குத் தலைவர்களாக நியமிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். பின்



தங்களிஷ்டப்படி என் மகளை ஷாஜிக்கு மணம் செய்விக்கின்றேன்'' என்று கூறினார். சுல்தானும் அவருரைத்ததைக் கேட்டு, அதுவும் நியாயமெனக் கொண்டு, அவர்களையு மழைத்து வரும்படி கட்டளையிட்டான்.

அவ்விதமே தூதர்கள் சென்று அரசவையில் நடந்தவற்றைக் கூறி அரசனது கட்டளையையும் அவர்களிடம் கூறினர். அவர்களும் தம்முடைய எண்ணங்கள் நிறைவேறியதென உவகை கொண்டு ஷாஜியையும் அழைத்துக் கொண்டு தௌலதாபாத்துக்குப் புறப்பட்டு வந்தனர். எல்லையை யவர்களடைந்ததுமே, யாதவராவும் மற்றையோரும் சென்று எதிர்கொண்டழைத்து வந்து சுல்தானிடம் கொண்டு வந்தார்கள். சுல்தான் ஷாஜியைப் பார்த்து, பேரெழிலையும், ஆண்மையையும் வீரப்பார்வையையும் புஜவலிமையையுங் கண்டு சந்தோஷித்தவனாய் முறைப்படி பன்னீராயிரம் வீரர்களடங்கிய சேனைக்குத் தலைவனாக நியமித்து அதற்கு வேண்டிய ஆடையாபரணங்களும், குதிரை, யானை முதலியவைகளும், மரியாதையையும் அளித்தான். அவனுடைய உறுப்பியல்புகளைக் கண்ட சுல்தான் வியப்புற்று அவனுடைய திருமணம் தன்னுடைய முன்னிலையில் நடந்தேற வேண்டுமென்று கட்டளையிட்டான். யாதவராவ் குடும்பத்தைச் சிந்துகரிலிருந்து வரவழைத்தான். மாலோஜி விதோஜியும் தத்தம் குடும்பங்களை எல்லோராவிலிருந்து வரவழைத்தனர். பிறகு சுல்தானுடைய முன்னிலையில் முறைப்படி ஷாஜிக்கும் ஜீஜாபாய்க்கும் விவாகம் நடந்தேறியது. அப்பொழுது எல்லோராவில் புதைத்து வைத்திருந்த திரவியங்களைக் கொண்டுவந்து, அவர்கள் எல்லோராவில் மகாதேவர் ஆலயத்திற்குத் திருப்பணி செய்தார்கள். ஒரு பெரிய குளமும் வெட்டினார்கள். சம்பு மகாதேவர் ஆலயத்தையும் திருப்பணி செய்து, யாத்திரிகர்கள் தங்க ஒரு மடம்

கட்டுவித்தார்கள். பக்கிரிகளுக்கு ஏராளமான பொருள்களைத் தானமளித்தார்கள். இவ்விதமான தருமச் செயல்களால் அவர்கள் எல்லோராலும் மதித்துப் புகழப்பட்டார்கள்.

மாலோஜி, எண்ணியதை நிறைவேற்றியதுமன்றித் தான் முன்பு யாதவராவின் சபையில் சபதம் செய்துகொண்டபடி விவாகத்தை முடித்ததையும் எண்ணி மகிழ்ந்தான். தான் கண்ட கனவு நிறைவேறும் என்னும் நம்பிக்கையும் அவனுக்கு உண்டாயிற்று. அதற்கேற்ப, ஷாஜியும் யானையேற்றம், குதிரையேற்றம், வாள்வித்தை முதலியன பயின்று பெரிய யுத்த வீரனாகவும் படைத்தலைவனாகவும் இருந்தது மன்றிப் புத்திநுட்பத்திலும் அறிவிலும் தனக்கு மிக்காரும் ஒப்பாருமில்லையெனக் கூறுமாறு விளங்கினான். ஆனால், தன்னிடம் வஞ்சித்து ஜீஜாபாயை மணம் செய்துகொண்டதாக யாதவராவ் மட்டும் ஷாஜியிடம் வெறுப்புற்றார். அவன் தனக்குச் சமமாகிவிட்டதைக் குறித்துப் பொறாமையும் கொண்டார். இப்பொறாமை பெருங் கேட்டை விளைவித்தது.

ஷாஜி, ஜீஜாபாயுடன் இன்புற்றிருக்கும் நாளில் அவனுடைய இருபதாமாண்டில் ஜீஜாபாய் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அவனுக்குச் சாம்பாஜி எனப் பெயரிடப்பட்டது. அவர்கள் மக்கட்பேறுற்றுக் களிப்புற்ற அவ்வாண்டிலேயே நைசாம்ஷா இவ்வுலகை நீத்து விண்ணுலகெய்தினர். அவனுக்கு வெவ்வேறு மனைவியரிடமிருந்து, ஏழு பிராயமுள்ள இரு புதல்வர்களிருந்தார்கள். அவ்விரு மனைவியரும் தம் புதல்வர்களைக் காப்பாற்றும்பொருட்டு உயிருடனிருந்தனர். நைசாம்ஷாவின் ஆட்சியில் சபாஜி அண்ணாஜி என்ற பெயருடைய ஒரு பெரிய இராஜ தரும நிபுணன் இருந்தான். அவன் நுண்ணறிவால் அரசனையும் தன் சொற்படி நடக்கச் செய்ய வல்லவன். அவனுடைய



அறிவும் பராக்கிரமமும் ஒவ்வொருவருக்கும் தெரிந்ததே. இரு மனைவியரும் அவனை யழைத்துத் தம் புதல்வர் இளையவர்களா யிருக்கும்பொழுது, பொறுப்பு வகித்து ஆளக்கூடிய ஆற்றலுடைய ஒருவனைப் பிரதம மந்திரிப் (vazir) பதவிக்குத் தேடிக் கொணருமாறு கேட்டுக் கொண்டனர். சபாஜி முதலிலிருந்து ஷாஜியின் நடையுடை பாவனைகளையும், நுண்ணறிவு, வீரம் முதலியவற்றையும் அறிந்தவனாதலின் அவனே அப்பதவியை வகிக்க ஆற்றலுடையவனெனக் கருதி அவனைப்பற்றி யாசிகளிடம் கூறினான். பின், அவர்கள் கட்டளைப்படி அவனையும் அவர்களிடம் அழைத்து வந்து, அறிமுகப்படுத்தி, அவனையே பிரதம மந்திரியாக நியமிக்க வேண்டினான். அவனிஷ்டப்படியே, முறைப்படி பிரதம மந்திரியாகவும் அரசிளங் குமாரர்களின் போஷகனாகவும் முடிசூட்டுவித்து, இருவிளவரசர்களையும் அவன் மடியிலிட்டுச் சிம்மாசனத்தி லமர்த்தினார்கள். அன்றுமுதல் அவனும் அரசிளங் குமாரர்களுடன் சிம்மாசனத்தி லமர்ந்து எல்லாத் தலைவர்களிடமிருந்தும் அரசன் பெறக்கூடிய மரியாதைகளைப் பெற்று வந்தான்.

குடிஜனங்களும், மற்றைத் தலைவர்களும், சபாஜியின் தேர்தலுக்கு மகிழ்ந்தனர். ஷாஜியும் தான் வகித்துள்ள பதவிக்கேற்பத் தன் கடமைகளைச் செவ்வனே செய்து வந்தான். அவனுடைய ஒழுக்கத்தைக் கண்டு மகிழாதாரும் போற்றாதாருமில்லை. ஆனால் ஒருவர் மாத்திரம் அவைகளைக் கண்டு பொறாமை கொண்டார். அவர் யாராக விருக்கக்கூடும்? தன் மருமகன் அவ்வளவு உயர்ந்த பதவியையடைந்திருப்பதைக் கண்டு களிக்கவேண்டிய யாதவராவ் அதற்கு மாறாகப் பொறாமையும் கோபமுங் கொண்டார். தன்னிடம் பரதேசி போன்று வந்து ஜீவனத்திற்கு மின்றி வேலை பார்த்த இரு சகோதரர்களின் புதல்வனான ஷாஜி

வஞ்சகமாகத் தன் மகளை மணந்து, தன்னுடைய வேண்டுகோளின்படி சுல்தானால் பன்னீராயிரம் வீரர்களடங்கிய சேனைத் தலைவனாகச் செய்யப்பட்டவன், தன்னினும் உயர்ந்த பதவியான அரசனுடைய நிலையிலிருப்பதைக் காண யாதவராவிற்கு மனம் பொறுக்கவில்லை. சுருங்கச் சொல்லில், ஷாஜி முன்னேற்றமடைவதனைத்தும் யாதவராவின் கோபத்தை விருத்தி செய்தது. அவர் வந்து புதிய தர்பாரில் வணங்குவதற்கு முன்பே தன் தூதனொருவனை ஒரு கடிதத்துடன் டில்லி நவாபின் தக்காணத் தலைவராகிய ஷாஜஹானுக்கு அனுப்பினார். அக்கடிதப்படி, நவாபின் பிரதிநிதியான மீர்ஜும்லா, தன்னுடைய அறுபதினாயிரம் சேனைவீரர்களுடன் அவருக்கு உதவிசெய்ய வந்தான். யாதவராவ் மற்றைத் தலைவர்களுடன் நருமதை நதிக்கரைக்குச் சென்று அவனுக்குத் தௌலதாபாத்துக்கு வழிகாட்டி முன் சென்றார்.

இவையெல்லாம் ஒற்றர்களால் ஷாஜிக்குத் தெரிய வந்தன. அவன் எதிராளியின் படைவலியைக் கண்டறிந்தான்; தன்னுடைய படைவலியையும் உணர்ந்தான். அப்போது அவர்களை எதிர்ப்பதைவிட அரசிகளையும் குமாரர்களையும் முதலில் தப்புவிப்பதே தன் முதற் கடமையாக அவன் கருதினான். உடனே, காலதாமதமின்றி அரசிகளையும் தன்னுடைய பொறுப்பிலிருந்த இளவரசர்களையு மழைத்துக்கொண்டு சேனையுடன் கல்யாணி நகரை நோக்கிச் சென்றான். அங்குச் சென்று முகூலிக் கோட்டையில் அவர்களைப் பத்திரப் படுத்தினான். யாதவராவும் மீர்ஜும்லாவும் அவர்களை அங்கும் விடாமல் பின்பற்றிச் சென்று அக்கோட்டையை முற்றுகையிட்டனர். ஆறுமாத காலம் ஷாஜியும் முற்றுகையை எதிர்த்து நின்றான். முற்றுகை அவ்வளவு நீடித்த காலம் நடந்தேறியதால் ஷாஜி மிகவும் கஷ்டப்




பட்டான். உணவுப் பொருள்கள் வரத் தடையுண்டாயிற்று. கடைசியில் வேறுவகை ஒன்றும் அறியாதவனாய்ப் பீஜபூர் சுல்தானுடைய உதவியைப் பெற நிச்சயித்தான். அதன் பொருட்டு ஒரு தூதனிடம் கடிதம் ஒன்றை எழுதி, டில்லிச் சக்கரவர்த்தி தனக்கு விரோதமாகப் படையெடுத்து வந்திருப்பதால் தன்னை அப்போது காப்பாற்றினால், தான் சுல்தானிடம் வேலையிலமர்வதாயும் தன்னுடைய சேனையுடன் அங்கு வந்து சேருவதாயும் பீஜபூர் சுல்தானுக்குத் தெரியப்படுத்தினான். அவ்விண்ணப்பத்தைக் கண்ணுற்ற சுல்தான் தன்னுடைய திவானை யழைத்து ஷாஜியின் வேண்டுகோளை நிறைவேற்றுமாறு கட்டளையிட்டான். திவானும், உடனே, தன்னிடம் வந்து சேரும்படி ஷாஜிக்குக் கடித மெழுதினான். அதன்படி ஷாஜி முகூலிக் கோட்டையிலிருந்து ஜீஜாபாயுடனும் சாம்பாஜியுடனும், சேனையுடனும் பீஜபூரை நோக்கிச் சென்றான். அதைக் கேட்ட யாதவராவும் மீர்ஜும்லாவும் இரவுக்கிரவே பந்தம் பிடித்துக் கொண்டு யானைமீதேறி அவனைப் பின்பற்றிச் சென்றார்கள். அச்சமயத்தில் ஜீஜாபாய் சிவாஜியை எழுமாதம் கருத்தரித்திருந்தாள். ஆதலால் அவள் குதிரையேறிச் செல்வதாலுண்டாகும் துன்பத்தைப் பொறுக்க முடியாதவளானாள். அவ்வாறிருந்தும் முடிந்தவரை முயன்று ஐந்தாறு [illegible] தூரம் அவள் வந்தாள். அதன்பின் வயிற்றுவலி யதிகரிக்கவே அவள் ஓரடியும் குதிரை மீதமர்ந்து செல்ல இயலாதவளானாள். ஷாஜி என்ன செய்வான்? பாவம்! அவளை விட்டுச் செல்ல மனமொப்பவில்லை. அவளுடனிருக்கலாமென்றாலோ பகைவர் பின்தொடர்ந்து வருகின்றனர் என்பதையும் அவன் அறிந்திருந்தான். உயிரையே இழக்க நேரிடினும் நேரும் என்பதை யுணர்ந்த ஷாஜி செய்வதறியாது திகைத்தான். பின், "எல்லாம் இறைவன் செயல்" எனக் கொண்டு ஒரு

முடிவுக்கு வந்தான். உடனே நூறு குதிரை வீரர்களை யவனுக் குதவியாக வைத்துவிட்டுத் தான் தப்பவேண்டு மென்றும், யாதவராவ் பெருந்தன்மை யுடையவராயின் தன் மனைவியும் அவர் புதல்வியுமான ஜீஜாபாயை ஒன்றும் செய்யக்கூடாதென்றும் கூறிப் பின் தன் புதல்வன் சாம்பாஜியை யழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

மறுநாட்காலையில் ஜீஜாபாயிருந்த விடத்திற்கு யாதவராவ் சேனையுடன் வந்து சேர்ந்தார். யாதவராவ் அவளைக் கண்டார். அவர் அவளுடைய பரிதாப நிலையை எள்ளளவும் சிந்திக்கவில்லை; அவளைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால் அவருடைய பணியாளரில் சிலர் அவள்மீதிரக்கங் கொண்டு அவரிடம் சென்று, "தலைவ! எங்கள் வார்த்தையைக் கேட்டருள்க. ஜீஜாபாயோ ஒரு பெண், தமது அருந்தவப் புதல்வி; அதிலும் இது சமயம் அவள் கர்ப்பவதி. அவளைத் தாங்கள் கவனியாதிருப்பது நியாயமன்று. பின்னும் அவள் தமது ஆளுகையிலிருப்பது மீர்ஜும்லாவுக்குத் தெரிந்தால் கஷ்டமாக முடியினும் முடியக்கூடும். எப்படியிருந்தாலும் தங்களுக்கு ஷாஜிதான் விரோதியேயன்றி ஜீஜாபாயன்று. அவள் ஒரு பேதை. ஆகையால் அவளைக் காப்பாற்றுதல் தங்களுடைய கடமையே யாகும்" எனப் பற்பல கூறினர். யாதவராவ் அவைகளைக் கேட்டுத் தீரச் சிந்தித்து, நியாயமறிந்து, அவளிடம் சென்று, அவளை யன்புடன் உபசரித்துப் பின் ஐந்நூறு வீரர்களடங்கிய சேனைப் பாதுகாப்புடன் நைசாம் ஷா ஆட்சிக்குட் பட்டதும் ஷாஜியின் சொந்தமானதுமான சிவனேரிக் கோட்டைக் கனுப்பினர்.

ஜீஜாபாயும் சிவனேரிக் கோட்டையை யடைந்து அங்குத் தனக்கு நேர்ந்த அவமானத்தைத் தீர்த்துக்கொள்ளவும், இந்துக்கள் முன்னேற்றமடையவும், இந்தியாவில்





சிவனேரிக் கோட்டை

தனியரசு நாடு ஒன்றை நிலைநாட்டவும் ஒரு புதல்வனை யருளுமாறு தன் குல தெய்வமான பவானிதேவியை வேண்டிக்கொண்டிருந்தாள். அப்படியே ஒரு புதல்வனைப் பெற்றாள். ஜீஜாபாய் அவனுக்குச் சிவ பவானியின் நாமமிடுவதாயும் வாக்களித்தாள். அவ்வாறே ஜீஜாபாய் கி. பி. 1627-ம் ஆண்டு மே மாதம் 16-ந் தேதி ஓர் இளஞ் சூரியனை யொத்த தோற்றமும், பிரகாசமும் பொருந்திய மகவை ஈன்றாள்; முறையே அம்மகவுக்கு வேண்டுகோட்படி சிவாஜி



என நாமமிடப்பட்டது. சிலர் அவன் சிவபெருமானுடைய அவதாரமெனவே கூறுவர். அவனது பிறப்பிற்கு மற்றொரு கதையுமுண்டு. அதாவது:-ஷாஜி, சந்நியாசியார் ஒருவரிடம் ஒரு மாங்கனியைப் பெற்றதாகவும் அதைத் தானும் ஜீஜா



பாயும் உண்டு சிவாஜியை ஈன்றதாகவும் கனவுகண்டு அதன்படி பிறந்த சிவாஜி சிவபெருமானின் அவதாரம் எனவும் கூறுவர். அதே சந்நியாசி ஷாஜியின் கனவில் தோன்றி, "ஜனங்களைக் காத்தற் பொருட்டுச் சிவபெருமானே தோன்றியுள்ளார். உன் புதல்வன் ஒரு முகமதியனுக்குச் சலாம் செய்யமாட்டான். அவனைச் சலாம் செய்யுமாறு வற்புறுத்தாதே. அவனுக்கு வயது பன்னிரண்டான பிறகு அவன் இஷ்டப்படி விட்டுவிடு. அவன் ஒரு பெரிய அரசனாவான். அநேக இராஜ்யங்களை வென்று கைக்கொள்வான். அவன் பரம்பரையோர் அரசு புரிவர். உன் மைந்தன் நல்லவனாகவும், சத்தமுடையவனாகவும் இருப்பான். அவன் அஞ்சா நெஞ்சமும், வலிமையும் படைத்தவனுமாவான். அவனது புயவலிமையால் ஜனங்கள் விடுதலையடைவர்" என்று கூறினார் என்பதாம்.

ஷாஜி பீஜபூர் வந்து சேர்ந்தான். அவன் திவானுதனி கொண்டு சுல்தானைக் கண்டான். சுல்தானும் அவனை மரியாதையுடன் வரவேற்று மரியாதைக்காக ஆடை, குதிரை, யானை முதலியவைகளைப் பரிசளித்துப் பன்னீராயிரம் வீரர்கள் கொண்ட ஒரு சேனைக்குத் தலைவனாக நியமித்துக் கர்நாடக தேசத்தில் ஒரு ஜாகீரும் கொடுத்தான். அதன் பின் மீரஜும்லாவும் நவாப் கட்டளைப்படி தன் சேனையுடன் டில்லிக்குச் சென்றான். யாதவ்ராவ் அவனை நருமதை நதிக் கரை வரைசென்று வழியனுப்பி விடைபெற்றுச் சிந்துகர் வந்துசேர்ந்தான்.

## 3 ஷாஜி பீஜபூர் அடைதலும் சிவாஜியின் இளமைப் பருவமும்

ஷாஜி, கைசாம்ஷா மனைவியரையும் மக்களையும் முகூலிக்கோட்டையில் விட்டுவிட்டுத் தப்பியோடிப் பீஜபூரை யடைந்த பிறகு, சபாஜி அன்னாஜி முகூலிக் கோட்டைக்குச் சென்று அவர்களை மீண்டும் தௌலதாபாத்துக்கு அழைத்து வந்தான். அரசியர் மறுமுறையும் சபாஜியை வருவித்துப் பிரதம மந்திரிப் பதவிக்கு ஒரு தகுதியானவனைத் தேடும்படி கேட்டுக்கொண்டனர். அதற்கவனு மிசைந்தான். அதே சமயத்தில் தௌலதாபாத்துக்குமேலிக் ஆம்பர் என்றொருவன் வந்தான். அவன் பீஜபூர் சுல்தானுடைய பிரதம மந்திரியான செங்கிஸ்கானிடம் உத்தியோகம் பெற்றிருந்தவன். செங்கிஸ்கான் இறந்த பிறகு, இவ்வுலகத்தை வெறுத்து, முகமதியப் பக்கிரியாகி, மெக்கா செல்லவேண்டுமென்னும் விருப்ப மேலீட்டினால் அவ்வழியே வந்தான். அவன் ஒரு கடையில் தன் ஆடைகளைக் களைந்து வைத்துவிட்டுத் தூங்கச் சென்றான். அதே சமயத்தில் சபாஜியும் அவ்வழியாகப் பல்லக்கிலமர்ந்து சென்றான். போகும் பொழுது ஆம்பரின் கால்களில் விதிவசத்தால் அவன் மந்திரிப் பதவியை வகிக்கத் தக்க தன்மையுடையவனென விளக்கும் சில குறிகளைக் கண்டான்; அவன்தான் அப்பதவியை வகிக்க ஆற்றலும் தகுதியும் உடையவன் என்றும் அறிந்தான்.

பின், சபாஜி வேலையாளொருவனை யனுப்பி அவனை யழைத்து வரும்படி கட்டளையிட்டான். ஆம்பரும் வந்து சேர்ந்தான். வந்தவனை மரியாதையுடன் வரவேற்று, மங்களஸ்நானஞ் செய்வித்து, அத்தர் முதலிய நறுமணங் கமழும்



வாசனைத் திரவியங்களிட்டு, ஆடை, உண்டி முதலியன வளித்துச் சபாஜி அவனைத் தனியறைக்கு அழைத்துச் சென்றான். சபாஜி அங்குத் தன் கருத்தைக் கூறித் தன்னிடத்து நன்றியுடையவனாகவும், உண்மையுடையவனாகவும் இருப்பதனால் அவனைப் பிரதம மந்திரியாகவும், இளவரசர்களின் போஷகனாகவும் நியமிப்பதாகத் தெரிவித்தான். 'தானாக வரும் சீதேவியைத் தள்ளுவாருமுண்டா?' உடனே ஆம்பரும் இசைந்தான். பின்னர் சபாஜி அவனை அரசிமார்களிடம் அறிமுகப்படுத்தினான். அரசிமார்களும் சபாஜி வார்த்தையைத் தட்டாமல் அவனிஷ்டப்படியே அவனுக்கு மந்திரிப் பட்டம் சூட்டினார்கள். அரசகுமாரர்களும் அவன் மடியிலமர, அவன் போஷகனாக ஏற்படுத்தப்பட்டான். அன்று முதல் அவன் அரசிளங்குமாருடனிருந்து ஆட்சி புரிந்து வந்தான்; உடனே தன்னுடைய நியமனத்தை எல்லாத் தலைவர்களுக்கும் தெரிவித்தான். அக்கட்டளைப்படி யாதவராவும் மற்றைத் தனவந்தர்களும் வந்து தத்தம் நிலைமைக்கேற்ப முறைப்படி மேலிக் ஆம்பரைப் பணிந்தனர்.

மேலிக் ஆம்பரும் தான் வகித்துள்ள இராஜ்யபாரத்தை முறைப்படி செங்கோல் செலுத்தி இனிது வாழ்ந்துவந்தான். டில்லி சென்ற மீர்ஜூம்லா வாளாயிராமல் பாதுஷாவிடம் தக்காணத்தையும், அதிலும் தௌலதாபாத்தையும்பற்றிப் பலவாறு கூறப் பாதுஷாவும் அதன்மீது படையெடுக்க உத்தரவளித்தான். அது தெரிந்ததும் மேலிக் ஆம்பர் வாளாயிருப்பனோ? அவனும் ஒரு பெரும்படையைத் திரட்டிக்கொண்டு சென்று ஹவஷூர் கோட்டைக்குச் சமீபத்தில் பர்ஹான் பூர்ப்பாதையில் பகைவரைச் சந்தித்துக் கடும்போர் விளைவித்தான். அச்சண்டையில் சிறிது காயமடைந்த போதிலும் எதிரியை முற்றும் தோற்கடித்து மீர்ஜூம்லா உடனே டில்லிக்குத் திரும்பியோடும்படியாகத் துரத்தியடித்-

தான். அத்தகைய வெற்றி கிடைத்தது தன் போஷகன் செங்கிஸ்காளின் ஆசிர்வாதத்தால் எனக்கொண்டு அவனுடைய ஞாபகார்த்தமாக அதுமுதல் "கடவுளின் அடிமை மேலிக் ஆம்பர் செங்கிஸ்காணி" என்று கையொப்ப மிடுவானானான்.

அத்துடன் வாளாவிராமல் அறுபதினாயிரம் வீரர்களடங்கிய பெரும்படையைத் திரட்டிக்கொண்டு பீஜப்பூரைச் சார்ந்த முரூர், மகாதேவ் முதலிய ஜில்லாக்களின்மீது படையெடுத்துக் கொள்ளையடித்தான். அச்சங்கதி பீஜபூர் சுல்தானுக்குத் தெரிந்தது. அவன் மிகுந்த கோபங் கொண்டவனாய்த் தனது முக்கியமான தளகர்த்தர்களான மோரார் ஜகதேவ், ஷாஜி, ஷேர்ஸாகான் முதலியவர்களையும் மற்றுமுள்ள தலைவர்களையும் அழைத்து எண்பதினாயிரம் வீரர்களடங்கிய ஒரு பெரும்படையைத் திரட்டி மேலிக் ஆம்பரை எதிர்க்கும்படி உத்திரவிட்டான். அவர்கள் தன் மீது படையெடுத்திருப்பதையும், எதிரிகளின் வலிமையையுங் கண்ட ஆம்பர், அப்பொழுது முரட்டுத்தனமாய்ச் சண்டையிடுவது நன்மை பயக்காதெனவறிந்து பீமாநதிக் கரைக்கோடினான். துன்பம் வந்தாற் தொடர்ந்து வருமன்றோ? அவனது துரதிர்ஷ்டத்தால் அவ்வாற்றில் நீர்ப்பெருக்கு அதிகமாகவிருந்தது. அதைப் படகுகளின்றிக் கடக்கவும் முடியாது. பாவம்! என் செய்வான்? அங்கு ஒரு படகும் கிடைக்கவில்லை. இருதலைக் கொள்ளியினிடை யகப்பட்ட எறும்புபோலானான். திரும்பிச் சென்றால் எதிரிகள் பிடித்துக்கொள்வார்கள். தப்பியோடவோ நதியிடங் கொடுக்கவில்லை. அந்திய காலத்தில் கடவுளைத் தவிர வேறு கதி ஏது? உடனே ஆம்பர் தன் குதிரையினின்று மிறங்கிக் கடவுளைத் தொழுது, தனது சேனைகள் தப்பிப் பிழைக்கும் பொருட்டு இடங்கொடுத்தருளுமாறு நதியை வேண்டினான். அவன் வேண்டுகோளுக் கிரங்கி நதியும் இரண்டாகக் குறுக்கே



பிளந்து இருபுறமும் நீர் சுவர்போல் நின்றது. அவன் முதலில் சேனையைக் கடக்கவிட்டுத் தான் கடைசியில் கடந்து அப்புறஞ் சென்றான். சென்றதுதான் தாமதம்! உடனே ஜலம் ஒன்றுசேர்ந்து கொண்டது. மோரார், ஜகதேவ் முதலியவர்கள் வந்து சேர்ந்தனர். எல்லோரும் ஆம்பர் எப்படி அக்கரை சேர்ந்தானென வியப்புற்றனர். படகுகளுங் கிடையா. பின் நடந்தவற்றைக் கேள்வியுற்றுத் திருவருளை வியந்து கடவுளை ஆம்பரைக் காப்பாற்றியருளியதால் தாம் அவருக்குத் தீமை செய்தல் நன்றன்றெனத் தீர்மானித்து, அவர்கள் ஆம்பருக்கு ஒரு தூதுவன் மூலமாகத் தாம் அவரைத் துரத்துவதில்லையென்றும், அவரைக் கடவுளின் அடிமையாகக் கொண்டு மரியாதை செய்வதாயும் சொல்லி விடுத்தனர். பின் மேலிக் ஆம்பர் சேனையுடன் தௌலதாபாத்திற்குச் சென்றான். மோரார் ஜாகதேவ் முதலியோர் சேனையைப் 'பீமா' நதியும் 'இந்துராணி' நதியும் சங்கமமாகும் இடத்திலுள்ள சார்சி ஜில்லாவைச் சேர்ந்த நாகர்கோன் என்னுமிடத்திற்குச் செலுத்திச் சென்று அங்குத் தங்கினான். இவையாவும் கி. பி. 1633-ம் ஆண்டில் நடந்தன.

மோரார் ஜகதேவ் ஆம்பரை முதுகிடச்செய்தமைக் கறிகுறியாக அவ்வாண்டில் வரும் சூரிய கிரஹணத்தன்று தன்னைப்போல் இருபத்து நான்கு மடங்கு அதிகமான திரவியத்தைத் தானஞ் செய்ய நிச்சயித்தான், பிறகு, அவனுடைய வெற்றிக் கறிகுறியாக தன்னைச் சுமந்து வந்த யானையின் நிறைக்கொப்பான பொன்னைப் பிராமணர்களுக்குத் தானம் செய்யுமாறு கட்டளையிட்டான். கட்டளையைச் சுலபமாகவே இட்டுவிட்டான். போதிய பொருளையும் படைத்துள்ளானன்றோ? உண்மையே, ஆனாலும் எப்படி அந்த யானையை நிறையிடுவது? எங்கிருந்து துலாக்கோலும் படிக்கல்லும் கொணர்வது? எப்படி யானையைத் துலையிலிடுவது? என்

பன போன்ற கேள்விகள் பிறந்தன. எல்லோரும் செய்வ தறியாது மயங்கினர். ஜகதேவ் ஷாஜியின் மதிநுட்பத்தை வெளியிடும்படியான ஒரு குறிப்பைக் கொடுத்தாரெனவே கூறவேண்டும். ஏனென்றால் எல்லோரும் திகைப்புற்றிருக் கையில் புதரினின்றும் சிம்மம் புறப்பட்டாற் போன்று ஷாஜி எழுந்து, அந்த யானையை நிறுத்தல் எவ்விதமெனத் தெரி வித்தான். ஒரு பெரிய படகைச் செய்யச் சொல்லி, அதில் யானையை யிட்டு, அது எவ்வளவு தூரம் நீரில் ஆழ்கிற தென்று குறிப்பிட்டுப் பின், யானையை யிறக்கிவிட்டு அது எவ்வளவு தூரமமிழ்ந்ததோ அதுவரைப் படகு அமிழும்படியான கற்களையிட்டுப் பின் கற்களை நிறுத்தால் யானையின் நிறை தெரியுமெனக் கூறினான். இம்மொழியைக் கேட்டுக் களிக்காமலும் ஆச்சரியப்படாமலும் இருக்க எவரால முடியும்?

பின், ஷாஜி கூறிய விதமாக யானையின் நிறையைக் கண்டு அவ்வளவு பொன்னின் மதிப்புடைய ஜாகிர்களை அந்தணர்களுக்குத் தான மளித்தான். இன்றைக்கும் அப் படிப்பட்ட ஜாகிர்கள் இருந்து வருகின்றன. ஷாஜியின் புத்தி கூர்மையைக் கண்ட ஜகதேவ், சிரோல் என்னும் கிராமத்தையும், ஜுன்னார், பூனா இவைகளின் ஜாகிர்களையும் அவனுக்களித்தான். பூனா மாகாணத்தைச் சேர்ந்த பேடாஸ் ஜில்லாவிலுள்ள மூல்டான் கிராமாதிகாரி யான தாதாஜி காண்டதேவ் என்பவருடைய நன்றியையும் ஆற்றலையுங் கண்டு அவரைத் தனது உத்தியோகஸ்தராக நிய மித்துத் தன் ஜாகிர்களையும் அவர் வசம் ஒப்புவித்தான். ஷாஜி, சிந்தி ஹில்லாவின் தலைமையின்கீழ் ஆயிரம் வீரர்க ளடங்கிய சேனையைத் தாதாஜிக்கு உதவியாக அனுப்பிவிட் டுத் தான் ஜகதேவுடன் பீஜபூர் வந்து சேர்ந்தான்.

பீஜபூர் செல்லுமுன், தன் மனைவி ஜீஜாபாயையும்



புதல்வன் சிவாஜியையும் பூனாவிற்குக் கொண்டுவந்து விடுத்து அவர்களைப் பூனாவிலேயே வைத்துக்கொண்டு சிவாஜிக்குக் கல்வி முதலியனவற்றைக் கற்பிக்கும்படி தாதாஜிக்குக் கட்டளையிட்டான். அதன்படி தாதாஜி அவர்களைப் பூனா வில் 'லால் மஹால்' மாளிகையில் வைத்தார். அதுமுதல் தாதாஜி, சிவாஜியின் வளர்ப்புத் தந்தையுமானா ரென்றால் தாதாஜி எவ்வளவு சந்தோஷ மடைந்திருப்பாரென்று எழுத வும் முடியுமோ?

ஷாஜி, தனக்கு ஜீஜாபாயின் தந்தை யாதவராவ் செய் துள்ள அவமரியாதைகளை உன்னி, ஜீஜாபாயையும் சிவாஜி யையும் பார்ப்பதில்லை யென்று விரதம் பூண்டு மோகட் என்பவனுடைய புதல்வி 'துர்க்காபாய்' என்பவளை மறு மணஞ் செய்துகொண்டு 'வெங்கோஜி' என்னும் புதல்வனை யும் பெற்றான். ஷாஜி கலகக்காரர்களான ஜமீன்தார்கள் தங்கியிருந்த கனகக்கிரி கோட்டையை முற்றுகை யிட்டுக் கோட்டையையும் கலகக்காரர்களையும் பிடித்துக்கொண் டான். ஆனால் அச்சண்டையில் சாம்பாஜி ஒரு பீரங்கிக் குண்டால் உயிரிழந்தான். நைசாம் ஷா ஆட்சிக்குட்பட் டதும், பூனாவிற்கு 15 அல்லது 16 மைல் தூரத்திலுள்ளது மான சகன் கோட்டையைக் கட்டிக்கொண்டு பக்கத்து ஜனங்களைப் 'பாரா' என்பவன் துன்புறுத்திக் கொண்டிருந் தான். அவனுக்குப் பிறகு அக்கோட்டை நைசாம் ஷா கையிலகப்பட்டு, அவனால் அது ஷாஜிக்குக் கொடுக்கப்பட் டது. ஷாஜி யாதவராவால் துரத்தப்பட்டு பீஜபூர் ஓடிய பொழுது மார்த்தன்தேவ் தேஷ்பாண்டி, ஹனப்பா தேஷ்பாண்டி என்ற இருவர் அக்கோட்டையைப் பிடித் துக்கொண்டனர். அவர்கள் தாம் வைத்தது சட்டமாகக் கொண்டு ஜனங்களை மிகவும் துன்புறுத்தி வந்தனர். மோரார் ஜகதேவ், மேலிக் ஆம்பரைத் துரத்தியபொழுது

திவான் ரெய்ராவ் அவ்விருவரையும் பிடித்துச் சிறையி லடைத்துவிட்டு அக்கோட்டையைத் தான் பிடித்துக் கொண்டான். அவ்விருவர்களையும் நகக்கண்களில் ஊசி யேற்றி வருத்தினான். அவர்களுடைய சொந்தவூர் பூனாவா கையால் பூனாவையும் கொள்ளையிட்டான். அதை மறுபடி யும் மோரார் ஜகதேவ் ஷாஜிக்குக் கொடுத்தான்.

சிவாஜி, சிவனேரிக் கோட்டையில் 1627-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் தேதி, திங்கட்கிழமை பிறந்தான். அவன் இளமைப் பருவம் முதல் பத்து வருடங்களையும் சிவனேரியிலேயேதான் கழித்தான் என்று கூறவேண்டும். அதிலும் கி. பி. 1630 முதல் 1636 வரை அவன் தந்தை ஷாஜி நிலையற்ற வாழ்க்கையி லிருந்தமையாலும், அடிக்கடி அநேக விரோதிகளால் அல்லற்பட்டுக்கொண்டிருந்தமை யாலும், வாழ்விடம் மாறி மாறி வந்தமையாலும், உத்தியோ கம் நிலையற்றிருந்தமையாலும், அவன், ஜீஜாபாயையும் குழந்தை சிவாஜியையும் தக்க பாதுகாப்புடைய இடத்தில் வைத்து விட்டுச் சென்றது பொருத்தமானதே. அக்காலங் களில் ஷாஜி சண்டையிடுவதிலேயே இருந்து விட்டபடியால் ஜீஜாபாயையும் குழந்தை சிவாஜியையும் அவன் கவனியாது ஏதோ சில முறை மாத்திரம் சண்டைக்கு முன் வந்து பார்த் துப் போனான். பின்னும், ஜீஜாபாய்க்கு இளமை குலைந்தமை யாலும், ஷாஜி, இளமையான துக்காபாய் என்பவளை மணந்துகொண்டமையாலும், சிவாஜியும் அவன் அன்னை யும் ஷாஜியின் காதலுட்படாமல் தனித்து வாழ நேர்ந்தது. இவ்விதம் தாயும் பிள்ளையும் தனிமையுற்றதுவே அவர்க ளிருவருடைய மேன்மையான பற்றுக்கும், அன்புக்கும் காரணமாகும். கணவன் பிரிவினால் ஜீஜாபாய் மிகுந்த மதப் பற்றுடையவளாயும், குமாரனிடம் அதிகமான அன்பு உடையவளாயும் இருந்தாள். சிவாஜியோ உடன் பிறந்தா



ரின்மையால் தனிப்பட்டவனாய்த் தாயுடனேயே இருந்து அவளுடைய போதனையைக் கேட்டுக்கொண்டிருந்தமையின் அவளிடம் மிகுந்த அன்பும் பக்தியும் உடையவனானான். அன்றியும் அவளைத் தெய்வமாகவும் கொண்டாடத் தலைப் பட்டான். "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்னும் முதுரை அவன்பால் வேரூன்றிற்று. அவ்விதம் 1637-ம் ஆண்டு வரை சிவனேரிக் கோட்டையில் சிவாஜியுடன் வசித்து வந்தான். ஜீஜாபாய் அவனுக்கு இராமாயண, மகாபாரதக் கதைகளைக் கூறிவந்தாள்.

1636-ம் ஆண்டில் ஷாஜி முகலாயர்களுடன் சமாதானம் செய்துகொண்டான். அதன்படி ஷாஜி ஏழு கோட்டை களை முகலாயர்களுக்குக் கொடுத்தான். அவ்வேழில் சிவ னேரிக் கோட்டையுமொன்று. ஆகையால் ஷாஜி தன் மனைவி ஜீஜாபாயையும் சிவாஜியையும் தன் ஜாகிராகிய பூனா வுக்கு அனுப்பினான். அவ்விதமே சிவாஜி, 1637-ம் ஆண் டின் முற்பகுதியில் பூனாவையடைந்தான். பூனா ஜாகீரை ஷாஜி முதலில் நைசாம் ஷா விடத்திருந்தும் பின்பு விடில் ஷா விடத்திருந்தும் பெற்றான். ஷாஜி அந்த ஜாகீருக்குத் தாதாஜி காண்டதேவ் என்பவரைப் பிரதிநிதியாக நியமித்து அவருடைய பாதுகாப்பில் தன் மனைவியையும் மகனையும் விட்டு வைத்தான். 1630-ம் ஆண்டில் ஷாஜி பூனாவின் சுற்றுப் பக்கங்களைக் கொள்ளையடித்தான். பின் பீஜபூர் படை பூனாவையும் இந்தாப்பூரையும் கொள்ளையிட்டது. ஆனால் அதை ஷாஜி மறு ஆண்டிலேயே தன் வசப்படுத்திக் கொண்டான். 1630-31-ம் ஆண்டில் ஒரு பெரிய பஞ்சம் தோன்றிற்று. அதனால் ஜனங்கள் பெரிதும் துன்புற்றனர். பின் 1634-36-ல் முகலாயர்கள் வந்து படையெடுத்து நாச மாக்கினார்கள். தாதாஜி அந்த ஜாகீரை ஒப்புக்கொண்ட பொழுது பூனா தேசம் அவ்வளவு சீர்கெட்டிருந்தும், தம்மு

டைய நற்குணத்தால் மிகவும் சுலபமாகக் கட்டக்கூடிய குத்தகைக்கு விட்டு எல்லா நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வந்து சீர்திருத்தினார். தாதாஜி பூனாவைச் செவ்வனே கட்டுவித்தார். லால்மஹால் என்னுமோர் மாளிகையைக் கட்டிச் சிவாஜியை அதில் வைத்தார். அதில் பலவகைப் பூச்செடிகளையும், மரங்களையும் உற்பத்தி செய்தார். அவர் மிகவும் நம்பிக்கையுடையவர். அவர் ஒருநாள் தோட்டத்தில் சிவாஜிக்குச் சொந்தமான ஒரு மாமரத்தில் கனி ஒன்றை கொய்ததற்காகத் தன்கரத்தையே வெட்டிவிடும்படி கட்டளையிட்டார். அதையறிந்த சிவாஜி மிகவும் வருந்தி, அவரிடம் சென்று, அப்படிச் செய்யக்கூடாதென்றும், அம்மரத்தை வைத்து வளர்த்து வந்தமையால் அவருக்கும் அதில் உரிமையுண்டென்றும் எவ்வளவு கூறியும் அன்றுமுதல் அக்கைக்கு அங்கி போடாமல் தம் குற்றத்திற்கு அறிகுறியாக வெறுங்கையுடனிருந்தாரென்றால் அவருடைய உண்மையையும், நீதியையும் கூறவும் வேண்டுமோ? இச்செயல் தமிழ்நாட்டுப் பாண்டி மன்னனை பொற்கைப் பாண்டியன் செயலை நினைப்பூட்டுவது அன்றோ? அவற்றை யெல்லாமறிந்த சிவாஜி அவருக்கு எழுநூறு பொன்கள் வெகுமானம் கொடுத்ததுமன்றி அவருக்கு வேண்டிய பொருளை யெடுத்துக்கொள்ளவும் அனுமதி கொடுத்தான்.

தாதாஜி, சிவாஜிக்குக் கல்வி கற்பிக்கவேண்டி ஒரு பெரியாரை நியமித்தார். ஆனால் சிவாஜி எழுதப்படிக்க அதிகம் தெரிந்துகொண்டதாக ஒன்றும் தெரியவில்லை. அவனுடைய கையெழுத்து ஒன்றும் இப்பொழுது இல்லை. மற்றும், ஐரோப்பியர்கள் சென்று அவனைக் கண்டபொழுது எல்லா விதக் கடிதங்களையும் அவன் மந்திரிகளே படிப்பது வழக்கம். ஆகையால் சிவாஜி, இந்தியாவின் மத்தியகால மன்னவர்களிற் சிறந்து விளங்கியவர்களான, அக்பர், ஹைதர் அலி, ரஞ்சித்



சிங் முதலியவர்களைப்போல், கல்வி யற்றவனென்றே கூற வேண்டும். ஆனால் "கற்றலிற் கேட்டலினிது" என்றபடி கேள்வி யறிவு அவனுக்கு மிக்கிருந்தது. அவனுடைய தாயார் அவனுக்கு இருபெரு மிதிகாசங்களான இராமாயண மஹா பாரதங்களைக் கதைகளைக் கூறுவதுபோல் போதித்து வந்தாள். அவைகளிற் கூறியுள்ள அரசியல் முறைகளையும் யுத்த முறைகளையும் அவன் உணர்ந்தான். பின்னும் ஊரில் நடக்கும் கதை, காலக்ஷேபங்கள், பஜனை முதலியவைகளையும் தவறாமல் கேட்பான். இவ்வாறாக அவன் கேள்வியறிவிற் சிறந்து விளங்கினான்.

அக்காலத்துத் தலைவர்களுக்கின்றியமையாததான குதிரையேற்றம், யானையேற்றம், மற்போர், வெடிகுண்டுப் போர், முற்றுகையிடல், கோட்டையைப் பிடித்தல் முதலியவைகளில் அவனைப் பயிற்றுவித்தார். தாதாஜி காண்டவதேவ் சிவாஜி பெரியவர்களிடத்தில் பக்தியும் அன்புமுடையவன். அவன் இந்துமதப் பற்று அதிகமுடையவனாயிருந்தும், முகமதியர் முதலிய மற்றைய மதத்தினர்களை நன்கு மதித்து வந்தான். தாதாஜி வழக்கு விசாரணைகள் செய்யும்பொழுது சிவாஜியும் பக்கத்திலிருந்து இராஜதந்திரம் முழுமையும் கற்றுக்கொண்டான். அவனுடைய மதிநுட்பத்தால் மராத்தியத் தலைவர்களின் குணங்களை யறிந்து அவர்களைத் தன்வசப்படுத்திக் கொள்ளும் தன்மையும் அவனுக்குண்டாயிற்று.

பூனா ஜில்லாவின் மேல்பாகத்தில் மாலவதேசம் என்று ஒரு மலைப் பிரதேசமுண்டு. அங்கு மலைகளும் பள்ளத்தாக்குகளும் அதிகமாயிருந்தமையின் விளைவு குறைந்திருந்தது. அங்குப் பெரிய வாய்க்காலொன்றுண்டு. அதன் வடபாகத்திலிருந்தவர்களுக்குக் 'கோலி' என்றும், தென்பாகத்தவர்களுக்கு 'மராத்தியர்கள்' என்றும் பெயர். அப்பிரதேசத்தின் சீதோஷ்ணம் சமமாகவும் வாசத்திற்கு இனிமை

யாகவும் இருப்பினும் நிலமெல்லாம் விளைவின்றியிருந்தது. சாதாரணமாக அப்பிரதேசம் முழுமையையும் பன்னிரண்டு மாவலித் தலைவர்கள் கைக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு பாகத்திற்கும் 'தேசமுகி' என்னும் தலைவன் உண்டு. சாதாரணமாய் எல்லாத் தேசமுகிகளும் சிவாஜியின் இனத்தவரே. அவர்கள் தம் நிலங்களை அந்தணர் பரிபாலனத்தில் விட்டுக் காயஸ்தர் குலத்தவரையே கணக்கர்களாக நியமித்தனர். அத்தேசமுகிகள் தம் நிலங்களைக் கொள்ளைக்காரர்களிடமிருந்து காத்துக்கொள்ளவும், அயலார் தம் நிலங்களைப் பற்றிக்கொள்ளாதிருக்கவும் படைகளையும் வைத்திருந்தனர். அரசனுக்கு வேண்டிய காலங்களில் பணத்திற்காகவும் நிலத்திற்காகவும் சேனை சேர்த்துக் கொடுப்பதும் உண்டு.

தாதாஜி, அவர்களைத் தம் நன்னடத்தையாலும் வெகுமதியாலும் தம் வசப்படுத்திக்கொண்டார்; கட்டுப்படாதவர்களைத் தூண்டிக் கட்டுப்படுத்தினார். அவர்களும் சிவாஜியிடத்தில் மிகுந்த அன்புடையவர்களாய் அவனைத் தம் தலைவனாகவும் கருதினர். அநேக மாவலித் தலைவர்களைச் சிவாஜி தனது படையில் தலைவர்களாகவும் சேனாதிபதிகளாகவும் நியமித்துக்கொண்டான்.

சிவாஜிக்கு வயது பதினாறாயிற்று. தாதாஜி அவனை முகலாயச் சக்கரவர்த்தியிடம் வேலையி லமர்த்தி வைக்க நினைத்தார். அதனால் அவன் பெருமதிப்பையும் செல்வத்தையும் அடைவானென்று அவர் எண்ணியிருந்தார். ஆனால், சிவாஜிக்கு முகமதியர்களிடம் ஊழியம் செய்யவும், அவர்களை வணங்கவும் இஷ்டமில்லை. ஏன்? இந்துக்கள் தெய்வமாகக் கருதி ஆதரித்துவந்த பசுக்களை அவர்கள் கொலைசெய்தனர்; இந்துக்களின் ஆலயங்களை யிடித்து, அவைகளிருந்தவிடத்தில் மசூதிகள் கட்டினர்; பல இந்துக்களைத் துன்புறுத்தி அவர்களை முகமதியராக்கினர்.



அவை சிவாஜியின் மனத்தை மிகவும் வருத்தின. அறியத்தக்கதொரு கதையுமுண்டு. அதாவது:-'ஷாஜி இங்கு பீஜபூர் அரசனிடம் மந்திரியாக விருந்தபொழுது சிவாஜியை ஒருநாள் அரசன் சபைக்கு அழைத்துச் சென்றான். அப்பொழுது, சிவாஜி மிகவும் இளமைப் பருவமுடையவனாயிருந்தான். அங்கு வழக்கப்படி அவன் சுல்தானுக்குச் சலாம் செய்யவில்லை. அரசன் சினங்கொண்டான். அவனுடைய கட்டழகையும், வீரப் பார்வையையும் அரசன் கண்டு மகிழ்ந்தான். ஷாஜியும் அவனுடைய அறியாமைக்கு மன்னிக்குமாறு வேண்டினன். பின், சிவாஜி திரும்பி வரும்பொழுது சில முகமதியர்கள் ஒரு பசுவைப்பற்றிக்கொல்வதைக் கண்டான். அவன் மறுநாள் அரசன் சபைக்குச் செல்ல மறுத்தான். சுல்தானும் அதன் காரணத்தை ஷாஜி முதலியவர்களால் உணர்ந்து, பீஜபூர் நகரில் பசுக்கொலை நடக்கக் கூடாதெனக் கட்டளையிட்டான். பின் சிவாஜி சபைக்குச் சென்றான். மீண்டும் ஒருநாள் வந்துகொண்டிருக்கையில் ஒருவன் பசுவின் இறைச்சி விற்பதைக் கண்டான். கோபம் அதிகமாக வரவே, தன் வாளால் ஒரே வெட்டாய் அவனை வெட்டிவிட்டுத் தன் தந்தையிடம், தான் பீஜபூரிலிருக்க இஷ்டமில்லை என்றும் வெளியே போகவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அவன் பூனாவை யடைந்தான்” என்பவே.

ஆகையால் பீஜபூர் சுல்தானிடத்திலும் வேலைசெய்ய அவனுக்கு விருப்பமில்லை. கேலோஜி பான்ஸ்லே என்னும் தன்னுடைய மூதாதையைக் கொன்றமையால் முகலாயரிடத்துப் பணி செய்ய அவன் சுயேச்சையாக இருக்க விரும்பினான். அதனால் தாதாஜிக்கு வருத்தமேற்பட, அதனை ஷாஜிக்குத் தெரிவித்தான். முதுமையாலும் வருத்த மிகுதியாலும் தாதாஜி 1647-ம் ஆண்டின் மத்தியில் விண்ணுலக

மெய்தினர். சிவாஜி தன் இருபதாம் வயதில் சுயேச்சை பெற்றான். தாதாஜி இறந்த பிறகு சிவாஜியே பூனா ஜாகீரைப் பார்த்து வந்தான். அத்தருணம் ஷாஜி கர்நாடகத்தில் சண்டை செய்துகொண்டிருந்தான். அவன், தாதாஜி இறந்தது தெரியாமல் தான் பிஜபூரடைந்ததும் திரவியங்களைக் கொண்டு வரும்படி கடிதம் எழுதியிருந்தான். அக்கடிதம் சிவாஜியின் கையில் கிடைத்தது. உடனே சிவாஜி, தாதாஜி வைத்துச் சென்ற திரவியங்களையும், பன்னீராயிரம் சேனை வீரர்களையும் கைப்பற்றிக்கொண்டான். பின், தன் சேனையை அதிகப்படுத்திக்கொண்டான். மாவலிகளைச் சேனையிலமர்த்தி யுத்தப் பயிற்சியும் கொடுத்தான். ஷாஜி அவைகளைக் கேள்விப்பட்டு மிகுந்த ஆனந்தங் கொண்டவனாய் அவனுடைய வீரத்தைக் கேட்டு மகிழ்ந்து சிவாஜியே அந்நாட்டை யாளும்படி விட்டுவிட்டான். சிவாஜியின் செய்கைகளை ஒப்புக்கொண்டது மன்றி அவனிடம் தக்க மரியாதையையும் ஷாஜி வைத்திருந்தான்.



## 4. ஷாஜி சிறைப்படலும் மீட்சியும், சிவாஜியின் வலி பெருகியதும்

கி. பி. 1646ம் ஆண்டில் பிஜப்பூர் சுல்தான் நோயுற்றான். அவன் 1656ம் ஆண்டுவரை உயிரோடிருந்தானாயினும் நோயுற்றவனாக விருந்தமையின் அவ்வரசியல் முழுமையும் அவன் மனைவி நடத்தி வந்தாள். மைந்தர்களும் சிறுவர்களாயிருந்தமையின் அவளே எல்லா அதிகாரங்களையும் பெற்றாள். அவள் மோரார்மீது பொறாமை கொண்டு, அவனைக் கொலை செய்யவும் கட்டளையிட்டாள். கொலையாளிகள் அவனை மிகவும் அடித்தனர். அவன் அடியின் வலி பொறுக்கமாட்டாதவனாய் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான். பேச்சு மூச்சு ஒன்றுமின்றி யிருந்தமையின் அவன் இறந்து விட்டானென எண்ணி எல்லோரும் சென்றனர். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் எழுந்து யாவருமறியாமல் அரண்மனைக்குச் சென்று ஸ்நானஞ் செய்து தலை மயிரை யெடுத்துவிட்டுச் சந்நியாசியாகக் காலங்கழிக்கத் தீர்மானஞ் செய்துகொண்டான். அதை எப்படியோ அறிந்த அரசியின் ஏவலாளர் வந்து அவனை வாளால் ஒரே வெட்டாய் வெட்டி வீழ்த்தினர்.

பின், அரசி ருர்ஸாகானின் சேனைத் தலைமையின் கீழ்ச் சேனையைத் திரட்டித் தௌலதாபத்தை முற்றுகையிட்டு ஜயிக்குமாறு அனுப்பினாள். அவர்களும் அப்படியே பாரமதி என்னும் கிராமத்தை யடைந்தனர். அதையறிந்த மேலிக் ஆம்பர் பெருஞ்சேனையோடு சென்று போர் புரிந்தான். பன்னிரு தலைவர்களையும் தோற்கடித்துச் சிறைப்பிடித்துப் பின் விடுதலை செய்தான். இச்சண்டை, மேலிக்

ஆம்பர் முன் தோல்வியுற்றதை ஈடுபடுத்தியதால் ஆம்பர் அகமிக மகிழ்ந்தான்.

அச்சண்டை முடிந்த பிறகு ஷாஜியிடம் பன்னீராயிரம் வீரர்களடங்கிய சேனையைக் கொடுத்துக் கர்நாடக் தேசத்திற் கனுப்பினான். அவன், தனக்கு ஜாகீராகக் கொடுக்கப்பட்டிருந்த மைசூர் சமவெளியிலுள்ள கோலார், பாலாமூர் ஜில்லாக்களைப் பிடித்துக் கொண்டான். அதே சமயத்தில் பீஜபூர் சேனாதிபதி முஸ்டாபாகான் என்பவன் செஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்டான். அச்சமயமே சிவாஜி சுயேச்சையாய்த் தன் ஆதிக்கத்தை விருத்திசெய்து கொள்வதற்கேற்றதாயிருந்தது. ஏனென்றால் பீஜபூர் அரசின் வலிமை குன்றி யிருந்ததுமன்றிச் சேனைகளும் கர்நாடகத்திலும் மைசூரிலும் சண்டைசெய்து கொண்டிருந்தன. 1646 ம் ஆண்டில் சிவாஜி பீஜபூர்த் தலைவனிடமிருந்து வஞ்சகமாகத் 'தோரணா'க் கோட்டையையும், இரண்டு லக்ஷம் பொன்னையுடைய கஜானாவையும் அபகரித்துக் கொண்டான். அதற்குப் 'பிரசண்டகார்' என்று புது நாமமிட்டான். அதற்கைந்து மைலுக்கப்பால் அதே மலைத் தொடரில் ஒரு சிகரத்தின்மீது, மூன்று பெரிய கோட்டைச் சுவர்களையுடைய 'இராஜகிரி' என்னும் கோட்டையைக் கட்டினான். அவ்வக்கிரமங்கள் பீஜபூர் அரசியின் கோபத்தைக் கிளப்பியபோதிலும், சிவாஜி, சபையிலுள்ள மந்திரிகளுக்கு வரிசை (லஞ்சம்) கொடுத்து அவைகளைப் பீஜபூரின் மேன்மையின் பொருட்டே சீர்படுத்துவதாகக் கூறி வந்தான்.

கி. பி. 1647 ம் ஆண்டில் தாதாஜி உயிர் நீத்தது சிவாஜிக்கு மற்றொரு நன்மையைக் கொடுத்தது. எல்லாச் சேனைகளுக்கும் ஜாகீருக்கும், சிவாஜியே அதிகாரியானான். தாதாஜி, பிரங்கோஜி நார்சாலா என்பவனைச் சகன் கோட்டைத் தலைவனாக நியமித்திருந்தான்.



சகன் கோட்டை பூனாவிற்குச் செல்லும் பாதையை யடுத்துக் காப்பாக அமைந்துள்ளது. அத்தலைவனும் பாரமதி இந்துப்பூர்த் தலைவர்களும் சிவாஜியைத் தலைவராக ஏற்றுக்கொண்டனர். பதினொரு மைலுக்கப்பாலுள்ள 'கோண்டாணாக்' கோட்டையையும் அடில் ஷாவின் பிரதிநிதிக்கு வரிசை கொடுத்துச் சிவாஜி கைப்பற்றிக் கொண்டான். இவ்விதமாகச் சிவாஜி ஒவ்வொரு கோட்டையாகப் பிடித்துக்கொண்டு தன்னுடைய படைவலியை விருத்தியாக்கிக் கொள்ளும் தருவாயில் ஒரு பெரிய சம்பவம் ஏற்பட்டது. அது அவனுடைய இராஜீய ஸ்தாபனத்திலும் முக்கியமானதுபற்றிச் சிவாஜி உடனே அதைக் கவனிக்க நேர்ந்தது.

கி. பி. 1648 ம் ஆண்டு ஷாஜி சிறை செய்யப்பட்டுப் பீஜபூருக்கே கொண்டுவரப்பட்ட செய்தி சிவாஜிக்குத் தெரிந்தது. அது சிவாஜியை மிகவும் கவலைக்குள்ளாக்கியது. அதற்குக் காரணம் சேனாதிபதியான முஸ்டாபாகான் கூறியபடி, ஷாஜி கீழ்ப்படிந்து நடக்கவில்லையாதலால் சிறை செய்யப்பட்டானென்று சரித்திர நூலாசிரியர்கள் கூறுகின்றனர். முகமூத் நாமாவில், செஞ்சிக் கோட்டை முற்றுகையை, முஸ்டாபாகான் இட்டபொழுது ஷாஜி தன் சேனையுடன் ஊருக்குத் திரும்பிச்செல்ல அநுமதி கேட்டதாயும், கான் மறுக்கவே ஷாஜி அவனுடைய உத்தரவின்றியே போய்விடுவதாயும் கூறக் கான் சந்தேகங்கொண்டு ஷாஜியைச் சிறை செய்ததாகக் கூறி யிருக்கிறது. பீஜப்பூர் சரித்திராசிரியரான பாரசீகர் ஒருவர் கூறியுள்ளதாவது:—"ஷாஜி, முஸ்டாபாகானின் கட்டளைகளை மீறி, அவனையே எதிர்க்கத் தலைப்பட்டதால், கான் ஷாஜியைச் சிறை செய்தான். கான் ஒரு நாள், ஷாஜியின் விடுதிக்கு அதிகாலையில் அனுப்பப் பாலாஜி ராவ் கோர்பார்டியையும், ஜஸ்வந்தராவை

யும் தயாராயிருக்கும்படி கட்டளையிட்டான். முன்னிரவில் ஷாஜி வெகுநேரம்வரை ஆடல் பாடல்களில் காலங் கழித்த மையின் காலையில் வெகுநேரந் தூங்கிக்கொண்டிருந்தான். ராவ்கள் வந்திருப்பதையும் அவர்கள் வருகையின் காரணத்தையும் அறிந்துகொண்டவுடன் ஷாஜி பயமேலீட்டால் குதிரையேறிக் கொண்டு தப்பியோடினான். பாலாஜி கோர்பார்டி அவனைத் தூரத்துரத்திச் சென்று பிடித்துக் கானிடம் கொண்டுவந்தான். கான் அவனைச் சிறையிலிட்டு அவனுடைய சேனையைக் கலைத்து இருப்பிடத்தையும் கொள்ளையடித்தான்; அடில் ஷா இதைக் கேள்வியுற்றுத் தன் அரசிலிருந்து அப்சல்கானை யனுப்பி ஷாஜியை பீஜபூருக்குக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான். அவனுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்ய உத்திரவிடப்பட்டது. அதுவே ஏறக்குறைய உண்மையான காரணமாயிருக்கக் கூடும். அவ்வாறே ஷாஜி பீஜப்பூருக்குக் கொண்டு வரப்பட்டான்.

ஷாஜியை பீஜபூருக்குக் கொண்டு வந்ததும் அவன் ஒரு கல்லறையில் அடைக்கப்பட்டான். அந்த அறை ஓர் இருட்டறையாக இருந்தது. வெளிச்சமும் காற்றும் உள்ளே வருவதற்கு ஒரு சிறு துவாரத்தைத் தவிர வேறு வழி ஒன்றுமில்லை. அதில் அவன் மிகவும் துன்புற்றுக்கொண்டிருக்கையில் சுல்தான் வந்து ஷாஜியைக் கண்டு சிவாஜி தனக்குச் செய்துள்ள தீமைகளை டன்னிச் சிவாஜியையும் சிறைப்பிடிக்கக் கருதி, "ஷாஜி, உன் மைந்தன் சிவாஜிக்கு, உடனே புறப்பட்டு வரும்படி நிருபமொன்றெழுது. அப்படி அவன் வந்து நம்மைப் பணிந்து நம் மன்னிப்பைப் பத்து நாட்களுக்குள் பெறுவிட்டால் இந்த ஒரு சிறு துவாரமும் கற்களால் அடைக்கப்படும். நீ இதிலேயே உண்ண உணவின்றியும், குடிக்க நீரின்றியும், சுவாசிக்கக் காற்றின்றியும் இறக்க வேண்டும். ஆகையால் உடனே கடிதமெழுதுக" என்றான்.



ஷாஜியும் தப்பிக்க வேறு உபாயமில்லாமை கண்டு அம்மாயுரியே ஒரு நிருபத்தை விரைவில் சிவாஜிக்கு எழுதினான். அக்கடிதமும் முறையே சிவாஜிக்கு அனுப்பப்பட்டது.

சிவாஜி கடிதத்தைக் கண்ணுற்றான்; ஷாஜியின் நிலையை யுணர்ந்தான். தான் உடனே சென்று சுல்தானைப் பணியாவிடில் தந்தை யிறக்க நேரிடுமென்பதையும் அவன் அறிந்தான். சென்று, தந்தையைக் காப்பாற்றலா மென்றாலோ முதலில் ஒரு முகமதியனைப் பணிய மனமிடங் கொடுக்கவில்லை; இரண்டாவதாகத் தான் அதுவரைப் பிடித்துள்ள கோட்டைகளையும், ஆஸ்திகளையு மிழப்பதுடன், தானும் அவனிடம் உத்தியோகம் வகிக்க நேரிடும்; மூன்றாவதாகத் தன் பெருங் கருத்தாகிய ஒரு பெரிய "இந்தியத் தனியரசு" நாட்டுவது இயலாததாக முடியும். அந்நிலையில் என்ன செய்வதென்றறியாமல் அவன் இருதலைக் கொள்ளியின் இடையகப்பட்ட எறும்புபோல் ஆனான். தந்தையை யிழப்பதா? அல்லது, எல்லா இந்துக்களையும் இழந்து துன்பத்துக்குள்ளாவதுமன்றித் தான் கொண்ட கருத்தையும் விட்டுவிடுவதா? என்று சிவாஜி திகைப்புற்றான். இவ்விதமாகக் கவலை கொண்டிருந்த கணவனை அவன் மனைவி, "நாதரே! கலங்காதீர்! பேதையாகிய நான் கூறுவது சற்று பொறுத்தமற்றதாயிருப்பினும் தனக்கென வாழாப் பிறர்க்கென வாழுந் தங்களுக்குக் கூறும் ஓர் ஆலோசனையுண்டு. கேட்டருளல் வேண்டும். அது, மானமிழந்து வாழ்தலினும் மானத்தோடு மரித்தலே நன்று. பின்னும் ஓர் உயிரைக் காத்தற் பொருட்டு ஆயிரக்கணக்கான உயிர்களை,—அதுவும் இந்துக்களை, பெருந் துன்பத்திற்குள்ளாக்குதல் முறையன்று. பின்னும், பிறர் உம்மைப் புகழ்வதுமன்றித் தந்தை உயிரிழக்குந் தருவாயிலும் நீர் கொண்ட உமது சீரிய உயரிய குணங்களைக் கருதி ஆசீவதிப்பரேயன்றி வெறுப்புறார்" என்றாள். அதை அமைச்

சர்களும் தாயாரும் ஒப்புக்கொண்டனர். பின், சிவாஜி
ஜீஜாபாயை நோக்கி, "அன்னையே! இப்பொழுது நமது
தந்தையையும் காப்பாற்றவேண்டும். என்னுடைய மானத்
தையும் இழத்தல் கூடாது; மற்றைய இந்துக்களும் உய்ய
வேண்டும்; என் கருத்தாகிய தனியரசு பெறும் எண்ணமும்
நிறைவேற வேண்டும்; இதற்கொரு உபாயங் கூறுக. "தாய்
சொற் றுறந்தால் வாசகமில்லை". தாமே என் தந்தையுந் தாயு
மானீர்; தெய்வமும் ஆனீர்" என்று பணிந்து கேட்டான்.

அச்சமயத்தில் டில்லி பாதுஷாவின் மைந்தனான மூரத்
என்பவன் தக்கணத்தில் முகலாயப் பிரதி நிதியாகவிருந்
தான். இயற்கையாகவே எப்பொழுதும் பிஜபூருக்கும்
முகலாயருக்கும் பகைமையுண்டு. அதுவுமின்றி முகலாயர்க
ளே அவ்வமயம் தக்காணத்தில் வலிமை பெற்றிருந்தனர்.
அவர்களைக் கொண்டு தன் எண்ணத்தை நிறைவேற்றிக்
கொள்வதே நலமெனவும் காலத்திற் கேற்றதுமாகுமென்று
சிவாஜி கருதினான். பவானி தேவியும் இன்னருள் புரிந்
தாள். உடனே சிவாஜி, கால தாமதமின்றித் தன்னையும்
தன் தந்தையையும் அதுவரை செய்துள்ள செயல்களுக்கு
மன்னித்து அப்பொழுது காப்பாற்றினால், தான் முகலாய
ரிடம் உத்தியோகத்தி லமர்ந்துகொள்வதாய் ஒரு கடிதம்
எழுதினான். சிவாஜியை நேரில் வந்து உடன்படிக்கை
செய்து கொள்ளும்படியும் அப்பொழுது அவனை ஐயாயிரம்
வீரர்களடங்கிய சேனைத்தலைவனாகச் செய்வதாயும் பதில்
கிடைத்தது. ஷாஜிக்கு ஒரு கடிதம் எழுதி அதில் தான்
சிவாஜியிடத்திருந்து வந்த கடிதப்படி செய்வதாயும், தான்
டில்லி சென்று பாதுஷாவிடம் அவன் குறைகளைக் கூறி
அவைகளைக் களைந்து பாதுஷாவின் உத்திரவனுப்புவதாயும்
மூரத் எழுதினான். சிவாஜி, ரகுநாதபந்த் கோர்டியை
இளவரசியிடம் அனுப்பினார், ஆமத் நகர் என்னும்



மாகாணங்களின் தேசமுகிப் பதவியை வேண்டினான். மூரத்
தும் தான் பாதுஷாவிடம் சென்று அப்பதவியை பெற்
றளிப்பதாக வாக்களித்தான். "உடனே ஷாஜி விடுவிக்கப்பட
வேண்டும்" என்று டில்லிச் சக்கரவர்த்தியின் கட்டளை பிறந்
தது. பிஜபூர் சுல்தான், முகலாயர்களுக்குப்பயந்து அவர்களை
அப்பொழுது விரோதித்துக்கொள்வது ஏற்றமுடையதன்
றெனக் கருதி ஷாஜியையுடனே சிறைவிடுவித்தான்.

ஆனால் ஷாஜஹான் உண்மையில் ஷாஜியை விடுவிக்கும்
படி அடில்ஷாவுக்குக் கட்டளையிட்டானா என்பது சந்தேக
மாகவேயிருக்கிறது. சரித்திராசிரியர் ஒருவரும் இதை
யொப்புக்கொள்ளவில்லை. அதுவுமின்றி, ஷாஜஹானுக்கு
அடில்ஷாவின்மேல் நன் மதிப்பும் இரக்கமும் உண்டு. ஷாஜி
1633 முதல் 1636ம் ஆண்டு வரை, ஷாஜஹான் தனக்குச்
செய்துள்ள கொடுமைகளைக்கண்டு அவன்மீதும், அவன்
புதல்வன்மீதும் ஒரு வகை வெறுப்புக்கொண்டவன்.
மற்றும், ஷாஜஹான் பீஜப்பூருடன் செய்து கொண்டுள்ள
உடன்படிக்கைகளின்படி, அடில்ஷாவின் உத்யோகஸ்தர்
களுக்குக் காப்பும், உத்தியோகமும், போஷணையும் அளிப்ப
தில்லை என்று ஒப்புக் கொண்டுள்ளான். ஆகையால் ஷாஜி
யின் சிறை மீட்சிக்கு முகலாயர் காரணமாகவிருத்தல்
பொருத்தமற்றதாகவே தோன்றுகிறது. பீஜப்பூரில் பெரு
மதிப்புள்ள இருபிரபுக்களான ஷர்ஸாகானும், ரவுன்
டௌலாகானும் ஷாஜியிடம் அன்பும் அருளும் உடையவர்
களாயிருந்தமையால் அவர்களுக்குச் சுல்தானிடமிருந்த
பெருமதிப்பைக் கொண்டு சிநேக பாவத்தாலேயே ஷாஜி
சிறையினின்றும் விடுவிக்கப்பட்டானென்று கூறுவது சரித்
திர சம்பந்த முடையதாகும். ஷாஜி விடுதலையுற்றதும்,
தன்னுடைய வட மைசூர் ஜாகிரில் தலைவர்கள் தனக்கு
விரோதமாகக் கிளம்பியிருத்தலைக் கண்டு அவர்களை யடக்கித்

துங்கபத்திரை நதிக்கரையில் காலங்கழிக்கலானான். அங்கு அக்காலத்தில் "கானகிரியை" எதிர்த்தபொழுது அவன் முதல் மைந்தன் உயிரிழந்தான். பின் ஷாஜி அக்கோட்டையைக் கடும்போர் புரிந்து பிடித்துக்கொண்டான்.

## புராந்தரக் கோட்டை

சிவாஜி தந்தையின் சிறைமீட்சிக்குப் பின் சுமார் ஆறு வருடகாலம் வரை—அதாவது அவனுடைய ஜவாலிப்போர் வரை—தன் பலத்தை விருத்தி செய்துகொண்டு அரசியல் முறையைச்சீர்ப்படுத்திக் கொண்டிருந்தான். அக்காலத்திலே அதன் பீஜபூருக்கு விரோதமாக ஒன்றும் செய்யவில்லை. அவன் தன் அரசையும் அதிகப்படுத்திக் கொள்ளவில்லை; எனினும் வாளாவிருக்கவுமில்லை. 1653ம் ஆண்டில் தௌலதாபாத்தில் மேலிக் ஆம்பர் உயிர்நீத்தான். அது தெரிந்து ஷாஜஹான் ஔரங்கசீப்பைத் தங்களைப் பிரதிநிதியாகவும் மீர்ஜூம்லா என்பவரைச் சேனாதிபதியாகவு மனுப்பினான். அவர்களுடைய நோக்கம் தௌலதாபாத்தைப் பிடிக்க வேண்டுமென்பதே. பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு வந்து அவர்கள் தௌலதாபாத்தைக் கைப்பற்றினான். முன் ஆம்பர் ஒரு நகரத்தாபனத்திற்காக ஏற்பாடு செய்திருந்தவிடத்தில் ஔரங்கசீப் ஒரு புது நகரம் சமைத்தான். குடிகளைப் பற்பல விடங்களினின்றும் கொண்டு வந்து வைத்தான். அந்நகருக்கு "ஔரங்காபாத்" எனப் பெயரிட்டான். அந்தக் காலமே சிவாஜி புரந்தரக் கோட்டையைக் கைப்பற்றிய காலமாயிருத்தல் வேண்டும்.

பலமான புரந்தரக்கோட்டை பூனாவுக்குப் பதினெட்டு



மைல் தூரத்தில் தென்கிழக்குப் பக்கத்திலுள்ளதாகும். பெயருக்குமட்டும் பீஜபூர் ஆட்சிக்குட்பட்டதாகக் கூறிக்கொண்டு நீலோஜி நீலகண்ட் நாய்க் என்னும் பிராமணத்தலைவன் அக்கோட்டையை வைத்துக்கொண்டிருந்தான். அவனுக்குப் பிலோஜி, சங்கர்ஜி என்ற இரு தம்பிமார்களும் உண்டு. அவர்களுக்கு அவர்களின் பங்கு வருமானத்தையும் அதிகாரத்தையுங் கொடுக்க அவன் மறுத்தான். அவர்கள் அவ்விஷயத்தைச் சிவாஜியிடம் கூறி நியாயமருளுமாறு வேண்டினர். அவ்வாறு இருவரும் கூறியதைக் கேட்டுச் சிவாஜி குளிர் காலத்தைக் கழிக்கப் புரந்தரக்கோட்டையைத் தனக்கு விட்டுவிடும்படி நீலோஜிக்கு ஒரு கடிதம் எழுதினான். நீலோஜியும், சிவாஜியின் தந்தையும் உயிர்த்தோழர்களானமையாலும் தீபாவளிப் பண்டிகை சமயமாகவிருந்தமையாலும் சிவாஜியை அவன் விருந்துக்கழைத்தான். ஆனால் சிவாஜி தன் மனைவி அன்னை, நண்பர், சேனை முதலியவைகளை விட்டு விட்டுத்தனியே விருந்துண்ண விரும்பவில்லை. நீலோஜி அதைக்கேட்டுத் தன் சகோதரர்களுடன் ஆலோசனை செய்தான். அவர்கள் முன்னமே சிவாஜியிடம் இரகசியமாகப் பேசி வைத்திருந்தமையின், ஷாஜியைச் சகோதரன்போல் சிநேகித்திருப்பதாலும், சிவாஜியும் உண்மையுடையவனாயிருப்பதாலும், பண்டிகைக்காலமாயிருப்பதாலும், ஜீஜாபாய் முதலிய எல்லோரையும் அழைத்தலே முறையெனக் கூறினர். அவ்விதமே சிவாஜி சேனை முதலியவைகளுடன் அழைக்கப்பட்டுக் கோட்டைக்குட் சென்று மூன்று நாள்வரை அங்கு இருந்தான். மூன்றாம் நாள் நீலோஜி நித்திரையிலிருக்கும்பொழுது, இருசகோதரர்களும் திடீரெனச் சென்று அவனைப் பிடித்துக் கட்டிச் சிவாஜியின் முன் கொணர்ந்தனர். சிவாஜி மூவரையும் சிறை செய்து கோட்டையை தன் வசப்படுத்திக்கொண்டு அக்கோட்-

டைக் காவலாளர்களை நீக்கித் தன்னுடைய மாவலிகளை நியமித்தான். சில காலத்திற்குப் பிறகு அம்மூன்று சகோதரர்களும் விடுவிக்கப்பட்டனர். அவர்களுடைய ஜீவனத்திற்காகச் "சமனி" என்னும் கிராமமும் கொடுக்கப்பட்டது.

தற்சமயம் சமனியிலுள்ள நீலகண்டர் வம்சத்திலுள்ளவர்களிடமுள்ள சில சாசனங்களிலும், ஊர்க்கதையிலும் அறியப்படுவதாவது:- "சங்கர்ஜி என்னும் இரண்டாம் சகோதரன், புத்திநுட்பமுடையவனாதலால் அவனே கோட்டையைப் பாதுகாத்துவர, மூவரும் ஒன்றாய் வாழ்ந்து வந்தனர். மூத்தவனான நீலோஜியின் மனைவி, தந்திரமாகக் காவலாளர்களுக்கு வரிசை கொடுத்துக் கோட்டையை யெதிர்த்துச் சங்கர்ஜியைக் காயப்படுத்திக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டாள். புரந்தரைக்கைக்கொள்ளும் எண்ணத்தையுடையவனான சிவாஜி அதை யுணர்ந்து மழைக்காலத்தைக் கழிக்கச் சேனை வீரர் முதலியவர்களோடு அங்குச் சென்றான். தீபாவளிப் பண்டிகையாக விருந்ததால் அவர்கள் உள்ளே விடப்பட்டனர். மூன்றாம் நாள் சிவாஜி திடீரென எதிர்த்து மூன்று சகோதரர்களையும் சிறைப்பிடித்துக் கோட்டையையும், சொத்துக்களையும் கைப்பற்றிக் கொண்டான். சில காலத்திற்குப் பிறகு அவன் அம்மூவரையும் சிறை விடுத்தனன். சங்கர்ஜிக்குச் சமனி என்னும் கிராமம் கொடுக்கப்பட்டது. நீலோஜிக்குப் பழையபடி தலைமைப் பதவி கொடுக்கப்பட்டது. பிலோஜியைச் சிவாஜி தன் சேனையிலமர்த்திக் கொண்டான்" என்பதே.

'ஷோகித்ரி' மலைத்தொடரில், மலைகளாலும், பச்சை மரக்காடுகளாலும், சூழப்பட்டதாய், நீர்மட்டத்திற்கு நான்காயிரம் அடி உயரத்திலுள்ளதாய், சதாரா ஜில்லாவின் வடமேற்குக் கோடியிலுள்ளதாய் விளங்கியது ஜாவளி என்னும் கிராமம். அது மேன்மை பெற்ற வீரம் பொருந்திய இந்துத்



தலைவர்களான சந்திர ராவ் என்னும் மோரி வம்சத்தினர் வாழ்ந்தவிடம். ஏறக்குறைய அந்த ஜில்லா முழுமையும் அவர்களுடைய ஆதிக்கத்திலிருந்தது. அவர்கள் பெருஞ்சேனையோடு கூடிய பெருவலி படைத்தவர்கள். அந்நகர், கலோபா, தௌகிரி முதலிய நகர்களின் வியாபாரத்தை முறையே, மாகடு, சிப்லன் என்னும் போக்குவரத்துக்குரிய கணவாய்களின் வழியாகச் செய்ய ஏற்றதாயிருந்தது. மற்றும் கொங்கண நாட்டைப்பற்ற அது இன்றியமையாததாயுமிருந்தமையால், சிவாஜி அதைக் கவர்ந்துகொள்ள எண்ணங்கொண்டான்.

அந்நாட்டைப்பிஜபூர் சுல்தானிடமிருந்து முதலில் மோர் வம்சத்தினர் பதினாறாவது நூற்றாண்டில் தானமாகப் பெற்றனர். அவர்கள் தம் படை வலியால் அக்கம்பக்கத்திலுள்ளார்களை வென்று, தமது நாட்டை விருத்தி செய்து கொண்டனர். அப்படியாக எட்டுத் தலைமுறைவரையில் பெருநிதியுடனும் பன்னீராயிரம் தென்மாவலி வீரர்களடங்கிய சேனையுடனும் கொஞ்சம் கொஞ்சமாகச் சதாரா ஜில்லாவையும் கொங்கணத்தின் சில பாகங்களையும் தம் வசப்படுத்திக் கொண்டனர். அக்குடும்ப ஸ்தாபகருடைய வீரத்தை மெச்சிப் பிஜபூர் சுல்தானால் வழங்கப்பட்ட "சந்திரராவ்" என்னும் பட்டத்தை அக்குடும்பத்தினர் வகித்து வந்தனர். அந்நாடு பிடிபடாவிட்டால் சிவாஜி தெற்கிலும் தென்மேற்கிலும் சென்று தன்னுடைய வீரத்தையும் ஆட்சியையும் நிலைநாட்ட இயலாதென அறிந்து ரகுநாத பலால்கோர்டு என்பவனை யழைத்து, "சந்திரராவைக் கொல்லாவிட்டால், அவன் நாட்டைப் பற்ற முடியாது. உன்னைத் தவிர வேறு ஒருவர் அவ்வேலையைச் செய்ய வல்லவர்களில்லை. ஆகையால் நான் உன்னை யொரு தூதனாக அனுப்புகின்றேன்" என்று கூறினான். அவ்வண்ணமும் சிவாஜிக்கும் சந்திரராவுக்கும் ஏதோ

ராஜீயச் சமாதானம் செய்பவனைப்போல் பாவனை செய்துகொண்டு நாற்றிருபத்தைந்து வீரர்களுடன் ஜாவலிக்குச் சென்றான்.

ரகுநாத பல்லால் முதல் நாள் சம்பாஷணையால் அந்நகரின் நிலையை உள்ளும் புறமும் ஓர்ந்தறிந்தான். சந்திரராவ் காவலின்றி உறங்குவதைக் கண்டு அவன் தன் எண்ணத்தை நிறைவேற்ற ஆலோசனை செய்தான். இரண்டாம் முறை சந்தித்தது ஒரு தனியறையிலாகும். ரகுநாதபல்லால் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுத் திடீரென வாளையெடுத்துச் சந்திரராவையும் அவன் தம்பி சூரியராவையும் வெட்டி வீழ்த்தினான். முன்பு பேசி வைத்திருந்தபடி அதே சமயம் (1656) சிவாஜி தன் படையுடன் சென்று சந்திரராவ் குடும்பத்தவர்கள் எல்லோரையும் சிறை செய்தான். ஆனால் சந்திரராவின் உறவினனும் தலைமையதிகாரியுமான ஹனுமந்தராவ் ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு மராத்தியர்களை எதிர்த்தான். சிவாஜி அவனையும் கொன்றாலன்றித் தன் எண்ணம் பூர்த்தியடையாதெனவறிந்து சாம்புஜிகாவ்ஜி என்பானை ஹனுமந்தராவுக்குக் கலியாணம் பேசப் போகிறவனைப்போல் அனுப்பினான். அவனும் அப்படியே சென்று தனிமையாகப் பேசிக்கொண்டிருக்கையில் ஓரே வெட்டாய் அவனை வெட்டி வீழ்த்தினான், உடனே ஜாவலி நாடு முழுமையும் சிவாஜி கையிலகப்பட்டது. பின் சிவாஜி தன் நாட்டைக் கோலாப்பூர் வரையிலும் பரவச்செய்தான். இளைய சகோதரனான மாஜிராவ் தப்பியோடிச் சந்தரராவ் என்னும் பட்டத்தைப் பூண்டு சிவாஜிக்கு விரோதமாக ஜயசிங்கனுடன் சேர்ந்துகொண்டான்.

ஜாவலி வெற்றி சிவாஜிக்குத் தென் நாட்டுக் கதவைத் திறந்து வைத்தது போலாயிற்று. அவ்வெற்றியால் சிவாஜியின் காலாட்படையும் விருத்தி யடைந்தது. அவன்



ஜாவலிக்கு இரண்டு மைல் மேற்கில் "பிராதாபகடம்" என்னும் ஒரு கோட்டையைக் கட்டினான். அங்குத் தேவி பவானிக்கு ஒரு கோயிலுங் கட்டினான். 1656-ம் ஆண்டு சந்தரராவைச் சிறை செய்தபோது "ரேய் கார்" கோட்டையையும் பெற்றான். அக்கோட்டையே சிவாஜியின் தலைநகராக விளங்கியது. ஷாஜியின் இரண்டாவது மனைவியின் சகோதரனான சாம்புஜி, மேஹைட் என்பவனிடமிருந்து "சூபா"க் கோட்டையையும் பெற்றான். அதற்குள் அவனுக்கு "ரோகிடா" "திகோணா" "லோகர்" "ராஜமசி" முதலிய கோட்டைகளுங் கிடைத்தன. சிவாஜி அவைகளைப் பழுது பார்த்துப் பலமாகப் புதுப்பித்துத் தக்க பாதுகாவல்களையும் ஏற்படுத்தினான். இவ்விதம் சிவாஜி விருத்தியடைந்து கொண்டிருக்கையில் பீஜபூரில் அடில்ஷா சுல்தான் 1656-ம் ஆண்டு மண்ணுலக வாழ்க்கையைத் துறந்து விண்ணுலகெய்தினான். அச்சம்பவம் சிவாஜியின் எண்ணம் பூர்த்தியடைவதற்கு மிகவும் அனுகூலமாயிற்று.

## 5. சிவாஜியும் மோகலாயரும்

சிவாஜி இவ்விதமாகச் சுயேச்சை பெற்றுத் தன் படைவலியை விருத்தி செய்துகொண்டானாயினும் 1657-ம் ஆண்டுவரை முகலாயர்களுடன் யாதொரு சச்சரவும் செய்யாமல் வாளாவிருந்தான். அதற்குக் காரணங்கள் பல. முதன்மையாக, அவன் தன் நிலையைப் பலப்படுத்திக் கொள்ளவில்லை; சிறிது பெற்ற வலிமையும் நிலைபெற்றதா என்பது ஐயத்திலிருந்தது. இரண்டாவது, சிவாஜி 1650 முதல் 56-ம் ஆண்டு இறுதிவரைப் பீஜபூர் சுல்தானுடன் ஓய்வற்ற சண்டை செய்துகொண்டிருந்தமையால் அதே காலத்தில் மற்றோர் அரசை—அதிலும் வல்லரசாகிய மொகலாய பாதுஷாவின் விரோதத்தைச் செய்துகொள்வது இயலாததுமன்றி இராஜதந்திரத்திற்கு மாறுபட்டதுமாகு மன்றோ? மூன்றாவது, அச்சமயம் 1653-ம் ஆண்டு முதல் தக்காண மொகலாயநாடுகளுக்குத் தலைமைப் பிரதிநிதியாயிருந்தவன் ஔரங்கசீப். அவன் பெருந்திறல் படைத்தவன்; படை வலிமையுடையவன். 1656-ஆம் ஆண்டில் ஔரங்கசீப் கோல்கொண்டாவுடன் பொருதுகொண்டிருக்கையில் சிவாஜி ஜாவலி யுத்தத்திலும், இரத்தினகிரி ஜில்லாவை வசப்படுத்துவதிலுமே சூழ்ந்திருந்தான். ஆனதுபற்றி ஔரங்கசீப் இல்லாத காலத்தில் மொகலாயத் தக்காணத்தைப் பிடித்துக்கொள்வதே சுலபமானதும் இராஜதந்திரமுடையதும், பயனளிப்பதும் ஆகும்.

முகமத் அடில்ஷா 1656-ம் ஆண்டு இறந்த பிறகு, பீஜபூரின்மீது படையெடுத்துப் பீஜபூர் கனவான்களை மானபங்கஞ்செய்ய ஔரங்கசீப் பெரிதும் முயற்சி செய்யத் தொடங்கினான். அச்சமயம் ஆமத் நகரின் மொகலாயப் பிரதிநிதியான மூல்டாபட்கானுக்கு, சிவாஜி தன்னுடைய



எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள அனுமதிப்பின், அவர்களுடன் சேர்ந்துகொள்வதாக ஒரு கடிதமெழுதினான். அதையறிந்த ஔரங்கசீப் சிவாஜியை விரோதித்துக்கொள்ளாமல் கடிதம் போக்கி நட்புக்கொண்டாடிக் கொண்டிருக்கு மாறு கானுக்குப் பதிலளித்தான்.

பின் சிவாஜி, ஔரங்கசீப்புக்கு நேரே சோணாஜி என்னும் தூதனை யனுப்பினான். அவனும் அப்படியே சென்று 1657-ம் ஆண்டு பீடார் முற்றுகை முகாமில் இளவரசைக் கண்டு தான் வந்திருக்கும் விஷயத்தைத் தெரிவித்தான். அதற்கு இளவரசு, சிவாஜி அப்பொழுது வசப்படுத்தியுள்ள பீஜபூர் கோட்டைகளை யவனுக்கே கொடுப்பதாகவும், தேபல் கோட்டையையும் அதைச் சுற்றியுள்ள நாட்டையும் சேர்த்துக்கொள்வதற்கு அனுமதிப்பதாகவும் சிவாஜி கல்யாணியை முற்றுகையிடச் செல்லும்பொழுது பதிலனுப்பினான். அத்தூதன் மூலமே, தன்னுடைய கல்யாணி முற்றுகைக்கு ஒரு படையோடு வந்து உதவுவதாகவும் கூறியனுப்பினான். ஆனால் இதற்கு முன்பே சிவாஜி வேறொரு விதமாகச் செய்ய எண்ணங்கொண்டான். அன்றியும் இளவரசின் வார்த்தையில் அவனுக்கு நம்பிக்கை யேற்படவில்லை. ஆகையால் பீஜபூருக்குச் சாதகமாக, மொகலாயரை மற்றோரிடத்தில் போருக்கிழுத்தலே சிறந்ததெனக் கொண்டான். அப்படியே மொகலாயர் கல்யாணி முற்றுகையில் பலத்தைச் செலவு செய்துகொண்டிருக்கையில் தக்காணத்தின் தென் மேற்குப் பாகத்தைச் சிவாஜி எதிர்த்தான். அவன் இவ்வெண்ணத்துடன் தூதனை மீள யழைத்துக்கொண்டு சண்டை செய்யத் தொடங்கினான்.

மீனாஜி பான்ஸ்லே, காசி என்னும் இரு சேனைத் தலைவர்கள் பீமா நதியைக் கடந்து சேனையுடன் சென்று சமர்குண்டா, ரெய்சின் மாகாணங்களாகிய மொகலாய நாட்டைக்

கொள்ளையிட்டனர். அவர்கள் மொகலாயரது தக்காணப் பிரதான நகராய ஆமது நகரையே கொள்ளையிடுவதாகவும் பயமுறுத்தினர். அதையறிந்த அந்நகர் கிலேதாரான முல்டாபட்கான் பொக்கிஷங்களைப் பத்திரஞ் செய்தான். தன் கோட்டைச் சேனையைக் கொண்டு மராத்தியர்களையும் முறியடித்தான். கீழ்ப்பாகத்தில் இவ்வாறு மீனாஜி ஆமது நகரை எதிர்த்துக்கொண் டிருக்கையில் சிவாஜி வடக்கில் சூனர் மாகாணத்தைச் சூறையிட்டுக்கொண்டிருந்தான். ஓர் இரவு ஜாக்கிரதையாகச் சென்று சூனர் கோட்டைச் சுவரை யளவிட்டு, நூலேணி கொண்டேறிக் காவலாளரைக் கொன்று, மூன்று லக்ஷம் பொன்னையும் இருநூறு குதிரைகளையும் மற்றும் பலவித விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் கைப் பற்றினான். இம்மராத்திய வெற்றிக்குக் காரணம் அங்கிருந்த மொகலாய உத்யோகஸ்தரின் கடமை வழுவியதும் படை வலிக் குறைவுமேயாகும்.

உடனே ஒளரங்கசீப், நாசரிகான், ஜராஜ்கான் என்னும் இரு தலைவர்களிடமும் மூவாயிரம் வீரர்களடங்கிய சேனையைக் கொடுத்தனுப்பினான். ஒளரங்காபாத்திலிருந்து பீடாருக்கு வந்து கொண்டிருந்த ராவ்கானையும் அதேயிடத்திற் கனுப்பினான். செயிஷ்டகானையும் அவன் படையில் ஆயிரம் வீரர்களைப் பிரித்து ஆமத்நகருக்கு அனுப்பும்படி கட்டளையிட்டான். நாசரிகான் புறப்பட்டுப் பீர்பாகானவை யடைந்து நான்கு நாட்கள் கழித்து ஆஸ்தி என்னுமூரை யடைந்தான். இவ்விடத்தில் காலதாமதஞ் செய்து கொண்டு வந்தமையின் அவர்கள் இளவரசன் கட்டளைகளை நிறைவேற்ற இயலவில்லை. இதற்கிடையில் ஆமத் நகர்க் கோட்டையிலிருந்து முல்டபாட்கான் சென்று மீனாஜியைத் தோற்கடித்துச் சமர்குண்டாவை மராத்தியரிட மிருந்து காப்பாற்றினான். சிறிது காலம்வரை அப்பிரதேசத்



திலேயே யிருந்த மராத்தியர்களையும் நாளடைவில் மீர்ஸாகானும் முல்டாபட்டும் ஓட்டினார்கள். சிவாஜி இக்காலத்தில் சூனர்ப் பிரதேசத்திலேயே இருந்தான். செயிஷ்டகானும், ராவ்கானும் வருவதைக்கண்டு, அவர்கள் கையிலகப்படாமல் அவன் அங்கேயே திரிந்து கொண்டிருந்தான். அவர்கள் நெருங்கியவுடன் அவன் ஆமத் நகர் ஜில்லாவுக்கு ஓடிப்போய் அப்பிரதேசத்தைக் கொள்ளையிட்டான். கடைசியாக நாசரிகானும் அங்கு வந்து சேர்ந்தான். அவன் கடுமையாக வந்து எதிர்த்து மராத்தியர்களை முறியடித்தான். அவர்கள் ஓடவாரம்பித்தனர்; ஆனால் துரத்தப்படவில்லை. ஒளரங்கசீப், பழிவாங்குவதன் பொருட்டு அவன் கார்டலப்கானைச் சூனரிலும், அப்தல் முனிமைகாரை, நாமுனாவிலும், நாசரிகான் முதலியோரைப் பான்டா கோட்டைக்கெதிரிலும் சேனையுடன் அனுப்பிச் சமர்குண்டா, காரா, ஆஸ்தி, மாகாணங்களைக் காத்தான். அவர்களை யடிக்கடி சென்று மராத்திய நாட்டைக் கொள்ளையிட்டு உடனே திரும்பும்படியும் அவன் கட்டளையிட்டான்.

அப்போது மழைக்காலம் வந்தமையின், சிவாஜி தன் நாட்டிற்குத் திரும்பினான். மழைக்காலமாகிய ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் ஒன்றும் நடைபெறவில்லை. செப்டம்பர் மாதத்தில் ஷாஜஹான் நோயுற்றமையால் டில்லியில் அரச பதவிக்கு மைந்தர்கள் தம்முள் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். பீஜபூரும் மொகலாயரும் சமாதானம் செய்து கொண்டனர். அக்டோபர் மாதத்தில் ஆமத் நகர்ப் பிரதிநிதிக்குச் சேனையுடன் ஆயத்தமாயிருக்கும்படி ஒளரங்கசீப் கட்டளையிட்டான். பீஜபூர் சமாதானஞ் செய்துகொண்டதை யறிந்த சிவாஜி ரகுநாதபந்தை ஒளரங்கசீப்பிடம் சமாதானத்திற்காக அனுப்பினான். இளவரசன் அப்பொழுது தான் டில்லிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அவன்

1658-ம் ஆண்டு சிவாஜிக்கு, "உன்னுடைய குற்றங்கள் மன்னிக்கப்படக் கூடியவை யல்லவாயினும் நீயே உன் தவறுகளை உணர்கின்றமையின் மன்னிக்கிறேன். உனக்கு உரிமையான ஜாகீரையும், நைசாம்ஷாவிடமிருந்த கொங்கணத்தையும் உனக்குக் கொடுத்துவிட்டால் நீ ஐயாயிரம் வீரர்களடங்கிய சேனையை என் தர்பாருக்கனுப்பி என் எல்லைப்புறத்தைக் காப்பாற்றுவதாகக் கூறியுள்ளாய். அதன்படி நீ உடனே சோணாஜியை யனுப்பவேண்டியது. உன் வேண்டுகோள் நிறைவேற்றப்படும்" என்று ஒரு கடிதமெழுதினான்.

ஆனால் ஔரங்கசீப், சிவாஜியின் வார்த்தைகளில் முற்றும் நம்பிக்கை வைக்கவில்லை. சிவாஜியின் தந்திரங்களையும் வீரத்தையும், எண்ணத்தையும் முற்றும் உணர்ந்திருந்தமையின் 1657-ம் ஆண்டு மீர்ஜும்லாவிற்குச் சமர்குண்டா பிரதேசத்தைக் காத்திருக்கும்படியும், அடில்ஷாவுக்கு, "இந்த நாட்டைக் காப்பாற்றுக: இந்நாட்டில் பல கோட்டைகளையும் பிடித்துக்கொண்டுள்ள சிவாஜியை யுடனே துரத்துவாயாக. அப்படி யவனை உன் அரசில் வைத்துக்கொள்ள விரும்புவாயானால் மொகலாயரை வருத்தாதபடி தூரதேசமாகிய கர்நாடகத்தில் ஜாகீரைக் கொடுத்தனுப்பிவிடுக" என்றும் ஔரங்கசீப் எழுதியிருந்தான். ஆகவே ஔரங்கசீப், சிவாஜிக்கு ஒருவித மன்னிப்பும் சமாதானமும் கொடுக்காமலே 1658-ம் ஆண்டு புறப்பட்டு டில்லி நோக்கிச் சென்றான். ஆகவே சிவாஜிக்கு, டில்லியில் 1658, 59-ம் ஆண்டுகளில் அரசியலை யடைவதற்கேற்பட்ட சண்டை மொகலாயர் பயத்தை யறவே யொழித்தது. பீஜபூரிலோ, தம்முடைய தோல்விகளுக்கு உத்திரவாதமுடையார் யாரெனக்கொண்டு ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு முடிவில் பிரதம மந்திரி கான்முகமதைக் கொன்றது. சிவாஜியின் எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்குத் தடையின்றி-



யிருந்தமையின், சிவாஜி யாதொரு தடையும் பயமுமின்றிப் படையெடுத்துச் செல்லச் சுலபமாயிற்று.

சிவாஜி 1657-ம் ஆண்டு ஜின்ஜிராவிலுள்ள சித்திகளை யெதிர்க்குமாறு ரகுநாதனைப் படையுடன் அனுப்பினான். அவன் மேற்குத்தொடர்ச்சி மலையைக் கடந்து கொங்கணத்திற்குச் சென்றான். அப்பிரதேசமாகிய கல்யாணி ஜில்லாவை (Modern Thana District) முல்லா ஆமத் என்னும் பீஜபூர்க் கவர்னர் ஒருவன் ஆண்டு வந்தான். அடில்ஷா நோயுற்றதனால் அவன் பீஜபூரிலேயே இருந்தான். ஆகையால் அங்குப் பகைவரை யெதிர்க்கப் போதிய படையுமில்லை; பின்னும் புதிதாக, நைசாம்ஷாவிடமிருந்து பீஜபூர் பலப்பட்ட நாடாதலின், புதிய அரசியல் சட்ட திட்டங்கள் வேரூன்றவில்லை. சிவாஜி வெகு சுலபமாகக் கல்யாணி, பீவண்டி என்னும் நகரங்களைப் பிடித்துக்கொண்டான். 1658 ம் வருஷம் முகூலிக் கோட்டையும் அவன் கையகப்பட்டது. சுர்தார், பீர்வாடி, தாலா, கோசல்கார், சுககார், கங்கோரி, ரேய்ரி முதலிய கோட்டைகளும் சிவாஜியின் கைப்பட்டன. இவ்விதம் கலோபா ஜில்லாவின் கிழக்குப் பாதியை அபிசீனியர்கள் இழந்தனர். கல்யாணியிலிருந்து, டேமன் மாகாணத்தைச் சேர்ந்த போர்ச்சுகீசியருக்குச் சொந்தமான இடங்களையும் கொள்ளையடித்துச் சிவாஜி அக்கோட்டையையும் கைப்பற்றினான். பின் போர்ச்சுகீசியர் வருடந்தோறும் கப்பங்கட்டுவதாக ஒப்புக்கொண்டனர். கல்யாணியும் பீவண்டியும் துறைமுகங்களாகச் செய்யப்பட்டன. சிவாஜி இவ்விதம் பெற்ற தானை, கலோபா ஜில்லாவின் கிழக்குப் பாகத்திற்குச் சபாஜி சன்தேவ் என்பவனைப் பிரதிநிதியாக நியமித்தான். 1657-ம் வருஷம் மே மாதம் 14-ந் தேதி சாம்பாஜி பிறந்தான். 1659-ம் ஆண்டில் சிவாஜிக்குச் சொந்தமாக நாற்பது கோட்டைகளிருந்தன.

பீஜபூரில் பழைய பிரதம மந்திரி கான்முகமது 1657-ம் ஆண்டு கொல்லப்பட்டான். அவனுக்குப் பின்வந்த பிரதம மந்திரியான காவஸ்கான் அரசியலில் மிக்வும் கெட்டிக்காரன். தான் மெக்காவுக்கு 1660-ம் ஆண்டு செல்லும்வரை அரசை வகித்துவந்த அரசி, அரச காரியங்களிலும், வீரத்திலும் சிறந்தவள். அன்றியும் ஔரங்கசீப் டில்லிக்குச் சென்றுவிட்டமையின் அவர்களுடைய பயமும் ஒருவாறு ஒழிந்தது. ஆனதுபற்றித் தம் தலைவராகிய ஷாஜியை யழைத்து, அவன் புதல்வன் செய்துள்ள அக்கிரமங்களுக்கு உத்திரமளிக்கச் சொன்னான். ஷாஜி, தனக்கு ஒன்றும் தெரியாதென்றும் சிவாஜியை எவ்விதம் வேண்டுமாயினும் தண்டித்துக்கொள்ளலாமென்றும் கூறவே, சிவாஜியை எதிர்ப்பது பீஜபூருக்கு இன்றியமையாததாயிற்று. ஆனால் சிவாஜி அப்பொழுது பெரும் படையுடனிருப்பதால் நினைத்தபடி அவனை யடக்குவது சுலபமானதன்று என்பது விளங்கிற்று. மேற்குத் தொடர்ச்சி மலையில் அவனுடன் பொருது ஜயம் பெறுவதில் ஒருவருக்கும் நம்பிக்கையில்லை. கடைசியில் அப்சல்கான் என்பான் செருக்குடன் தான் படையெடுத்துச் செல்வதாகத் தெரிவித்துப் படைத்தலைமை வகித்தான்.

அப்சல்கான் என்ற பட்டப் பெயருடைய அப்துல்லா படாரி, பீஜபூர் ஆட்சியில் மதிப்பும், கீர்த்தியும் உடையவன்; படைத் தலைமையில் முதன்மை பெற்றவன். அவன் தைரியத்தையும், வீரத்தையும், யுத்த தந்திரத்தையும், முகலாயருடன் சண்டை செய்தபொழுதே தோற்றுவித்துள்ளான். ஆனால் பீஜபூர் ஒரு பெண்ணின் ஆட்சியுட்படவே படைவலி குன்றியிருந்தது. ஆகவே பத்தாயிரம் வீரர்களடங்கிய சேனையே அப்சல்கானுடன் அனுப்பப்பட்டது. சிவாஜியோ, ஜாவலி வெற்றியாலும், பட்டாணியச் சேனையாலும் அறுபதினாயிரம் வீரர்களடங்கிய படைவலி பெற்றிருந்தான்.



ஆகையால் அப்சல்கான் அவனுடன் சண்டையிடுவது உசிதமன்று எனவும், வஞ்சகத்தாலே சிவாஜியைக் கொல்லவேண்டும் அல்லது சிறைப் பிடிக்கவேண்டும் என்றும் கருதினான். அப்சல்கான் சேனைத் தலைமையை வீராவேசத்தில் ஒப்புக்கொண்டு, சபையில் தான் குதிரையினின்றும் இறங்காமலே சிவாஜியைச் சிறைப் பிடிப்பதாக வீரம் பேசினான்; மாவலிகளைத் தன் வசப்படுத்த முயன்றான். அவன் வடக்கு நோக்கிச் சென்று துளஜாபுரத்தை யடைந்து, பான்ஸ்லே வம்சத்தாரின் கடவுளாகிய பவானி தேவியின் ஆலயத்தை யிடித்து விக்ரஹத்தையும் உடைத்தெறிந்தான். இவ்விதமாகப் பலவிதக் கெடுதல்களை இந்து ஆலயங்களுக்கு அவன் செய்தான்.

அப்சல்கான் வெய் எனும் நகரையடைந்தான்; அவன் சிலகாலம் அங்கேயே இருந்து தன் படையைத் திரட்டிக்கொண்டான். அப்பொழுதே எல்லாத் தலைவர்களுக்கும் அப்சல்கானுடன் சேர்ந்துகொள்ளும்படியாகப் பீஜபூரிலிருந்து கட்டளை பிறந்தது. உட்ரோலி தேசமுகியான கேண்டாஜி கோப்டி, கானுடன் சேர்ந்துகொண்டான். இவ்விதம் சில மாவலித் தலைவர்கள் சேர்ந்தனர். சிவாஜியுடனும் ஏழு தலைவர்கள் சேர்ந்துகொண்டனர். சண்டை, மழைக்காலத்திற்குப் பிறகு ஆரம்பிக்கக் கருதியிருந்தமையின் அதுவரையில் அப்சல்கான் வெய் நகரில் தங்கியிருந்தான். சிவாஜி சேனையுடன் பிரதாப கடக் கோட்டையில் தங்கியிருந்தான். அப்சல்கான் சிவாஜியை நட்புமுறை கொண்டாடிப் பிடிக்க எண்ணங் கொண்டு, தன் ஒற்றன் கிருஷ்ணாஜி பாஸ்கான் என்பானைச் சிவாஜியிடம் ஒரு கடிதத்துடன் அனுப்பினான். அக்கடிதத்தில், "உன் தந்தை நீண்ட காலமாக என்னுடைய சிறந்த நண்பராகவுள்ளார். ஆதலின் நீ எனக்குப் புதியவனன்று. ஆகை

யால் நீ என்னை வந்து பார். நான் அடில்ஷாவிடத்தில் என்னாலியன்றவரை கூறி, உன் வசத்துள்ள கொங்கணத்தையும், பல கோட்டைகளையும், உனக்கே சொந்தமாக்குகின்றேன். அதுவுமன்றி, நான் பீஜபூர் அரசில் உனக்குப் படைத் தலைமைப் பதவியையும், கௌரவத்தையும் வாங்கித் தருகிறேன். அரசவைக்கு வர உனக்கு இஷ்டமிருந்தால் வரலாம். அங்கு நீ வரச் சம்மதிக்காவிட்டால் உன்னை மன்னிக்கவும் படும்" என்று எழுதியிருந்தது.

அதுவே சிவாஜியின் வாழ்க்கையில் தோன்றிய மிகவும் கொடிய காலம். ஏனென்றால், இப்பொழுது அவன் அப்சல்கானுக்குப் பணிந்துவிடுவானேயானால் தான் எண்ணியபடி தனியரசு நிலைநாட்டும் எண்ணம் நிறைவேறாது. மற்றும், தன் ஆயுட்கால முழுவதையும் பீஜபூர் சுல்தானுக்குச் சேவை செய்வதிலேயே கழிக்கவேண்டும். பீஜபூரை எதிர்த்தாலோ அச்செயல் என்றைக்கும் விரோதமாகவே முடியும். முடிவுவரைத் தன் உயிரையும் சுதந்திரத்தையும் மொகலாயரிடத்தும் மற்றுமுள்ள விரோதிகளிடத்தும் அவன் காப்பாற்றிக்கொள்ள வேண்டியவனானான். ஆனால் அவன் மந்திரிகள் ஆலோசனை வேறுவிதமாக விருந்தது. அவன் என்ன செய்வதென வறியாது திகைப்புற்றான். அன்றிரவு நித்திரையில் குலதெய்வமாகிய பவானி தேவி கனவிற்றோன்றி அப்சல்கானை யெதிர்க்கும்படியும் சிவாஜி வெற்றிபெறப் போவதையும் தான் காப்பாற்றப் போவதாயும் கூறி ஊக்கமூட்டியதாக ஒரு பழங்கதை யுண்டு. உடனே, மறுநாட் காலையில் தன் தலைவர்களை யழைத்துத் தான் எதிர்த்துப் போர்புரிய எண்ணியிருப்பதைக் கூறி, அன்னை ஜீஜாபாயின் ஆசீர்வாதத்தையும் பெற்று, ஒருசமயம் தான் இறக்கும்படி நேரிடினும், தான் ஸ்தாபனம் செய்ய எண்ணியத் தனியரசும், தேசிய உணர்ச்சியும் ஓங்கி



வளருமாறு பல ஏற்பாடுகளையும் செய்துகொண்டு, கொங்கணத்திலிருந்தும், மலையிலிருந்தும் வந்த மாரோடிரிம்பக், நெதாஜிபால்கர் முதலிய படைத் தலைவர்களை வந்து பிரதாபகடத்தைச் சுற்றித் தங்கும்படி சிவாஜி கட்டளையிட்டான்.

இவ்வாறு எல்லாம் சித்தஞ்செய்து கொண்டிருக்கையில் கிருஷ்ணாஜி பாஸ்கரன் வந்தான். அப்சல்கானின் கடிதத்தை யோதியுணர்ந்து, அவனை மரியாதையுடன் நடத்தி அன்றிரவு கிருஷ்ணாஜியிடம் தனியே சென்று, தன்னுடைய எண்ணங்களைக் கூறி, இந்துக்களின் விடுதலையையும், முன்னேற்றத்தையும் தான் கருதுவதாகக் கூறி விரோதியின் எண்ணங்களைக் கேட்டான் சிவாஜி. அவனும் அப்சல்கானின் சதியாலோசனையைக் கூறவே, தன்னுடைய தூதனான கோபிநாதபந்தை யனுப்பி, அப்சல்கான் தன்னுடைய உயிருக்கு உத்திரவாதமளித்தால் சமாதானம் செய்துகொள்வதாகக் கூறினான். ஆனால் கோபிநாதன் உண்மைத் தூது அதுவன்று. பகைஞரின் பலத்தையும் சூழ்ச்சியையும் அறிந்துகொள்வதுதான் அவன் வேலை. அப்சல்கான் கோபிநாதிடம் சிவாஜிக்கு ஒரு தீங்கும் செய்வதில்லையென வாக்களித்தபோதிலும், கோபிநாத் ஏராளமான பொருளை லஞ்சங் கொடுத்து அப்சல்கானின் தீய எண்ணங்களைப் பிறரிடமிருந்து அறிந்துகொண்டான். உடனே சிவாஜியிடம் வந்து அறிந்தவற்றைக் கூறித் தனிமையாக அப்சல்கானைச் சந்தித்து வஞ்சகமாகக் கொன்றுவிடுதலே ஏற்றமுடைத்தென அவன் கூறினான். உடனே அப்சல்கானுக்குப் பயந்தவனைப் போல் பாவனைசெய்து தனியே யோரிடத்தில் சந்திப்பதாயின் தான் வருவதாகச் சிவாஜி கூற, அப்சல்கானும் உடன்பட்டான்.

சிவாஜியின் கட்டளைப்படி வெய் நகருக்கும் பிரதாப

கடத்திற்கும் ஒரு பாதை யுண்டாக்கப்பட்டது. இடை வழியில் போஜனசாலைகளும் தண்ணீர்ப் பந்தல்களும் அமைக்கப்பட்டன. பிரதாபகடத்திற்கு ஒரு மைலுக்கப்பாலுள்ள பார் என்னும் கிராமத்தில் பல பிரிவுகளாக அப்சல்கானின் படைகள் வந்து தங்கின. அதைக் கோபிநாத் சிவாஜியிடங் கூறினான். மறுநாள் சிவாஜி அப்சல்கானைச் சந்திப்பதாகக் குறிக்கப்பட்டது. சந்திப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் பிரதாபகடக் கோட்டையின் ஒரு சிகர உச்சியில், கோய்னு பள்ளத்தை நோக்கியதாயுள்ள இடமாகும். இருபுறமும் காடுகள் சூழ்ந்திருந்தமையால் அக்காட்டுப் புதர்களில் சிவாஜியின் தேர்ந்தெடுத்த வீரர்கள் ஒளிந்திருந்தனர். அங்கு ஒரு பெரிய கூடாரம் அடித்துக் கீழே வெகு அழகான இரத்தின கம்பளங்களும், அலங்காரங்களும் செய்யப்பட்டன. சிவாஜி சரீர முழுவதும் ஓரிரும்புக் கவசம் அணிந்து தலை மண்டையைக் காக்க ஓர் இரும்புக் குல்லாயையும் போட்டுக்கொண்டு அவைகளின்மேல் தூய வெண்மையான மஸ்லின் ஆடையை யுடுத்தித் தலையில் மாராத்தியருக்குரிய தலைப்பாகையையும் வைத்துக் கொண்டான். அவன் கையில் என்ன ஆயுதம் வைத்திருந்தானென்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அவன் கரத்தில் இரு மோதிரங்களில் வைத்துப் புதைக்கப்பட்டிருந்த புலி நகம் போன்ற கூரிய புலிக்கரமும் கையின் உள்ளங்கையில் ஒரு மெல்லிய கூர்மையான பிச்வா என்னும் உடைவாளும் இருந்தன. அவனுடைய பாதுகாப்புக்கு, வாளமரில் சிறந்தவனான ஜீவம காலாவும், அனுமந்தராவ்மூரைக் கொன்றை சாம்புஜிகாவ்ஜியும் பின் தொடர்ந்தனர். அவ்விருவரும் இரு வாள்களையும் ஒரு கேடகத்தையும் தாங்கி யிருந்தனர். அவர்கள் புறப்படும்பொழுது ஜீஜாபாய் சென்று, "வெற்றி யடைவாயாக" என்று மைந்தனை யாசீர்வதித்து அனுப்பி



னாள். மற்ற இருவரையும் அவனைக் காக்க வேண்டினாள். அவர்களும் அப்படியே வாக்குறுதி கொடுத்துக் கோட்டையினின்றும் புறப்பட்டுக் கோட்டை யடிவாரத்தை யடைந்து காத்துக் கொண்டிருந்தனர்.

அப்சல்கானும் பாரிலிருந்து ஓராயிரம் வீரர்கள் புடைசூழ வந்தான். கோபிநாத் அவனைத் தடுத்து அவ்வளவு சேனையுடன் சென்றால் சிவாஜி பயந்து விடுவானென்று கூறவே அப்சல்கான் சேனையை விட்டு விட்டு இருவரை மாத்திர முடன்கொண்டு, பல்லக்கிலேறிச் சயிட்பந்தா என்னும் வாள் வீரனுடனும் இரு அந்தணத் தூதர்களுடனும் வந்து கூடாரத்தை யடைந்து, அதன் வனப்பைக் கண்டு பொறாமை கொண்டான். அவைகளெல்லாம் பீஜபூருக்கனுப்பவே இவ்விதம் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கோபிநாத் கூறித் தேற்றினான். அப்சல்கானிடத்தில் வாளிருந்தது. தன் காப்பாளனைவரையும் கீழிருக்கச் சிவாஜி மேடையேறி அப்சல்கானுக்கு வணக்கம் செய்தான். அப்சல்கான் எழுந்து முன் சென்று, தழுவும் பொருட்டுத் தன்னிருகரங்களையும் நீட்டினான். சிவாஜி குள்ளமாக விருந்தமையின் அவன் தோளளவே யிருந்தான். திடீரென அப்சல்கான் கட்டித் தழுபவன் இறுகக் கட்டிக்கொண்டு வலது கையால் கட்டாரியை யெடுத்துச் சிவாஜியின் விலாப்புறத்திற் குத்தினான். ஆனால் மறைவாகவிருந்த இரும்புக் கவசம் சிவாஜியைக் காத்தது. உடனே சிவாஜி தன்னுடைய பிரமை நீங்கி அப்சல்கானின் இடையைத் தன் புலி நகங்களால் கீறிப் பிளந்து, வயிற்றைக் கிழித்து வலது கையிலிருந்த பிச்வாவால் அவனுடைய விலாப்புறத்திற் குத்தினான். அப்சல்கானின் பிடி நழுவியவுடன் சிவாஜி மேடையினின்றும் குதித்து வெளியேயிருந்த தன் வீரர்களுடன் சேர்ந்து கொண்டான். இதையறிந்த சயிட்பந்தா நீண்ட வாளால்

சிவாஜியின் தலைப்பாகையை வெட்டி இருப்புக் குல்லாயில் ஒரு வெட்டுப்படும்படியும் செய்தான். ஜீவமகாலா உடனே தன் வாளால் சயிட்பந்தை வெட்டி வீழ்த்தினான்.' இதனிடையில் அப்சல்கானைப் பல்லக்கிலேற்றினர். சாம்பூஜி அங்குச் சென்று அப்சல்கானின் தலையை வெட்டிச் சிவாஜியிடம் கொண்டுவந்தான். அத்தலை "அப்துல்ல பூரி" என்னும் மணிக்கூண்டின் கீழ் புதைக்கப்பட்டது. அதற்குச் சமீபத்தில் சிவாஜியால் கட்டப்பட்ட பாவானியின் தேவாலயம் ஒன்றும் உளது.

இவ்விதம் சிவாஜியும் தன்னிரு பாதுகாவலரும் தப்பிக் கோட்டைமீதேறிக் கொண்டு வெடி குண்டுகளைப் போட்டனர். சங்கேதப்படி அவன் சேனை அவ்வெடிச் சப்தத்தைக் கேட்டதும், மேரோடிரிம்பக், நேதாஜி முதலிய தலைவர்கள் தம்மாவலிச் சேனையுடன் நாற்புறமும் கிளம்பி அப்சல்கானின் படையைத் திடீரென எதிர்த்தனர். பீஜபூர் படை, பீதியடைந்தமையாலும், தம் தலைவர் இறந்தமையாலும் முன்பின் தெரியாத பிரதேசத்தில், எதிர்பாராத சமயத்தில் சண்டையிட முடியாது ஓட வாரம்பித்தும், நாற்புறமும் விரோதிகளால் சூழப்பட்டமையின் சண்டை செய்ய நேர்ந்தது. கடும் போர் மூன்று மணி நேரம் நடந்தது. வாயில் புல்லைக் கௌவிக் கொண்டு பணிந்தவர்களைத் தவிர மற்றையோர் வாளுக்கிரையாயினர். 3000 வீரர்களும், பல யானைகளும், ஒட்டைகளும், கொல்லப்பட்டன. எல்லாப் பீரங்கிக் குண்டுகளும், பொக்கிஷமும், கூடாரமும், மாடுகள் முதலியனவும், எல்லாம் வெற்றி பெற்ற சிவாஜிக்குக் கிடைத்தன. அதில் 65 யானைகளும், 4000 குதிரைகளும் 1200 ஒட்டைகளும், 2000 துணி மூட்டைகளும், 10 லக்ஷம் ரூபாயும் பிறவும் கிடைத்தன. முக்கியமான பெருஞ் செல்வம் படைத்த ஒரு சர்தாரும், அப்சல்கானின் இரு புதல்



வர்களும், லாம்பாஜி பான்ஸ்லே, சூட்ஜ்ஷர்ராவ் கேட்ஜி என்னும் மராத்தியத் தலைவர்களும் சிறைப்பிடிக்கப்பட்டனர். பிடிக்கப்பட்ட எல்லா அந்தணர்களும், ஆடவர்களும், குழைந்தைகளும் விடுதலை பெற்றனர். ஆனால் அப்சல்கானின் மனைவிகளும், மூத்தகுமாரனான பசில்கானும் கொண்டாஜி கோப்டே என்னும் மாவலியின் உதவியால் தப்பியோடினர். பின், சிவாஜி சிறைப்பட்டவர்களுக்குப் பொருளும் உணவுங் கொடுத்துத் திருப்பியனுப்பினான். மாராத்திய வீரர்களுக்கு நன்கொடையளிக்கப்பட்டது. யுத்தத்தில் காயமடைந்த வீரர்கள் சிகிச்சை பெற்று அவரவர்களுக் கேற்ப வெகுமதியையும் பெற்றார்கள். தலைவர்களுக்கு யானை, குதிரை முதலியன வழங்கப்பட்டன. இவை யாவும் கி. பி. 1659ம் வருஷம் நிகழ்ந்தன.

இவ்வெற்றிக்குப் பின், சிவாஜி தென் கொங்கணத்திலும், கோலாப்பூர் ஜில்லாவிலும் புகுந்து பன்ஹாலா முதலிய கோட்டைகளையும் பிடித்துக் கொண்டு, மறு முறையும் பீஜபூரைத் தோற்கடித்தான்.

## 6. சிவாஜியும் பீஜபூரும்

1659ம் ஆண்டில் ஔரங்கசீப் இரண்டாம்முறை மகுடஞ் சூடிய காலத்தில் அரசியல் சீர்திருத்தங்கள் செய்த பொழுது, இளவரசனை மௌசாமுக்குப் பதிலாகச் செயிஷ்டகானைத் தக்காண ராஜப் பிரதிநிதியாக நியமித்தான். தக்காணத்தை ஆண்டபொழுதும், ஔரங்கசீப் கோல்கொண்டாமீது படையெடுத்த பொழுதும் தன் வீரத்தையும் தீரத்தையும் வெளிக்காட்டியுள்ளான். இப்பொழுது அவனுக்கிடப்பட்ட கட்டளைகளில் முக்கியமானது சிவாஜியை யடக்குவதே யாகும். இக்கடமையைச் செய்யச் செயிஷ்டகானுக்குப் பீஜபூர் ஏற்ற உதவியையும் அளித்தது. ஆகையால் சிவாஜி சேனையை இரண்டாக வகுத்துக் கொண்டு ஒரே காலத்தில் இருபெருஞ் சேனைகளை எதிர்த்து இருபுறத்தும் தோல்வியடைவும் நேர்ந்தது.

அப்சல்கானிடம் வெற்றிபெற்ற சிவாஜி பசல்கானைத் தோற்கடித்துப் பன்ஹாலாக் கேட்டையையும், ரத்னகிரி ஜில்லாவில் பலவிடங்களையும் பிடித்துக் கொண்டதையும் கண்ட அலி அடில்ஷா இரண்டாவான் என்பான் யுத்தத்திற்குப் புறப்பட்டான். அப்போது, கர்நூலைப் பிடித்துக் கொண்டு அரசனுக்கு விரோதமாகவிருந்த சித்திஜவகர் என்னும் அபிசீனியன் வந்து தனக்கு அந்நாட்டைக் (கர்நூல்) கொடுப்பதாயின் சுல்தானுடன் சேர்வதாகக் கூறினான். சுல்தானும் ஒப்புக்கொண்டு அவனுக்குச் சலபட்கான் என்னும் பட்டமும் ஒரு படையுமளித்துச் சிவாஜியை யடக்குமாறு கட்டளை யிட்டான். அவனும் அவ்வாறே 1660ம் வருஷம் மராத்தியர்களைப் பன்ஹாலாக் கோட்டைக்குள் துரத்தி முற்றுகை யிட்டான்.

ஆறு மாத காலம் கோட்டையின் முற்றுகை நடந்தேறி



யது. வெளியிலிருந்து உள்ளுக்கும் உள்ளிருந்து வெளிக்கும் போக்குவரவு இல்லாமையால் சிவாஜி ஒரு கூண்டிலடைக்கப்பட்ட சிங்கத்தைப் போன்றிருந்தான். ஆகையால் அவன் ஜவகருக்குத் தான் பணிவதாக ஒரு கடிதம் எழுதினான். ஜவகரும் அதை உண்மையெனக் கொண்டு சமாதானத்திற்கு ஏற்பாடுகள் செய்தான்; சிவாஜியின் உதவியால் தான் ஒரு தனியரசு நிலை நாட்டவும் எண்ணினான். மறுநாள் நள்ளிரவில் சிவாஜி யவனைக் கண்டு சமாதானம் செய்து கொண்டான். ஆனால் போலி முற்றுகை நடந்தேறிக் கொண்டேயிருந்தது. ஆனால் பசல்கான், தன் தந்தையைக் கொன்றவனைப் பழிவாங்க எண்ணிக் கடுஞ்சினத்துடன் முற்றுகையிட்டான். சிவாஜி இராக் காலங்களில் வந்து கோட்டை அகழிகளைத் தூர்த்துப் பீஜபூர் வீரர்களைத் துரத்தினான். இரவுச் சண்டையில் மிகவும் கீர்த்தி பெற்ற காரதோஜி குஜர் என்பவன் பிரதாபராவ் என்னும் பட்டத்தைப் பெற்றுச் சேனாதிபதியாக விருந்தான். இதைக் கண்டு பீஜபூர் வீரர்கள் அஞ்சினர். பசல்கான் சிவாஜியைவிட்டுச் சமீபத்திலிருந்த பவன்கார் கோட்டையைத் தாக்கினான். இதைக் கண்டு பவன்கார் கோட்டைத் தலைவன் சிவாஜியை உதவி கேட்டான். பவன்கார் பிடிபட்டால் பன்ஹாலா எளிதில் கைப்படும் என்பதை யறிந்த சிவாஜி ஓர் இரவு புறப்பட்டுப் பவன்காரிலுள்ள பீஜபூர் வீரர்களை யெதிர்த்துக் கொண்டு விடில்கார்ப் பாதையை யடைந்தான்.

சிவாஜி தப்பியோடுவதை யறிந்த பசல்கான் சித்தி ஹெலாலையும் சேனையையுங் கொண்டு துரத்திச் சென்றான். விடியற் காலையில் எட்டு மைலுக் கப்பாலுள்ள கஜபூருக்குப் வந்தனர். சிவாஜி விரோதிகளின் பலத்தைக்கண்டு பயந்தான்; மற்றும் களைத்து மிருந்தான். அங்குப் பாதை ஒரு குறுகிய வழியாக விருந்தமையின், சிவாஜி விடில்காரை யடையும்

வரை விரோதிகளைத் தடுத்து நிற்பதாகப் பாஜி பிரபோதான் கூறினான். உடனே சிவாஜி அவனிடம் ஒரு பகுதிச் சேனையை விட்டு விட்டு மற்றொரு பகுதியைக் கொண்டு கோட்டைக்கேகினான். பீஜபூர் வீரர்கள் வந்து ஐந்து மணி நேரம் பாஜிப் பிரபோதானுடன் சண்டை செய்தனர். அப்பொழுது சிவாஜி கோட்டையை யடைந்ததற் கடையாளமாக ஒரு குண்டு போடப்பட்டது. அதைக் கேட்டுப் பாஜி தன்னுடைய கடமையைச் செய்து விட்டதாகிய மகிழ்ச்சியுடன் உயிர் துறந்தான். பின், அவரைப் படை வீரர்கள் தூக்கிக் கொண்டு காட்டிற்குள் போய்விட்டனர். பின், பீஜபூர் சேனை பன்ஹாலாவிற்குச் சென்று அங்கிருந்து பீஜபூரை யடைந்தனர். ஜவகரின் நடத்தையைக் கேட்ட அடில்ஷா அவனைத் தண்டிப்பதற்காகப் பன்ஹாலாவுக்கு வந்தான். சுல்தானை ஏமாற்ற முடியாமையைக் கண்ட ஜவகர் கடைசியாக மராத்தியர்களைப் பன்ஹாலாவினின்றும் துரத்தினான். ஒரு மாதத்திற்குப் பின் வடக்குக் கோடியில் சிவாஜியின் சேனை மற்றொரு சண்டையில் தோல்வியடைந்ததால் தெற்கிலுள்ள பன்ஹாலாவை விட்டுச் செல்ல நேர்ந்தது.

1660-ம் ஆண்டின் முற்பகுதியில் மராத்தியர்களைத் தெற்கில் பீஜபூரை எதிர்க்கும்படி செய்துவிட்டு வடக்கில் சிவாஜியைச் செயிஷ்டகான் எதிர்க்க ஆரம்பித்தான். ஒரு பெருஞ் சேனையுடன் செயிஷ்டகான் தெற்கு நோக்கிப் புறப்பட்டு வழியிலுள்ள பல தேசங்களை ஜெயித்துக் கொண்டு பூனாவின் எல்லைப்புறம் வந்து சேர்ந்தான். அவன் சோன்வாடி, சூபா, வழியாக பாரமதி வந்து சேர்ந்தான். பின், நீரா நதிக்கரை வழியாகச் சென்று பூனாவிற்கு 26 மைல் தெற்கேயுள்ள ஷேர்வாலுக்கு வந்தான். ஜயித்த எல்லாக் கோட்டைகளிலும் தன் படையைக் காவல் வைத்து ஒரு படையை ராஜகார்ப் பிரதேசத்தைத் தாக்கும்படி யனுப்பி



னன். பின் அவன் சிவபூர் வழியாக சாசவதி என்னுமிடத்திற்கு வந்தான். இதுவரை மொகலாயரை எதிர்ப்பார் ஒருவருமில்லை. அங்குக் கணவாயில் முதன் முதல் மராத்தியர்கள் எதிர்த்தனர். அவர்கள் கடும் போரில் தோற்கும்படி செய்தனர். சாசுவதியிலிருந்து ஒரு பகுதி வீரர் புரந்தரக் கோட்டையின் கீழுள்ள கிராமங்களைக் கொள்ளையிட்டனர். அங்கு மூவாயிரம் மராத்திய வீரர்கள் எதிர்த்தனர். அங்கு ஒரு கடும்போர் நிகழ்ந்தது. அப்பொழுது மொகலாயருக்கு உதவிப்படை வரவே வெற்றி பெற்று, மாலை, சாசவதிக்குத் திரும்பினர். இராஜகிரியில் நான்கு நாட்கள் தங்கிய பின் பூனாவுக்குட் புகுந்தனர்.

செயிஷ்டகான் மாரிக் காலத்தைப் பூனாவிலேயே கழிக்க எண்ணினான். ஆனால் அதற்கு முன்பே, சகன் பிரதேசத்திலுள்ள உணவுப் பொருள்கள் யாவும் நாசமாக்கப் பட்டிருந்தமையாலும், எல்லா நதிகளும் நீர்ப் பெருக்குற்றிருந்தமையாலும் வெளியிலிருந்து உணவுப் பொருள்கள் வருதற் கேதுவில்லை யாதலாலும் அமது நகருக்குச் சமீபத்திலுள்ள பூனாவுக்குப் பதினெட்டு மைலுக்கப்பாலுள்ள சகன் கோட்டைக்குப் போக அவன் தீர்மானித்தான். சகன் கோட்டை யுத்தத்திற்குச் சிறந்த இடம். கிழக்கில் பீமாநதியும் கோடுந்தியும் மொகலாய நாட்டைப் பிரிப்பனவாக அமைந்துள்ளன. அவன் பூனாவை விட்டுப் புறப்பட்டுச் சகன் கோட்டையின் வெளிப்புறத்தை யடைந்தான். சகன் கோட்டை சதுர வடிவமாய் நான்கு மூலையிலும் நான்கு மாடங்களை யுடையது. கோட்டைச் சுவர் உயரமுடையதாயும் அகழ் முப்பது அடி ஆழமும் அகலமுடையதாகவும் ஐந்தாறு கோட்டை வாயில்களை யுடையதாகவு முள்ளது. வாயிலுக் கப்பால் மண் கோட்டையும் அதன் பின்னே பிரதான கோட்டையு மிருந்தது.

ஆதலால் அது மிகவும் பலமான கோட்டை. செயிஷ்டகான் அக்கோட்டையை முற்றுகையிட்டான். அம் முற்றுகை 54 நாட்கள் நடந்தது. கடைசியில் யாவரும் அறியா நிலையில் ஒருநாள் ஒரு பீரங்கிக் குண்டைப் போட்டான். அதனா லேற்பட்ட வெற்றியைக் கொண்டு முன் செல்லவே செயிஷ்ட கான் பகைவர் மண்ணைக் கொட்டியிருப்பதைக் கண்டான். மறுநாட் காலையில் அவன் மறுபடியும் எதிர்த்து முக்கிய மான கோட்டைக்குள் புகுந்தான். அக்கோட்டைத் தலை வன் பிரங்கோலைநார்சாலா. சிவாஜி, பீஜபூர் வீரர்களுடன் பன்ஹாலாவில் சண்டையிட்டுக் கொண்டிருந்தமையின், முடிந்த வரை எதிர்த்து முடியாவிட்டால் கோட்டையை விட்டு விடும்படியும் தான் வந்து உதவி செய்ய இயலாமை யையும் தெரிவித்திருந்தான். அவனுடைய வீரத்தைச் செயிஷ்டகான் மெச்சி அவனைத் தன் சேனையிலமர்த்திக் கொள்வதாகக் கூறினான். ஆனால் அவன் உண்டவீட்டிற்குத் தீமை செய்ய மறுத்தமையின் சிவாஜியுடன் சேர்ந்துகொள்ள அனுமதி பெற்றான்.

சிவாஜி, சகனிலும் பன்ஹாலாவிலும் தோல்வியுற்றமை யின் 1660-ம் ஆண்டின் கடை மூன்று மாதங்களிலும் இராஜ கிரியிலேயே வாளாவிருந்தான். சுதந்தரமும், ஒற்றுமையும் தன் படை முழுவதையும் வெற்றியுடன் நடத்தவல்ல திற மையையுமுடைய சிவாஜியை யொத்த தலைவர்களற்ற பீஜ பூரின் பிரதிநிதிகளை எவ்வாறு வென்று தன் தோல்விகளை யீடு செய்வதென்பதிலேயே சிவாஜி ஆழ்ந்திருந்தான். செயிஷ்டகானும் சிறிய மராத்தியக் கோட்டையான சகனை வெல்வதற்கே பெருநஷ்டத்தை யடைந்தமையின் மற்றக் கோட்டைகளை யெதிர்க்காது மழைக்காலத்தைக் கழித்தான். ஆனால் பீஜபூருக்குச் சொந்தமான போண்டாக் கோட்டை யைக் "கலிப்" என்னுந் தலைவனிடமிருந்து பெரு விலை



கொடுத்து வாங்கி அதைக் கைக்கொள்ளப் பூனாவிலிருந்து புறப்பட்டான்.

1661-ம் ஆண்டின் முற்பாகத்தில் செயிஷ்டகான் வட கொங்கணத்திலுள்ள கலியன் ஜில்லாவை எதிர்க்கக் கருதி னான். அங்கு இஸ்மெயின் தலைமையில் 3000 முகலாயர் கள் பற்பல பாகங்களைப் பிடித்து வந்தனர். ஆனால் கலியன் நகர் பிடிபடவில்லை. அப்படி ஜெயித்த பிரதேசம் ஒரு சிநேகமான மராத்திப் படையுடன் செலபட்கான் டெக் கானியின் ஆட்சியில் விடப்பட்டது. அப்ஸலுக்கு உதவி யாய் கர்டலப்கான் வசம் இராஜபுத்திரர்களும் முஸ்லீம்களு மடங்கிய சேனை யனுப்பப்பட்டது. அவனும் பூனாவை விட்டுக் கொங்கணத்திற்குப் புறப்பட்டுப் போர்க்களத்திற் கருகிலுள்ள கணவாயின் வழியே வந்து கொண்டிருந்தான். இதற்கிடையில் சிவாஜி வெகு வேகமாகச் சேனையைச் செலுத்தி வந்து அவர்களை முன்னும் பின்னும் போகவிடா மல் தடுத்தான். அதனால் கார்டல்ப் சண்டையிட நேர்ந் தது. பின், அதிகமாகப் பொருள் கொடுத்துச் சேனையைத் திருப்பிக்கொண்டு சென்றான். வெற்றி கொண்ட சிவாஜி தன் சேனையின் ஒரு பாகத்தை நெதாஜி தலைமையின்கீழ் முகலாயரை எதிர்க்கும்படி யனுப்பிவிட்டுத் தான் மற்றொரு பாகத்துடன் பீஜபூருக்குச் சொந்தமான கொங்கணத்தின் மீது படையெடுத்துச் சென்றான். இவ்விதமாக வழியெல்லாம் வெற்றி முழக்கத்துடன் தண்டா ராஜபுரியிலிருந்து கிரிப் பட்டினம் வரையுமுள்ள சமுத்திரக்கரை முழுவதையும் அவனாட்சிக்குட்படுத்தினான். கோவா வரையுள்ள பிரதேச மும் அவனுடைய ஆதிக்கத்திலேயே யிருந்தது. தலைவர்க ளெல்லோரும் சிவாஜியின் வேகத்தைக் கருதியும், பீஜபூரி லிருந்து உதவி வருவது சந்தேகமென உணர்ந்தும் சிவாஜி யுடன் சமாதானஞ் செய்துகொண்டனர்.

1661-ம் ஆண்டு நைசாம்பூர் கொள்ளையடிக்கப்பட்டுத் தேபல் என்னும் துறைமுகப்பட்டினம் தேல்வி என்னும் தலைவனிடமிருந்து பிடிக்கப்பட்டுச் சிவாஜியின் பிரதிநிதி வசம் ஒப்புவிக்கப்பட்டது. முன்பு ஜவருக்கு உதவி புரிந்த பல்லிவானு அரசன் ஜஸ்வந்த ராவ், பிரபாவளி அரசன் சூரியராவிடம் சரண் புகுந்தான். சங்கமேஸ்வர முதலாயத் தலைவன் ஓடி யொளிந்தான். சிவாஜி, பிமேலாஜி நீலகந்தையும் தானுஜி மேலெளசனையும் ஒரு சேனையுடன் சென்று அந்நகரைப் பிடிக்கும்படியும் சூரியராவை அவர்களுக்கு உதவி புரியுமாறுங் கட்டளையிட்டான். சிவாஜி சிப்லன் வழியாகத் தேவூருக்கும் அங்கிருந்து இராஜபூருக்கும் சென்று இரண்டாவது முறை கொள்ளையிட்டுக் கடைசியாகத் தன் வசப்படுத்திக்கொண்டான். இரத்தினகிரி ஜில்லாவிலுள்ள மற்ற நகர்கள் யாவும் சவுத் என்னும் (நாலிலொரு பாகம்) வரியைச் செலுத்திக் கொள்ளைக்குத் தப்பின. இதற்கிடையில் அடில்ஷாவின் தூண்டுதலால் சிருங்கபுர அரசன் தானுஜியால் எதிர்த்துத் தோல்வியடைந்தான். சிவாஜி பல்லிவானு நாட்டைப் பெற்றுக் குடிஜனங்களை முன் போல் வாசமைத்துப் பயிர்த்தொழிலை நடத்தி வருமாறு செய்தான். சிவாஜி அந்நாட்டைக் காத்தற்பொருட்டுச் சிர்துர்க்கத்தைப் பலப்படுத்தி மண்டன்கர் எனப் புதுப் பெயரிட்டான்; பரல்கார் என்னும் இரண்டாங் கோட்டையையுங் கட்டினான்.

1656-ம் வருஷம் முதல் தன்னுடன் ஜாவலி வெற்றியிலிருந்து, இறைப் பணங் கட்டுவதாக ஒப்புக்கொண்டு பன்முறையும் தவறிய சிருங்கபுர வேந்தனாகிய சூரியராவை அடக்க இப்பொழுது சிவாஜிக்குத் தருணம் வாய்த்தது. பல்லிவானுவிலிருந்து சிவாஜி வெகு விரைவாகச் சிருங்கபுரத்திற்குத் திடீரெனச் சென்று சூரியராவ் திகைப்படையு



மாறு எதிர்த்தான்: திடீரென வந்தமையாலும் தலைவர்கள் அப்பொழுது ஆயத்தமா யிராமையாலும் சூரியராவ் உயிர் தப்பியோடியதே தம்பிரான் புண்ணியமாயிற்று. பின் அவன் நகருக்குள் பிரவேசித்தான். சுலபமாக அச்சிறு நாட்டைப் பிடித்துப் பாஸ்கர் என்பவனைப் பிரதிநிதியாக்கிப் பிரசித்தகார் என்னும் கோட்டையைப் பழுது பார்த்துப் பலப்படுத்தினான். சிவாஜியின் வீரத்தையும் படைவலியையும் யுத்த முறையையுங் கண்டு எல்லோரும் பயந்தனர். சிவாஜி சிருங்கபுர மந்திரியான ஷாகி என்பவனை ஜெயித்துத் தன்னிடம் வேலைக் கமர்த்திக் கொண்டு பின் அவன் குடும்பத்தில் விவாகமும் செய்து கொண்டான். ஏராளமாகத் தானங் கொடுத்து அந்நகரில் குடியேற்றினான்.

ஆனால், அதே வருஷத்தில் மொகலாயர் கலியன் நகரைப் பிடித்துக் கொண்டனர். சிவாஜி ஒரு சேனையை யனுப்பியும் தோல்வியையே பெற்றான். இப்பிரதான நகர் மொகலாயர் வசத்தில் ஒன்பது வருட காலம் இருந்தது. அதனால் சிவாஜி வார்டன்காருக்குச் சென்று அங்கேயே கோடைக் காலம் முழுவதையுங் கழித்தான்.

1662ம் வருஷம் ஆரம்பத்தில் சிவாஜி மீரடோன்சர் என்னுமிடத்தில் நம்தார்கானை எதிர்த்துப் பேன் நகரைக் கொள்ளையிட்டான். மொகலாயரும் எதிர்த்து மராத்தியர்களிற் பலரைக் கொன்றனர்; சிலரைக் காயப்படுத்தினர். ஆகவே 1662ம் ஆண்டிலும் 63ம் ஆண்டின் முற்பகுதியிலும் மொகலாயர்கள் பன்முறையும் மராத்தியர்களுக்கு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் அளித்து வந்தனர். 1663ம் வருடம் இடைப் பகுதியில் பன்னீராயிரமும், எழாயிரமும் கொண்ட இரு பெரும் படைகள் சுவுலுக்கு மேற்புறத்திலும், ரஹிமட்பூலும் காவலாக வைக்கப்பட்டன. கலியன் நகர் பெருஞ் சேனையால் காக்கப்பட்டது. இவ்விரு வருஷத்

திய போர்களால் கொங்கணத்தின் வட பாகத்தை முகலாயரும் தென்பாகத்தை மராத்தியர்களும் பலப்படுத்திக் கொண்டனர். 1663ம் வருடம் சிவாஜியின் குதிரைத் தலைவனான நேதாஜியை மொகலாயர் துரத்தினர். அவன் குதிரைப் படையை மொகலாயக் குதிரைப் படை வீரர்கள் துரத்தியதால் நேதாஜி சிறு படையுடன் தப்பியோடினான். அவர்களும் பிஜபூருக்கு ஐந்து மைல் தூரம்வரை தொடர்ந்து சென்று துரத்தினர். ரஸ்டமிஸாமன் என்னும் பிஜபூர் மந்திரி சிவாஜியுடன் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டு மொகலாயரைத் துரத்துவதாயும், அவர்களைப் போகும்படியும் சொல்லியனுப்பிவிட்டான்.

சிவாஜி மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து கடற்கரைக் கொங்கணத்தைப் பிடித்துக் கொண்டது, மற்றக் கப்பற் படைக் காரர்களுடன் சம்பந்தம் செய்து கொள்ளவும் தகுதியாயிருந்தது.

## 7. சிவாஜியும் செயிஷ்டாகானும்

செயிஷ்டகான் 1660ம் வருடம் பூனாவைக் கைப்பற்றிக் கொண்டானென்று கூறினேமன்றோ? அவன் சகன் கோட்டையைப் பிடித்துக் கொண்ட பிறகு பூனாவிற்குத் திரும்பிச் சென்று, முன்பு சிவாஜி இளமைப் பருவத்தில் வசித்து வந்ததும், எதிர்கால மாராத்தியப் பிரதான நகரமுமாகிய பூனாவில் விளங்கிய அழகிய மாளிகையான லால்மஹாலில் தங்கினான். அவனுடைய மனைவி மக்களும் அங்கேயே தங்கினர். அதன் சுற்றுப்புறத்தில் காவலாளிகளும் மெய்க்காப்பாளரும் வசித்து வந்தனர். தெற்கில் சிங்ககார் வழியில் அவனுடைய சேனைத்தலைவன் மகாராஜா ஜஸ்வந்த சிங் பதினாயிரம் வீரர்கள் கொண்ட சேனையுடன் தங்கியிருந்தான்.

சகன்கோட்டையைச் செயிஷ்டகான் பிடித்துக் கொள்ளுமுன்பே பாபாஜிராம், ஹோனப்பா முதலியோர் அவனுடன் சேர்ந்துகொண்டனர். அவ்விஷயம் சிவாஜிக்குத் தெரிந்தது. ஆகையால் வேலையாட்களிடமிருந்த நம்பிக்கை அவனுக்குச் சிறிது குறைவுற்றது. ஒருநாள் சபையில் பாபாஜியின் சொந்தக்காரனும் காஸ்ஜியின் புதல்வனுமான சாம்பாஜியிடம் தனக்கு நம்பிக்கையில்லை யென்று கூறியதுமன்றி அவனும் அவர்களைப்போல் மாறி விடுவானென்றும் சிவாஜி சொன்னான். அதைக் கேட்ட சாம்பாஜி மிகுந்த கோபங்கொண்டு செயிஷ்டகானிடம்போய்ச் சேர்ந்து கொண்டான். சாம்பாஜி மிகுந்த பலம் படைத்தவன். அதற்கறிகுறியாக முதலில் செயிஷ்டகானிடம் சென்றவுடன் ஒரு குதிரையை நான்கு கால்களையும் பிடித்துக் கைகளால் நிறுத்தினான். செயிஷ்டகானும் அவனிடம் இரக்க-

மும் அன்பும் உடையவனாகி அவனை ஒரு குதிரைப் படைத் தலைவனாக்கினான். இவற்றையெல்லாமறிந்த சிவாஜிக்கு மொகலாயரிடத்தில் மிகவும் கொடிய பகை தோன்றிற்று.

சிவாஜிக்குச் செயிஷ்டகான் வடமொழியில் ஒரு கடிதம் எழுதி அந்தணர் மூலம் கொடுத்தனுப்பினான். அக்கடிதத்தில், "நீ ஒரு குரங்கைப்போல் மலைகளில் வசித்துக்கொண்டு கோட்டைகளின் பலத்தினால் பல அக்கிரமங்களைச் செய்து வருகின்றாய். ஒரு சண்டை ஏற்படின் கோட்டைக்குட் புகுந்து கொள்கின்றாய். நீ எவ்வளவு காலம் கோட்டைக்குள்ளிருக்கின்றாயோ அவ்வளவு காலம் நான் உன்னை துரத்தாமலிருக்கமாட்டேன். நான் தேவேந்திரனைப் போலிருப்பதால் குரங்காகிய நீ சண்டை செய்யாது ஓடி ஒளிகின்றாய்" என்று எழுதியிருந்தது. சிவாஜி செயிஷ்டகானுடைய கடிதத்தைக் கண்டு அடங்காச் சினங் கொண்டு, "நான் ஒரு குரங்கைப் போலிருப்பதும் நீ தேவேந்திரனைப் போலிருப்பதும் உண்மைதான். ஆனால் நான் இராவணனைக் கொன்று, இலங்கா புரியைக் கவர்ந்த குரங்கைப் போலிருப்பதால் உன்னைத் தப்பியோடவிடேன்" என்று பதில் எழுதியனுப்பினான்.

அதனால் மனத்தில் அடங்காக் கோபங் கொண்ட சிவாஜி எவ்விதத்திலும் செயிஷ்டகானை முறியடித்து நடுங்கச் செய்யவேண்டுமென்றும், அதைத் தந்திரமாகவே செய்ய வேண்டுமென்றும் எண்ணினான். அதற்கொரு சூழ்ச்சியையும் அவன் செய்தான். 1663ம் வருடம் தன் படையில் பொறுக்கியெடுத்த ஆயிரம் வீரர்களை நேதாஜியிடத்திலும் மோராபந்திடத்திலும் கொடுத்து மொகலாயர் பாசறையை யடையும்படி கட்டளையிட்டான். பாபாஜி பாபுஜியும், சின்னாஜி பாபுஜியும் சிவாஜியின் மெய்க்காப்பாளராவர். நேதாஜியும் ஒரே நாளில் சிங்ககாரிலிருந்து 11மைல்



தூரத்திலுள்ள பூனாவிற்கு வந்து நடு நிசியில் செயிஷ்டகானின் பாசறைக் கருகில் ஒளிந்துகொண்டான். அன்றைய தினம் ரம்ஸான் பண்டிகையின் ஆறாவது நாள். அம்மாத முழுமையும் முகமதியர்கள் பகலில் உண்ணாவிரத முடையவர்களாயினர். வீட்டில் எல்லோரும், இரவில் வெகு நேரம் கழித்துண்டமையின் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தனர். சமையலறையில் விழித்துக்கொண்டிருந்த சில சமையற்காரர்கள் மராத்தியர்களால் சந்தடியின்றிக் கொல்லப்பட்டனர். அந்தப்புரத்திற்கும் சமையலறைக்கும் இடையிலிருந்த ஒரு வாசல் கல்லாலடைக்கப்பட்டிருந்தது. மராத்தியர்கள் அக்கற்களையெடுத்து ஒரு துவாரம் செய்தனர். அச்சத்தத்தைக் கேட்ட அந்தப்புரத்திலிருந்த செயிஷ்டகான் தூக்க வெறியால் அதைப் பொருட்படுத்தவில்லை. துவாரஞ் செய்த பின் சிவாஜியும் சிம்மாஜியும் முதலில் நுழைந்தனர். பின்னால் இருநூறு வீரர்கள் புகுந்தனர். வழியிலுள்ளோரை வாளால் வீணாகக்கொன்று சிவாஜி, செயிஷ்டகானின் பள்ளியறையை யடைந்தான். அச்சமடைந்த பெண்கள் செயிஷ்டகானை யெழுப்பினர். அவன் எழுந்து உடைவாளை யெடுக்குமுன் சிவாஜி வாளை வீசினான். செயிஷ்டகானின் புண்ணிய வசத்தால் அவ்வாள் அவன் பெருவிரலை மாத்திரம் வெட்டியது. அப்பொழுது சிலர் விளக்குகளையணைத்துவிடவே இருட்டில் சிவாஜியும் மற்ற வீரர்களும் திகைப்படைந்தனர். அதற்குள் செயிஷ்டகானை ஒரு பத்திரமான இடத்திற்குக் கொண்டுபோயினர். இருட்டில் மராத்தியர்கள், ஸ்திரீகளென்று அறியாமல் செயிஷ்டகானின் மனைவிமார்களில் பலரை வெட்டி வீழ்த்தினர்.

இதே சமயத்தில் வெளியில் விட்டிருந்த பாபாஜி பாபுஜியும், அவன் படையும் காவலாளரைக் கொன்று உட்

புகுந்து பேரிகை முழக்கினர். பேரிகை முழக்கத்தால் மொகலாயப் படை வீரர்கள் விழித்துக்கொண்டு வாளெடுத்தனர். செயிஷ்டகானின் புதல்வன் அபுல்பாத் தன் தந்தைக்கு உதவி புரிய முதலில் வந்து, மராத்தியர்களால் வெட்டுண்டிறந்தான். மற்றொரு முகலாயத் தலைவன் நூலேணி கொண்டு உள்ளே வர அவனும் வெட்டுண்டான். உடனே சிவாஜி மொகலாயப் படை விழித்துக்கொண்டதை யறிந்து அந்தப்புரத்தைவிட் டோடிச் சென்றனன். மொகலாயர் அவன் சென்றவிடந் தெரியாது எங்குந் தேடினர். இவ்விதமாக இந்த எதிர்ப்பில் சிவாஜி வெற்றி பெற்றான். மராத்தியர்களில் அறுவரை மாத்திரமே சிவாஜி இழந்தான். ஆனால் சிவாஜி மொகலாயரில், ஒரு புதல்வனையும், ஒரு தலைவனையும், நாற்பது மெய்க்காப்பாளரையும், ஆறு மனைவியரையுங் கொன்று, செயிஷ்டகானுட்படப் பலரையும் காயப்படுத்தினான். சிவாஜியை எல்லோரும் தெய்வத் தன்மை பெற்றவனாகக் கருதினர். எல்லோரும் சிவாஜியை வியந்து புகழ்ந்தனர்.

சிவாஜி, செயிஷ்டகானை வஞ்சித்துக் கொல்ல எண்ணிச் செயிஷ்டகானுக்கு அன்னியரை யறிமுகப்படுத்துபவனும், லால்மஹால் தோட்டக்காரனும், அந்தப்புர ஜன்னலின்கீழ் வசிப்பவனுமாகிய ஒருவனுக்குப் பொருள் கொடுத்துத் தன் வசப்படுத்திக் கொண்டான். இதற்குச் சிவாஜியின் மைத்துனி உதவி புரிந்தாள். சிவாஜி ஓரிரவு இருட்டும் மழையும் உள்ளபொழுது இருபத்தைந்து தேர்ந்தெடுத்த வீரர்களுடன் கோட்டைக் கதவினிடம் சென்று, தோட்டக்காரனுதவியால் செயிஷ்டகான் நித்திரை செய்யு மறையை யடைந்து அங்கு மனைவியுடன் நித்திரை செய்துகொண்டிருந்த செயிஷ்டகானின் புதல்வனைக் கானென்றெண்ணிக் கொன்றான். பின், தன் தவற்றை யறிந்து அங்கிருந்த ஒரு பணிப்



பெண்ணின் உதவியால் செயிஷ்டகான் இருந்த அறைக்குட் சென்றான். செயிஷ்டகான் எழுந்து ஓடி ஒரு சுவரின் பின்புறத்தில் ஒளிந்துகொண்டான். சிவாஜி துரத்திச் சென்று வாளை வீசியதில் அவனுடைய கட்டை விரல் மாத்திரம் துண்டாயிற்று. இச்சப்தம் எல்லோரையும் எழுப்பவே அவர்கள் சிவாஜி ஓடமுடியாதபடி எல்லாக் கதவுகளையும் மூடிவிட்டனர். ஆனால் சிவாஜி, வந்தவழியாகவே தப்பி வெளியேறினான். வெளியில் ஒருவன் யானைமீது பந்தத்துடன் இருந்தான். சிவாஜி எதிர்த்துச் செல்வதெனத் தீர்மானித்து யானையைக் காயப்படுத்தி வீழ்த்திக் குதிரையேறிக் காலையில் இராஜகோட்டைக்கு வந்து சேர்ந்தான் என்னுமொரு கதையு முண்டு.

சிவாஜி செயிஷ்டகானை வஞ்சித்துக் கொல்ல எண்ணித் தன் தலைவரில் ஒருவனைப் பூனாவில் ஒரு கல்யாணம் செய்வதாகப் பாவனை செய்யுமாறு செய்து, கல்யாண ஊர்வலத்தில் விருந்தினரைப் போன்று சிவாஜியும் வீரர்களும் ஆயுதங்களுடன் மாறுவேடம் பூண்டு பூனா நகருக்குட் சென்று, அத்தலைவனது உதவியால் லால்மஹாலுக்குள்ளும் புகுந்து மேற்கூறியபடி செயிஷ்டகானைக் காயப்படுத்தியதாகவும் ஒரு கதை உண்டு. சிவாஜி எப்படியோ உட்புகுந்து மொகலாயத் தலைவனைக் காயப்படுத்தினானென்பதே கருத்து.

இம்மாதிரி அவமானமடைந்த செயிஷ்டகானும் உடனே மிகவும் பத்திரமான இடமாகிய ஔரங்காபாத்துக்குச் சென்றான். ஔரங்கசீப் காஷ்மீரத்திற்குப் போகும் பொழுது இவைகளை யறிந்து மிகவும் வருந்தினான். பின் செயிஷ்டகானை வங்காளத்துப் பிரதிநிதியாக மாற்றினான். செயிஷ்டகானும் அக்கட்டளைப்படி, இளவரசு மௌசாம் வந்து வேலையை யொப்புக்கொண்டவுடன் 1664-ம் வருடம் தக்காணத்தை விட்டு புறப்பட்டுச் சென்றான்.

# 8. சூரத்தின் முதற் கொள்ளை

ஔரங்காபாத்தில் அரசியல் திருத்தங்கள் நடந்து கொண்டிருக்கும்பொழுது சிவாஜி ஒரு வீரச் செயலைப் புரிந்தான். அதாவது அவன் மிக்க செல்வம் பொருந்தியதும், இந்திய முகமதியர் அரேபியாவுக்கு யாத்திரா மார்க்கமாகச் செல்ல ஒரு வாயிலை யொத்ததும், மெக்கா செல்ல ஏற்றுமதி நகரமாயிருந்ததுமான சூரத் நகரைக் கொள்ளை யிட்டான். சூரத் கோட்டை சமுத்திரத்திற்குப் பன்னிரண்டு மைல் தூரத்தில் தபதி நதியின் தென்கரையில் அமைந்துள்ளது. அக்கோட்டை மிகுந்த வலிமையுடையதாயினும் கோட்டையைச் சுற்றியுள்ள நகர் செல்வமிகுந்தும் பாதுகாப்பின்றியும் இருந்தது. நகரைச் சுற்றி மதில்கள் இல்லை. சக்கரவர்த்திக்கு வியாபார வரி மாத்திரம் வருடத்திற்கு பன்னிரண்டு லக்ஷம் ரூபாய் வந்ததென்றால் அதன் செல்வம் எவ்வளவு இருத்தல் வேண்டும்? இந்நகர் நான்கு சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ளதாய் இரண்டு லக்ஷம் ஜனத்தொகை யுடையதாயிருந்தது. வீதிகள் மிகவும் குறுகியவைகளாயும், நதியோரத்தில் பல உயர்ந்த பெரிய கட்டடங்களிருப்பினும் பெரும்பான்மையும் மண் சுவர்களால் கட்டப்பட்டனவாயும் இருந்தன.

1664-ம் வருடம், சிவாஜி தெற்கில் இருபத்தெட்டுமைல்களுக்கப்பால் காண்டவி யென்னுமிடத்திற்குச் சேனையுடன் சூரத்தைக் கொள்ளையிட வந்துளானெனத் தெரிந்த நகரமாந்தரனைவரும் பயந்தனர். உடனே ஜனங்கள் அச்சமேலீட்டால் தத்தம் மனைவி மக்களுடன் உயிர் தப்பிப் பிழைக்க, நதியைக் கடந்து ஓடவாரம்பித்தனர். பணக்காரர்கள் கோட்டைத் தலைவனுக்குப் பொருள் கொடுத்துக் கோட்டைக்குட் சென்று ஒளிந்துகொண்டனர். மாலையில் சிவாஜி நெருங்கி வந்து



விட்டதாயும் இரவு சூரத்துக்கு ஐந்து மைல்கள் தூரத்தில் வந்துவிட்டதாயும் செய்தி வந்தது. இராஜப் பிரதிநிதியான இனயத்கான் சிவாஜியுடன் சமாதானம் பேச ஒற்றனை யனுப்பினான். ஆனால் அவ்வொற்றன் திரும்பி வராமையையும் சிவாஜி வெகு துரிதமாய் நகருக்கு வருவதையுமறிந்த இனயத்கானும் கோட்டைக்குட் சென்று நகரை எதிரிகளின் இஷ்டப்படி சூறையிடுமாறு விட்டுவிட்டான். இனயத்கான் சுல்தானிடமிருந்து ஐந்நூறு வீரர்களடங்கிய படையை வைத்துக்கொள்ள வேண்டிய பொருளை வாங்கிக்கொண்டு சேனையை வைத்துக்கொள்ளாமல் அதை யபகரித்து வந்தமையாலும், அவன் வீரமற்றவனாதலாலும், உடனே ஒரு படையைத் திரட்ட இயலவில்லை. நகரவாசிகளும் அவனுக்கேற்றவர்களே. இராஜப் பிரதிநிதியைப் போன்று, செல்வ ஆசைகொண்ட வியாபாரிகளும், ஏழைத் தொழிலாளர்களும் அக்கினி வழிபாடு செய்பவர்களும், இளகிய மனமுடைய சமணர்களும் ஆகிய குடிகள் நிறைந்திருந்தமையின் தம்முடைய சொந்தப் பாதுகாப்பின் பொருட்டுச் சண்டைக்கு ஏற்பாடு செய்யவில்லை. கோடிக் கணக்காகச் செல்வமுடையவர்கள் அச்செல்வத்தைக் காப்பாற்றும் பொருட்டேனும் இழக்கப்போகும் செல்வத்தில் இருபதில் ஒரு பாகத்தைச் செலவிட்டுப் பாதுகாப்பாளரை வைத்துக்கொள்ளவில்லை.

ஆனால் இதற்கு மாறாக ஆங்கிலேயர்களும், டச்சுக்காரர்களும் தத்தம் அரணற்ற வீடுகளைக் கடைசிவரைக் காத்தற்கு உறுதி செய்துகொண்டனர். அவர்கள் சூரத்திற்குப் பத்து மைல் மேற்கிலுள்ள ஸ்வேலியிலுள்ள கப்பல்களுக்குச் சென்று ஓடியொளிந்துகொள்ளக் கூடுமாயினும் அப்படிச் செய்யாது தம் பொருள், வீடு முதலியவைகளைத் தம் உயிர் போம்வரையில் காக்க உறுதி கொண்டனர். ஆங்கிலேயரின் தலைவரான ஸர் ஜியார்ஜ் ஆக்ஸின்டன் என்பவர் ஒரு வியா

பாரியிடமிருந்து இரு செப்புப் பீரங்கிகளையும், தம் உறவினரிடமிருந்து நான்கு துப்பாக்கிகளையும் தேடிவைத்துக்கொண்டார். அவர் ஸ்வீலிக்கு ஆளனுப்பி உடனே நூற்றைம்பது ஆங்கிலேய வீரர்களையும் அறுபது சேவகர்களையும் வரவழைத்தார். அவ்வூரில் பிரபல தனவந்தரான ஷாஜி செயிட்பெக் என்பவன் மாளிகையைக் காப்பாற்றுதற்காகக் கூரையின்மீது இரு பீரங்கிகளையேற்றினார்; மாளிகையின்வாயிலில் இருபீரங்கிகளை வைத்தார். கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களும், குண்டு மருந்துகளும், ஈயமும் சேகரிக்கப்பட்டன. ஆங்கிலேயர்கள் தொழிற்சாலைக்குள் விரோதிகள் புகாவண்ணம் அவ்வூர்க் கோயிலைச் சேனை கொண்டு பலப்படுத்தினர். ஆக்ஸின்டன் இருநூறு வீரர்களடங்கிய படையுடன் நகரைக் காத்தற்பொருட்டு வெளிப்போந்தார். டச்சுக்காரர்களும் தத்தம் வீடுகளைக் காவல் புரிந்துகொண்டனர். ஆனால் அவர்கள் ஒரு மைல் தூரத்திலிருந்தமையின் ஆங்கிலேயருடன் சேர்ந்துகொள்ள முடியவில்லை. ஆங்கிலேயரின் வீரத்தைக் கண்ட சில துருக்கியர்களும், ஆர்மீனியர்களும் தத்தம் வியாபாரக் கட்டடங்களையும் சொத்துக்களையும் காப்பாற்றிக் கொள்ளத் தைரியங்கொண்டனர்.

சிவாஜி நான்காயிரம் வீரர்களடங்கிய படையுடன் ஒன்பது நாட்களுக்கு முன் பம்பாய்க்கு இருபத்துநான்கு மைல்களுக்கப்பாலிருந்தான். ஆனால் வெகுவேகமாகச் சேனையைச் செலுத்தி நார்தூர்க், முகூலி, கோஹஜ் முதலான கோட்டைகளின் வழியாகவும், ஜவகர், ராம்நகர் முதலிய வடதாணு ஜில்லாவிலுள்ள ஜமீன்களின் வழியாகவும் சூரத்துக்கு வந்து சேர்ந்தான். கொள்ளையிடுதலால் வரும் செல்வத்தைக் கருதி இரு சிற்றரசர்கள் சிவாஜியுடன் சேர்ந்துகொண்டனர். ஆகவே சிவாஜி சூரத்தை யடைந்தபொழுது சேனையில் பத்தாயிரம் வீரர்கள் இருந்தனர். 1664-ம் ஆண்டு ஒருநாள்



சூரத்தையடைந்து, சிவாஜி கீழ்வாசலாகிய பர்ஹான்பூருக்கு வெளியில் ஒரு மைலுக்கப்பால் தன் கூடாரங்களை யடித்து அங்குத் தங்கினான். இரவுக்கு முன்னால் சிவாஜி அவ்வூர்ப் பிரதிநிதிக்கும் ஷாஜி செயிட்பெக், பஹார்ஜி போரா, ஷாஜி கேஸீம் என்னும் மூன்று தலைமை வியாபாரிகளுக்கும், உடனே தன்னிடம் வந்து சமாதானஞ் செய்துகொள்ளாவிட்டால் தான் ஊரைக் கொள்ளையிட்டும், தீயிட்டும், வாளால் வெட்டி வீழ்த்தியும் நாசப்படுத்தப் போவதாகப் பயமுறுத்தி யொரு கடிதமெழுதினான். அக்கடிதத்திற்குப் பதிலில்லாமையால், மராத்திய வீரர்கள் காப்பாற்ற நகருக்குட் புகுந்து வீடுகளைக் கொள்ளை யிட்டதுமன்றித் தீயுமிட்டனர். சிவாஜி, தன் வீரரில் சிலரை ஆங்கிலேயரின் மாளிகைகளினெதிரில் வைத்து, மற்றப் பகுதியை ஊரைச் சூறையாடும்பொழுது வந்து எதிர்க்கா வண்ணம் அதற்கு இடையூறின்றிக் காக்கும்படி கட்டளையிட்டான். ஆனால் அவர்கள் குண்டு போட்டனர். எதிரிகள் நாசஞ் செய்ததைவிடப் பன்மடங்கு அவ்வூரையே அக்குண்டுகள் நாசஞ் செய்தன. அவ்விதக் கொள்ளை நான்கு நாட்கள்வரை நடந்தது. நகரில் மூன்றிலிரண்டு பாகம் பாழடைந்தது.

டச்சுக்காரர்களின் தொழிற்சாலைக் கருகில் பஹார்ஜி போராவின் மாளிகை இருந்தது. பகைவர்கள் அம்மாளிகையின் பொருள்களை மூன்று நாட்கள் இரவும் பகலும் கொள்ளையடித்துப் பின் தீயுமிட்டனர். அம்மாளிகையிலிருந்து இருபத்தெட்டு சேர் நிறையுள்ள பவழங்களும் மற்றுமுள்ள விலை யுயர்ந்த ஆபரணங்களும் கிடைத்தன. ஆங்கிலேயரின் தொழிற்சாலைக் கருகில் ஷாஜிபெக்கின் மாளிகையிருந்தது. ஷாஜி அதைக் காக்காமல் விட்டோடினான். அதனையும் மராத்தியர் கொள்ளையிட்டனர். அவனுடைய கிடங்கொன்றிற் புகுந்து ஏராளமான பாதரசத்தைப் பாழாக்

கினர். மூன்றும் நாள் ஆங்கிலேயர் வெளியில் மராத்தியர்களைத் துரத்தித் துப்பாக்கியால் சிலரைச் சுட்டதைக் கண்டு பயந்து அவர்கள் கொள்ளையை நிறுத்தினர். மறுநாட்காலையில் சேட்டின் மாளிகையைச் சில ஆங்கிலேயர்கள் காவல்புரிந்தமையின் அதற்குப்பின், அவனுக்கு அதிக நஷ்டமேற்படவில்லை. மூன்றும் நாள் சிவாஜி ஆங்கிலேயருக்கு ஒரு தூதனுப்பினான். அதில், ஆங்கிலேயர் மூன்று லக்ஷம் ரூபாய்கள் இறைப் பணமேனும், ஹாஜி வீட்டைக் கொள்ளையடித்ததற்கு அனுமதியேனும் கொடுக்க வேண்டுமென்றும், தவறினால் ஆங்கிலேயத் தொழிற் சாலைக்குத் தானே நேரிற் சென்று அங்குள்ளாரைக் கொன்று கொள்ளையிடப்போவதாயும் தெரிவித்தான். மறுநாட் காலைவரை யோசனை செய்து ஆக்ஸின்டன், "உனதெதிர்ப்புக்குத் தயாராக வுள்ளோம், விட்டோடுவதாய் எண்ணமில்லை; உனக்கு இஷ்டமான பொழுது நீ வரலாம்; நீ நிச்சயம் வருவதாகத் தெரிவித்தபடி, குறித்த காலத்திற்கு ஒரு நாழிகை முன்பே வரவேண்டுமானாலும் வரலாம். நாங்கள் எங்கள் பொருளைக் காத்துக் கொள்ளச் சித்தமாயிருக்கிறோம்," என்று பதிலெழுதி அனுப்பினான். சிவாஜி அதைக் கேட்டுச் சினங்கொண்டானேனும், பின்னும் சிறிது பொருளைக் கருதி வீணே துன்பத்திற் குள்ளாவது சிறந்ததன்று என்றும், முன்பே கொள்ளையடித்துள்ளது ஏராளமாயுள்ளதென்று அறிந்து பதிலுரைக்கவில்லை.

இக்கொள்ளையில் சிவாஜிக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கிடைத்தது. அவன் சூரத்திற்கு வந்து சேர்ந்தவுடனேயே, தான் ஆங்கிலேயருக்கேனும், மற்றுமுள்ள வியாபாரிகளுக்கேனும் யாதொரு கெடுதியும் செய்வதில்லை யென்றும் தன் நாட்டை எதிர்த்துத் தன் சுற்றத்தார்களிற் சிலரைக் கொன்ற ஔரங்கசீப்பைப் பழி வாங்குவதே தன் கருத்



தெனவும் பகிரங்கமாகக் கூறினான். அதனாலேயே அவன் சிலரை ஒரு கரத்தையும், சிலரை இருகரங்களையும் வெட்டிச் செய்யக் கூடிய அக்கிரமங்களைச் செய்தான். அவன் அநேகரைப் பல வகையில் வதைத்துப் பொருள் பறித்தான். அதனால் ஏறக்குறைய மூன்றி லிரண்டு பாகம் சூரத் நகரம் பாழடைந்தது.

சூரத் இராஜப் பிரதிநிதியான இனயத் கான், காப்புள்ள கோட்டைக்குட் புகுந்து கொண்டு, சிவாஜியைக் கொல்ல ஒரு சூழ்ச்சியைச் செய்தான். சூறையாடிய காலத்தில் இரண்டாவது நாள் ஒரு தூதனை வஞ்சகமாகச் சிவாஜியைக் கொல்லும் பொருட்டு அவனிடம் சமாதானம் பேச அனுப்பினான். அவனைக் கண்டதும் சிவாஜி வெறுப்புடன், "உன் தலைவன் இப்பொழுது பேடியைப் போல் கோட்டைக்குட் புகுந்து கொண்டான். அவன் என்னையும் பேடியைப்போல் இவ்விழிவான சமாதானத்தை யேற்றுக் கொள்வே னென்று எண்ணினானோ?" என்று கேட்டான். அவ்விளைஞன் கோபங்கொண்டு, "நாங்கள் பேடிகளல்ல, உன்னை வேறு வகையில் காண்போம்" என்று கூறிக் கொண்டே மறைத்து வைத்திருந்த உடைவாளை யுருவினான். அதைப் பார்த்திருந்த ஒரு மராத்திய மெய்க்காப்பாளன் தன் வாளால் ஓரே வெட்டாய் அவன் கரத்தை வெட்டினான். ஆயினும் அவ்வாலிபன் சிவாஜியின்மேல் வீசிய வாள் அவனைக் காயப்படுத்தியது. இருவரும் கீழே விழுந்து புரண்டனர். அவனுடன் வந்த தோழர்களை வெட்டவாரம்பித்தனர். அப்போது சிவாஜி உயிருடனிருப்பதை யறிவித்து அதில் சிலரைத் தண்டித்துப் பலரையும் விட்டுவிட்டான். மொகலாயர் படை, சூரத்தின் உதவிக்கு வருவதை யுணர்ந்து சிவாஜி ஐந்தாம் நாள் இரவொன்று சூரத்தை விட்டுப் புறப்பட்டான். அன்றிரவு பன்னிரண்டு மைல்

கள் நடந்து சென்று வேகமாகக் கொங்கணம் போய்ச் சேர்ந்தான். அவன் சென்ற சில காலம் வரை பயத்தால் ஜனங்கள் சூரத்துக்குத் திரும்பி வரவில்லை. மொகலாயர் படை பின்பே வந்து சேர்ந்தது. அதன் பிறகுதான் பேடிப் பிரதிநிதி கோட்டையினின்றும் வெளியே வந்தான். ஜனங்கள் அவனைக் கைகொட்டி நகைத்துப் பரிகசித்தனர். அதனை அவன் புதல்வன் கண்டு சினமிகுதியால் ஓர் இந்து வியாபாரியைக் கொன்றான். ஆங்கிலேயரைத் தம் பொருளைக் காத்ததுமன்றி அப்பக்கத்திலிருந்த ஜனங்களையும் காப்பாற்றியதற்காக எல்லோரும் ஆக்ஸின்டனைப் புகழ்ந்தனர். அதனையறிந்த பாதுஷாவும் அவ்வூர் வியாபாரிகளுக்கு ஒரு வருட வரியையும், ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரருக்கும் கொஞ்சபாக வரியையும் தள்ளிக் கொடுத்தான்.

செயிஷ்டகான் வடக்கே சென்ற பிறகு, தக்காண இராஜப் பிரதிநிதியாக வந்த இளவரசு மௌசாம் ஆடல் பாடல்களிலும் வேட்டையாடுவதிலுமே காலங் கழித்து வந்தமையின் அவ்வாண்டில் மொகலாயருக்கு யாதொரு வெற்றியு மேற்படவில்லை. அவனுடைய தளகர்த்தனான மகாராஜா ஜஸ்வந்தசிங் 1663ம் வருடம் கொண்டாணக் கோட்டையை முற்றுகையிட்டான். ராஜபுத்திரர்கள் போரில் தீரர்களாயினும் முற்றுகையிடத் தெரியாதவர்களாதலால் ஆறு மாதம் முற்றுகையிட்டும் பயன்படவில்லை. அதில் பீரங்கிக் குண்டால் பலர் மாண்டனர். பிறகு அவன் மைத்துனன் பேரசிங் ஹாடாவுடன் சச்சரவு செய்து கொண்டு 1664ம் ஆண்டு மழைக் காலத்தைக் கழிக்க ஔரங்காபாத்துக்கு வந்து சேர்ந்தான். இவ்விதம் தன்னையெதிர்ப்பாற்றுப் போகவே, சிவாஜி மழை காலத்திலேயே 1664ம் வருடம் அஹமது நகரை கொள்ளையிட்டான்.

இங்கு இவ்வாறிருக்கையில் பசவ பட்டணம் ஜில்லா



வில் துங்கபத்திரை நதிக்கரையில் ஷாஜி வேட்டையாடிக் கொண்டிருக்கையில் தவறி விழுந்து உயிர் துறந்தான். அவனுடைய மைசூரிலும் கீழ்க்கர்நாடகத்திலுமுள்ள செல்வத்திற்கு வெங்கோஜி என்னும் இளைய குமாரன் தலைவனானான்.

## 9. ஜயசிங்கின் சூழ்ச்சிகள்

சிவாஜியால் செயிஷ்டகான் தோல்வியுற்றதையும் சூரத் நகர் சூறையாடப்பட்டதையும் கேள்விப்பட்ட ஔரங்கசீப் எப்படியும் அவனையடக்க எண்ணிக் கீர்த்தி பெற்ற இந்து, முகமதியர்த் தலைவர்களைத் தக்காணத்திற் கனுப்ப நிச்சயம் செய்து கொண்டான். அதன்படி 1664ம் ஆண்டு சிவாஜியைத் தோற்கடித்து வலியழிக்கும் பொருட்டு மீர் சாராஜ ஜயசிங்கனைத் தக்காணத்திற் கனுப்பினான். அவன்கீழ் டேலிர்கான் முதலியோரையும் 14000 வீரர்களையும் அனுப்பிக் கொடுத்தான். ஜயசிங்கன் அவர்களை நடத்திக் கொண்டு வடஇந்தியாவை விட்டுப் பதினன்காயிரம் ஆண்டு புறப்பட்டு ஔரங்காபாத்தை வந்தடைந்தான். அங்கு மூன்று நாட்கள் தங்கிப் பிரதிநிதியான இளவரசு மௌசாமுடன் ஆலோசனை செய்துவிட்டுப் புறப்பட்டுப் பூனாவை யடைந்து மகாராஜா ஜஸ்வந்த சிங்கனிடம் அரசியலைப் பெற்றான். ஜஸ்வந்தன் உடனே புறப்பட்டுப் பாதுஷாவின் கட்டளைப்படி வட இந்தியாவிற்குச் சென்றான்.

ஜயசிங்கன் பன்னிரு பிராயமுள்ள சிறு அனாதையாயிருந்து மொகலாயரிடம் உத்யோகம் பெற்றதிலிருந்து தன்னருஞ் செயல்களால் எவ்விடத்தும் வெற்றி மாலை புனைந்து கீர்த்தி பெற்றவன். அதுமுதல் மொகலாயர் படையிலமர்ந்து மத்திய இந்தியாவில் பால்கியிலிருந்து தெற்கே பீஜபூர் வரையிலும், மேற்கே காண்டஹாரிலிருந்து கிழக்கே மேங்கிர் வரையிலுமுள்ள பிரதேசங்களிற் போர் புரிந்துள்ளான். ஷாஜஹானுடைய ஆட்சிக் காலத்தில் அவ்வீரன் தன் வீரத்தைக் காட்டி மேம்பதவி யடையாத வருஷமே கிடையாது. அரச பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கே தலைமைப் பதவி கொடுக்கப்பட்டு வரும் மொகலா



யர் படையின் ஒரு பாகத்திற்கும் தலைவனானான் என்றால் அவன் வீரத்தைக் கூறுவானேன்? அவனே பிரதம சேனாதிபதியுமானான். இராஜ தந்திரத்திலோ அவன் மிகவும் சிறப்புற்றவன். எப்பொழுது எங்கு ஒரு கஷ்டமான வேலை நடக்கவேண்டியதாயினும் பாதுஷா ஜயசிங்கனைத்தான் ஏவுவான்; பொறுமையும் தந்திரமும் பொருந்தியவனும் மொகலாயரிடமும் முகமதியரிடமும் நடக்கும் முறையறிந்தவனும், உருது முதலிய ராஜபுத்திர பாஷைகளன்றிப் பார்ஸி பாஷையை அறிந்தவனும், வீரம் முதலியன பொருந்தியவனுமிருந்தமையின் மொகலாயர் படைகளை— அதாவது ஆப்கானியர்கள், துருக்கியர்கள், இராஜபுத்திரர்கள், இந்துக்கள் முதலிய பலவகை வீரர்கள் பொருந்திய படைகளை—அவன் தலைவனாகவிருந்து நடத்துவதில் சிறந்து விளங்கினான். வயது முதிர்ந்தமையால் பற்பல போர்களிலும் சென்று அறிவனவற்றை யறிந்தவனாதலின் இளமைப் பருவத்திலிருந்த கோபம் அடங்கிப் பொறுமையும், தந்திரமும் நிறைவுற்ற ஜயசிங்கன் கூடியவரையில் சண்டையில்லாமல் தந்திரத்திலும், பணம் கொடுத்தும் பகைவர்களை வசப்படுத்துவதிலும் மேம்பட்டவனானான். இராஜபுத்திரர்களுடைய பிறவிக்குணமாய எதையுங் கொடுக்கும் வள்ளன்மை, முரட்டுத்தனமான வீரம், எதற்குமஞ்சாத வுண்மையுடைமை, முதலியவைகளுக்கு மாறாக ஜயசிங்கனிடம், வருவன அறிதல், இராஜ தந்திரம், இனிய மெல்லிய வாக்கு, சிறந்த தட்பமான குணம், அளவோடமைந்த யுத்தமுறை முதலிய நற்குணங்கள் பொருந்தியிருந்தன. இத்தகைய அறுபது வயதுள்ள ஜயசிங்கன் பத்து வருட காலத்திற்குள் வலிமையுற்றுப் பீஜபூரைப் பன்முறையுந் தோற்கடித்து டில்லி பாதுஷாவையே யஞ்சும்படி அச்சுறுத்திய சிவாஜியை யடக்குமாறு அனுப்பப்பட்டான்

பிஜபூர் சுல்தானும், மற்ற மராத்தியத் தலைவர்களும் செயிஷ்டகானும், ஜஸ்வந்தசிங்கும், பயனற்று அடக்க முயன்ற சிவாஜியுடன் ஜயசிங்கன் போர் புரிய எளிதில் ஒப்புக்கொள்ளவில்லை. தன் முன்னோர் தோல்வியுற்று அவமானமடைந்துள்ளதை யவன் அறிந்தவனே. சிவாஜி தந்திரங்களில் சிறந்தவனாயிருந்ததையும், வாள் யுத்தத்தில் சிறந்த மாவலி வீரர்கள் அவனிடம் இருந்ததையும் ஜயசிங்கன் அறிந்திருந்தான். மொகலாயர் படை தக்காணத்தை யடைந்தால், பிஜபூரையும், கோல்கொண்டாவையும் பயமுறுத்தித் துரத்துவதில் சிவாஜியுடன் ஒன்று சேரினும் சேரக்கூடுமென்பதையும் அவன் நன்குணர்ந்தான். ஆனது பற்றியே ஜயசிங்கன், சிவாஜி மட்டுமின்றிப் பிஜபூரும் தன்னை யெதிர்க்காது பாதுகாத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. ஜயசிங்கன் பாதுஷாவுக்குத்தான் இரவும் பகலும் உறங்காது தன் கருமமே கண்ணாயிருந்ததைப் பன்முறையும் எழுதியுள்ளான்.

தன்னுடைய இரு பகைவர்களையும் சேரவொட்டாமல் சண்டையை மேற்குக் கடைசியிலுள்ள கொங்கணத்திற் கிழுக்காமல், பிஜபூருக்கும் சிவாஜியின் நாட்டுக்குமிடையில் அவன் இருதிறத்தாரையும் அச்சுறுத்திக்கொண்டு தங்கியிருந்தான். மராத்தியர்களை, அவர்கள் உள்நாட்டில் முறியடித்தால் அதன் கிளைகளாகிய தூரத்திலுள்ள நாடுகள் சிதைவுறுமென்பது அவனுக்கு நன்கு தெரியும். இரண்டாவதாக, அவன் பிஜபூர் சுல்தானுக்குப் பாதுஷாவிடம் மன்னிப்பும் கப்பக்குறைவும் வாங்கித் தருவதாகக் கூறி அவனைத் தன் வசப்படுத்திக்கொண்டான். மூன்றாவதாகச் சிவாஜியின் மற்றைப் பகைவர்களை யொன்று சேர்த்துக்கொண்டான்; போர்ச்சுகீசியரைச் சிவாஜிக்கு விரோதமாகக் கடல் யுத்தத்தில் உதவிபுரியும்படி வேண்டினான்; பின் ஜிஞ்ஜி




ராவிலுள்ள சித்திகளுக்குத் தன்னுடன் சேர்ந்துகொள்ளும்படி கடிதமெழுதினான்; சிவாஜி வாளாயிருப்பதாயும் திடீரென்று குஜராத்திலிருந்து கப்பலில் வந்து மேற்குக் கரையை யெதிர்க்கும்படியும் பாதுஷாவிற்குக் கடிதமெழுதினான்.

ஜயசிங்கன் பல தக்காணத் தலைவர்களுக்கும் சிவாஜிக்கு விரோதமாகக் கிளம்பும்படி தூது அனுப்பினான். கர்நாடக ஜமீந்தார்களை மொகலாயர் பக்கத்தில் சேர்ந்து தெற்கிலிருந்து பிஜபூரைப் பயமுறுத்தும்படி எழுதினான். அவர்களில் சிவப்ப நாயகர் என்பவனும், பசவப்பட்டண ஜமீந்தாரும் ஜயசிங்கனிடம் வந்தனர். பர்ஹான்பூரில் ஜவகர் தூதனொருவன் ஜயசிங்கனைக் கண்டு பேசி அவனுடன் சேர்ந்துகொண்டான். யார் யார் சிவாஜியினிடம் வெறுப்பும், பான்ஸ்லே குடும்ப முன்னேற்றத்தில் பொறாமையும் கொண்டனரோ, அவர்களிடமெல்லாம் ஜயசிங்கனின் தூதர்கள் சென்றனர். பாஜி சந்தாராவ்மூரும் மொகலாயருடன் சேர்ந்துகொண்டான். அதேமாதிரி தன் தகப்பன் அப்சல்கானைக் கொன்றதற்குப் பழிவாங்குமெண்ணத்துடன் அவன் மகன் பசல்கானும் சேர்ந்துகொண்டான். கோலி தேசச் சிற்றரசனும் ஜயசிங்கன் அனுப்பிய ஐரோப்பியத் தூதனுதவியால் சேர்ந்துகொண்டான்; சிவாஜியால் புரந்தரக்கோட்டையைக் காக்க வைத்திருந்த ஆத்மஜியும் கஹாகோலியும் பொருள் வாங்கிக்கொண்டு ஜயசிங்கனை யடைந்தனர். ராமா, ஹனுமந்தன் என்னு மிருதலைவர்களுக்கும் நாட்டுச்சமாசாரம் முழுவதும் தெரிந்திருந்ததால் ஜயசிங்கன் அவ்விருவரையும் தன்வசப் படுத்திக்கொண்டான். முதலில் படைத் தலைமையையும் அரசியல் தலைமையையும் ஜயசிங்கன் ஒருங்கே பெற்றான். அவன் இவ்வித ஏற்பாடுகளைச் செய்துகொண்டு பூனாவிற்கு வந்து சேர்ந்தான்.

# 10. புரந்தர முற்றுகை

தக்காணத்தின் மேற்குத் திசையில் வடக்கிலிருந்து தெற்கே நோக்கிப் பெரிய கோட்டை மதிலையொத்து மேற்குத்தொடர்ச்சி மலையிருக்கிறது. அம்மலைத்தொடரில் பேரிரு மலைகளுக்கிடையில் சிற்றாறுகள் தோன்றிப் பெரு



புரந்தரக் கோட்டை

நதிகளுடன் கலந்து தென்தேசத்திய பெருநதிகளான கிருஷ்ணை, கோதாவிரி என்னும் நாமத்தை யடைகின்றன. கிழக்கில் பீஜபூர் ராஜ்யத்தில் ஒரு பெருஞ் சமவெளி யிருக்கிறது. இச்சமவெளியைச் சுற்றிலும் மலைகளால் சூழப் பெற்றதாய் மராத்திய நாடு அமைந்துள்ளது. இந் நாடு கிழக்கில் மாத்திரம் திறக்கப்பட்டதாய் மேற்கில் மலை



களையே சுவராகவுடையது. இம்மேற்குப் பாக மலைகளில் தான் ஒவ்வொரு சிகரத்திலும் சிவாஜி தன்னுடைய ஒப்பற்ற கோட்டைகளைக் கட்டிக்கொண்டான்.

சூனர் கோட்டைக்குத் தெற்கில் பழைய மொகலாயர் எல்லையைக் கடந்த இந்துராணிப் பள்ளத்தாக்கு இருக்கின்றது. அது, மேற்கில் லோகார், திகோனா கோட்டைகளாலும், மத்தியில் சகன் கோட்டையாலும் காக்கப்பட்டுள்ளது. அதற்கடுத்துச் சமீபத்தில் பீமாப் பள்ளத்தாக்குள்ளது. இதில்தான் பூனா நகரம் அமைந்திருக்கிறது. இதற்குத் தெற்கில் மலையின் குறுக்கில் கர்ஹா நதியின் பள்ளத்தாக்கு உள்ளது. அதன சமவெளியில்தான் சாஸ்வட், சூபா என்னும் நகர்கள் உள. மேற்கு மலையில் சிங்ககார் கோட்டையும், தெற்குப் பாறை யுச்சியில் புரந்தரக்கோட்டையுமிருக்கிறது. இம்மலைகளுக் கப்பால்தான் நீராநதிப் பள்ளத்தாக்கும், அதன் கரையில் ஷீர்வால் நகரும் இருக்கின்றன. இதற்கு மேற்கில் இராஜகார், தோரணக்கோட்டைகளும் தென்மேற்கில் ரோஹிராக்கோட்டையு மிருக்கின்றன. பூனா நகரம் தெற்கில் ராஜகாரிலிருந்தும் வடமேற்கில் லோகாரிலிருந்தும் சமதூரம் (அதாவது 28 மைல்) உள்ளதாயிருக்கிறது. புரந்தரத்திற்குத் தென்மேற்கில் ஆறு மைலிலுள்ள சாஸ்வாடுக்கோட்டை புரந்தரத்தை யெதிர்க்க வசதியான விடத்தி லமைந்துள்ளது. அது மற்றும் சிங்ககார், இராஜகார், (18,24 மைல்கள் மேற்கிலும்) பூனா (18 மைல்கள் வடமேற்கிலும்)க் கோட்டைகளை யெதிர்ப்பதற்கும் வசதியான விடம். இதற்குக் கிழக்கிலுள்ள சமவெளி பீஜபூரை வெளியில் எதிர்க்கவும், அங்கிருந்து விரோதிகளுக்கு மிகுதியான படை வாரமல் காக்கவும் உதவியாயிருக்கிறது. இன்றைக்கும் சாஸ்வாடில் ஐந்து பெரும் பாதைகள் ஒன்றோடொன்று கூடுகின்றன.

இப்படிப்பட்ட நல்ல இடமாகிய சாஸ்வடை இராஜதந்திர நிபுணனான ஜயசிங்கன் தன்னுடைய மூலஸ்தானமாகக் கொண்டான். அவன் பூனாவைக் காத்தற்குவேண்டிய காப்பாளரையு மிட்டான். சூனாருக்கருகிலுள்ள முகலாயர் எல்லையைக் காத்தற்பொருட்டு லோகாருக் கெதிரில் ஒரு காப்புப்படையையும் அவன் வைத்திருந்தான். சாஸ்வடுக்கு மேற்கிலும், தென்மேற்கிலும் சென்று மராத்தியக் கிராமங்களைக் கொள்ளையிடும்படி அவன் ஒரு படையை நியமித்தான். சுபாவில் முகலாயப்படை யிருந்தமையினாலும், பீஜபூர் எல்லைக்கும், சிவாஜியின் எல்லைக்கும், சாஸ்வாட் சமீபத்திலிருந்தமையினாலும், கிழக்கிலிருந்து எதிர்க்க முடியாது. ஜயசிங்கன் பூனாவுக்கு வந்து சிறிது காலம் படை வகுப்பதிலும், காப்புச்செய்வதிலும் காலத்தைக் கழித்தான். குப்தடின்கான் சூனாருக்குத் தெற்குப் பாகத்தைக் காத்தற்பொருட்டு ஏழாயிரம் குதிரை வீரர்களுடன் அனுப்பப்பட்டான். இடிஷ்டம்கான் நாலாயிரம் வீரருடன் பூனாவுக் கனுப்பப்பட்டான். பூனாவுக்கும் லோகாருக்கு மிடையில் இரண்டாயிரம் வீரர்களடங்கிய சேனை வைக்கப்பட்டது. தெற்கிலிருந்து புரந்தருக்கு உதவிவாராமல் தடுக்க சயித் அப்தால் அவிஸ் மூவாயிரம் வீரர்களடங்கிய சேனையுடன் ஷிர்வாலில் அமைந்திருந்தான். ஜயசிங்கனுடன் பாஜி சந்தர ராவ் முதலியோர் சென்றனர். சூபா முன்பே காக்கப் பட்டுவந்தது.

முன்கூறியபடி. புரந்தரக்கோட்டையை முற்றுகையிட ஜயசிங்கன் பூனாவை விட்டுப் புறப்பட்டான். ஜயசிங்கன் பூனாவைவிட்டகன்றதும் அவனை எதிர்க்கப் படையுடன் சிவாஜி லோகாருக்கு வந்திருப்பதையறிந்து, கஜானாவைக் கொண்டுவரச் சூனாரைவிட்டுச் சென்றிருந்த குப்தடினை லோகாருக்கெதிரில் காவல்வைத்து அங்கிருந்து புறப்பட்



டான். கிழக்கில் பன்னிரண்டு மைல் வந்தவுடன் ஜயசிங்கன் பாசறை யமைத்துக்கொண்டு ராமா, ஹனுமந்தன் எனு மிருவர் வசமும் முந்நூறு குதிரை வீரர்களையும் முந்நூறு காலாட்படையையுங் கொடுத்துப் பூனாவுடன் சமாசப் போக்குவரவு நடக்கக் காவல் புரிவித்தான். சாஸ்வடுக்கு ஒருநாட் பிரயாண தூரத்தில் வந்து சேர்ந்து குடலிர்கானை நான்கு மைல் சென்று தங்கும்படி ஜயசிங்கன் கட்டளையிட்டான். மறுநாள் அவன் தாவுத்கானைப் பின்னால் எல்லோரும் செல்லும்வரை அங்கேயேயிருக்கும்படி கட்டளையிட்டுப் புறப்பட்டு டேலிர்கானுடன் சேர்ந்து கொண்டான். அன்று காலையிலேயே டேலிர் தாம் தங்க இடம் தேடச் சாஸ்வடுக்குச் சென்றான். இடந்தேடுகையில், புரந்தரக்கோட்டையைக் கண்டான். அதன் அடிவாரத்தில் வசித்த மாகி என்னும் வகுப்பினர் அவனையெதிர்த்தனர்; தோல்வியுற்றனர் ; வெற்றியுற்ற மொகலாயர் குடிசைகளைத் தீயிட்டுப் புரந்தரக்கோட்டையை நெருங்கினர்.

அதைக் கேட்டவுடன் ஜயசிங்கன் ரெய்சிங் முதலிய தலைவரிடத்தில் மூவாயிரம் வீரர்கள் கொண்ட படையைக் கொடுத்தனுப்பினான். தான் முற்றுகையைப் பார்வையிடச் செல்வதால் தாவுத்கானுக்கு, உடனே புறப்பட்டுவந்து தன்னுடைய முகாமைப் பாதுகாக்கவும் ;அவன் கட்டளையிட்டான். ஆனால், தாவுத்கான் இவ்வுத்தரவைப் பெற்றவுடன் ஜயசிங்கனிடம் வராமல் டேலிர்கானிடம் நேரே சென்றான். வெகுநேரம்வரை, வேறு தலைவருமில்லாததால் ஜயசிங்கன் முகாமிலிருந்துகொண்டு புடை, குண்டு, நீர்த்தூக்கிகள், மருந்து, துப்பாக்கிகள், முற்றுகைக்கு வேண்டிய ஆயுதங்கள் முதலியனவற்றை டேலிருக்கனுப்பினான். மறுநாட் காலையில் ஜயசிங்கன் தன் முகாமைப் புரந்தருக்கு நான்கு மைல்

தூரத்தில் சாஸ்வடுக்கிடையில் அமைத்துக்கொண்டான். அங்கிருந்து அவன் கோட்டையைப் பார்த்தான். அது ஒரே கோட்டை யன்றென்பதையும், காப்புள்ள ஒரு மலையென்பதையும், சமீபித்துச்சென்று வழிமறிக்க வியலாததென்பதையும் அவன் உணர்ந்தான்.

நீர்மட்டத்திற்கு 4564 அடி உயரத்திலும், நிலமட்டத்திற்கு 2500 அடி உயரத்திலுமுள்ள புரந்தரக்கோட்டை மலைச்சிகரம் சாஸ்வடுக்கு 6 மைல் தென்மேற்கில் தோன்றுகின்றது. அது உண்மையில் இரட்டைக்கோட்டை. அதற்கு வெளியில் கிழக்கில் ஒரு சிகரத்தின்மீது வச்சிரகட்டம் என்னும் வலிமைபொருந்திய தனிமையான ஒப்பற்ற கோட்டை உள்ளது. அம்மலையின் மத்தியில் ஒரு சிறுபாதை சுற்றிலும் உண்டு. அதன் நீளம் 4 மைலுள்ளது. அதன் வட்பாகத்தில் சிறிது அகன்று இருந்தது. அங்குக் காவலாளரும் இருந்தனர். கிழக்கில் பைரவகின்ட் என்னும் போர்முள் (Spur) ஒரு மைல் நீளமுள்ளதாய்ச் சென்று, நீர்மட்டத்திற்கு 3618 அடி உயரத்திலுள்ள ருத்திரமால் அல்லது வச்சிரகட்டம் என்னும் கோட்டையையுடைய சிகரத்துடன் முடிகிறது; இந்த வச்சிரகோட்டை வடக்கில் காப்பாளர் தங்கியுள்ள சிறிய புரந்தரம் அல்லது மாசிக்கோட்டைக்குக் காப்பாகவுள்ளது. இந்த வச்சிர கோட்டையை ஜயசிங்கன் 1665 ஆண்டிலும், ஆங்கிலேயர் 1817-ம் ஆண்டிலும் பிடித்துக்கொண்டதனாலேயே புரந்தரத்தை மராத்தியரிடமிருந்து கவர்ந்தனர். ஆகையால் ஜயசிங்கன், படைத்தலைவனுடைய எல்லா இலக்கணங்களும் வாய்க்கப்பெற்றவனாதலால் முதலில் வச்சிரக்கோட்டையையெதிர்க்க நிச்சயித்துக்கொண்டான்.

டேலிர்கான் மற்றத் தலைவர்களுடனும் ஆப்கானியப் படையுடனும் உருத்திரமாலுக்கும் புரந்தரத்திற்குமிடையில் தங்கினான். அவனெதிரில் துப்பாக்கிப் படை ஜயசிங்கனால் அனுப்பப்பட்டு டர்க்டஸ்கான் தலைமையின் கீழிருந்தது. கிரட்சிங் (ஜயசிங்கன் புதல்வன்) மூவாயிரம் வீரர்களுடன் புரந்தரத்தின் வடக்கு வாயிலுக்கெதிரில் காத்துக்கொண்டிருந்தான். வலது பக்கத்தில் ஒரு பள்ளத்தாக்கில் சில படைகளிருந்தன. இரகசியமான பின்புற வாயிலுக்கெதிரில் ராஜா நார்சிங்கௌர் முதலியோர் காவலாக அமர்ந்தனர். இதற்கு வலது புறத்தில் ரசல்பெக் முதலியோர் இருந்தனர்; ருத்திரமாலுக்கெதிரில் சதுர்புஜ சௌஹான் முதலியோரும் அவர்களுக்குப் பின்னால் மித்திரேசன், இந்திரமால் பண்டாலா முதலியோர்களும் காவலிலமர்ந்தனர். ஜயசிங்கன் கோட்டையினடியில் இருந்தான். மலையோரங்களில் படைகள் தங்கியிருந்தன. ருத்திரமாலுக்கெதிரில் ஒரு குன்றின்மீது "அப்சல்லாகான்" என்னும் பீரங்கியை யேற்றி வைத்திருந்தார்கள். மற்றும் "பேத்லஸ்கர்" என்னும் பீரங்கியும் 'ஹாலேலி' என்னும் பீரங்கியும் ஏற்றப்பட்டன. பின் அதற்கடியில் ஒரு சுரங்கஞ் செய்யச் சிலர் சென்றனர்.



ஒருநாள் பகலில் டேலிர்கான் குண்டுபோட்டு விரோதிகளை யுள்ளே நுழைந்துகொள்ளும்படி துரத்தினான். அவனுக்கு ஜயசிங்கன் இராஜபுத்திர வீரர்களையுடைய படையொன்றனுப்பினான். பீரங்கியின் முழக்கத்தால் பயந்து காப்பாளர்கள் கோட்டையை விட்டுவிட்டு ஓடினர். அவர்களைத் துரத்திச் செல்லாமல் இம்மாதிரியே புரந்தரையும் பிடித்தற்பொருட்டு அவர்களைத் திரும்பி வீடு சேரும்படி விட்டுவிட்டான். விரோதிகளின் வீரத் தலைவர்களுக்கு டேலிரும் ஜயசிங்கனும் மரியாதை செய்தனர். இவ்விதம் வச்சிர கோட்டை வீழ்ச்சி புரந்தர வீழ்ச்சிக்கு முதற்படியாகும். அதை ஜயசிங்கனே "புரந்தரக் கோட்டையைத் திறக்

கும் திறவு கோல்" என்று கூறியுள்ளான். டேபிர் கோட்டையைக் காத்துக்கொண்டிருக்கையில், சிவாஜியையும், பீஜப்பூரையும் அடங்கும்படி செய்யவும், உதவிப் படைவர ஏதுவில்லையென்பதை யறிவுறுத்தவுங் கருதி மராத்திய நாடுகளில் கொள்ளையிட அவன் ஏற்பாடுகளைச் செய்தான்.

இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஜயசிங்கனின் தலைவர்களிற் சிலர் இராஜத் துரோகிகளாகவு மிருந்தனர். பின்புறத்தில் காவல் வைத்திருந்த தாவுத்கான், அவ்வழியே மராத்தியர்கள் கோட்டைக்குட் சென்றபொழுது அவர்களை யெதிர்க்கவில்லை. இதுவிஷயமாய் டேபிருக்கும் அவனுக்கும் ஒரு சிறு சச்சரவு ஏற்பட்டது. ஜயசிங்கன் அவனைத் தன்னுடனழைத்துக்கொண்டு பர்டில்கானை யவ்விடத்திற்கு நியமித்தான். சப்கான் என்னும் மற்றொரு தலைவன் சிவாஜிக்கு உதவி செய்யத் தலைப்பட்டான். இடையில் தாவுதும் புரந்தரை யெதிர்ப்பது வீண் நஷ்டத்தையும் கஷ்டத்தையு முண்டாக்குமென்று மொகலாயத் தலைவனை அதைரியப்படுத்தினன். ஜயசிங்கன் உதவியில்லாவிட்டால் டேபிர் தோற்று அவமான மடைவானென்பதே அவன் கருத்து. அவனை வெளியிலனுப்ப ஜயசிங்கன் அவனிடம் ஒரு படையைக் கொடுத்து நாட்டைக் கொள்ளையடிக்கும்படி ஏவினன். தாவுத்கான் முக்லியோர் படையுடன் இராஜ கட்டம், சிம்ம கட்டம், ரோஹிரா முதலிய பிரதேசத்தைக் கொள்ளையிடப் புறப்பட்டனர். அதே சமயத்தில் குப்துடின் வடக்கு நோக்கிச் சென்றனன்.

தாவுத்கான் ரோஹிராப் பிரதேசத்தை யடைந்து, சுமார் ஐம்பது கிராமங்களைத் தீயிட்டான். மொகலாயர் வழியிலுள்ள கிராமங்களைக் கொள்ளையிட்டுக் கொண்டு இராஜகாருக்குப் புறப்பட்டனர். அவர்கள் ஒரு கோட்டையைக்கூட வெதிர்க்கவில்லை. கோட்டைக் காப்பாளர்களும்



கிராமங்களைச் சூறையாடுவதைக் கண்டு எதிர்க்கவில்லை. அவர்களைக் கஞ்சன்கோராக் கணவாய்க்குச் சமீபத்தில் அன்றிரவு தங்கிப் பின் சிவபூர் வந்தனர். தாவுத் அங்கிருந்து சிங்ககார் சென்று ஜயசிங்கன் கட்டளைப்படி பூனாவிற்குத் திரும்பினான். இதற்கிடையில் புர்கோரா, டேசிகோரா, கணவாய்களில் கொள்ளையிட்டுக் கொண்டிருந்த குப்துடின்கானைப் பூனாவுக்குத் திரும்பும்படி உத்திரவிட்டு, அவனும் வந்து தாவுத்கானுடன் சேர்ந்துகொண்டான். இதற்குக் காரணம் என்னவெனில் சிவாஜி லோகாரில் ஒரு பெரும் படையைத் திரட்டியிருந்ததை யறிந்து ஜயசிங்கன் அதைச் சிதைக்கவே அவ்விதம் கட்டளைகளைப் பிறப்பித்தான்.

அத்தலைவர்களும் பூனாவை விட்டுப் புறப்பட்டுச் சுவாடுக்கு வந்து மறுநாள் லோகாருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் நெருங்கியவுடன் ஐந்நூறு மராத்தியக் குதிரை வீரர்களும் ஆயிரம் காலாட்களும் அவர்களை யெதிர்த்தனர். மொகலாயருக்கு உதவிப்படை வரவே அவர்களைச் சின்ன பின்னமாக்கினர்; லோகார், விசாபூர், திருகோணு, தாங்கை முதலிய கோட்டைகளுக்கிடையிலுள்ள கிராமங்களை நாசமாக்கிவிட்டுத் திரும்பினர். குப்துடின் பூனாவின் எல்லையைக் காவல் செய்தான். தாவுத் மூலபலத்தைப் போய்ச் சேர்ந்தான்.

இதற்கிடையில் மராத்தியர்களும் வாளாயிருக்கவில்லை. அவர்கள் மொகலாயரை வதைத்து முற்றுகையிடவும் முயன்றனர். நிதாஜி போண்டாவை யெதிர்த்தான். சூபாவிலிருந்த மொகலாயப் படை உடனே வந்ததால் சண்டையேற்படவில்லை. குப்துடின், உரோடா (உதய துர்க்கம்) வில் கூடும் மராத்தியர்களைக் கலைத்தான்; தாவுத்கான் லோகார் மலையை யளவிட்டு அதனுச்சியிலிருந்த மராத்திய

வீரர்களைக் கொன்றும் துரத்தியும் முந்நூறு பேரைச் சிறைப் பிடித்தும் மூவாயிரம் கால்நடைகளுடன் திரும்பினான். குபட்கான் (பூனாவின் தானேதார்) முந்நூறு மராத்தியக் குதிரை வீரர்களை நார்கோட்டிலிருந்து துரத்தினான். மராத்தியர்களும் சில வெற்றிகளை யடைந்தனர்.

வச்சிரக்கோட்டையைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்து சென்று டேலிர்கான், மாசி அல்லது கிழ்ப்புரந்தரக் கோட்டையை முற்றுகையிட்டான். அக்கோட்டையின் வடகிழக்கு மூலைவரை அகழி வெட்டினான். முதலில் கோட்டை வீரர்கள் அவர்களைத் துரத்த பல உபாயங்கள் செய்தனர். அவர்கள் ஓரிரவு கீரட்சிங்கை யெதிர்த்துத் தோல்வியுற்றனர். மற்றும் அவர்கள் ரசல்பெக்கை ஓரிரவு எதிர்த்ததால் அகழியிலிருந்து பீரங்கி முதலியவை நாசமடைந்து பதினைந்து பேர் காயமடையும்படியுஞ் செய்தனர். சீக்கிரத்தில் உதவிப் படை வரவே அவர்கள் மராத்தியர்களை எதிர்த்து முறியடித்தனர். ஆனால் டேலிர்கான் புரந்தரத்திற்கெதிரில் யமனைப்போல் அமர்ந்திருந்தான்.

ஜயசிங்கன் ஒரு பெரிய மரமேடை கட்டி யதில் பீரங்கிகளை ஏற்றி வைக்கும்படி கட்டளையிட்டான். இருமுறை தடைப்பட்டும் மூன்றும் முறை ஒரு மேடையில் பீரங்கிகளையேற்றி வெண் கோபுரத்திற்கெதிரில் ரூபசிங்கை நிறுத்திக் காப்புச் சுவரை முதலில் கட்டிக்கொள்ளவும் செய்தான். இருட்டுதற்கு இரண்டுமணி நேரத்திற்கு முன்பே மேடையும் பூரணமாய்க் கட்டப்பட்டு இராஜபுத்திர வீரர்களும் அதன் மீது அமர்ந்திருந்தனர். பீரங்கிகள் ஏற்றப்படு முன் ரோஹிலா வீரர்கள் சிலர் டேலிர் உத்திரவின்றி வெண் சிகரத்தை யெதிர்த்தனர். உதவிப் படையும் வந்தது. பூபட்சிங் முதலியோர் பலர் இறந்தனர். இடது பக்கத்தில் பாலகிருஷ்ண சகவத் முதலியோர் சண்டை செய்தனர்.



அப்பொழுதுதான் இராஜபுத்திரப் படை யுதவிக்கு வந்தது. ஒரு பெருஞ் சண்டைக்குப் பின் மராத்தியர்கள் வெண் சிகரத்தை விட்டுவிட்டுக் கருஞ்சிகரத்தின் பின்புறம் சென்றனர். அவர்கள் அங்கிருந்து வெடிகளையும் வெடி மருந்து மூட்டைகளையும் எறிந்தனர். ஜயசிங்கனும் அதற்குமேல் செல்லாமல் திரும்பிவந்தான். இரண்டு நாட்களில் மரமேடை மீது இரு பீரங்கிகள் ஏற்றப்பட்டன. எதிரிகள் அதன் வெடியைத் தடுக்கமாட்டாமல் கருஞ்சிகரத்தையும் விட்டோடினர். இவ்விதமாக ஐந்து சிகரங்களும் ஒரு கிடங்கும் மொகலாயர் வசப்பட்டன.

புரந்தரத்திற்கு நாசகாலம் கிட்டியது. மூரார் பாஜிப் பிரபு (மராத்தியச் சேனைத்தலைவன்) தேர்ந்தெடுக்கப்பட்ட எழுநூறு வீரர்களுடன், மலையுச்சிக்கு ஐயாயிரம் வீரருடன் ஏறும் டேலிர்கானை யெதிர்த்தான். சமீபித்ததும் ஒரு பெரிய மற்போர் நடந்தது. பாஜியின் மாவலி வீரர்கள் ஐந்நூறு பட்டாணிகளையும் போலியா காலாட் படையையுங் கொன்று அறுபது வீரர்களுடன் டேலிர்கான் தங்கியிருந்த விடத்திற்குஞ் சென்றனர். தோழர்கள் எல்லோரும் மொகலாயர்களால் கொல்லப்பட்டும் பாஜி டேலிரிடம் நேரே சென்றான். குப்துடின்கான் அவனுடைய தைரியத்தையும் வீரத்தையும் மெச்சி அவனுக்கு அக்கோட்டையை விட்டு விடின் உயிர்ப்பிச்சையும், தன்னிடம் உயர் பதவியையும் கொடுப்பதாக வாக்களித்தான். மூரார் ஒப்பாமல் டேலிரைக் கொல்ல வாளை யோங்கினான். அப்போது குப்துடின்கான் துப்பாக்கியால் அவனைச்சுட்டு வீழ்த்தினான். முந்நூறு மாவலிகள் இறந்தனர். மற்றையோர் திரும்பினர். ஆனால் மற்ற வீரர்கள் தம் தலைவன் இறந்ததைக் கண்டு அதைரியமடையாமல், "மூரார்பாஜி ஒருவன் இறந்துவிட்டாலென்ன? நாங்களும் அவனைப்போன்ற தைரியமுள்ளவர்களே. நாம்

களும் அவனைப்போல் அஞ்சாமல் சண்டை செய்வோம்" என்று கூறிக்கொண்டு சண்டையை நடத்தினர்.

சிவாஜியை யெதிர்ப்பதற்காக ஜயசிங்கன் சிங்க கட்டம் முதலிய கோட்டைகளைப் பிடித்துக் காவல் வைத்த காலத்தில் சிவாஜியும் மாவலிச்சேனை வீரர்களும் இராக்காலங்களில் பலமுறையுங் கிளம்பிச் சென்று அக்கோட்டைகளுக்கு உணவுப் பொருளும் பிறவும் அனுப்பி வந்தனர். எப்படியும் தான் ஆபத்திலகப்பட்டுக் கொண்டிருப்பதை யுணர்ந்து சிவாஜி எவ்வகைத் தந்திரத்தாலேனும் ராஜாவைத் தூரத்த எண்ணங் கொண்டான். உடனே பிரதாபராவ் சுவர்ணபட்டைக் கூப்பிட்டு ஒரு சிப்பாய் மாதிரி உடை தரிக்கச் சொல்லி, இராஜாவிடஞ் சென்று எப்படியும் அவனைக் கொன்று வரும்படி கட்டளையிட்டான். சுவர்ணபட்டும் அவ்விதமே ஒரு சிப்பாயாகச் சென்று இராஜாவிடம் வேலையிலமர்ந்து நாளுக்கு நாள் உயர் பதவியையும் பெற்றான். ஒரு நாள் இராஜா அவனுடைய சபைக்குப் போய்க்கொண்டிருக்கும் பொழுது, அவனைக் குத்திக் கொல்லத் தன்னுடைய உடைவாளை யெடுத்தான். அதைப் பார்த்திருந்த இராஜாவின் மெய்க்காப்பாளர் சிலர் அவனைப் பிடித்து அடித்தார்கள். அப்பொழுது இராஜா அவனைப் பார்த்து இதுவரை யிவ்விதம் செய்யத் துணியாது இப்பொழுது செய்யத் துணிந்த காரணத்தை வினவினான். அவனும் உள்ளத்தை யுள்ளபடி கூறினான். பிறகு அவனுக்கு வரிசை வழங்கி ஒரு தண்டனையு மின்றிச் சிவாஜியிடஞ் செல்ல அனுமதியும் கொடுத்தான். அவனும் சிவாஜியால் நன்கு மதிக்கப்பட்டான் என்ற சிறு கதையுமுண்டு.

## 11. புரந்தர உடன்படிக்கை

புரந்தரம் நாற்புரத்திலும் முற்றுகை யிடப்பட்டது. இரண்டு மாத காலம் இடைவிடாது சண்டை நடந்துகொண்டிருந்ததால் கோட்டையிலுள்ளோரனைவரும் பெரிதும் வருந்தினர். கீழ்க்கோட்டையும் விழுந்தமையின், புரந்தர வீழ்ச்சி, காலத்தையே பொறுத்ததாயிற்று. அன்றியும் மராத்தியத் தலைவர்களின் குடும்பங்கள் புரந்தரத்துள்ளிருந்தமையின் அது வீழின் அவர்கள் சிறைப்பட்டு அவமானமுறுவரென்பதைச் சிவாஜி யுணர்ந்தான். அன்றியும் கிராமங்களைக் கொள்ளையிடும் மொகலாயப் படைகளையும் அவன் தடுக்கவில்லை. ஆகையால் பின்னும் எதிர்த்து நிற்பது பயனற்றதென அவன் தெரிந்துகொண்டான். இதற்கு முன்பிருந்தே ஜயசிங்கனிடம் சமாதானத்தின் பொருட்டுப் பல தூதர்களைச் சிவாஜி அனுப்பினான். ஆனால், அவைகளை இராஜா உண்மையென நம்பவில்லை. மொகலாயருக்கு வெற்றிகள் அதிகரிக்கவே சிவாஜி, பல கோட்டைகளையும் பொருள்களையும் கொடுப்பதாகக் கூறினான். எல்லாவற்றையும் ஜயசிங்கன் ஏற்றுக்கொள்ள மறுத்து வந்தான்.

மொகலாயர் அடைந்த வெற்றியையும் கீழ்ப் புரந்தர வீழ்ச்சியையும் கண்ட சிவாஜி எப்படியும் ஜயசிங்கனைச் சென்று சந்திப்பதென வெண்ணினான். அப்படி அம்முறையும் ஜயசிங்கன் மறுப்பானால் கொங்கணத்தை அடில்ஷாவுக்குக் கொடுத்து அவனுடன் சேர்ந்துகொண்டு மொகலாயரை யெதிர்த்துச் சண்டை செய்வதெனவும் அவன் உறுதி செய்துகொண்டான். சிவாஜி, பிரதம நியாயாதிபதியான பண்டிட்ராவ் எனப்படும் ரகுநாத பலாலை இரகசியமாக ஜயசிங்கனிடம் தூது அனுப்பித் தன்னாலியன்றதைச் செய்யும்படியான வாக்குறுதியையும் பெற்றான். மற்றும் அவன் -

தன் நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்படினும் அல்லது வேறு வகையாக முடியினும் எவ்வாறாயினும் யாதோர் இடையூறு மேற்படாமல் தன்னைத் திரும்பி யனுப்பிவிடுவதற்கு ஜயசிங்கனிடம் வாக்குறுதியும் சத்தியமும் பெற்றபின், இரகசியமாகச் சந்திக்க வொப்புக்கொண்டான். பாதுஷா, ஜயசிங்கனுக்குச் சிவாஜியுடன் உறவாடல் கூடாதெனக் கட்டளையிட்டிருந்தும் ஜயசிங்கன் ஒப்புக்கொண்டான்.

இரகுநாதன் தூது சென்று திரும்பி வந்தான். சிவாஜி மறுதினம் சந்திப்பதாக இராஜாவுக்கு ஆளனுப்பப்பட்டது. புரந்தரத்தின் அடிவாரத்தில் இராஜா தர்பார் நடத்துகையில் இரகுநாதன் வந்து, சிவாஜி ஆறு அந்தணர்களுடன் மாத்திரம் வந்திருப்பதாகத் தெரிவித்தான். ஜயசிங்கன் தன் காரியதரிசிகள் உதயராஜையும் உக்கிரசேனனையும் எதிரனுப்பிச் சிவாஜியை எல்லாக் கோட்டைகளையும் கொடுப்பதானால் வரலாமென்றும் இல்லையானால் திரும்பிச் செல்லலாமென்றும் அறிவிக்குமாறு சொன்னான். சிவாஜி சாதாரணமாயுள்ள நிபந்தனைகளுக்கு முற்றும் ஒப்புக்கொண்டு அவ்விருவருடனும் கூடாரத்திற்கு வந்தான். அவனை ஜயசிங்கனின் பணியாளர் அழைத்துச் சென்று இராஜாவிடம் விட்டனர். இராஜா முன் வந்து சிவாஜியைக் கட்டித்தழுவி அவனைத் தன் பக்கலில் அமர்த்திக்கொண்டு சுற்றிலும் இராஜபுத்திர வீரர்களைக் காவலிட்டான்; இச்சமயம் மொகலாயர் படைகள் காலனைப் பிடித்துக்கொண்டதை யுணர்ந்த சிவாஜி அக்கோட்டையை விடுவதாக ஒப்புக்கொண்டான். அதன்படி டேலிர்கானுக்குச் சண்டையை நிறுத்தும்படி உத்தரவிட்டான். சிவாஜியும் தன் தலைவனுக்குக் கோட்டையை விட்டுவிடும்படி கட்டளையிட்டான்.

சிவாஜி ஆயுதங்களும் மெய்க்காப்பாளருமின்றி வந்திருந்தமையின் ஜயசிங்கன் பத்திரமாகத் தன்னுடைய கூடாரத்



தில் அழைத்துக்கொண்டான். அன்றிரவு நெடுநேரம் வரைச் சமாதானப் பேச்சுப்பேசினர். ஜயசிங்கன் தன் வலியுணர்ந்து ஒரு கோட்டையைக்கூட விட மறுத்தான். கடைசியில் பாதுஷாவின் ஆட்சியில் இருபத்து மூன்று கோட்டைகளையும்; வருடம் நான்கு லக்ஷம் பொன் வருமானமுள்ள நாட்டையும் விட்டுவிடுவதென்றும், இராஜகார் உட்பட பன்னிரு கோட்டைகளையும் வருடம் ஒரு லக்ஷம் பொன் வருமானமுள்ள நாட்டை சிவாஜி பெறுவதென்றும், பாதுஷாவின்கீழ் உத்யோகத்தி லமர்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் சிவாஜி தான் நேரே பாதுஷாவிடம் சேவைசெய்ய மறுத்துத் தன் மகன் சம்பாஜியை யதற்குப் பதிலாக ஐயாயிரம் வீரர்கள்கொண்ட சேனையுட னனுப்புவதாயும், அச்சேனையைக் காப்பாற்ற அவனுக்குச் ஜாகீர் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டான். இம்மாதிரி மன்னிப்பு உதயப்பூர் ராணாவுக்குக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஜயசிங்கனிடம் சிவாஜி, "நான் இதுவரை செய்துள்ள இராஜத்துரோகமான நடத்தையை முன்னிட்டுப் பாதுஷாவைக் காண வெட்கமாயிருக்கிறது. எனக்குப் பதிலாக என் மகனைப் பாதுஷாவின் அடிமையாகவும், வேலையாளாகவும் செய்கிறேன். அவனுக்கு ஐயாயிரம் வீரர்கள் கொண்ட சேனைத்தலைவன் பதவியையும் ஏற்ற ஜாகீரையும் கொடுப்பீராக. பாதுஷாவிடம் தலைமை வகிப்பதிலும் சேனையிலமர்வதிலும் என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் தக்காணத்தில் உங்களுடைய சண்டைகளில் எனக்குச் சேனையில் வேலை கொடுத்தால், நான் உடனே இயன்றதைச் செய்கிறேன்" என்று நயம்படப் பேசினான்.

இத்துடன் சிவாஜி ஒரு நிபந்தனைக்குட்பட்ட ஒப்பந்தத்தை மொகலாயருடன் செய்துகொண்டான். அதாவது கீழ்நாடான கொங்கணத்தில் வருடத்தில் நான்கு லக்ஷம்

பொன் வருமானமுள்ள நாட்டையும், மேல்நாடான பீஜபூரில் வருடத்தில் ஐந்து லக்ஷம் பொன் வருமானமுள்ள நாட்டையும் பாதுஷா எனக்குக் கொடுத்து, மொகலாயர்கள் பீஜபூரை வென்றபின் கொடுப்பதாகப் பாதுஷாவின் முத்திரையிட்ட கொடைப் பத்திரமும் கொடுக்கப்பட்டால் நான்பாதுஷாவுக்குப் பதின்மூன்று வருடங்களில் நாற்பது லக்ஷம் பொன்களைக் கொடுக்கிறேன்" என்பதுதான். பீஜபூர்த் தலைவர்களிடமிருந்து சிவாஜியே அந்நாட்டைப் பெற வேண்டியதாயிற்று. இவ்விதம் ஜயசிங்கன் ஒப்புக்கொண்டதற்குக் காரணம் சிவாஜியையும், பீஜபூரையும் எக்காலத்தும் விரோதிகளாகச் செய்வதேயாகும். இதனால் அவனுடைய புத்தி நுட்பம் வெளிப்படுகிறதன்றோ? அதனால் மொகலாயருக்கு முதலில் இரண்டு கோடி ரூபாய்கள் கிடைக்கின்றன. இரண்டாவதாகச் சிவாஜி பீஜபூருடன் சேராமல் விலக்கப்படுகிறான். மூன்றாவதாக அம்மலைப்பிரதேசத்தில் மொகலாயர் சண்டையிடாமல் சிவாஜியே பீஜபூர்க் கோட்டைகளைப் பிடித்துக்கொள்வதால் கஷ்டநஷ்டங்களின்றி முடிகிறதென்று பாதுஷாவுக்கு எழுதினான். அதற்குப் பதிலாக மொகலாயர் பீஜபூரை யெதிர்க்கும்போது தன் மகன் சம்பாஜியின் இரண்டாயிரம் குதிரைப்படையையும் தனது ஏழாயிரம் காலாட்படையையும் உதவிக்கனுப்புவதாகவும் சிவாஜி ஒப்புக்கொண்டான்.

ஆனால், டேலிர்கான் இத்தகைய உடன்பாட்டுக்கு மிகவும் வருந்தினான். தன் மூலம் உடன்படிக்கை நடவாததற்கும், தன் படை வலியையும் வீரத்தையும் கண்டு பிடிக்க முடியாமைக்கும் வருந்தி அவன் ஒவ்வொப்பந்தத்திற்கு ஒப்புக்கொள்ளவில்லை. சிவாஜியை டேலிரிடம் அனுப்பினான். டேலிர் சிவாஜியை அழைத்தேக இராஜா அவனுக்கு மரியாதைகள் செய்தான். இதன்படி புரந்தரக்



கோட்டை மொகலாயர் கைவசமாயிற்று. மற்றுமுள்ள கோட்டைகளும் மொகலாயர்வசம் ஒப்புவிக்கப்பட்டன. சிவாஜிக்கு இராஜாவால் ஒரு யானை, இரண்டு குதிரைகள் முதலியன பரிசளிக்கப்பட்டன. இராஜகார் வந்து சேர்ந்ததும் சிவாஜி சாம்பாஜியை ஜயசிங்கனிடம் அனுப்பினான். அவனும் ஜயசிங்கனிடம் சென்றான். சிவாஜியால் மொகலாயர் வசம் ஒப்புவிக்கப்பட்ட கோட்டைகளாவன:—

தக்காணத்தில் (1) வச்சிரகட்டம் (2) புரந்தரம் (3) கொண்டாணு (4) ரோஹிரா (5) லோகார் (6) இராஜகார் (7) தாங்கி (8) திகோணு; கொங்கணத்தில் (9) முகூலி (10) முருஞ்சன் (11) கிரதுர்க்கம் (12) பண்டாதுர்க்கம் (13) துளசிகுல் (14) நரதுர்க்கம் (15) அங்கோலா (16) மார்கார் (17) கோஹறஞ் (18) பசந்த் (19) நங் (20) கர்னலா (21) சோங்கர் (22) மான்கார் (23) கொண்டாணுவினருகிலுள்ள கட்காலா என்பனவாம்.

இவ்வுடன்படிக்கை யெழுதப்பட்டுப் பாதுஷாவிடம் போய்ச் சேர்ந்தது. பாதுஷாவும் அதற்கொப்புக்கொண்டான். இவ்விதமாக ஜயசிங்கன் வந்த மூன்று மாதங்களுக்குள் சிவாஜியை யடக்கினான். இது மிகவும் பெரிய கீர்த்தியை யளிக்கும் வெற்றியு மாகுமன்றோ? சிவாஜியும் அதன்படி மொகலாயருக்கு உதவியாகவும் பீஜபூருக் கெதிரியாகவும் இருந்து வந்தான்.

சிவாஜியுடன் இவ்விதவுடன்படிக்கை செய்து கொண்ட பிறகு ஜயசிங்கன் தன் படை வீரர்கள் வேலையின்றி உண்பதுமுறங்குவதுமாக விருத்தலைத் தடுத்தற் பொருட்டுப் பீஜபூர் மீது படையெடுக்கத் தலைப்பட்டான். பாதுஷாவிடமிருந்து சிவாஜியின் உடன்படிக்கையை யொப்புக் கொண்டதாகச் செய்தி வந்தது. சிவாஜி கொங்கணத்தினின்றும் வந்து வைரக் கல்லிழைத்த வாளையும்,

பிச்சுவாவையும் மொகலாயரிடமிருந்து பெற்றுக்கொண்டான். வரும் பீஜபூர் படையெடுப்பில் மொகலாயரிடமிருந்து ஒன்பதினாயிரம் வீரர்கள் கொண்ட சேனையையும் இரண்டு லக்ஷம் ரூபாய்களையும் நன்கொடையாகவும் அவன் அடைந்தான்.

புரந்தரிலிருந்து பீஜபூரைப் படையெடுக்கப் புறப்பட்ட போது ஜயசிங்கன் படையில் இடது பாகத்தில் சிவாஜியின் ஒன்பதினாயிரம் வீரர்களடங்கிய சேனையும், நெதாஜி பால்கர் (தக்காணியர்களால் இரண்டாம் சிவாஜியாகக் கருதப்படும் வல்லமை வாய்ந்தவன்) தலைமையின் கீழ் வந்து சேர்ந்துகொண்டது. புரந்தரிலிருந்து ஐம்பத்திரண்டு மைல்கள் தூரமுள்ளதும் பூனாவுக்கு வடக்கேயுள்ளதுமான மங்களவாடி வரும்வரை யொருவரும் எதிர்க்கவில்லை. வழியிலுள்ள கோட்டைகளிலுள்ளோர் சிவாஜி ஜயசிங்கனுடன் சேர்ந்ததைக் கேட்ட மாத்திரத்தில் பயந்து பணிய, அவைகள் எளிதில் கைவசமாயின. பால்டன், கோட்டை ததோராக் கோட்டை, மங்களவாடி என்பவை ஒரு வாரம் கழித்து எளிதில் பிடிக்கப்பட்டன. இதற்காகப் பாதுவால் சிவாஜிக்கு, "இராஜா" என்ற பட்டமு மளிக்கப்பட்டது. எதிரிகளெதிர்த்தனர். மறுநாள் மொகலாயர் டேலிர்கான் தலைமையின்கீழ்ப் பிரிந்தனர். சிவாஜி அங்கிருந்துப் பத்துமைல் சென்று ஷர்ஸாகான், கேவஸ்கான், யாதவராவ் முதலியோர்களுடைய தலைமையின்கீழ் எதிர்த்த பீஜபூர் படையைத் தோற்கடித்தான். மொகலாயருடைய குதிரைப் படையைப் பீஜபூர் வீரர்கள், தம்முடைய படையை நான்காகப் பிரித்து ஆங்காங்கு எதிர்த்தனர். டேலிர்கான் வெகு காலம் சண்டை செய்து வெற்றி பெற்றான். பீஜபூர் வீரர்கள் திரும்பச் செல்லுகையில் பின்புறமாகச் சிவாஜியை எதிர்த்தார்கள். நெதாஜியைத் தடுத்தபோது அவன் கோத்



சிங்கன் உதவிப்படையால் அவர்களைத் துரத்தினான். யாதவராவ் குண்டு காயமுண்டு ஐந்தாறு தினங்களில் இறந்தான். வெங்கோஜி இச்சண்டையில் சிவாஜிக்கெதிரில் பீஜபூர் படையில் சண்டை செய்தான்.

இரண்டு நாட்கள் சென்றபின் முன் நோக்கிச் சென்றனர். மறுநாள் பீஜபூர் வீரர்கள் பெரும் படையுடனெதிர்த்துப் பொருது பயன் பெறாது ஓட்டம் பிடித்தனர். ஜயசிங்கன் பீஜபூருக்குப் பத்து மைல் தூரத்திலுள்ள முக்னபூர் வந்து சேர்ந்தான். அங்கு ஒரு வாரம் தங்கிப் பீஜபூர்க் கோட்டையைத் தான் நினைத்தபடி பிடிப்பது முடியாதெனவறிந்து 1666ம் வருடம் திரும்பிச் சென்றான். எனென்றால் அடில்ஷா கோட்டையை முப்பதினாயிரம் கர்நாடக வீரர்கள் கொண்ட படையோடு பலப்படுத்தியிருந்தான். அதே சமயத்தில் மொகலாய நாட்டை யெதிர்க்கும்படியும் ஷர்ஸாகான் முதலியோரை யனுப்பியிருந்தான். மொகலாயர் பாண்டாவுக்குப் பதினாறு மைலில் வந்து அங்கு இருபத்து நான்கு நாட்கள் தங்கியிருந்தனர்.

எதிர்பாராதபடி பீஜபூர் கோட்டை காக்கப்பட்டிருந்தமையின் ஜயசிங்கன் அவர்களை வேறொருவிடத்தில் போருக்கழைக்க எண்ணினான். அச்சமயம் சிவாஜி தன் சேனையுடன் பன்ஹாலாக் கோட்டையை யெதிர்த்துப் பீஜபூர்ப் படையை யங்குத் தடுத்து வைத்துக் கொள்வதாகக் கூறிட அதன்படி சிவாஜி அங்கு அனுப்பப் பட்டான். அதற்குக் காரணம் மொலாயத் தலைவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் சச்சரவு செய்து கொண்டதுதானென ஜயசிங்கனின் இரகசியக் கடிதங்களால் தெரியவருகிறது. ஜயசிங்கனுக்கு எதிராகக் கிளம்பியவர்களின் தலைவனான டேலிர்கான் பீஜபூரில் தோல்வியுற்றதற்குக் காரணம் சிவாஜியேயென்றும் அவனை யுடனே சிறைப்பிடிக்க வேண்டுமென்றும்

கூறினான். சிவாஜி இவ்வித ஆபத்திலிருப்பதுணர்ந்து அவனைத் தன் படைஞரிடத்தினின்றும் வெளியிலனுப்பவே இவ்வித உபாயம் செய்யப்பட்டதெனவும் கூறலாம்.

சிவாஜி ஜயசிங்கனை விட்டுப் புறப்பட்டுச் சென்ற ஐந்து நாட்களுக்குப் பிறகு பன்ஹாலாவிற் கருகில் வந்து சேர்ந்து பகைவரை யெதிர்த்தான். அக்கோட்டைக் காப்பாளரும் அவனை யெதிர்த்து நின்றனர். பின், சண்டை செய்வது முடியாதெனவுணர்ந்து அவன் இருபத்தேழு மைலிலுள்ள விஷல்காருக்குச் சென்றான். ஆனால் அவன் படையை ஆறாயிரம் பீஜபூர் வீரர்கள் தடுத்துக்கொண்டிருந்தனர். சிவாஜி பன்ஹாலாவில் முறியடிக்கப்பட்ட விஷயம் ஜயசிங்கனுக்குப் பின் தெரிந்தது. அச்சமயம் நேதாஜிபால்கரும், பீஜபூர் வாசிகளிடமிருந்து நான்கு லக்ஷம் பொன் வரிசை பெற்று அவர்களுடன் சேர்ந்து கொண்டு மொகலாய நாட்டையே யெதிர்த்தான். நேதாஜியை நீக்கிவிட மனமில்லாத ஜயசிங்கன் அவனுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து, ஐயாயிரம் வீரர்களுக்குத் தலைவனாகவுஞ்செய்து ஜாகீரும் முப்பத்தெண்ணாயிரம் ரூபாயும் கொடுத்து வசப்படுத்திக் கொண்டான். நேதாஜியைப்போல் சிவாஜியும் அடில்ஷாவிடம் சேர்ந்து கொண்டால் மொகலாயருக்கு மிகவும் கஷ்டமாகவிருக்குமென ஜயசிங்கன் உணர்ந்தான். மற்றும், அவன் அதனையும் பாதுஷாவுக்கும் தெரிவித்துச் சிவாஜியை எவ்வித மேனும் பாதுஷாவைக் காண்பதன் பொருட்டு வடக்கே அனுப்ப ஏற்பாடுகள் செய்ததுமன்றிப் பாதுஷாவைச் சென்று பார்க்கும்படி சிவாஜியையும் தூண்டினான்.

59

# 12: சிவாஜி சிறைப்படுதலும் மீளுதலும்

ஜயசிங்கன் சிவாஜியை வடநாட்டுக்கனுப்ப ஒப்புக்கொண்டானேனும் அது எளிதில் நடைபெறுவதொன்றன்று. புரந்தர உடன்படிக்கைப்படி, மொகலாயரிடம் வேலையிலமரவோ அல்லது பாதுஷாவைப் பணியவோ சிவாஜி ஒப்புக்கொள்ளவில்லை. ஏனென்றால் ஔரங்கசீப்பிடத்தில் நம்பிக்கையில்லை. அவன் வஞ்சகன் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். மலைப்பிரதேசத்தில் தனிமையாகவும் சுயேச்சையாகவும் வளர்ந்து, தாயாராலும், போஷகராலும் அன்போடு சுயேச்சையாய் வளர்க்கப்பட்டு, வைதிக இந்து மதத்தைச் சார்ந்தொழுகி, முதலிலிருந்து ஒருவரிடமும் வேலையிலமராமல், தனியரசு நாட்டும் பெரு நோக்கத்தையே தன் வாழ்நாட் கடமையெனக் கொண்டவனும், முகமதியனைப் பணிவதில் வெறுப்பைப் பிறவிக்குணமாக வுடையவனுமாகிய சிவாஜி, முதலில் மொகலாய சபைக்குச் செல்ல மறுத்தான். ஜயசிங்கன் பற்பல முறையும் பெருங்கொடையையும், நன்மதிப்பையு மளிப்பதாக வாக்களித்தும், பீஜபூர், கோல்கொண்டா முதலிய நாடுகளை ஜயிக்கப் போதிய பொருளையும் படையையும் கொடுக்கப்படுவதுமன்றித் தக்காணத்தில் மொகலாயப் பிரதிநிதியாக நியமிக்கப்படினும் கூடுவதாகுமென்னும் ஆசைகள் கூறியும் ஆக்ராவுக்குச் செல்லும்படி சிவாஜியைத் தூண்டினான். முன்பே சித்திகளிடமிருந்து ஜின்ஜீராவைக் கேட்டதற்குப் பாதுஷா சரியான உத்திரமனுப்பாததால் நேரே சென்றால் பெறக்கூடுமென்றும் ஜயசிங்கன் சிவாஜிக்குக் கூறினான். இவ்வளவு ஆசை மொழிகளும் சிவாஜியை, ஆறு வருடங்களுக்கு முன் நடந்த அப்சல்கானின் சந்திப்பை நினைப்பூட்டிப் பயத்தைத் தோற்றுவித்ததேயன்றி வேறில்லை; ஆயினும் சில ஜோதிடர்கள் சிவாஜி

பத்திரமாகத் திரும்புவானென்று கூறினர். ஜயசிங்கன் சிவாஜியினுடைய பாதுகாப்புக்குச் சபையில் ஒரு கெடுதலும் நேராமலிருப்பதற்கு குமார் ராம்சிங் உத்தரவாதியாவானென சிவாஜிக்குச் சத்தியம் செய்து கொடுத்தனன். மராத்தியச் சபையும் சிவாஜி ஆக்ரா செல்லவேண்டுமெனவே தீர்மானித்தது.

சிவாஜி வடஇந்தியா சென்று திரும்பி வரும்வரைத் தன்னுடைய நாட்டைச் சரிவர அரசாள ஏற்பாடுகள் செய்தது அவனுடைய முன்னாலோசனையையும் அரசியல் ஸ்தாபன ஆற்றலையும் வெளிப்படுத்துகிறது. அவன் இல்லாத காலத்திலுங்கூட அவன் நாடு சுயேச்சை பெற்றுச் செவ்வனே யாளப்படவேண்டிய ஏற்பாடுகளை அவன் செய்தான். அவன் தாயார் ஜீஜாபாய் அரசனுக்குப் பதிலாய் ஆட்சிபாரத்தைத் தாங்கினாள். மோரோபந்த் முதன் மந்திரியாயும், நீலோஜி சான்தேவ், நிதாஜி பால்கர் சேனாதிபதிகளாகவும் அவனுக்கு உதவினர். மற்ற எல்லா நாட்டுத் தலைவர்களும், கோட்டைத் தலைவர்களும் சிவாஜி இருந்தாலெவ்விதம் நடப்பார்களோ அவ்விதமே இல்லாத காலத்தும் நடக்கும்படி உத்தரவு பெற்றனர். சிவாஜி தன் சிறுநாட்டைச் சுற்றிப் பார்வையிட்டுத் தலைவர்களுக்கெல்லாம் நேரே சென்று உத்தரவளித்துப் பின் இராஜகாரிலுள்ள தன் குடும்பத்தாரிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டு, குமாரன் சாம்புஜியுடன் நம்பிக்கையுள்ள ஏழு தலைவர்கள் நான்காயிரம் வீரர்கள் புடைசூழ 1666-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ந் தேதி ஆக்ரா செல்லப் புறப்பட்டான். மொகலாயரும் ஒரு லக்ஷம் ரூபாய்கள் வழிச்செலவிற்குக் கொடுத்துக் காஸிபெக் என்பவனை வழித் துணைக்கும் அனுப்பினர்.

செல்லும் வழியில், ஆக்ராவில் ஒரு வரவேற்புப் பத்திரம் பாதுஷாவிடமிருந்து சிவாஜிக்கு வந்தது. ஒளரங்காயாத் சென்று அங்குப்பிரதிநிதியாயிருந்த சாப்ஷிகன்கானைக் கண்டுகொண்டு வழியெல்லாம் பாதுஷாவின் கட்டளைப்படி வெகுமானங்களையும் நன்மதிப்பையும் பெற்று ஆக்ராவை யடைந்தான். அடைந்ததும் ஒளரங்கசீப் கட்டளைப்படி இராமசிங்கும் மற்றொரு மொகலாயத் தலைவனும் எதிர்கொண்டழைத்து வந்து சிவாஜி தங்குதற்கென வமைக்கப்பட்ட மாளிகைக்கழைத்துச் சென்றனர். பன்னிரண்டாந்தேதி பாதுஷாவும் சிவாஜியும் சந்திக்கும் தினமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அன்று சாந்திராயண முறைப்படி பாதுஷாவின் ஐம்பதாவது பிறந்த தினமாதலால் ஆக்ராக் கோட்டையில் இராஜ சபை நன்கலங்கரிக்கப்பட்டிருந்தது. சிப்பந்திகள் எல்லோரும் விருதுகளுடன் நல்லாடைகளும் அணிந்திருந்தனர். எங்கும் விலையுயர்ந்த கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. திவானியாம் என்னும் அச்சபையில், சிவாஜியும் சாம்பாஜியும், மற்றும் பத்துத் தலைவர்களும், குமார் இராம்சிங்கனால் அழைத்து வரப்பட்டனர். மராத்தியத் தலைவனது விஜயத்தின் பொருட்டு ஆயிரத்தைஞ்ஞூறு பொன் காசுகளும் ஆறாயிரம் ரூபாய்களும் தானமாக வழங்கப்பட்டன. ஒளரங்கசீப், "சிவாஜி இராஜா, வருக" என்று கூறி வரவேற்றான். சிவாஜி சிம்மாசனத்தினடிக்குச் சென்று மும்முறை சலாம் செய்தான். பின் அவனுக்காகத் தனிமையாக ஏற்படுத்தியிருந்த விடத்தில் சாதாரணத் தலைவர்களுடன் அவன் அமரத் தர்பார் நடந்தேறியது.



சிவாஜி இம்மாதிரியான வரவேற்பை யெதிர்பார்க்கவில்லை. ஆக்ரா வந்தது முதல் சிவாஜியின் மனம், கலக்கத்தையே யடைந்தது. முதலில் தன்னை வரவேற்கத் தனக்குச் சமமானவர்களை யனுப்பாது சாதாரண உத்தியோகஸ்தர்களை யனுப்பியதற்கும், தான் பணிந்தபோது பாதுஷாவிடமிருந்து பெருங் கொடையும், நன்மதிப்பும், பட்டமும்

இன்சொல்லும் பெருமைக்கும் அவன் மனம் புண்பட்டது. பின்னும் தான் ஐயாயிரம் வீரர்களுக்குத் தலைவர்களுடன் அமர்ந்திருப்பதையும் இராம்சிங்கன் மூலமாகச் சிவாஜி யறிந்தான். "எனது ஏழு பிராயமுள்ள மகன் அரசவை யடையாமலே ஐயாயிரம் வீரர்களுக்குத் தலைவனானான். என் பணியாள் நேதாஜி ஐயாயிரம் வீரர்களுக்குத் தலைவன். அங்ஙனமாக, நான், வெகுதூரம் தெற்கிலிருந்து வந்தது இப்பதவியை யடைவதற்கோ?" என்று சிவாஜி உரத்த குரலுடன் கூறினான். பின், இராம்சிங் மூலமாகப் பக்கத்திலிருக்கும் ஜஸ்வந்த சிங்கைக் கண்டு, "ஜஸ்வந்த் என் வீரர்களால் முதுகு காட்டி யோடும்படி துரத்தப்பட்டான்! அவனுக்குப் பின்னால் நான் நிற்கிறேன்! இதென்ன விந்தை!" என்றும் சிவாஜி கர்ஜித்தான். சிவாஜி இராம்சிங்கிடம் தான் இவ்விதம் அவமானமடைவதைவிடத் தற்கொலை புரிந்து கொள்வது மேலானதெனக் கூறிக்கொண்டே மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான். பாதுஷா காரணத்தைக் கேட்டபொழுது இராமசிங் தந்திரமாகக் காட்டில் சுயேச்சையாகத் திரிந்துகொண்டிருந்த அவன் அரசவையைக்கண்டு திகைத்து விட்டதாயும், சபையில் நடந்துகொள்ளும் முறையை யறியாததற்குச் சிவாஜியை மன்னிக்கும்படியும் கேட்டுக்கொண்டான். உடனே சிவாஜியை ஓர் அறைக்குக் கொண்டுபோய்ப் பன்னீர் தெளித்தார்கள். மூர்ச்சை வந்ததும் அவன் தன் விடுதிக்குப் போய்ச் சேர்ந்தான்.

சபையிலிருந்து தன் மாளிகைக்கு வந்ததும் சிவாஜி, பாதுஷா இவ்விதம் நம்பிக்கைத் துரோகமும், அவமானமும் செய்ததைவிடத் தன்னைக் கொன்றிருக்கலாமென்று கூறினான். அதைச் சிலர் பாதுஷாவிடஞ் சென்று தெரிவிக்கவே ஔரங்கசீப் கோபங்கொண்டான். நகர மதிலுக்கப்பாலுள்ள "ஜயபூன்மனை" என்னும் மாளிகையில் சிவாஜியை வைத்து



இராம்சிங்கனை அவனுடைய உத்தரவாதியாகவும் பாதுஷா நியமித்தான். தர்பாருக்கு வரச் சிவாஜி அனுமதிக்கப்படவில்லை. சாம்பாஜி மாத்திரம் சிற்சில சமயங்களில் செல்வதுண்டு. இவ்விதமாகச் சிவாஜியின் எண்ணங்கள் அவலமாயின. அன்றியும் அவனும் சிறைப்பட்டான். சிவாஜிக்குத் தப்பியோடப் பிறர் சகாயம் ஒன்றும் கிடைக்கவில்லை. மற்றும் சிவாஜி இருந்த மாளிகையைப் புலட்கான் தன்னுடைய துப்பாக்கிப் படைகொண்டு காவல் புரிந்தான். அதையுணர்ந்த சிவாஜியின் மனம் வெறுப்புற்றது. சாம்பாஜியுடன் இவ்விதமாகச் சிவாஜி மூன்று மாத காலத்தைச் சிறைவாசத்திற் கழித்தான்.

அவையாவு மறிந்த ஜயசிங்கன் அச்சத்தை யடைந்தான். பன்முறையும் ஜயசிங்கன் பாதுஷாவுக்குச் சிவாஜியைச் சிறைப்பிடிப்பதாலும் கொல்வதாலும் அடையும் நன்மையொன்று மில்லையென்றும், அவனின்றியே அவனுடைய அரசு செவ்வனே நடப்பதாயும், சிவாஜியை நட்புக்கொள்ளுதலே பாதுஷாவுக்குப் பயன் தருவதாமென்றும், அப்படியின்றிச் சிவாஜிக்குத் தீங்கிழைத்தால் குடிஜனங்களும் வெறுப்பார்களென்றும் கடிதங்களெழுதினான். ஆனால் குறுகிய நோக்கமுடைய ஔரங்கசீப்பின் குணத்தை மாற்ற ஜயசிங்கனால் முடியவில்லை. ஜயசிங்கன், தன் மகன் சிவாஜிக்கு உத்தரவாத முடையவனாக விருப்பதை வெறுத்தான். ஔரங்கசீப், இந்துத் தலைவனொருவனை ஓர் இந்துவின் பாதுகாப்பில் வைப்பது உசிதமன்றெனவும், சிவாஜியை ஆப்கானிஸ்தானத்திற் கனுப்பிவிடவும் கருதினான். பின்னால் அவ்வெண்ணம் நடைபெறவில்லை. ஔரங்கசீப் சிவாஜியை இராம்சிங்கனது பாதுகாப்பில் ஆக்ராவிலேயே வைத்துத் தானே தக்காணத்திற்குச் செல்லவுமெண்ணினான். அதற்குள் ஜயசிங்கனிட

யிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் சிவாஜியைத் துன்புறுத்தாமல் ஆக்ராவிலேயே வைத்திருக்கும்படி எழுதியிருந்தது. ஆனால் தக்காணத்தில் மொகலாயரின் வெற்றி குறையக் குறைய சிவாஜி விடுதலையடையும் நம்பிக்கையும் மராத்தியர்களுக்குக் குறைவுபட்டது.

ஆனதுபற்றிச் சிவாஜி தப்புவதற்குத் தானே பிறருதவியின்றி ஏற்பாடுகள் செய்யவேண்டியதாயிற்று. சில நாட்கள் செல்லத், தான் பிணியடைந்ததாகவும், பயப்படுவதாகவும், மன்னிப்புக்குக் கெஞ்சுவதாகவும் சிவாஜி நடித்தான்; எவ்விதமோ தன் படை வீரர்களைத் தக்காணத்திற் கனுப்பிவிட உத்திரவும் கேட்டான். பாதுஷா எல்லோரையும் பாதுகாக்கும் சிரமம் ஒழிந்ததெனக் கொண்டு அவ்வுத்தரவைக் கொடுத்தான். அவ்விதமாகத் தன் தோழர்களின் கவலையின்றித் தான் மாத்திரம் தப்ப உபாயந்தேடலானான். பின், தான் உடம்பு அசௌக்கியமுற்றிருப்பதாகப் பாவனை செய்து, அதற்குப் பரிகாரமாக அந்தணர்களுக்கும் துறவிகளுக்கும் ஏராளமான பழவகைகளையும் உணவுப் பொருள்களையும் தானமளிப்பதாக நடித்தான். அப்பண்டங்களெல்லாம் ஒரு காவடியில் இருபெருங் கூடைகளிற் கொண்டுபோகப்பட்டன. முதலில் சில தினங்கள் காவலாளர்கள் அக்கூடைகளைப் பரிசோதித்தனர். பின், நாளடைவில் பரிசோதிக்காமலே காவடிக்காரர்களையும் விட்டுவந்தனர். அச்சமயத்தைத்தான் சிவாஜி வெகுகாலமாக எதிர்பார்த்திருந்தான். ஆகஸ்டு மாதம் 19-ந் தேதி சிவாஜி மிகவும் நோயுற்றுப் படுத்திருப்பதாகவும் தன்னைத் தொந்திரவு செய்யாமலிருக்கவும் காவலாளர்களிடம் கூறினான். அன்று மாலை சிவாஜியின் சகோதரமுறை யுடையவனான ஹிராஜி பார்சந்து, வலது கையில் சிவாஜியின் மோதிரம் காப்பு முதலியவைகளை யணிந்து கொண்டு அவை மாத்திரம் தெரியும்படியும், மற்றப் பாகங்



களை மூடிக்கொண்டும் சிவாஜியினது கட்டிலில் படுத்துக் கொண்டான். சிவாஜியும் சாம்பாஜியும் இரு கூடைகளிலமர்ந்து, முன்னும் பின்னும் பழக்கூடைகள் தொடரச் சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு வெளியேறினார்கள். நகருக்கு வெளியிற் சென்றிறங்கிக் கூடைகளிலிருந்து வெளிவந்து அங்குக் காத்திருந்த நிராஜியுடன் சேர்ந்து பக்கத்துக் கிராமத்திற்குப் போய் ஒரு துறவி வேடம் பூண்டு அவர்கள் வடமதுரையை நோக்கிச் சென்றனர்.

மறுநாட் காலையில் காவலாளர் சிவாஜியின் கணையாழியைக் கண்டு சிவாஜிதானென எண்ணிக்கொண்டிருந்தனர். அன்று மாலை மூன்று மணிக்கு ஹிராஜி மெதுவாக வெளியேறினான். போகும்போது காப்பாளரிடம் "சப்தம் செய்யாதீர்கள். சிவாஜிக்கு உடம்பு சரியாயில்லை" என்று கூறினான். அது காப்பாளரின் சந்தேகத்தைக் கிளப்பியது. பின், சிவாஜியின் அறைக்குச் சென்று பார்த்துத் திகைப்படைந்தனர். சிவாஜி எவ்விதமோ மாயமாகப் போய்விட்டானெனப் பாதுஷாவுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஔரங்கசீப் அதை நம்பவில்லை. அவனைத் தேடும்படி நாற்புறமும் தூதர்கள் அனுப்பப்பட்டனர். ஆக்ராவிலிருந்த சிவாஜியின் தோழர்கள் சிறை செய்யப்பட்டனர். அதற்குள் சிவாஜி இருபத்து நான்கு மைல் தூரம் சென்றுவிட்டான். சந்தேகம், சாதாரணமாக இராம்சிங்கன்மீதே யிருந்தது. இராம்சிங் அரசவை செல்லவும் உத்தியோகம் வகிக்கவும் சம்பளவும் பெறவும் தடுக்கப்பட்டான்.

சிவாஜி, தக்காணத்திற்குச் செல்ல ஆக்ராவிலிருந்து நேரே தென் மேற்காகத் திரும்பி, மால்வா, குஜராத் வழியாகப் புறப்படாமல் நேர்வடக்கே மதுராவிற்குச் சென்று அங்கிருந்து கிழக்கே திரும்பி அலகாபாத், காசி, கயா முதலிய நகரங்களுக்குச் சென்று கடைசியில் இராஜகார்

வந்து சேர்ந்தான். சிவாஜி இராஜகாருக்கு 1666-ம் வருடம் நவம்பர் மாதம் 20-ந் தேதி திரும்பி வந்தது தெய்வ எத்தனத்தாலும் வீரச்செயல்களாலு மடைந்த "தேசிய விடுதலையே" யாகும். எல்லா ஜனங்களும் பெருங் களிப் பெய்தினர்.



## 13. இழந்தன பெறல்

சிவாஜி 1670-ம் ஆண்டு தாதப் என்னும் கோட்டையை முற்றுகையிட்டான். அதைத் தடுக்கத் தாவுத்கான் அங்குச் சென்றான். ஆனால் அக்கோட்டைத் தலைவன் முகமது லாமன் உதவியின்றியே விரோதிகளை முறியடித்தான். தாவுத்கான் சில்ஹேரைக் காக்கச் சென்றும் பயனின்றி மீண்டான். 1671-ம் ஆண்டில் மகபத்கான் அவனுடன் சேர்ந்து இருவருமாக அஹிவந்த் கோட்டையை முற்றுகை யிட்டனர். ஒரு மாதம்வரை வெற்றி தோல்வியின்றி முற்றுகை நடந்து வந்தது. பிறகு தாவுத்கான் சென்று வெற்றி பெற்றான். அதைக் கண்டு மகபத்கான் கோபங்கொண்டு ஒரு படையை யங்கு வைத்துவிட்டு நாசிக்குக்குச் சென்று மாரிக் காலத்தைக் கழிக்கலானான். அதற்குள் பாதுஷா தாவுத்கானை வடக்கே யழைத்துக் கொண்டான். அவ்வருடம் மழையதிகமானபடியால் மகபத்கானுடைய சேனை வீரர்கள் பலரும் இறந்தனர். ஆனால் மகபத்கான் தன் முகாமிலிருந்த ஆடல்மகளிருடன் ஆடல் பாடல்களிலே களித்திருந்தான்.

1672-ம் ஆண்டினாரம்பத்தில் சிவாஜி பூனாவை மீண்டும் பெறப் படை சேர்த்தான். சில்ஹேரில் காவல் வைத்திருந்த இக்லஸ்கான் முதலியவர்களைப் பிரதாபராவ் முதலிய மராத்தியர்கள் சிறைப்பிடித்துப் பலரையும் கொன்றனர். சிறிது காலத்திற்கெல்லாம் மோரோபந்த் முல்ஹேரைப் பிடித்துக் கொண்டு புதுக்காப்புப் படையும் பொருளும் அங்கிட்டு, எதிர்ப்பாரின்றிக் கொங்கணத்திற்குச் சென்றான். சிவாஜியின் வலிமை இவ்வித வெற்றிகளால் அதிகரித்துக்கொண்டு வரவே, சூரத் நகரம் அவனைக் கண்டு அஞ்சத் தலைப்பட்டது. பகதூர்சான் இவ்விதமாகப் பல்லாறுவில் தோல்வியுற்றுப் பீமா நதிக்கரையில் சிறிது காலமிருந்து பின் ஆமது நகரை

யடைந்தான். 1672 ம் ஆண்டு மகபத்கான் இந்துஸ்தானத்திற்குச் சென்ற ஒரு மாதத்திற்குப் பிறகு மௌசாமும் சென்றான். பகதூர்கான் இவ்விருவருக்கும் பதிலாய்ச் சேனாதிபதியாகவும், தக்காண இராஜப்பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டான்.

வெற்றி யதிகரிக்கவே, மராத்தியர்கள் மழை, வெயில் முதலியவைகளைக்கூடக் கவனியாது படையெடுக்கலாயினர். மோரோபந்த் ஒரு பெரும்படையுடன் சென்று கோலி நாட்டரசனை விக்கிரம ஷாவைத் தோற்கடித்து ஜவகர் என்னும் நகரைப் பிடித்துக்கொண்டு பதினேழு லக்ஷம் ரூபாயையுங் கைக்கொண்டான். அதற்கு வடக்கிற் சென்று மற்றொரு கோலிநாடாகிய இராம் நகரையும் பயமுறுத்தினான். அவ்வூர் அரசனான சோமஷா, சிக்லி என்னுமூருக்குக் குடும்பத்துடன் ஓடினான். டேலிர்கான் படை திரட்டுவதை யறிந்து மராத்தியர்கள் திரும்பிச் சென்றனர். மழைக்காலங் கழிந்தவுடன் மோரோபந்த் பதினாயிரம் வீரர்கள் கொண்ட சேனையோடு சென்று இராம் நகரை யெதிர்த்து, அதனுடைய அரசனையும் துரத்தினான். அவ்வரசன் தாமனிலுள்ள போர்ச்சுகீஸியரிடம் சரண் புகுந்தான். இவ்விதமாக ஜவகரையும் இராம் நகரையும் மராத்தியர்கள் கைக்கொண்டது கலியனிலிருந்து வட கொங்கணத்திற்கும், சூரத்திற்கும்போகச் சௌகரிகமாயிற்று. சூரத் நகரம் மராத்தியர் வலி கண்டு அஞ்சியது.

இராம் நகரிலிருந்து மோரோ மும்முறை சூரத் வியாபாரிகளைக் கடிதமூலம் நான்கு லக்ஷம் ரூபாய்களை இறைப்பணமாகக் கேட்டான். மூன்றாம் கடிதத்தில் சிவாஜியே கடைசி முறையாக, "அரச வரியில் நாலிலொரு பாகமாகிய சவுத்தைக் கேட்கிறேன். என்னுடைய நாட்டையும், பிரஜைகளையும் காக்கும் பொருட்டு, உங்களுடைய சக்கரவர்த்தி



என்னை ஒரு படையை வைத்துக்கொள்ளும்படி செய்துவிட்டதால், அப்படையின் செலவிற்கு நீங்கள் தான் பொருள்கொடுக்க வேண்டும். உடனே பணத்தைக் கொடுத்தனுப்பாவிட்டால் என்னை இப்பொழுது தடுப்போரில்லாததால், நான் அங்கு வந்து தங்கி என்னுடைய வரியை வசூல் செய்துகொண்டு செல்லவொரு பெரிய மாளிகையை அமைத்து வையுங்கள்" என்று எழுதினான். மராத்தியர்கள் இராம் நகரை யடைந்ததை யறிந்தவுடன், சூரத் பிரதிநிதி மூவாயிரம் காலாட் படையையும் ஐந்நூறு குதிரைப் படையையும் சேகரிக்க வியாபாரிகளிடமிருந்து வரி வசூல் செய்து கிடைத்த பொருளை யபகரித்துக்கொண்டான். இம்மூன்றாம் கடிதத்தைக் கண்டவுடன் ஜனங்கள் பீதியடைந்தனர். அவர்கள் பிரோச்சுக்கு ஓடிவிடப் பிரதிநிதியை யனுமதி கேட்டனர். அவன், ஊர் ஜனங்களிடமிருந்து இரண்டு லக்ஷ ரூபாயைக் கேட்டான். கொடுத்தால் அவன் சிவாஜிக்குக் கொடுக்காமல் தானே யெடுத்துக் கொள்வான் என்று கருதி அவர்கள் மறுத்தனர். இவ்விதம் எவ்வப்போது சிவாஜி பெயரைக் கேட்டாலும் ஜனங்கள் நடுக்க முற்றனர். ஜவகர் தலைவனான விக்கிரமசிங் தன்னாட்டை 1672 ம் ஆண்டு இழந்து மொகலாய நாட்டுக்கருகிலுள்ள நாசிக்குக்கு ஓடி மராத்தியக் கிராமங்களை யழித்தான். அவன் மகன்ஜீ மற்றொரு கோலித் தலைவனுடன் சேர்ந்து மராத்தியர்களைத் துன்புறுத்தலாயினன். கடையில் அவ்விருவரும் பிடிக்கப்பட்டுச் சிவாஜியால் கொலையுண்டனர்.

ஜவகரையும் இராம் நகரையும் மூல ஸ்தலங்களாகக் கொண்டு மோரோடிரிம்பக் ஒரு படையுடன் மலையைக் கடந்து நாசிக் ஜில்லாவைப் பிடித்துக்கொண்டான்.

சிவாஜி, பீராரையும் தெலிங்கானாவையுங் கொள்ளை

யடிக்குமாறு ஒரு சிறு படையை யனுப்பினான். பகதூர்கான் அதையறிந்து ஆமத் நகரிலிருந்து பகைவரைத் துரத்திக்கொண்டு இராம்சீர்க் கோட்டைக்கருகில் வந்தான். ஆனால் மராத்தியர்கள் இரு நாட்கள்முன் அக்கோட்டையின் சுற்றுப் பிரதேசங்களைக் கொள்ளையிட்டனர். திரும்பிவரும்போது மராத்தியர்கள் இரண்டாகப் பிரிந்து, ஒரு படை கோல்கொண்டா வழியாகத் தம் நாட்டையடைந்தது; மற்றொரு படை சண்டா வழியாகச் சென்று மொகலாய நாட்டையடைந்தது.

பீராரிலும் காந்தாரத்திலும் தோல்வியுற்றமையின், மராத்தியர்கள் பூனா ஜில்லாவில் கூடினர்.

ஜுனருக்கு ஒரு மைல் மேற்கேயுள்ள சிவனேரிக் கோட்டை யொரு யுத்த வியூகத்திற்கேற்ற விடமென்பது பொய்யன்று. ஏனென்றால் அங்கிருந்து சுலபமாக மொகலாயத் தக்காணத்தையும், உட்கொங்காணத்தையும் எதிர்க்கலாம்; அன்றியும், சிவாஜியின் பிறப்பிடமாதலின் அதைச் சிவாஜி கவர்ந்துகொள்ள மிகவும் விழைந்தான். சிவனேரிக் கோட்டையின் மொகலாயத் தலைவன் அப்துல் அஸிஸ்கான் என்பவன். அவன் அந்தணன்; மொகலாயனானான். அவனுக்கு மலையொத்த செல்வமளிப்பதாகச் சிவாஜி ஆசைமொழி கூறினான். அவனும் அதை யொப்புக்கொள்பவனைப் போல் பாவனைசெய்து, இரகசியமாக அச்செய்தியைப் பகதூருக்குத் தெரியப்படுத்தினான். அவன் உடனே வந்து மராத்தியர்களை யெதிர்பாராத சமயத்தில் துரத்தி யடித்தான்.

ஆனால் மற்றொரு போர்முனையில் சிவாஜிக்குப் பெரும் வெற்றி கிடைத்தது. அலி அடில்ஷா இரண்டாவான் 1672-ம் ஆண்டில் இறந்தான். நான்கு வயதுள்ள சிகண்டர் சுல்தானானான். அவனிளமைப் பருவத்தில் காவஸ்கான் என்பான் போஷகனானான். முன்பு, அவன் மூன்று பெருந்



தலைவர்களுடன் அரசாட்சியைப் பாகஞ் செய்துகொள்ள வொப்புக்கொண்டு அரசாட்சியைப் பெற்றதும் அவ்வாறு செய்துகொள்ள மறுத்தான்., அவர்கள் உள்ளிருந்து கலகஞ் செய்யவே அரசியற் பலம் குறைந்தது. அப்படிப்பட்ட சமயத்தையே சிவாஜி யெதிர்பார்த்திருந்தான். உடனே தன் உடன்படிக்கையை மீறிக்கொண்டு தன்னுடைய பிரதிநிதியான பாபாஜிநாயக் பண்டியை மீண்டும் அழைத்துக்கொண்டான். படைகள் இராஜபூரில் கூடின. ஒரு பாகம் கோண்டாஜி பர்சண்டு தலைமையில் கோட்டையை யளவிடச் சென்றது. மற்றொரு பகுதி அண்ணாஜியின் தலைமையின்கீழ் இரத்தினகிரிக் காடுகளில் யொளிந்துகொண்டது. 1673 ம் ஆண்டில் ஒரு நாள் நள்ளிரவில் கோண்டாஜி படையுடன் பன்ஹாலாக் கோட்டையை யடைந்தான். அறுபது வீரர்கள் கோட்டை யுச்சியையடைந்து, பேரிகை முழக்கிக் கோட்டையிலுள்ளோரை யெதிர்த்தனர். எல்லோரும் திகைப்புற்றனர். கோட்டைத் தலைவனைக் கொண்டாஜி கொன்றான். சேனைக் கணக்கனான நீரோஜி ஓடிவிட்டான். அவ்வெற்றியைக் கண்டு அண்ணாஜி களித்தான். சிவாஜியும் நேரே வந்து அங்கொரு மாதம் தங்கியிருந்தான். அவ்வெற்றிக்குப் பின் பார்லியும் சதாராவும் சிவாஜியின் வசமாயின.

பன்ஹாலாக் கோட்டையை யிழந்தது காவஸ்கானால் தானென எல்லோரும் அவனை நிந்தித்தனர். அதை மீட்கும்படி பலால்கான் அனுப்பப்பட்டான். பலால் மொகலாயருடன் சேர்ந்து மராத்தியர்களைத் துரத்துமாறு ஏற்பாடுகள் செய்தான். ஆனால் அதையறிந்த சிவாஜி, பிரதாபராவையும் அண்ணாஜியையும் துரிதமாகச் செல்லும்படி யனுப்பினான். பலால் மொகலாயருடன் சேர்ந்துகொள்ளு முன்பே, இரு நாட்களாய் இரவும் பகலுமாகச் சென்று

அவர்களைப் பீஜப்பூருக்கு முப்பத்தாறு மைல் தூரத்திலுள்ள உம்ராணி என்னுமிடத்தில் எதிர்த்தான். சண்டை அன்று மும்முரமாக நடந்தது. சூரியன் மலைவாயில் விழும் சமயத்தில் பலால் சிவாஜியை யெதிர்க்க வரவில்லையென்றும் அரசைத் திருப்தி செய்யவே வந்ததாகவும், பிரதாபராவுக்கு ஒரு தூதனுப்பினான். ராவும் சிறிது பொருள் பெற்று அதற்கிசைந்தான். பலால் திகொணாவிற்குத் திரும்பிச் சென்றான். அங்கிருந்து பிரதாபராவ் தெற்கிலுள்ள கன்னடத்தை எதிர்த்தான். பலால்கான் கோலாப்பூருக்கு வந்து மராத்தியர்களைக் கன்னடத்தினின்றும் துரத்தவாரம்பித்தான். எனினும் அவன் சில மாதங்களுக்கப்பால் நோயுற்றான். அதற்கிடையே பகதூர்கான் பீஜப்பூரை யெதிர்க்க வாரம்பித்தான். பீஜப்பூர், கோல்கொண்டா அரசர்கள் சிவாஜியின் உதவியை நாடினர். மாரிக்காலக் கடைசியில் சிவாஜி கன்னடத்தையும் அதன் உள் காடுகளையும் அடைந்து திரும்பிச் செல்லும்வரை கொள்ளையடித்துக்கொண்டிருந்தான்.

1674ம் ஆண்டு சிவாஜி உம்ராணியில் பலாலைப் பிரதாபராவ் விட்டுவிட்டதற்குப் பெரிதும் கோபித்துக் கொண்டு மறுமுறையும் பலாலை யெதிர்க்கும்படி அவனை யனுப்பினான். சிவாஜி செல்லும்போது, "உன் படையுடன் சென்று, அவனை யழித்து வெற்றி பெறுக. இல்லையேல் முகத்தை என்னிடங் காண்பியாதே'; என்று பிரதாபராவிடம் கோபத்துடன் கூறினான். அவ்வார்த்தைகளால் புண்பட்ட பிரதாபராவ் பலாலை நேசாரியில் இருமலைக்கிடையிலுள்ள குறுகியவிடத்தில் சந்தித்தான். அவன் அறுவரை மாத்திரம் உடன்கொண்டு பீஜப்பூர்ப் படையுட் புகுந்து வீரத்துடன் பலரையுங் கொன்றான். ஆயினும் பிரதாபராவும் கொலையுண்டான். சிவாஜி அவனிறந்ததற்கும், தன்னுடைய கோபத்திற்கும் மிகவும் வருந்தி அவன் குடும்பத்



திற்குப் பெரும் பொருள் கொடுத்துத் தன்னுடைய இளைய மகனான இராஜாராமுக்கு அவனுடைய ஆறுவயதுள்ள பெண்ணையும் மணம் செய்வித்தான். உடனே பலாலைக் கொல்ல அண்ணாஜி யனுப்பப்பட்டான்: அவன் பீஜப்பூர் நாட்டை யடைந்து பலாலைத் தேடினான். டேலிர்கான் தன் சோதர ஆப்கானியனான பலாலைக் காத்தற்பொருட்டு வந்தான். அவனைக் கண்டதும் அண்ணாஜி கன்னடத்திற்கோடினான். அண்ணாஜியைப் பங்களூரில் பலால் எதிர்த்துத் தோல்வியுற்றான். அண்ணாஜி பீஜப்பூர்ப் படையையே கொள்ளையிட்டான். பலால் பழிக்குப் பழி வாங்க எண்ணினான். ஆனால் கொள்ளைக் காலத்தில் உண்மைப் போர் புரிவது மராத்தியர்களின் இயல்பு அன்று. ஆகையால் அண்ணாஜி சிவாஜி நாட்டிற்கோடிவிட்டான்.

சிவாஜி சிப்ளுனில் படைகளைப் பார்வையிட்டுப் பிரதாபராவுக்குப் பதிலாக ஹம்பீர்ராவ் என்னும் பட்டத்துடன் ஹென்ஸ் ராஜ் மோஹைமட் என்பவனைச் சேனாதிபதியாக நியமித்தான். படை வீரர்களுக்கு ஏராளமான பொருளையும் நன்கொடையாக வளித்தான். மோஹன்கார் என்னும் கலிஞ்சாக்கோட்டை அவன் வசமாயது. 1673ம் ஆண்டு இறுதியிலிருந்து 1674ம் ஆண்டு ஆரம்பமான நான்கு மாதங்களிலும் சிவாஜி பீஜப்பூர்ப் படையுடனும், சித்திகளுடனும் இடைவிடாது போர் புரிந்தான். இருதிறத்தார்களும் மழையாலும் போர்க் கொடுமையாலும் சோர்வுற்றனர்.

கி. பி. 1674ல் ஔரங்கசீப், கெய்பர் ஆப்கானியை யடக்கத் தானே நேரில் ஹஸன் அப்தாலிக்குச் சென்றான். டேலிர்கான் வடமேற்கு எல்லைப்புறத்தைக் காக்கும் பொருட்டு வடக்கே யனுப்பப்பட்டான். பகதூர்கான் பலமில்லாத படையுடன் தக்காணத்தில் தனிமையாக விடப்

பட்டான். இப்படி மொகலாயர் சண்டையில் சோர்வுற்றது சிவாஜி பட்டாபிஷேகஞ் செய்து கொள்ளப் பேருதவியாயிற்று. இவ்விதமாக 1659, 60ம் ஆண்டுகளில் சிவாஜி தென்கொங்கணத்தையும், இரத்தினகிரி ஜில்லாவையும் 1663ம் ஆண்டில் சேவந்தவாடி, இராஜபூர், வின்குர்லா முதலியவைகளையும், சித்திகளிடமிருந்து மேற்குக் கலோபாவையும் பெற்றான். 1665ம் வருஷம் புரந்தரவுடன் படிக்கைப்படி, பூனா, தானா ஜில்லாக்களிலிருந்தவைகளையும் 1670, 1671ம் ஆண்டுகளில் மீட்டுக்கொண்டான். 1664ம் ஆண்டு முதல் கன்னடத்தைப் பிடித்து வந்தான். ஆனால் அது 1675ம் ஆண்டுதான் பூர்த்தியடைந்து: 1671, 1672ம் வருடப் போர்களால் பக்லானா, கோலி நாடு, வடகொங்கணம், முதலியன கையகப்பட்டன. அவைகளால் சிவாஜியின் தனியரசு நிலை பெறுவதாயிற்று.

## 15 சிவாஜி முடி புனைந்து கொள்ளல்

நெடுங்காலமாகச் சிவாஜியும் அவனது அமைச்சர்களும் மகுடம் புனைந்து மன்னனாயிராமலிருந்த குறையை நீக்கிக்கொள்ளக் கருதினர். அநேக நாடுகளை வென்று, சிவாஜி பெருநிதியும், படைத்திருந்தானென்பது உண்மை. தனியரசிற்கு வேண்டிய நிலப்படையும், நீர்ப்படையும் அவனிடத்திலிருந்தன. அவ்வளவு செல்வமும், பலமுமிருந்துங்கூட அவனை மன்னனாக ஒருவரும் ஒப்புக்கொள்ளவில்லை. டில்லிப் பாதுஷா அவனையொரு ஜமீன்தாரெனவே மதித்தான். அடில்ஷாவோ, தன்னுடைய உத்தியோகத்திலுள்ள ஜாகிர்தாரின் கலகக்காரப் புதல்வனாகவே கருதினான். மற்றைப் பிரஜைகளோ அவனை ஒரு கொள்ளைக் கூட்டத் தலைவனாகவே யிகழ்ந்தனர். மற்ற அரசர்களுடன் சமத்துவமாக அவனிருக்க முடியவில்லை. அன்றியும் அவனுடைய பிரஜைகளும் அவனை யரசனாக மதிக்கவில்லை. கூறுங்கால், குடிகள், ஒருபுறம் அவனிடத்தும், மற்றொருபுறம் வல்லரசாகிய பீஜபீர், டில்லி பாதுஷா முதலியோரிடத்தும் அச்சமுற்றிருந்தனர். இக்காரணங்களால் சிவாஜி முடி புனைந்து மன்னனாவதினாலேயே எவ்வகையிலும் இராஜாங்கம் நிலைபெற்று ஓர் இந்து ஸ்வராஜ்யம் ஏற்படும் என்பது புலப்படுகின்றதன்றோ?

ஆனால், பான்ஸ்லே வம்சம் அவ்விதம் முன்னேற்றமடைவது மற்றைய மராத்தியக் குடும்பங்களுக்குப் பொறாமையை யுண்டாக்கிற்று. அத்தன்மையோர் சிவாஜியின் குடிகளென வொப்புக்கொள்ளாமல், ஔரங்கசீப் அல்லது அடில்ஷாவின் குடிகளெனக் கூறிக்கொண்டு, சிவாஜியையொரு கலகக்காரனெனவும், கொள்ளைக்காரனெனவும் திடீரென முன்னுக்கு வந்தவனெனவும் எள்ளனஞ் செய்தனர்

அவர்களுடைய கண்களுக்குத் தன்னுடைய பெருமை விளங்கும்படி, தானும் பீஜபூர், கோல்கொண்டா அரசர்களுக்குச் சமமான யோக்கியதையுடையவனெனவும், அறிவுறுத்தச் சிவாஜி முடி சூடுவது இன்றியமையாததாயிற்று. ஆனால், பெருந்தன்மை வாய்ந்த மராத்தியப் பெரியோர் அவனை, மராத்திய குலோத்தாரணன் எனவே கருதி எவ்வகையிலும் இந்தியக்குலம் விருத்தியடைந்து அரச நீதியில் முதன்மை பெற்றுச் சுயேச்சையையடைய விரும்பினர். அவர்கள் ஓர் இந்து ஸ்வாராஜ்ய ஸ்தாபனத்திலும், இந்து தர்ம முறையோடு கூடிய இந்து சத்திரபதித்துவத்திலும் பேரன்பு கொண்டனர். அதிலும் சிவாஜியின் தாயார் உயிரிழக்குந் தருவாயில் இருந்தமையின் அவள் இறக்குமுன் மகனுக்கு முடி சூட்டிக் காண விரும்பினள்.

ஆனால் சுதந்திரஸ்தானத்திற்கு ஒரே ஒரு தடையிருந்தது. அது விநோதமான தடை. அதுவும் சிவாஜி இந்து தர்ம சாஸ்திரப்படி நடக்க விரும்பியதாலேயே யேற்பட்டது. சிவாஜி வாலிபத்தில் இராமாயண, பாரதங்களைக் கற்றறிந்தவனாதலின் அவைகளிற் கூறியுள்ளபடி முடி சூட்டிக்கொள்ள விரும்பினான். க்ஷத்திரியர்கள் ஒருவரே முடி சூடிய மன்னராகலாமென்றும், அவர்களே இந்துக்களை யாளலாமென்று மிருக்கிறது. பான்ஸ்லே வம்சத்தார் க்ஷத்திரியர்களாகவும், அல்லது வேறு இருபிறப்பாளர்களாகவும் கருதப்படவில்லை; கிருஷி ஜீவனமுடைய பாட்டனார் மாலோஜியின் நிலை எல்லோருக்கும் தெரிந்திருந்தது. சிவாஜி க்ஷத்திரியனென உறுதிபட்டால்தான் அவனுடைய மகுடாபிஷேகத்திற்கு எல்லா அந்தணர்களும் செல்வார்கள். அதற்கொரு நூலறிவு சான்றவரைத் தேர்ந்தெடுத்தல் முதற்கடமையாயிற்று. அப்பொழுது காசியில் காகபட்டர் என்ற மறுபெயருடைய விசுவேசுவர்



என்பாரொருவர் இருந்தார். அவர் வடமொழியில் மிகச் சிறந்த பண்டிதர். அவர் பிரம்மாவுக்குச் சமமாகவும், நவீன வியாசமுனியாகவும் கருதப்படும்படியான வேத ஆராய்ச்சியுடையவர். அவரைச் சிவாஜி தன் பக்கத்திலழைத்துக் கொண்டான். அவர் வந்து, எல்லோருக்கும், 'பகவான் இராமபிரானுடைய வமிசத்தைச் சார்ந்த உதயபுரிராணுக்களுடைய வமிசத்தில் சிவாஜி பிறந்தவனெனக் கூறினார்.

இந்தியாவிலுள்ள எல்லா வந்தணர்களுக்கும் வரவேற்புப் பத்திரிகை யனுப்பப்பட்டது. பதினாயிரம் பிராமணர்கள் மனைவி மக்களுடனும், மற்றவர் ஐம்பதினாயிரவர்களும் இராஜகார் நகரில் நான்கு மாதகாலமிருந்தனர். சிவாஜி அவர்களுக்கு ஒரு குறைவுமில்லாமல் பார்த்துக் கொண்டும், இடையே இராஜீய விஷயங்களைங் கவனித்துக் கொண்டும், ஆங்கிலேயத் தூதன் ஹென்ரி ஆக்ஸின்டன் முதலியோரைச் சந்தித்துப் பேசியும் ஏற்பாடுகள் செய்து வந்தான். 'ஜீஜாபாய் மரணத் தருவாயிலிருந்தமையின், அவள் இறக்குமுன் தன் மகனை மன்னனாகக் காணவிரும்பினள். மகுடாபிஷேகம் முடிந்த 12ம் நாளே அவள் மண்ணுலக வாழ்க்கையை நீத்ததினால் மகுடாபிஷேகத்திற்கு அவள் உயிருடனிருந்தது கடவுளின் அருளென்றே கூற வேண்டும்.

சிவாஜி ஸ்தலயாத்திரை செய்யப்புறப்பட்டான். 1674ம் ஆண்டு அவன் யாத்திரையாகச் சிப்லன் சென்று பரசுராமர் கோயிலைத் தரிசித்துக்கொண்டு இராஜகாருக்குத் திரும்பினான். பின், அவன் பிரதாபகடத்திற்குச் சென்று பவானி தேவியை வணங்கி, ஐம்பத்தாருயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்கக்குடையையும் மற்றப் பொருள்களையும் அளித்து மீண்டான். பின், இராஜகார் வந்து வீட்டில் பவானி, மகாதேவர் முதலிய தேவதைகளை அவன் பூசித்



சிவாஜி பவானிதேவியை வணங்கல்



தான். அதுவரை அவன் க்ஷத்திரிய தருமங்களினின்றும்
வழுவி யிருந்தமையின் அவனை க்ஷத்திரியனாக்க வேண்டி
யது அவசியமாயிற்று. சிவாஜி அதுவரை செய்யாதிருந்த
நியதிகளுக்கு ஓர் யாகம் புரிந்தான். அப்போது சிவாஜி
காகபட்டரால் பூணூல் அணிவிக்கப்பட்டான். பின் அவ
னுக்கு மந்திரங்களும் கற்பிக்கப்பட்டன. அப்பொழுது சில
அந்தணர்கள் மறுத்தனர். சிவாஜி எல்லோருக்கும் ஏராள
மான பொருளை, அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்க
ளின் நிவர்த்தியைக் கருதித் தானமாகக் கொடுத்தான்.
அவ்விதமாகவே எல்லோரும் திருப்தி யடைந்தனர்.

ஜூன் மாதம் ஆறாந் தேதியே குறிப்பிட்ட மகுடாபி
ஷேக தினமாகும். ஓர் இந்து மகுடாபிஷேகத்தில் முக்கிய
மான அம்சங்கள், அபிஷேகமும் சத்தரந் தரித்தலும் ஆம்.
அதாவது மங்கள ஸ்நானமும் வெண்குடை நிழற்றலுமே
யாம். அபிஷேகத்தின் பொருட்டுத் தூய வெண்மையான
உடை தரித்துப் பூமாலைகள் சூடி, நறுமணங் கமழும் வாச
னைத் திரவியங்கள் பூசி, தங்க நகைகளணிந்து, சிவாஜி
குறிப்பிட்டவிடஞ் சென்றான். இரண்டடிச் சதுரமான
இரண்டடி யுயரமுள்ள ஒரு தங்க ஆசனத்தின்மீது அமர்ந்
தான். இந்து முறைப்படி சூரியாயாய், புடவையின் ஒரு
தலைப்பில் முடியப்பெற்று, அவன் பின் வந்து சேர்ந்தாள்.
அவனுக்குப் பின்னால் இளவரசனான சாம்பாஜி அமர்ந்தான்.
பின், எட்டு திக்குப் பாலகர்களை யொப்ப எண்ணமைச்சர்
களும் தங்கக் குடங்களில், கங்கை, சிந்து, யமுனை, பிரம்ம
புத்திரா, கோதாவிரி, கிருஷ்ணா, காவேரி, துங்கபத்திரை முத
லிய நதிகளில் முகந்துவந்த தீர்த்தத்தை அவர்கள்மீது அபி
ஷேகஞ் செய்தனர். பதினாறு கலைகளும் விளங்குமாறு
பதினாறு பிராமணோத்தமப் பத்தினிகள் தங்கத் தட்டில் மங்
கள நீரின் மத்தியில் ஐந்து விளக்குகளையிட்டு மங்களார்த்தி

யெடுத்தனர். பின், சிவாஜி அவ்வித அபிஷேகம் முடிந்ததும், பொன் மயமானதும் நவரத்தினங்கள் இழைக்கப்பட்டதுமான ஆடையணிந்து முகூர்த்த காலத்தில் சிம்மாசன மண்டப மடைந்தான்.

சிம்மாசன மண்டபம் இந்து முறைப்படி முப்பத்திரண்டு தேவதா விக்கிரகங்களா லலங்கரிக்கப்பட்டிருந்தது. சிகரத்தில் பற்பல விநோதமான பொருள்கள் தொங்கவிடப்பட்டும், தரையில் பெரிய இரத்தின கம்பளங்கள் இடப்பட்டும் அம்மண்டபம் பொலிவுற்று விளங்கியது. மத்தியில் முப்பத்திரண்டு மணங்கு நிறையுள்ள (14 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள) பொன் சிம்மாசனம் இருந்தது. எட்டு மூலைகளிலும் எட்டுத் தூண்கள் நவரத்தினங்களா லிழைக்கப்பட்டிருந்தன. சிம்மாசனத்தின்மீது புலித்தோலும் உச்சியில் வெல்வெட்டு மிருந்தது. சிவாஜி சிம்மாசனத்திலமர்ந்ததும் பொன்னாலும் வெள்ளியாலுஞ் செய்யப்பட்ட புஷ்பங்களை மழைபோல் வருஷித்தனர். பதினாறு பிராமணப் பெண்கள் ஹாரத்தி யெடுத்தனர். அந்தணர்கள் வேத கோஷஞ் செய்தனர். "சிவாஜி ராஜா வெற்றி பெறுக" என்றனர் சிலர். சிலர் "சிவாஜி சத்தரபதி கீஜே வாழ்க" என்று கூவினர். சிலர் "சுதந்தரம் தலை யோங்குக" என்று ஆர்த்தனர். சிலர் "இந்தியா இன்புறுவதாக" என்று ஆரவாரித்தனர். பின், சிவாஜி பதினாறுவகைத் தருமங்களையும் செய்தான். எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் பாரசீக நாமத்தை யொழித்து வடமொழியில் நாமமிட்டான். இளவரசு சாம்பாஜியும், குரு காகபட்டரும், பிரதம மந்திரி மோரோ டிரிம்பக் பிங்களும் சிம்மாசனத்தின்கீழ் உயர்ந்த மேடையிலமர்ந்தனர். மற்ற அமைச்சர்கள் இரு வரிசையாக இருபுறமும் நின்றனர். மற்றையோர் அவரவர்களுடைய நிலைமைக்கேற்ற விடங்களில் நின்றனர். அதற்குள் காலையில் மணி



எட்டாயிற்று. அப்பொழுதுதான் ஆங்கிலேயத் தூதனை ஹென்ரி ஆக்ஸின்டன், நீரோஜியால் அறிமுகப்படுத்தப் பட்டான்.

பின், சிவாஜி நன்கலங்கரிக்கப்பட்டிருந்த குதிரைமீதேறி யானையிருக்குமிடஞ் சென்று அதன்மீதுள்ள அம்பாரியிலேறிக்கொண்டு, முன்னும் பின்னும் படைகள் புடைசூழ ஊர்வலம் வந்தான். தெருவெங்கும் அலங்கரிக்கப்பட்டு வீடுகள்தோறும் ஹாரத்தி யெடுத்தனர். கோயிற்குட் சென்று கடவுள் தரிசனஞ் செய்து கொண்டு சிவாஜி அரண்மனைக்குத் திரும்பினான். வந்திருந்த அதிதிகளுக்கெல்லாம் நன்கொடை வழங்கப்பட்டது. அது பன்னிரண்டு நாட்கள்வரை நடந்தது. எல்லா ஆடவர்களும் பெண்களும் தலைக்கு மூன்று முதல் ஐந்து ரூபாய் வரையும், ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு ரூபாயும் பெற்றனர். எட்டாந் தேதி சிவாஜி நான்காவது மனைவியை மணந்து கொண்டான்.

இப்பட்டாபிஷேகமான பிறகு, ஜிஜாபாய் ஜூன்மாதம் 18ம் தேதி, தன் அருமைப் புதல்வனுக்கு அவளுடைய இருபத்தைந்து லக்ஷம் பொன் ஆஸ்தியை விட்டுவிட்டு விண்ணுலகடைந்தாள். அவளுடைய ஈமக் கிரியைகளை யெல்லாம் முடித்த பின்னர் சிவாஜி மறுமுறையும் மகுடஞ் சூட்டிக்கொண்டான். முதல் மகுடாபிஷேகத்தின் மொத்தச் செலவு ஐம்பது லக்ஷம் ரூபாயிருக்கலாமென்று கருதப் படுகிறது.

மகுடாபிஷேகச் செலவினால் சிவாஜியினது பொக்கிஷத்தில் திரவியம் குறைந்தது. அதனால் அவன் செல்வத்தைத் தேட முயன்றான். அதனால் சிவாஜி சில மன்னர்களை யெதிர்த்தான். அவனுடைய முதல் எதிர்ப்பு பகதூர்கான் மீதுதான். பேவிர்கான் டில்லி சென்றதும் பகதூர் இராஜ

காரியங்களை எல்லாம் ஒருங்கே பெற்றிருந்தது சிவாஜிக்குத்
தெரிந்தது. ஜூலை மாதத்தினிடையில் இரண்டாயிரம்
வீரர்களடங்கிய படை பகதூரின் முகாமாகிய பெட்காவுக்கு
ஐம்பது மைலிலிருந்து அவர்களைப் போருக்கிழுக்குங்கால்
ஏழாயிரம் வீரர்கள்கொண்ட மற்றொரு படை பாசறையைக்
கொள்ளையிட்டு ஒரு கோடி ரூபாயையும் இருநூறு குதிரை
களையும் கைப்பற்றிக்கொண்டது. இக்காலத்தில் பீஜபூ
ருடன் சிவாஜி வாளாயிருக்கவில்லை. இரஸ்டமி ஸாமன்
இரண்டாவான் கோலாப்பூருக் கடுத்த மலையில் தன்
சேனையை யேற்றி அங்கிருந்து இராஜபூரைப் பிடிக்கக்
கொங்கணத்தில் இறங்குவதற்குத் தக்க நிலையிலிருந்தான்.
மராத்தியர்களோ கோலி நாட்டிற் புகுந்து ஸூரத்தை யச்
சுறுத்தினர். ஆனால் இராம் நகரிலுள்ள பில் ஜாதியார்கள்
நாலாயிரவர் சிவாஜியை எதிர்த்து நின்றனர். அவர்களும்
தோல்வியுற்று ஒரு லக்ஷம் ரூபாய் இறைப்பணம் கொடுக்கச்
சம்மதித்தனர். அதன் பிறகு மராத்தியப் படை ஔரங்கா
பாத்துக்கருகிலிருந்த சிவாஜியுடன் சேர்ந்துகொள்ளப் புறப்
பட்டது. சிவாஜி நேரே ஔரங்காபாத்துக்குச் சென்று பக
தூரைத் தோற்கடித்து நகரையும் கொள்ளையிட்டான்.
அங்கிருந்து பக்லாணாவிற் புகுந்து அந்நாட்டை யொரு
மாதம் சூறையாடினான். குதுப்புதீன்கான் சிவாஜியை
எதிர்த்துத் தோல்வியுற்றான். இச்சமயத்தில் சிவ
னேரியில் ஒரு தலைவன் வெடிகுண்டால் இறந்தமை
யின் மராத்தியப்படை திரும்பிச் சென்றது. 1675 ம்
ஆண்டில் மூவாயிரம் வீரர்கள் கோலாப்பூரை எதிர்த்த
போது அந்நகர் ஆயிரத்தைந்நூறு பொன் இறைப்பணம்
செலுத்தி நகரைக் காத்துக்கொண்டது. பிப்ரவரியில்
மொகலாயர் மலையைக் கடந்து கலியனைப் பிடித்துக்கொண்
டனர். சீக்கிரத்தில் சிவாஜி அதையும் மீட்டுக் கொண்டான்



சிவாஜி பகதூர்கானிடம் சமாதானஞ் செய்து
கொள்வதாக அவனை மூன்றுமாத காலம் ஏமாற்றிக்
கொண்டு வந்தான். சிவாஜியின் எண்ணம் அக்காலத்தில்
தன் கோட்டைகளுக்கு வேண்டிய பொருள்களை யனுப்பிப்
பலப்படுத்திக் கொள்வதுதான். அவ்வுடன்படிக்கைப்படி
சிவாஜி 17 கோட்டைகளை முகலாயருக்குக் கொடுப்பதென்
றும், சாம்பாஜி ஆறாயிரம் வீரர்களுக்குத் தலைவனாக நியமிக்
கப்பட்டு மொகலாயருக் குதவிபுரிவதென்றும், சிவாஜி பீமா
நதியின் வலது கரையை யடைவதென்றும் ஏற்பாடுகள்
செய்யப்பட்டன. அதற்குள் சிவாஜி பேரண்டா கோட்டை
யைப் பிடித்துக்கொண்டான். பின், மொகலாயத் தூதனை
யவமானப்படுத்தி யனுப்பிவிட்டான். பகதூர்கான் அவ
மானமடைந்து பீஜபூர் மந்திரி நாவாஸ்கானுடன் சிவாஜியை
எதிர்க்க ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். ஆனால்
காவஸ்காரன் கொலையுண்டு பலால்கான் மந்திரியாக வந்தது
பகதூர் தன் எண்ணத்தை நிறைவேற்ற முடியாமற்
போயிற்று; அதற்குள் சிவாஜி கோலாப்பூரைவென்று
ரெய்பெக்கைப் பிடிக்கையில் தோல்வியுற்றான். மற்றொரு
படை கிழக்கில் பீஜபூர், கோல்கொண்டா நாடுகளைக்
கொள்ளையடித்தது. அதே காலத்தில் மற்றோர் படை
கன்கோலிம், விரோடா முதலிய போர்ச்சுகீசிய நகர்களைச்
சூறையாடிற்று.

பகதூர்கான் கலியனுக்குச் சென்று வடகொங்கணத்
தில் சிவாஜியை எதிர்த்தான். 1679 ம் ஆண்டில் பகதூர்
ஒரு மராத்தியப் படையை வசூருக்கருகில் தோற்கடித்தான்.
அக்காலத்தில் சிவாஜி தோல்வியுற்றிருந்தான். அவன் சில
மாதங்களுக்குப் பின்தான் குணமடைந்தான். பின், சிவாஜி
பீஜபூருக்குச் சொந்தமான அத்தினி நகரைப் பறிமுதல்
செய்தான். மோரோ டிரிம்பக், இராம்நகர் அரசனைத்

தோற்கடித்துப் பீண்டல், பெயனிக்கா முதலிய நகர்களைப் பிடித்துக்கொண்டு பின் இராஜகாருக்குத் திரும்பினன். பகதூர்கான் பீஜபூருடன் மும்முரமாகச் சண்டையிடத் தொடங்கினன். அது, புது மந்திரியான பலால்கானைச் சிவாஜியுடன் சேரும்படி செய்தது. அப்பொழுது மூன்று லக்ஷம் ரூபாயும், வருடா வருடம் ஒரு லக்ஷம் பொன் இறைப்பணமும் பீஜபூர் அரசன் சிவாஜிக்குச் செலுத்துவதென ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதனால் அச்சமாதானம் வெகு காலம் நிலைத்திருக்கவில்லை. 1677 ம் ஆண்டு கிழக்குக் கொங்கணத்தின்மீது சிவாஜி படையெடுத்தான்.



## 15. கீழ்க் கொங்கண, கன்னட யுத்தங்கள்

பதினேழாம் நூற்றாண்டில் கன்னடதேசம் பற்பல சிற்றரசர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. சிவாஜி வின்குர்லாவை 1663 ம் ஆண்டு சென்றடைந்தான். அங்கு இரண்டாயிரம் வீரர்களை விட்டுவிட்டுச் சிவாஜி திரும்பினன். 1664 ம் ஆண்டில் பெட்னூர் சண்டை மறுபடியும் தொடங்கியது. சிவாஜி பட்கலிலுள்ள கப்பலிலேறிச்சென்று சமுத்திரக்கரை நகர்களைக் கொள்ளையிட நினைத்தான். காவஸ்கான் அதற்கு விடாமல் தடுத்தான். சிவாஜி துன்புற்றானென்றே கூறலாம். பாஜிகோர் பாரி என்பவன் பீஜபூர் சுல்தானிடம் இராஜபக்தியுடையவன். அவனே 1648 ம் ஆண்டில் ஷாஜியைச் சிறைப்பிடித்தான். முடிவில் கோர் பாரி தோல்வியுற்று மாண்டான். முடல் சிவாஜியின் வசமாயிற்று. அதனுடைய குடும்பத்தினரும் மாண்டனர்: பின், வாடிக்குச் சென்று லக்ஷ்மண சேவந்தைக் கொன்று அந்நாட்டைப் பிடித்துக்கொண்டு கிருஷ்ணசேவந்தையதன் பிரதிநிதியாகவும் சிவாஜி நியமித்தான். பிறகு வின்குர்லா என்னும் வியாபார ஸ்தலத்தைக் கொள்ளையிட்டான். 1664 ம் ஆண்டு ஹூப்ளி முதலிய பெரிய நகர்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

1665 ம் ஆண்டு சிவாஜி மால்வனிலிருந்து கோவா வழியாகப் பாஸ்ரூர் என வழங்கும் வாசுபுரம் சென்று, அந்நகரைக் கொள்ளையிட்டுப் பின் கோகர்ணம் சென்று கடவுள் தரிசனஞ் செய்துகொண்டு அங்கோலாவுக்குச் சென்றான். பின், கார்வார் நகரைச் சிவாஜி யடைந்தான். அங்கிருந்து ஆங்கிலேய வியாபாரிகள் தத்தம் பொருள்களைக் கப்பலேற்றிவிட்டனர். அங்கிருந்து ஷேர்கானுக்கு, ஆங்கிலேயரைத் தன் வசம் விடும்படி, சிவாஜி ஒரு தூதனுப்பினன்.

அவர்கள் நூற்றுப்பன்னிரண்டு பவுன் இறைப்பணங் கொடுக்கச் சம்மதித்ததின்மேல் சிவாஜி அதைவிடுத்து ஜயசிங்கன் புரந்தரை முற்றுகையிட்டதை யறிந்து அங்குச் சென்றான்.

—— புரந்தர வுடன்படிக்கைப்படி பீஜபூருக்குச் சொந்தமான கொங்கணத்தைப் படையெடுக்கச் சிவாஜி மொகலாயர்களால் அநுமதிக்கப்பட்டான். ஹுப்ளியின் பீஜபூர்ப் பிரதிநிதி, சுல்தானிடம் செல்வாக்கை யிழந்தான்; மீர்ஜான் பிரதிநிதி கலகஞ் செய்தான். அதனால் சிவாஜி எல்லா நாட்டையும் பிடித்துக் கொண்டான். ஒருதவியும் வரவில்லை. அதனால் வின்குர்லாவும் கூடலும் பீஜபூரிகளிடத்தும், இராஜபூரும் கரிபட்டணமும் சிவாஜியிடத்திலும் இருந்து வந்தன.

ஜயசிங்கன் பீஜபூருடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கையில் சிவாஜி பன்ஹாலாவின்மீது 1666-ம் ஆண்டு படையெடுத்துத் தோல்வியடைந்து கெல்னாவிற்குச் சென்றான். அவன் அங்கிருந்துகொண்டு இரண்டாயிரம் வீரர்களைப் போண்டாவை முற்றுகையிடும்படி யனுப்பினான். கோட்டைக் காவலர்களும் இரண்டுமாத காலம் எதிர்த்து நின்று பின் தோல்வியுற்றனர்.

சிவாஜி ஆக்ராவுக்குச் சென்றிருந்த காலத்தில் வஞ்சனையால் கோவா நகரை வெல்ல முயன்ற காலம் வரையிலும் கன்னடமும், பீஜபூர் நாடும் நிம்மதியாக விருந்தன. சிவாஜி கொஞ்சங் கொஞ்சமாகப் படைகளை அனுப்பிக் கோவாவில் நானூறு வீரர்களை வைத்திருந்தான். அவர்கள் படையிரட்டித்தவுடன், போர்ச்சுகேஸியர் அறியாத நிலையில் திடீரென நகரைப் பற்றவும் எண்ணினார்கள். அதை எவ்விதமோ போர்ச்சுகீஸிய இராஜப் பிரதிநிதி யறிந்துகொண்டு அவ்வீரர்களைக் கைது செய்து, மராத்தியத் தூதனையும் அடித்து எல்லோரையும் நாட்டைவிட்டோடும்படி துரத்தினான். அதை யறிந்த சிவாஜி கோபங்கொண்டு பத்தாயிரம்



வீரர்களையும் ஆயிரம் குதிரைகளையுங் கொண்ட படையுடன் சென்று சால்செட், பார்டேஸ் நகர்களைப் படையெடுப்பதாகப் பயமுறுத்தினான். போர்ச்சுகீஸியர்கள் போருக்குத் தயாராக விருந்தது யறிந்து இராஜகாருக்குத் திரும்பி வந்தான். 1670-ம் ஆண்டில் மொகலாயருடன் பொருது கொண்டிருந்தமையின் 1672-ம் ஆண்டு முடியும் வரை அதாவது அடில்ஷா இரண்டாவான் இறக்கும்வரை கன்னடத்தை யெதிர்க்கச் சிவாஜி எண்ணவே யில்லை.

1672-ம் ஆண்டில் அடில்ஷா இறந்தவுடன், சுண்டா, பெட்னூர் அரசர்கள் பீஜபூர் நாட்டை யெதிர்த்தனர். முகபர்கான் 1673-ம் ஆண்டு அவ்விருவர்களையும் தோற்கடித்துச் சுண்டாவையும் கைப்பற்றிக் கொண்டான். அக்கலகங்களை யடக்குமுன் மராத்தியர்கள் கன்னடத்தின் மேல் பாகத்தை யெதிர்த்தனர். பிரதாபராவ் ஹுப்ளியைக் கொள்ளையடித்தான். முஸபர்கான் நான்காயிரம் வீரர்களுடன் வந்து அந்நகர் முற்றிலும் பாழடைவதினின்றும் காப்பாற்றினான். ஆனால் மராத்தியர்களைத் தோற்கடிக்க அவனால் முடியவில்லை. பீஜபூர் அரசன் அவனை இரஸ்டமி ஸாமனைப்போல் சந்தேகித்து வேலையினின்றும் நீக்கினான். அவனும் கலகஞ் செய்து பெல்காமையும், கோவாவுக்கும் கன்னடத்திற்கு மிடையிலுள்ள கோட்டைகளையும் பிடித்துக்கொண்டான். பலால்கான் கோலாப்பூரைப் பிடித்துக் கொண்டு மராத்தியர்களைப் பன்முறையும் தோற்கடித்தான். ஆனால் அவன் மீரஜ்ஜில் நோயுற்றான். பீஜபூரும் கோல்கொண்டாவும் மொகலாயப் படையெழுச்சியை யெதிர்க்கச் சிவாஜியின் உதவியை நாடின. ஒரு பெரும் படையும் அதன் பொருட்டுச் சேர்க்கப்பட்டது. ஆனால், சிவாஜி, நவராத்திரி யன்று வீரர்களுடன் சென்று பீஜபூருக்குச் சொந்தமான பங்காப்பூரையே கொள்ளையிட்டுக் கன்னடத்திலும் பிரவே

சித்தான். பலால்கானும், பிறரும் இருமுறை பங்காப்பூரில் அவனைத் தோற்கடித்தனர். அதனால் அவன் கன்னடத்தை விட்டு நீங்க நேர்ந்தது.

கன்னடம் மராத்தியர்களிடமிருந்து தப்பியதேயொழிய அமைதியை யடையவில்லை. கார்வாரின் தலைவனான மியான் சாகப் பீஜபூருக்கு விரோதமாகக் கிளம்பினான். இருதிறத்தாரும் வெற்றி தோல்வியின்றிப் பொருதனர். 1674-ம் ஆண்டு சுண்டாவைச் சுல்தான் பிடித்துக்கொண்டான். அபுக்கான் அதற்குப் பிரதிநிதியாக வந்தான். மியான் சாகப்பின் படைஞரும் சம்பளம் கொடுக்காததற்காகக் கைவிட்டனர். அவனுடைய கோட்டைகளும் ஒரு சண்டையுமின்றிச் சுல்தான் வசமாயின. புது இரஸ்டமிஸாமன் தன் தகப்பனைப்போல் மராத்தியர்களுடன் நட்புக்கொள்ளவில்லை. அவன் சிவாஜியின் குடிகளிலொருவனான ஒரு பெரிய வியாபாரியைப் பிடித்தான். சிவாஜி அவனை யடக்க ஏற்பாடுகள் செய்தான். பீஜபூர் புது மந்திரியான காவாஸ்கான் அவனை மீண்டும் கூப்பிட்டான்; போகும்போது கார்வாரிலுள்ள எல்லோரிடத்தும் கூடியவரை பொருள் பறித்துக் கொண்டான். பீஜபூரில் ஆப்கானியர்களுக்கும் காவாஸ்கானுக்கும் குழப்ப மேற்பட்டது. இரஸ்டமிஸாமனும் வேலையை இழந்தான் போலும்! இச்சமயத்தை வீண் படுத்தாது சிவாஜி, முதலில் பகதூர்கானிடம் சமாதானம் செய்து கொள்வதாகப் பாவனை செய்து அவர்களை வாளாவிருக்கும்படி செய்துவிட்டுக் கன்னடத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

1675-ம் ஆண்டு சிவாஜி 15000 குதிரைப்படை, 14000 காலாட்படை, 10000 பாதை செப்பனிடுவோர்கள், வேண்டிய மண்வெட்டிகள், கடப்பாறைகள், முதலியவைகளைச் சித்தம் செய்துகொண்டான். பின், சிவாஜி கூடலடைந்து



போண்டாக் கோட்டையை முற்றுகை யிட்டான். அதே சமயத்தில் மற்றொரு படை பீஜபூர் நாட்டைக் கொள்ளையிட்டது. முகமதுகான் வீரத்துடன் கோட்டையைக் காத்தான். போர்ச்சுகீஸியர், சிவாஜி போண்டாவைப் பிடித்துக் கொண்டால் கோவாவுக்கு ஆபத்தாக முடியுமெனக் கருதி இரகசியமாகக் கோட்டைக் குதவியனுப்பினர். ஆனால் அதைச் சிவாஜி தடுத்துவிட்டான். பலால்கான் 15000 வீரர்களுடன் மீராஜிலிருந்துவரக் கருதினான்: ஆனால் சிவாஜி அவன் பாதையை அடைத்து விட்டான். கடைசியில் அக்கோட்டை சிவாஜியின் வசமாயிற்று. கோட்டைக்குள்ளிருந்தவர்கள் எல்லோரும் கைதியாயினர். இவ்விதமாக அங்கோலா, சிவேஸ்வரம், கார்வார், காட்வார், காட்ரா, முதலிய எல்லாக் கோட்டைகளும் சிவாஜியின் வசமாயின. தெற்கில் கங்காவதி நதிவரையிலுள்ள பீஜபூர் நாடு முழுவதும் சிவாஜியின் நாடாயிற்று.

பின், சிவாஜி மாரிக்காலத்தைக் கழிக்க இராஜகாருக்கு வந்தான்.

## 16. கடற்கரை அல்லது ஜின்ஜீரா யுத்தம்

சிவாஜி மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து, கடற்கரையோரமாகச் சென்று கொங்கணத்தைத் தன்னாட்டுடன் சேர்த்துக் கொண்டது அக்காலத்திய மேற்குக் கடற் படையுடன் சம்பந்தத்தை ஏற்படுத்தியது. அத்தகைய சம்பந்தத்தில் அபிசீனியர்களான, ஜின்ஜீராவிலுள்ள சித்திகள் முக்கியமானவர்கள். பம்பாய் நகருக்குத் தெற்கே ஜின்ஜீரா என்னும் ஒரு கல்தீவு உண்டு. அதற்குக் கிழக்கில் இராஜபுரியும் தென்கிழக்கில் தண்டாவும் இருக்கின்றன. இவ்விரு நகர்களும் ஒன்றாகக் கருதப்பட்டுக் கலோபா ஜில்லாவின் சித்திகளுக்குத் தலைநகரங்களாகவும் விளங்கின. பதினைந்தாவது நூற்றாண்டில் ஓர் அபிசீனியர்களின் கூட்டம் அங்கு வந்து தங்கியது. அக்கூட்டத்தார் ஆமது நகரத் தரசனிடமிருந்து, இராஜப் பிரதிநிதிப் பதவியைய் யடைந்தனர். ஆமது நகர வீழ்ச்சிக்குப் பின், அவர்கள் சுயேச்சை யடைந்தனர். 1636–ம் ஆண்டில் நடந்த சமாதானப்படி பீஜபூருக்கு அம் மேற்குக் கரை கிடைத்தது. அவர்களுடைய பிரதிநிதிப் பதவியும் சித்திகள் பெற்றனர். அப்பதவிக்குப் பதிலாக அவர்கள் பீஜபூர் வியாபாரத்தையும், மெக்கா செல்லும் யாத்திரீகர்களைக் காப்பாற்றும் கடமையையும் பெற்றனர்.

சித்திகள் வலிமை பொருந்தியவர்களாகவும், அறிவுடையவர்களாயும், கடல் யுத்தத்தில் சிறந்தவர்களாயும், அச்சமின்றிக் கடல்மேல் செல்பவர்களாயும், தைரியம், பலம் ஊக்கம், ஆராய்தல், சேனை செலுத்தும் வல்லமை முதலிய குணங்கள் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்களாயும் இருந்தனர். சித்திகள் பதினேழாம் நூற்றாண்டின் முதலில் பீஜபூர் அரசன் கீழும், பின், மொகலாயரின் கீழும், ஒரு பெரிய கடற் படையை வைத்திருந்தனர்.



கொங்கணத்தையாள்பவன், சித்திகளைத் தன் வசப்படுத்திக்கொண்டோ அல்லது அவர்கள் பலத்தை யழித்தோ அவர்களால் துன்பமுண்டாகாதவாறு காத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. தான் ஒரு கப்பற் படையை வைத்துக் கொள்ளாவிட்டால் தன் கடற்கரைப் பிரஜைகளின் வியாபாரம் சீர்குலையுமென்பதையும் சிவாஜி யுணர்ந்தான். அன்றியும் மேற்குக் கரையிலுள்ள நதிகளெல்லாம் போக்கு வரத்துக் கனுகூலமா யிருந்தமையின் கடற்றுறையைக் காத்தலு மவசியமாயிற்று. ஜின்ஜீராவைப் பிடிப்பவனுக்குத் தண்டா ராஜபுரியைப் பிடிப்பது இன்றியமையாதது ஆகும். அவை பிரிந்திருந்தமையே எல்லாச் சண்டைகளுக்கும் காரணமாயிற்று.

சிவாஜி முன்பே கலோபா ஜில்லாவின் கிழக்குப் பாகத் பிடித்திருந்தான். தண்டாராஜபுரி சித்திகள் வசமிருந்தது. நிலத்தில் மராத்தியர்களை வெல்லப் போதிய படை சித்திகளிடமில்லையாதலால் மராத்தியர்கள் அடிக்கடி சித்தி நகர்களைக் கொள்ளையிட்டு வந்தனர்.

சிவாஜியின் கடற்படை, அவன் தாணா ஜில்லாவை வென்ற பிறகே பெருகியது. அவனுக்கு மேற்குக் கரையில் வெற்றி யதிகரிக்க அதிகரிக்க, அவனுடைய கடற்படையும் விருத்தி யடைந்தது. கடற் படையின்றி நிலப்படையும் பலமற்றதாகுமென வுணர்ந்து கடற்படையை விருத்தி செய்வதிலும் சிவாஜி கருத்துக் கொண்டான். மராத்தியச் சஞ்சிகைகள், சிவாஜியிடம் நானூறு கப்பல்கள் இருந்தனவென்று கூறுகின்றன. ஆங்கிலேயர், சிவாஜி நூற்றறுபது கப்பல்களை பெற்றிருந்தானென்று கூறுகின்றனர். அதை இரண்டாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு தளகர்த்தன் வசம் ஒப்புவித்திருந்தான்.

சிவாஜியின் கடற்படை வலியுற்றதைக் கண்ட முகலாய

மன்னனும், ஆங்கில வர்த்தகர்களும், சித்திகளும் கவலை கொண்டனர். 1664 ம் ஆண்டு கடற்படை பட்களுக் கனுப்பப்பட்டுக் கன்னடப் படையெடுப்புக்கு உதவிபுரிந்தது. 1665 ம் ஆண்டு 85 போர்க் கப்பல்களையும் 3 பெரிய கப்பல்களையுமுடைய சிவாஜியின் படை பாஸ்ரூருக்குத் தென் கன்னடத்தைக் கொள்ளையிடச் சென்றது. அது சூரத்திலிருந்து மெக்கா செல்லும் யாத்ரிகக் கப்பல்களையும் மொகலாயப் படைக்கலங்களையும் முதலிலிருந்தே கொள்ளையடித்து வந்தது.

1669 ம் ஆண்டில் சிவாஜி ஜின்ஜீராவை மறுமுறையும் புத்தம் புது உணர்ச்சியுடன் எதிர்த்தான். பகைவர் படைகள் அதன் போக்கு வரவைத் தடுத்தன. சித்திகள் உணவிற்கே கஷ்டப்பட்டனர். உடனே, ஆங்கிலேய வியாபாரிகளுக்கு அவர்கள் கடைசிவரை யெதிர்த்து நிற்கப் போவதாயும் முடியாவிட்டால் மொகலாயருக்கு அந்நாட்டை விட்டு விடுவதாயும் எழுதினர். மறுவருடம் சிவாஜி யதைப் பிடிக்கத் தன் முழு பலத்தையும் அங்குக்கொண்டு சென்றான். பகத்கான், நீண்டகாலப் போரால் தளர்ச்சியுற்றுத் தன் குடிகள் நாசமடைவதால் ஏழ்மையை யடைந்திருப்பதையும், பீஜபூரிலிருந்து உதவி வாராதென்பதையும் கருதிச் சிவாஜியிடம் பெரும் பொருள் பெற்றுக் கொண்டு ஜின்ஜீராவை விட்டுவிடவும் நிச்சயித்துக்கொண்டான். ஆனால், அவனுடைய மூன்று அபிசீனிய அடிமைகள் தம் மினத்தாரைத் தூண்டிப் பகத்கானைச் சிறைசெய்து, அரசியலைப் பெற்றுப் பீஜபூரையும் மொகலாயரையும் உதவி புரியும்படி கேட்டனர். மொகலாயர் உடன்பட்டனர். அது முதல் சித்திசம்பல் என்னும் அம் மூன்று அபிசீனியர்களின் தலைவன் மொகலாயரிடம் ஜாகீரும் பதவியும் பெற்று மொகலாய நீர்ப்படைத் தளகர்த்தனானான். மற்ற இருவரான



சித்திகாசிமும், சித்திகைரியதும் ஜின்ஜீராவின் தலைவராயினர். சித்தி தளகர்த்தனுக்கு யாகட்கான் என்னும் பட்டமும் கிடைத்தது. இச் சம்பவம் 1671 ம் ஆண்டு நிகழ்ந்ததாகக் காபிகான் என்பவர் கூறுகிறார். இதற்கு இரு மாதங்களுக்கு முன் சிவாஜி நந்தகானில் படையைத் திரட்டிச் சூரத்துக்குச் செல்ல எண்ணினான். அவ்வித ஏற்பாடுகள் நடைபெறவில்லை. நந்தகானிலிருந்த கடற்படை புறப்பட்டுப் பம்பாய்த் தீவைக் கடந்து மோஹிமுக்கு வந்தது. சிவாஜி யங்கிருந்து திரும்பிக் காந்தாரத்தையும், பீரரையும் கொள்ளையிட்டான். அவனுடைய கடற்படை தாமன் வழியாகச் செல்லும்பொழுது பன்னீராயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஒரு கப்பலைப் பிடித்துக்கொண்டது. போர்ச்சுகீசியர்கள் அதற்குப் பதிலாகப் பன்னிரண்டு கப்பல்களைப் பிடித்துக்கொண்டனர். மற்றக் கப்பல்கள் டேமனுக்குச் சென்றன.

சித்திகாசிம் என்னும் ஜின்ஜீராவின் புதிய இராஜப் பிரதிநிதி அறிவும், ஆற்றலும், வீரமும், பலமும் அரசியல் முறையும், போர்முறையு மறிந்தவன். அவன் கடற்படையைப் பெருக்கிக்கொண்டு இரவும் பகலும் போருக்குச் சித்தமாகவே யிருந்துவந்தான். 1671 ம் ஆண்டு ஓரிரவு தண்டாக் கோட்டையில் மராத்தியர்கள் ஆடல் பாடல்களில் களிகொண்டிருக்கையில் சித்திகாசிம் திடீரென நாற்பது கப்பல்களுடன் வந்து எதிர்த்துக் கோட்டையைப்பற்றினான். சிவாஜி ஜின்ஜீராவைப் பிடிக்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டு தண்டாவையே யிழந்தான்! இத்தோல்வி சிவாஜியை மிகவும் வருத்தியது. தண்டாவை மீட்பது அவனுடைய முதலாசையும் இராஜதந்திரத்திற் கொத்ததாயுமிருந்தது. சிவாஜி பம்பாயிலுள்ள ஆங்கிலேயரின் உதவியைக் கேட்டான். ஆனால், சூரத் நகரத் தலைவன் அதற்கனு

மதிக்கவில்லை. ஆகையால் இப்பகைமை மராத்தியர்களுக்கும் சித்திகளுக்கும் சாம்பாஜியின் ஆட்சியிற்கூடத் தொடர்ந்திருந்தது.

1672 ம் ஆண்டினிறுதியில் ஔரங்கசீப் 36 கப்பல்களைச் சூரத்திலிருந்து தண்டாராஜபுரி சித்திகளுக்கு உதவியாகவனுப்பினான். அம்மொகலாயக் கப்பற் கூட்டத்திற்கு அஞ்சிச் சிவாஜி 6 கப்பல்களைப் பம்பாயில் ஆங்கிலேயருடைய காப்பிலிட்டான். அப்படை மராத்தியர்களுக்குப் பெரிதும் இன்னல்களிழைத்தது. மறுவருடம் அப்படை பம்பாயை யடைந்தது. அப்போது மொகலாயரும் சிவாஜியும் ஆங்கிலேயரைத் துணைக்கழைத்தனர். அவர்கள் தந்திரமாக இருவருக்கும் பொதுவாக இருந்தனர். பிரெஞ்சுக்காரர்கள் சிவாஜிக்கு 80 துப்பாக்கிகளையும் 2000 மணங்கு ஈயமும் கொடுத்துதவினர். இதேமாதிரி 1679 ம் ஆண்டில் பன்ஹாலாவின் காவலுக்காகச் சிவாஜிக்குப் பிரெஞ்சுக்காரர்கள் 40 துப்பாக்கிகளை விற்றுள்ளனர். இவ்விதம் சிவாஜியும் ஆங்கிலேயரும் மனவருத்தத்துடனிருப்பதைக்கண்டு டச்சுக் கப்பற்றலைவனான ரீகலாப் வான்கோன் என்பான் 1673 ம் ஆண்டில் சிவாஜிக்கு உதவியாக டச்சுக் கப்பல்களைக் கொடுப்பதாக ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். அதற்குப் பதிலாகப் பம்பாயை வெல்லச் டச்சுக்காரர்களுக்கு 3000 காலாட்படையைக் கொடுப்பதாகவும் ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டது. சிவாஜி டச்சுக்காரர்களை முழுமையும் நம்பவில்லை. அதனால் அவன் ஆங்கிலேயருடன் விரோதங் கொள்ளவுமில்லை.

முப்பது மொகலாயக் கப்பல்கள் சித்திசம்பல் என்பவனின் தலைமையின்கீழ்ச் சூரத்திலிருந்து தண்டாராஜபுரிக்கு 1573 ம் ஆண்டு வந்து தென்மேற்குப் பருவக் காற்றுக் காலத்தை யங்கே கழித்தன. அவ்வமயம் அவை அங்கு



வந்த மராத்திய வியாபாரக் கலங்களையும் போர்க்கலங்களையும் பிடித்து வந்தன. அக்கப்பலிலிருந்தோர் பம்பாய்க்கு வந்து அதற்கெதிரிலிருந்த மராத்தியக் கிராமங்களைக் கொள்ளையிட்டு ஜனங்களையும் வதைத்தனர். அவ்விதம் அடிக்கடி நிகழவே, இராஜகாரிலிருந்து ஒரு படை வந்து திடீரெனச் சித்திகளை யெதிர்த்துப் பலரையுங் கொன்றது. 1674 ம் ஆண்டிலும் சித்திகளுக்கும் மராத்தியர்களுக்கும் போர் நிகழ்ந்துகொண்டிருந்ததென ஆங்கிலேயக் கடிதங்களால் தெரியவருகிறது. 1674 ம் ஆண்டு சித்திசாம்பல் தௌலத்கான் என்னும் சிவாஜியின் நீர்ப்படைத் தளகர்த்தனைச் சடல்வி நதியிலெதிர்த்துச் சண்டையிட இருவருங் காயமடைந்தனர். எனினும் மராத்தியர்கள் வெற்றி பெற்றனர். சிவாஜி எவ்வகையிலும் தண்டாராஜபுரியையும் பிடிப்பதென வுறுதி செய்துகொண்டு படைகளை யனுப்பிவந்தானாயினும் அப்படைகள் உதவியால் தென் கொங்கணத்தைத் தன் வசமாக்கிக் கொண்டானேயன்றித் தண்டாராஜபுரியைக் காப்பாற்ற வியலவில்லை. 1672 ம் வருட இறுதிக்குள் ஜின்ஜீராவை எதிர்க்க 15000 வீரர்களையும் பெரும்பொருளையும் சிவாஜி சிலவு செய்தான்.

1675 ம் ஆண்டு ஜின்ஜீராவை நிலமார்க்கமாகவும் நீர்மார்க்கமாகவும் எதிர்க்கச் சிவாஜி ஏற்பாடுகள் செய்தான். அக்காலத்தில் சிவாஜியிடம் 57 கப்பல்கள் இருந்தன. சித்திகளும் மராத்தியர்களால் தோல்வியுண்டு புதுப்படையுடன் வின்குர்லா சென்று அந்நகரைக் கொள்ளையடித்தனர். சிவாஜியின் படை, கடலுக்கு வந்தவுடன் சித்திகள் ஜின்ஜீராவிற்குத் தப்பியோடினர். அதற்குமுன் அத்தீவைச் சிவாஜி முற்றுகையிட்டிருந்தான். அவன் எல்லைப் புறங்களைக் காவல் செய்துகொண்டு தீவை யெதிர்க்க வுறுதி கொண்டான். 1675 ம் ஆண்டினிறுதியில் அம்முற்றுகை

தொடங்கிற்று. அதற்குள் சித்திசாம்பலும் அங்கு வந்து சேர்ந்தான். மறுவருடமும் முற்றுகை நீடித்தது.

1676ம் ஆண்டு சம்பல் மற்றத் தலைவர்களை விரோதித்துக்கொண்டமையின், பதவியைவிட்டு நீக்கப்பட்டுத் தண்டா ராஜபுரிப் பரிபாலனப் பதவியையும் கடற்படைத் தலைமையும் காசிம் பெற்றான். ஆனால் சம்பல் அப்பொழுதும் மொகலாயப்படையி லிருந்தான். அவன் ஜயதாப்பூரைத் தீக்கிரையாக்கி ஜின்ஜீராவுக்குத் திரும்பினான். 1677ம் ஆண்டில் கடற்படையைக் காசிமிடம் ஒப்புவிக்குமாறு டில்லியிலிருந்து உத்தரவு வந்தது. சம்பல் அப்படிச் செய்யாததால் அவ்விருவருக்கும் சச்சரவேற்பட்டது. கடைசியில் ஆங்கிலேயர்கள் மத்தியஸ்தஞ் செய்து காசிமை நீர்ப்படைத் தலைவனாக்கினார். சம்பல் அதற்கு வெறுத்துச் சிவாஜியிடம் வேலையிலமர்ந்தான். காசிம் 1678ம் ஆண்டின் முற்பகுதியில் கொங்கணக்கரையிலுள்ள ஜனங்களைக் கொள்ளையடித்துப் பிராமணர்களையும் கூடச் சிறைப்பிடித்து இழிவுபடுத்தினான். அதைக் கேட்டுச் சிவாஜி தௌலத்கான் முதலானவர்களைப் பான்வல் என்னுமூரைக் கொள்ளையிட வனுப்பினான். அவர்கள கப்பலதிகமில்லாததாலும், காற்றதிகமாயிருந்ததாலும் ரெய்காருக்குத் திரும்பினர். தௌலத்கான் பெரும்படையுடன் ஜின்ஜீராவை வெதிர்க்க மறுமுறையு மனுப்பப்பட்டான். காசிம், படை திரட்டப் பொருளின்றி, வாளாவிருந்தான். 1680ம் ஆண்டில் காசிம் பென்நதி தீரத்தைக் கொள்ளையிட்டான். அப்பொழுது ஆங்கிலேயரும் சிவாஜியும், சித்திகளைப் பம்பாயில் தங்கவிடுவதில்லையென வோர் உடன்படிக்கை செய்துகொண்டனர்.

ஜின்ஜீராவை வெல்லுவது கஷ்டமாக முடிந்தமையின் சிவாஜி அதற்கொப்பான மற்றொரு தீவைக் கைப்பற்ற நேர்ந்தது.



அவன் கண்டேரி என்னும் தீவைத் தேர்ந்தெடுத்தான். அது ஜின்ஜீராவுக்கு வடக்கே முப்பது மைல் தூரத்திலும் பம்பாய்க்குத் தெற்கிலும் உள்ள ஒன்றரை மைல் நீளமும் அரை மைல் அகலமுமுள்ள ஒரு கற்றீவு. அங்குச் சிவாஜி ஒரு கோட்டையைக் கட்டிக்கொள்ள ஏற்பாடுகள் செய்தான். 1679ம் ஆண்டு சிவாஜி அதை மறுமுறையும் பலப்படுத்திக்கொண்டான்.


## 17. கர்நாடகப் போர்

### தென்னிந்தியப் படையெடுப்பு

1674ம் ஆண்டு நடந்த மகுடாபிஷேகத்தாலும், 1674, 75ம் ஆண்டுகளில் மொகலாயருடனும் பிஜபூருடனும் செய்த போர்களாலும், சிவாஜியின் பொக்கிஷம் குறைவுற்றது. ஆகையால் அவன் பொருள்தேட வாரம்பித்தான். சூரத் நகரம் இருமுறை கொள்ளையடிக்கப்பட்டுத் தாழ்ந்த நிலையிலிருந்தது. கன்னட நாட்டிலும் பொருளில்லை. ஆனால் அடில்ஷாவின் தேசத்தில் ஒரு நாடுதான் செழிப்பாகவிருந்தது. அது சென்னைக்கரையாகிய கர்நாடக தேசந்தான். அது அதிகமாக யுத்தங்களிற் கலந்துகொள்ளாமல் செழித்திருந்தது. அன்றியும் அந்நாட்டில் சிவாஜிக்கு உரிமையுமுண்டு.

பதினேழாம் நூற்றாண்டி னாரம்பத்தில் விஜயநகர வீழ்ச்சிக்கப்பால் மைசூர் சமவெளியிலும் கர்நாடகச் சமவெளியிலுமிருந்த சிற்றரசர்கள் சுயேச்சைபெற்று ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர்.

1674ம் ஆண்டில் மதுரை நாயக்கன் தஞ்சையரசனான விசுவராயைக் கொன்று அந்நாட்டைச் சேர்த்துக்கொண்டான். இறந்தவன் புதல்வன் அடில்ஷாவின் உதவியை நாடினான். சுல்தான், வெங்கோஜியைத் தஞ்சாவூருக் கனுப்பினான். ஒரு வருட காலம் அதன் படையெடுப்புக்குத் தயார்செய்து அவன் நாட்டை வென்று தானே யபகரித்துக்கொண்டான். அப்பொழுது செஞ்சி மாகாணத்தில் கொள்ளிடத்திற்கு வடக்கேயுள்ள தன் தகப்பனாரின் ஜாகிர்களையும் அவன் வைத்திருந்தான். அவன் சுயேச்சையடைந்ததை யுன்னிச் சுல்தான் அவனை யடக்க ஒரு படையை யனுப்பினான், மதுரை நாயக்கர்களும் உதவிபுரிந்



செஞ்சிக் கோட்டை

தனர். ஆனால் பீஜப்பூரில் அடில்ஷா இறந்துவிட்டான். சிகண்டர் சிறுவனாயிருந்தமையின், மந்திரிகளுக்குள் சச்சரவேற்படவே ஒன்றும் நடைபெறவில்லை. கர்நாடகத்தில் செஞ்சி முதல் புதுச்சேரி வரையுள்ள பிரதேசத்தைப் பீஜபூர்ப் பிரதிநிதியாக நேசிர்முகமதுகான் ஆண்டான். அதன் தெற்கில் வாலிகண்டபுரத்தில் ஷர்கான்லோடி இருந்தான். அதற்கும் தெற்கில்தான், தஞ்சை, மதுரை, மன்னர்களிருந்தனர். அனைவரும் பீஜபூர் அரசனின் பணியாளராயினும் அவர்களுள் ஒற்றுமை கிடையாது. ஷர்கான் புதுச்சேரியிலுள்ள பிரென்சுக்காரர்களினுதவியால் செஞ்சியைக் கைப்பற்ற விரும்பினான். தெற்கிலிருந்த வெங்கோஜியோ மதுரை நாயக்கனுக்குப் பெரும் பகைவன். இருதிறத்தாரும் பிரென்சுக்காரர்களின் உதவியை நாடினர்.

ஷர்கான் முதலில் சண்டையை ஆரம்பித்தான். அவன் பரங்கிப்பேட்டை முதல் செஞ்சியைச் சேர்ந்த நாடுகளை வென்றான். கோல்கொண்டாவின் பிரதம மந்திரி மதன்னா பண்டிதர். அவர் ஒரு பெரிய இந்து மதாபிமானி. அவர் உறவினனான கோபண்ணா விஷ்ணுபக்தன்; அருள்பெற்றவன், தெய்வகடாக்ஷத்தால் எதையும் செய்யவல்லவன் அதனால் அவன், பீஜபூரைச் சேர்ந்த கர்நாடகத்தைக் கோல்கொண்டாவிற்கெனவென்று, ஓர் இந்துத்தலைவனிடம் ஒப்படைத்து இந்துநாட்டை ஸ்தாபிக்க எண்ணினான். அக்காரியத்தை முடிக்கச் சிவாஜியாலன்றி மற்றத் தலைவர்களாலியலாது. அதனால் அவன் அரசனைச் சிவாஜியுடன் சேர்ந்துகொள்ளும்படி தூண்டி ஓர் உடன்படிக்கையையும் செய்துகொண்டான். அதன்படி சிவாஜி படை கொண்டு பீஜப்பூரைச் சேர்ந்த கர்நாடகத்தைக் கோல்கொண்டாவுக்கு ஜயித்துக் கொடுக்கவேண்டியதாயிற்று. கோல்கொண்டா சிவாஜிக்கு யுத்தச் செலவையும், மருந்து குண்டு முதலியவை



களையும், கொள்ளைப்பொருளையும், மைசூர் மேல்நாட்டையும் கொடுக்கவேண்டியதாயிற்று.

சிவாஜியின் அதிர்ஷ்டவசத்தால், அந்நாடுகளை நன்கறிந்த ரகுநாத் நாராயண ஹனுமந்தனுடைய உதவி அவனுக்குக் கிடைத்தது. வன் ஷாஜியால் வெங்கோஜியின் போஷகனாக விடப்பட்டவன். வெங்கோஜிக்கு வயதுவந்தவுடன் அவன் அரசியல் வகித்தலைக் கண்டு பொறாமையுற்றான். இரகுநாதன் அதிகாரத்திலிருந்த காலத்தில் பெரும்பொருளை யபகரித்துக்கொண்டதாகத் தெரிந்து கணக்கு வழக்குகளை வெங்கோஜி கேட்டான். உடனே அவன் வேலையை விட்டுவிட்டுத் தன் சகோதரன் ஜனார்த்தனனுடன் காசி யாத்திரை செல்வதாகத் தஞ்சாவூரைவிட்டுப் புறப்பட்டான். அவன் அடில்ஷாவிடஞ் சென்று அங்கு மந்திரி வேலையிலமர்ந்தான். சிவாஜி அவனைத் தன்னிடத்திலமரும்படி கேட்க, அவனும் பீஜபூர் அரசு வலிகுன்றியிருப்பதைக் கண்டு சிவாஜியிடம் வேலையிலமர்ந்தான். அங்குச் சிவாஜியிடம் கர்நாடக நாட்டின் செழிப்பையும் செல்வத்தையும் எடுத்துக்கூறிச் சிவாஜியைத் தன் உரிமையைக் கேட்கும்படி தூண்டினான்.

சிவாஜி புறப்பட்டுக் கர்நூலையடைந்து 5 லக்ஷம்பொன் இறைப் பணமாக அந்நகரத்தாரிடமிருந்து பெற்றான். அங்கிருந்து அவன் தென் கைலாயமாகிய ஸ்ரீசைலத்திற்குச் சென்றான். அது, கிருஷ்ணா நதி கிழக்கு முகமாகத் திரும்புமிடத்தில் ஓர் மலையுச்சியிலுள்ளது. அங்கிருந்து கிருஷ்ணா நதி ஆயிரம் அடி ஆழமுள்ளது. நல்ல மலைக் காடுகளுக்கிடையில் 1563 அடியுயரத்தில் ஒரு மலைச்சிகரமுண்டு. அங்குத்தான் கைலாஸபுரம் இருக்கிறது. அவ்வூர்க்கோயில் சாம்பல் நிறமான பாறைக் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. அக்கோயிலுள் சித்திர வேலை மலிந்து

விளங்கும் மண்டபங்களுமுண்டு. அதன் மத்தியில்தான் மல்லிகார்ஜுன லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. விஜய நகர மன்னனாகிய கிருஷ்ண தேவராயர் அதன் சுவர்களையும், கூரையையும் தங்கமுலாம் பூசிய பித்தளைத் தகடுகளால் அலங்கரித்துள்ளார். அக்கோயிலைத்தான் ஸ்ரீசைலம் என்பர். சிவாஜி கிருஷ்ணா நதியில் ஸ்நானஞ்செய்து மேலேறிக் கடவுளைத் தரிசனஞ் செய்தான். தன்னையே கடவுளுக்குச் சமர்ப்பிக்கவும் அவன் கருதினான். ஆனால் அமைச்சர்கள் அவனை தடுத்தனர். அங்கு அவன் ஒரு மடத்தையும் சத்திரத்தையுங் கட்டி, லக்ஷம் அந்தணர்களுக் கன்னமிட்டான்; பெரும் பொருள்களைத் தானமாக அளித்தான்.

அங்கிருந்து அனந்தப்பூர் சென்று தன் படையுடன் கலந்து, கடப்பை, நந்தியால் வழியாகத் திருப்பதியையடைந்தான். அங்கிருந்து காளஹஸ்தி வழியாகச் சென்னைக்கு ஏழுமைல் தூரத்திலுள்ள பெத்தபோலத்திற்கு வந்தான். முதலில் காஞ்சிபுரம் வழியாகச் செஞ்சிக்கு ஐயாயிரம் வீரர்களை யனுப்பினான். நேசிர் முகமதுகானை அச்சேனைத் தலைவன் கண்டு பெரும் பொருளும் ஜாகிருக்கும் பதிலாக அக்கோட்டையைக் கொடுக்கும்படி கேட்டான். அவனுமொப்புக்கொள்ளவே சிவாஜி கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டான். ஆனால் உடன்படிக்கைப்படி அதைக் கோல்கொண்டாவிற்கு அவன் கொடுக்கவில்லை. அக்கோட்டைக்கும் நாட்டிற்கும் தன் தலைவர்களை நியமித்தான். அங்கிருந்து வடக்கே வேலூருக்குச் சிவாஜி சென்றான். வேலூர்க் கோட்டையிலிருந்துகொண்டு அப்துல்லாகான் என்பான் பிஜபூர்த் தலைவனாக ஆண்டுவந்தான். தென்னிந்தியாவிலுள்ள பலமான கோட்டைகளில் வேலூர்க்கோட்டையொன்று. சிவாஜி, சஜிரா, கெஜிரா, என்னுமிரு குன்றுகளின்மீது பீரங்கிகளை



வேலூர்க் கோட்டை

யேற்றிக்கொண்டு அக்கோட்டையை யெதிர்க்கவாரம்பித்தான். அச்சண்டை பதினான்கு மாதங்கள் நீடித்தமையின் நரிஹரிருத்திராவை இரண்டாயிரம் குதிரைப் படையுடனும் ஐயாயிரம் மாவலி வீரர்களுடனும் அங்கு வைத்துவிட்டுச் சிவாஜி தெற்கு நோக்கிச் சென்றான்.

சிவாஜி சென்னை வழியாகத் தெற்கே சென்றபோது அங்குள்ள தனவந்தர்களைப்பற்றி விசாரித்துக்கொண்டான். அவனுக்குப் பணம் கொடுத்தால் மாத்திரம் ஜனங்களுடைய கஷ்டம் தீர்வதாகவில்லை. அவனுடைய இருபதினாயிரம் பரிவாரங்களும் நாட்டைக் கொள்ளையடித்தன. அது போதாதென்று அவ்விடங்களிலுள்ள கள்ளத் தலைவர்களும் கொள்ளையிடலாயினர்.

வாலிகண்டபுரத்தில் ஷர்கான்லோடி பீஜப்பூரைச் சேர்ந்த கர்நாடகத்தின் தென்பகுதியை யாண்டுகொண்டிருந்தான். அவனுக்குச் சுபாவமாகவே சண்டை செய்யத் தெரியாது. சிவாஜி பவானிகிரிக்கு வந்தான். வால்டேர், தேவனபட்டணம் முதலிய பல கோட்டைகளும் சிவாஜியின் வசமாயின. ஷர்கான் தன் நாடு முழுவதையும் சிவாஜிக்குக் கொடுப்பதாகவும் இருபதினாயிரம் பொன் இறைப்பணமாகக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டான். அதன்பின், அவன் அரியலூர்க்கோட்டையடைந்தான். அந்நகர்த் தலைவன் ஒரு கள்ளர் குடியிற் பிறந்தான். ஷர்கான் பொருள் கொடுக்காததால் அவனுடைய மகன் இப்ராஹிம்கானைச் சிவாஜி தொந்தரவு செய்தான். 1678ம் ஆண்டில் சில கள்ளர் குடியில் பிறந்த மன்னர்கள் அப்பணத்தைக் கொடுத்து இப்ராஹிமை மீட்டனர். பின், ஷர்கான் மதுரை நாயக்கர்களிடஞ் சென்றான்.

சிவாஜி மழைக் காலத்தைக் கழிக்கப் படையுடன் வெள்ளாற்றைக் கடந்து திருமழபாடியை யடைந்தான்.



அது, தஞ்சைக்குப் பத்து மைல் தூரத்தில் கொள்ளிடக் கரையிலுள்ளது. அங்கு மதுரை வேந்தனான சொக்கநாதனிடமிருந்து ஒரு தூதன் வந்திருந்தான். சிவாஜி அவனிடம் ஒரு கோடி ரூபாய் கேட்டான். அதற்கவன் சில நாட்டையும் மைசூரில் சிலவற்றையும் வெங்கோஜியும் பிடித்துக்கொண்டமையின் அதையெல்லாம் மீட்டுக் கொடுத்தால் வருடத்திற்கு ஏழு லக்ஷம் பொன் கொடுப்பதாகக் கூறினான். மதுரை மன்னன் ஆறு லக்ஷம் பொன் கொடுக்கச் சம்மதித்து ஒன்றரை லக்ஷத்தைக் கொடுத்தமையின் சிவாஜி திரும்பிச் சொல்வதாக வாக்களித்தான்

இதற்கிடையில் சிவாஜியும் அவன் சகோதரன் வெங்கோஜியும் சந்திக்கும்படியான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. முதலில் வெங்கோஜியின் மந்திரிகள் சிவாஜியிடம் சென்று வரவேற்புப் பத்திரத்துடன் திரும்பி வந்தனர். பின், இருபதினாயிரம் வீரர்களுடன் வெங்கோஜி திருமழபாடிக்குச் சென்றான். சில காலம் விருந்துகள் நடந்தன. பின், சிவாஜி தன் தந்தையின் நாட்டில் முக்கால் பாகத்தைக் கேட்டான். அவன் மறுக்கவே சிவாஜிக்குக் கோபம் பிறந்தது. வெங்கோஜி பயந்துகொண்டு ஓரிரவு ஐவருடன் புறப்பட்டுக் கொள்ளிடத்தைக் கடந்து தன்னாட்டையடைந்தான். அதை யறிந்து சிவாஜி, தஞ்சாவூர் மந்திரிகளைச் சிறைப்பிடித்தான். அவன், "நான் அவனைச் சிறைப்பிடிக்கவா போகிறேன்" என் கீர்த்தி கடலாற் சூழப்பட்ட உலகெங்கும் பரவியுள்ளது. நான் என் தந்தையின் பாகத்தையே கேட்டான். ஏனென்றால் ஒவ்வொருவனும் பிதிரார்ஜிதத்தை யிழக்கக் கூடாதன்றோ? அப்படி யவனுக்குக் கொடுக்க இஷ்டமில்லாவிட்டால் ஒருவரும் கட்டாயப்படுத்தவில்லை. ஒன்றுமில்லாததற்கு அவன் என் ஓடவேண்டும்? அவன் ஒரு சிறுவன், சிறுபிள்ளைத்

னமாகச் செய்துவிட்டான்" என்று கூறினான். பின், பல தூதர்களை வெங்கோஜியிடம் அனுப்பியும் அவன் வரவில்லை. சிறிது காலத்திற்கெல்லாம் சிறை செய்யப்பட்டிருந்த மந்திரிகள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டு மரியாதையுடன் தஞ்சைக் கனுப்பப்பட்டனர். அவன் தஞ்சாவூரைப் படை யெடுப்பதில்லையென விட்டுவிட்டான். ஆரணியிலிருந்த கோட்டையும் அவன் வசமாயிற்று.

வெகு காலம் சிவாஜி மஹாராஷ்டிரத்திலிருந்து வந்துவிட்டமையாலும் உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் திரும்பிச் செல்ல விரும்பியதாலும் சிவாஜி நாடு நோக்கிச் செல்ல எண்ணினான். சிவாஜி அதையறிந்தவுடனே மூல பலத்தைப் புதிதாக வென்ற நாட்டிலேயே வைத்துவிட்டு நான்காயிரம் குதிரைப்படையுடன் புறப்பட்டான். கிழக்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து சுலபமாகத் தன் தந்தையின் ஜாகிரான கோலார், உஸ்கோடா, பெங்களூர், சேரா முதலியவைகளைக் கைப்பற்றிக்கொண்டான். பின், பல்லாரி, தார்வார் ஜில்லாக்களின் வழியாக 1678ம் ஆண்டு பன்ஹாலாவுக்கு வந்தான். வேலூர்க்கோட்டையும் பதினான்கு மாத முற்றுகைக்குப் பிறகு மராத்தியர்கள் வசமாயிற்று. இவ்விதம் ஜயித்த கர்நாடகத்திற்குத் தன் சகோதர முறையுடையவனான சாந்தாஜியையும் மைசூர்ப்பிரதேசத்திற்கு ரங்கநாராயணன் என்பானையும் பிரதிநிதிகளாக நியமித்தான்.

1677ம் ஆண்டு முடிவில் சிவாஜியின் படை கொள்ளிடத்தைக் கடந்து தஞ்சாவூரை யெதிர்க்க வாரம்பிக்கவே வெங்கோஜி அதனைத் தடுத்தான். பின், வெங்கோஜி நான்காயிரம் குதிரைப்படை ஆயிரம் காலாட்படையுடன் சிவாஜியின் படையை யெதிர்த்தான். சிவாஜி செஞ்சிப் பிரதேசத்தையும் சில கோட்டைகளையும் ணம்கூர் சம



வெளியையும் அடைவதென்றும், வெங்கோஜியும் கொள்ளிடத்திற்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தையும், வடக்குப் பிரதேசத்தையும் வைத்துக்கொண்டு வருடம் லக்ஷம் ரூபாய் இறைப்பணம் கட்டிவருவதென்று தீர்மானிக்கப்பட்ட உடன்படிக்கை ஏற்பட்டது.

# 18. இறுதிக் காலம்

மைசூர் சமவெளியை 1678ம் ஆண்டில் விட்டுச் சென்ற சிவாஜி துங்கபத்திரை நதியைக் கடந்து லக்ஷ்மீச்சுரத்தை யடைந்து அதைப் பிடித்துக்கொண்டு பேங்காப்பூரைப் பயமுறுத்தினான். அவன் அங்கிருந்து சேம்புகோன் சென்றுபின் பேல்வாடியை யடைந்தான். அங்குச் சாவித்திரிபாய் என்னும் இராணி சிவாஜியின் மாடுகளைப் பிடித்துக்கொண்டாள். அவளுடைய கோட்டையைச் சிவாஜி முற்றுகையிட்டான். அவளும் அதை இருபத்தேழு நாட்கள் வீரத்துடன் காத்தாள். பின், அதுவும் சிவாஜியின் வசமாயிற்று; அவளும் சிறைப்பட்டாள். ஆனால் ஒரு மண் கோட்டையை ஒரு பெண்ணிடத்திலிருந்து பிடிக்க அவ்வளவு கஷ்டமேற்பட்டது, அவனது மதிப்பைக் குறைத்தது.

சிவாஜி திரும்பிவந்ததும் பழையபடி நாடு முன்னேற்றமடைந்தது. கோபாலுக்கும் பன்ஹாலாவுக்கு மிடையிலுள்ள பிரதேசத்தை வென்று, சிவாஜி தன் கர்நாடக யுத்த வருமானமான மத்திய, கீழை மைசூர்ப் பிரதேசங்களைப் பழைய நாட்டுடன் சேர்த்துக்கொள்ளவேண்டிய தவசியமாயிற்று. கோப்பால் ஜில்லாவை ஹுசைன்கான்மியானு, காசிம்கான் என்னுமிரு ஆப்கானியர் வைத்திருந்தனர். 1677ம் ஆண்டில் பாஹிர்ராவ் அந்நாட்டைப் படையெடுத்தான்; ஹுசைன் எல்பர்க்காவில் அவனைச் சந்தித்துக் கடும்போர் புரிந்து தோல்வியுற்றான். போரில் நிகோஜி இறந்தானாயினும் ஹுசைன் சிறைப்பட்டான். சிவாஜி அவனைக் கோபால் கோட்டையை விட்டால் விடுதலை செய்வதாகக் கூறினான்; ஆனால் அவன் மறுத்தான். பின், இரண்டு வருடங் கழித்து விலைக்கு அக்கோட்டையை மராத்தியர்



களுக்கு விற்றுவிட்டு ஹுசைன் மராத்தியப்படையில் சேர்ந்துகொண்டான். கோபால் கோட்டை தெற்குப் பிரதேசத்திற்கு ஒரு வாயிலாகவுள்ளது. அஃதிருந்தால் துங்கபத்திரா தீரத்தையும், பல்லாரி, சிதலதுர்க்கம் முதலியவைகளையும் பிடிப்பது எளிது. பீஜபூருக்குக் கப்பங்கட்ட மறுத்த கனகக்கிரி, இராயதுர்க்கம், சிதலதுர்க்கம், வித்யாநகர் (பழைய விஜயநகரம்) குடிக்கோட்டை முதலிய பிரதேசங்களைச் சிவாஜி வென்று ஜனார்த்தன நாராயண ஹனுமந்தனை அவைகளுக்குப் பிரதிநிதியாக்கினான்.

சிவாஜியின் மூத்தகுமாரனான சாம்பாஜி இருபானோர் பிராயமுள்ள ஓர் இளைஞன். அவன் செய்ததோர் அடாத குற்றத்திற்காகச் சிவாஜி அவனைப் பன்ஹாலாக் கோட்டையில் சிறைசெய்தான். அவன், தன் மனைவி யசுபாயுடன் தப்பியோடி 1678ம் ஆண்டினிறுதியில் டேலிருடன் சேர்ந்துகொண்டான். சிவாஜி அவனைத் துரத்திச் சென்றும் பயனில்லை. அவன் வந்து சேர்ந்ததும் மராத்திய நாட்டின் இளவரசனைத் தன்பக்கத்தி லிழுத்துக்கொண்டதால் டேலிர் தக்காண முழுவதையும் தானே வென்றுவிட்டதாக மகிழ்ந்தான். அதனால் அவன் பீஜபூரைப் படையெடுப்பது சுலபமாயிற்று.

அவன் படையெடுப்பதை யுணர்ந்து மேசௌடு சிவாஜியின் உதவியை நாடினான். சிவாஜியும் ஆறேழாயிரம் குதிரைப்படையைப் பீஜபூர் காவலுக்கனுப்பினான். மொகலாயப் படைகள் பீஜபூருக்குள் வரவழைக்கப்பட்டன. பீஜபூர்ப் படை வெங்கடாத்திரி முராரியின்கீழ்ச் சிவாஜியை யெதிர்க்க அனுப்பப்பட்டது. அச்சமயம் மராத்தியர்கள் பீஜபூர்ப் படையைத் திடீரென எதிர்க்கப் பார்த்தனர்.

மராத்தியப்படை கர்கோமுக் கருகில் ஐராஜ்கானை யெதிர்த்து வெற்றிபெற்றது. 1679ம் ஆண்டினிடையில்

சிவாஜி ஔரங்கசீப்புக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் அவன் ஔரங்கசீப்பின் ஜஸ்யா வரியைப் பெரிதுங் கண்டித்து எழுதியிருந்தான்.

மராத்தியப்படை சிவாஜியின் தலைமையிலும் ஆனந்தராவின் தலைமையிலும் இரண்டாகப் பிரிந்து மொகலாயத் தக்காணத்தைக் கொள்ளையிட்டது. ஜால்னா என்னும் நகர் கொள்ளையடிக்கப்பட்டுச் சிவாஜியால் பிடிக்கப்பட்டது. அங்குச் சையத்சேன் முகமது என்னும் பக்கிரி குடிசையில் ஜனங்கள் புகுந்துகொண்டனர். அவர்களையும் சிவாஜி விடாமல் பிடித்துக் கொள்ளையிட்டமையின் அவர் சாபமிட்டார். அவர்கள் திரும்பி வருகையில் ரேண்மஸ்ட்கான் என்பான் பின்புறமாக எதிர்த்தான். அதற்கிடையில் ஔரங்கபாத்திலிருந்து ஒரு பெரும் மொகலாயப்படை வந்ததைக் கேசரிசிங் மூலமறிந்து சிவாஜி தப்பியோடிவிட்டான். பின், பட்டகார் வழியாக ரெய்கார் சென்று சிவாஜி அங்குச் சில நாளிருந்தான். பின், சிவாஜி பன்ஹாலாவைப் பல கோட்டைகளினின்றும் பீரங்கி முதலியவைகளைக் கொண்டுவந்து பலப்படுத்த ஏற்பாடுகள் செய்தான். அதற்குள் மற்றொரு படை காந்தாரதேசத்தைக் கொள்ளையடித்தது.

சாம்பாஜி பன்ஹாலாவுக்குத் திரும்பி வந்துவிட்ட செய்தியையறிந்து சிவாஜி சந்தோஷமுற்றான். ஆனால் சாம்பாஜியின் செய்கையும் குணமும் சிவாஜிக்கு வெறுப்பைத் தந்தன. ஆகையால் சாம்பாஜிக்குப் பதிலாக இராஜாராமையே யரசனாக்கவும் எண்ணினான். கடைசியில் தன்னாட்டையிரண்டாகப் பிரித்து மகாராட்டிரத்தைச் சாம்பாஜிக்கும், துங்கபத்திராவுக் கப்பாலுள்ள கர்நாடகத்தை இராஜாராமுக்குங் கொடுக்க எண்ணினான். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. தனக்குப்பின் தனது அரசு சீர்குலைந்துவிடுமோ என்னும் கவலைகொண்ட சிவாஜி குடிகளைத் தேசியவுணர்ச்சி



யோடும், தேசபக்தியோடும் இருக்கும்படி கேட்டுக்கொண்டான். சில தினங்களுக்கப்பால் அவனுடைய தேகம் அசௌக்கியமுற்றது.

1680ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23ம் தேதி சிவாஜி இரத்தக்கடுப்பால் துன்பப்பட்டான். அந்நோய் பன்னிரண்டு நாட்களிருந்தன. ஏப்ரல் மாதம் 4ம் தேதி ஞாயிற்றுக்கிழமை உச்சிவேளையில் (சித்திரைமாதப் பௌர்ணமியன்று) சிவாஜி உயிர்நீத்தான். முகமதியர்கள், ஜால்னா பக்கிரி சையத்சேன் முகமதின் சாபத்தா லிறந்தானென்றும், மராத்தியர்களிற் சிலர் தன் மைந்தன் இராஜாராமைச் சிம்மாசனத்தி லேற்றும்பொருட்டுச் சூரியாபாய் மருந்திட்டுக் கொன்றதாயும் கூறுகின்றனர். சாம்பாஜி சிம்மாசனமேறியதும் கணவனை மருந்திட்டுக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டிச் சூரியாபாயைத் தூக்குத் தண்டனை விதித்தான். ஆனால், சிவாஜி தன் ஆயுட்கால முழுவதும் தனக்கு விஷமிடப்படக்கூடுமென்று ஜாக்கிரதையாகவும், அதற்கு மாற்றுள்ள பண்டங்களையும் உபயோகித்தும் வந்திருந்தமையால் சூரியாபாய் அவ்விதம் செய்திருக்கமாட்டாளென்று கருதப்படுகிறது. அவள்மீது சாட்டப்பட்ட குற்றம் அவளைக் கொல்லும்பொருட்டுச் சாம்பாஜி செய்த கற்பனையாகவே யிருத்தல் வேண்டும்.

## 19. அரசியலும் குணாதிசயங்களும்

சிவாஜி இறக்கும் காலத்தில் அவன் நாடு, வடக்கில் இராம் நகரிலிருந்து தெற்கில் கார்வார் அல்லது கங்காவதி வரையில் (போர்ச்சுகிய நாட்டைத் தவிர மற்ற பாகங்கள்) பரவியிருந்தது. கிழக்கெல்லை பக்லானாவைப் பரவித் தெற்கில் திரும்பி நாசிக், பூனா ஜில்லாக்களின் மத்தியில் சதாரா ஜில்லா முழுவதையும் கோலாப்பூர் ஜில்லாவில் சில பாகத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இதுதான் 'மராத்திய ஸ்வராஜ்யம்' அல்லது பழைய நாடு எனப்படுவது. இத்துடன் சிவாஜி, பெல்காமிலிருந்து பல்லாரிவரையுள்ள மேல்கர்நாடகத்தையும் சேர்த்துக்கொண்டான். இந்நாட்டைச் செவ்வனே சிவாஜி அரசு புரிய அதை மூன்று பெரும் மாகாணங்களாகப் பிரித்தான். அவைகளில் முதன்மையானது வடக்கு மாகாணம். அது பக்லானா, சூரத்திற்குத் தெற்கேயுள்ள கோலோடு, பம்பாய்க்கு வடக்கேயுள்ள கொங்கணம் பூனாவிற்குத் தெற்கேயுள்ள தக்காணம் முதலிய பிரதேசங்களைக் கொண்டது. இந்நாட்டை மோரோ டிரிம்பக் பிங்கல் என்பான் ஆண்டுவந்தான். தெற்கு மாகாணம், பம்பாய்க்குத் தெற்கேயுள்ள கொங்கணம், சேமந்தவாடி, வட கன்னடக்கரை முதலியன அடங்கியது. அதை அண்ணாஜிதத்தோ ஆண்டான். தென்கிழக்கு மாகாணம் தக்காணத்தில் கோலாப்பூர், சதாரா ஜில்லாக்களும், கர்நாடகத்தில் பெல்காமும், துங்கபத்திராவுக்கு மேற்கேயுள்ள தார்வாரிலிருந்து கோபால்வரையுள்ள பிரதேசங்கள் அடங்கியது. அதைத் தாதாஜீபந்த் ஆண்டான். ஆனால் அதைத் தவிரக் கன்னட பலப்பிரதேசம் (தார்வாரின் தென்பாகமுட்பட) அவனால் ஜயிக்கப்பட்ட போதிலும் அவனாட்சிக்குட்படவில்லை. சிலர் கப்பம் கட்டிவந்தனர்.



அப்படிக் கட்டப்பட்ட கப்பங்கள் நிலவரி வருமானத்திற் கால்பாகமாக விருந்தமையின் அதற்குச் 'சவுத்' எனப் பெயர் வழங்கப்பட்டது. ஆகவே, சிவாஜியின் நாட்டில், அவனாலேயே கட்டப்பட்ட நூற்றுப்பதினொரு கோட்டைகளும் சென்னை மாகாணத்திலிருந்த எழுபத்தொன்பது கோட்டைகளும் சேர்ந்து, இருநூற்றுநாற்பது கோட்டைகளிருந்தன.

முதலில் அவனது படையில் 1200 பாகர்கள் எனப்படும் குதிரைப்படையும், 2000 சிலேதார் எனப்படும் குதிரைப்படை வீரர்களும் (Mercenary horsemen) இருந்தனர். ஜாவலிப் போருக்குப்பின் அப்படை 7000மும் 3000மும் ஆகப் பெருகிற்று. இத்துடன் 1000 மாவலிக் காலாட்படையுமிருந்தது. அப்சல்கானின் வீழ்ச்சிக்குப்பின் 7000 பாகர்களும், 8000 சிலேதார்களும், 12000 காலாட்படையுமிருந்தனர். அவன் இறக்கும்போது 45000 பாகர்களும், 6000 சிலேதார்களும், ஒரு லக்ஷம் மாவலி வீரர்களுமிருந்தனர். அவனிடம் 1260 யானைகளும் 3000 ஒட்டைகளுமிருந்தன.

அரசாங்கம் முதலில் தாதாஜி காலத்தில், பீஷ்வா, மேஜ்மௌதார், டேபிர், சப்னிஸ், எனும் நான்கு அமைச்சர்களால் நடத்தப்பட்டு வந்தது. 1647ம் வருடம் தாதாஜி யிறந்தவுடன் குதிரைத் தலைவனாக ஒரு சார்னிபவுட்டையும் மற்றொரு டேபிரையும் சிவாஜி நியமித்தான். அவன் ஜாவலி நாட்டை வென்ற பிறகு ஆட்சி யதிகரிக்கவே குதிரைப் படைக்கும், காலாட் படைக்கும் தனித்தனியே சார்னிஸ், வாக்நிஸ் எனும் இரு தலைவர்களைச் சேர்த்துக்கொண்டான் பின், ஆக்ரா சென்று வந்ததும் ஒரு பிரதம நியாயாதிபதியையும் நியமித்தான். ஆகவே அவன் முடி புனையுங் காலத்தில் எண்ணமைச்சர்களிருந்தனர். அவர்களுடைய கூட்-

டத்திற்கு அஷ்டப்பிரதானம் என்று பெயர். சிவாஜி மத விஷயத்தில் தலையிடுவதேயில்லை.

1. பிரதான மந்திரி (பார்ஸி, பீஷ்வா; சமஸ்கிருதம்:- முக்கியப்பிரதானி) நாட்டின் நன்மையை எக்காலத்திலும் கோருதலும், அரசனில்லாச் சமயங்களில் ஆட்சியை நடத்துதலும், இதர உத்யோகஸ்தர்களைப் பார்வையிட்டு அவர்களுள் சச்சரவேற்படாமற் காத்தலும், பொதுவில் அரசியலைக் கவனித்தலும் அவன் வேலை. எல்லாவித அரசு சாஸனங்களும் அவனுடைய முத்திரையைப் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

2. கணக்குப் பரிசோதகர் (பார்ஸி; மெஜ்மௌதார்; சம்ஸ்கிருதம்:—அமாத்யா) பொதுக் கணக்குகளைப் பரிசோதித்து, வருமானங்களையும் செலவுகளையும் பார்வையிட்டு, அரசனுக்குத் தெரியப்படுத்தி அரசாங்கக் கணக்குகளையும் ஜில்லாக் கணக்குகளையும் பரிசோதனை செய்து கையொப்பமிடல் வேண்டும்.

3. வர்த்தமான மெழுதும் மந்திரி (பா. வாக்கியநாவிஸ்; ச. மந்திரி) அரசனுடைய தினசரி நடவடிக்கைகளையும் அரசவைச் சங்கதிகளையும், அரசனின் உணவு முதலியவைகளையும் பரிசோதிப்பதும் அவன் வேலை. அரசனுக்குத் தீங்கு வராதபடி காப்பதே அவனுடைய முக்கியமான கடமை.

4. பரிசோதகன் (பா. ஷுருநாவிஸ்; ச. சசிவ) அரசாங்கக் கடிதங்கள் செவ்வனே யெழுதப்படுவதையும் [illegible] கணக்குகளைப் பரிசோதிப்பதும் அவன் வேலை.

5. வெளி நாட்டுக் காரியதரிசி (பா. டேபிர்; ச. சுமந்த்) அன்னிய நாட்டுச் சண்டை சமாதானம் முதலியவைகளில் அரசனுக்கு நீதி போதிப்பதும், பிறநாட்டைப்பற்றி விசாரித்தறிந்து வெளிநாட்டுத் தூதர்களை வரவேற்பதும் அவன் கடமை.



6. சேனாதிபதி (பா. சாரினயவுட்; ச. சேனாபதி) படைத்தலைமையே அவன் வேலை.

7. மதத்தலைவன். (பா. சடரும் முதாசிப்பும்; மராதி. பண்டிட் ராவும் தியார்க்ஷாவும்) நாட்டிலேற்படும் மதச் சண்டைகளைத் தீர்த்து, படித்தவர்களுக்குச் சன்மானஞ் செய்து, பஞ்சாங்கம் கணித்து, வழுவியவர்களைத் தண்டிப்பது அவன் கடமை. அவனே நாட்டின் நன்னடக்கையைக் கவனித்தல் வேண்டும்.

8. பிரதம நியாயாதிபதி. (பா. காசியுல்குலட்: ச. நியாயாதிபதி) இந்தச் சட்ட முறைப்படி வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறல் அவன் வேலை.

இவர்களில் சேனாதிபதி தவிர மற்றையெல்லோரும் பிராமணர்களாக இருந்தனர். கடையிருவர் நீங்க மற்றையோர் சண்டைக் காலங்களில் சண்டைக்குச் செல்லல் வேண்டும்.

ஒவ்வொரு கோட்டையும் சமமான நிலைமையுடைய, அவுல்தார், சப்னிஸ், சாரினபவும் என்னும் மூவர் வசமிருந்தது. மூவரும் சேர்ந்தே ஒரு காரியத்தைச் செய்யவேண்டியிருந்தமையாலும், அதில் மூவரும் வெவ்வேறு ஜாதியினராயிருந்தமையாலும் அவர்களே அரசனுக்கு விரோதமாகக் கலகஞ்செய்ய வியலாததாயிற்று. படையில் இருபத்தைந்து பேர்களுக்கு ஒரு அவுல்தாரும் ஐந்து அவுல்தாருகளுக்கு மேல் ஒரு ஜுமல்தாரும் பத்து ஜுமல்தாருக்கு மேல் ஒரு ஹசாரியுமிருந்தனர். அதற்கும் மேல் ஐந்து ஹசாரியும், அதற்குமேல் சாரினபவுட் என்னும் சேனாபதியுமிருந்தனர். ஜுமல்தார் வருடத்திற்கு நூறு பொன்னும், சாப்னிஸ் நாற்பது பொன்னும், ஹசாரி ஐந்நூறு பொன்னும் சம்பளம் பெற்றனர். படை சண்டைக்குச் செல்லும்பொழுது அவர்களுடன் பெண்கள் செல்லக்கூடாது. சண்டையில் குழ

ளைகளையும், பெண்பாலர்களையும் சிறைப்பிடிக்கக் கூடாது. பசுக்களைக் கவரக்கூடாது. அந்தணர்களை ஹிம்சிக்கக் கூடாது. வீரர்கள் அதர்ம மார்க்கத்திற் பிரவேசிக்கக் கூடாது. கொள்ளையிட்ட பொருள்களை யரசனிடம் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அத்தொகை சம்பளத்தினின்றும் வசூலிக்கப்படும்.

சிவாஜி நாட்டிலுள்ள நிலங்களை யளவிட்டு விளைவைக் கணக்கிட்டு ஐந்தில் மூன்று பாகத்தைக் குடிகளுக்குக் கொடுத்து இரண்டு பாகத்தையே வரியாகக்கொண்டான். வரியும் விளை பொருள்களாகவே அறுவடை காலத்தில் வசூலிக்கப்பட்டது. குடிகளிடமிருந்து தானே வரியை வசூலிக்கச் சிவாஜி முயன்றான். அதனால் மிராசுதார்கள் இடையிலடிக்குங் கொள்ளைகளை நிறுத்தினான். இவ்விதம் எழுபத்தைந்தாயிரம் முதல் லட்சத்து இருபத்தைந்தாயிரம் பொன் வரை வரி கிடைக்கும் பாகத்திற்கு நானூறு பொன் சம்பளத்தில் ஒரு சுபேதாரையும், நூறிலிருந்து நூற்றிருபத்தைந்துபொன் வரை சம்பளமுள்ள மேஜ்மௌதாரையும் நியமித்தான்.

சிவாஜி மதவிஷயத்தில் பிரவேசிக்காமல் நடுவு நிலைமையோடிருந்தான். எவ்வருணத்தாராயினும் சிவாஜி பெரியோரிடத்தில் பேரன்பு காட்டுபவன். அவன் எல்லோருக்கும் பெரும் பொருள்கள் கொடுத்தும் அன்னசத்திரங்கள் கட்டியும், வேத பாராயணஞ் செய்தவர்களைப் போஷித்தும் வந்தான். மகாராஷ்டிர நாட்டில் 1608-ம் ஆண்டு அவதாரம் செய்து 1681-ம் ஆண்டில் பரமபதமடைந்தவரான இராமதாஸ் சுவாமிகளை சிவாஜியின் குருவெனக் கூறலாம். அவரிடத்து அவரைக் காணாமலிருந்தபோதே சிவாஜிக்குப் பேரன்பும், சிறந்த பக்தியும் உண்டாயிற்று. 1673-ம் ஆண்டு சதாராவைக் கைப்பற்றியவுடன் சுவாமிகளைப் பார்லி அல்லது சஜன்கார் எனும் கோட்டையில் வரவேற்றுப் பக்தி



மிகுதியால் ஓர் ஓலைச் சுருளை அவர் பாதத்திலிட்டு வணங்கினான். அவர் அதைக் கண்ணுற்றுச் சிவாஜி தன்னாடு முழுவதையும் தனக்கர்ப்பணஞ் செய்ததற்கு வியந்து அதைத் திருப்பியவனுக்கே கொடுத்தார். ஆனால் சிவாஜி முன்னம் கொடுத்ததை மீட்டும் பெற விரும்பாமையின் சிவாஜியைத் தன் பிரதிநிதியாக நாட்டைக் காவல் புரியுமாறு வேண்டிக்கொள்ளச் சிவாஜியும் காவி வஸ்திரந்தரித்து அதுமுதல் நாட்டையாண்டதாக ஒருகதையுண்டு. அதற்குத் தகுந்த நிரூபணமில்லை. ஆயினும் அச்சம்பவமே சிவாஜியின் இந்துமதப் பற்றைத் தூண்டி இந்துமத முன்னேற்றமே தன் செய் கடமையாகக் கொண்டு புனருத்தாரணஞ்செய்ய முயல்வித்தது என்று கூறுவர். இந்து மதத்தை நிலைநாட்டும் பொருட்டே சிவபெருமான் சிவாஜியாக, இந்தியாவில் நாற்புறமும் கீர்த்தி விளங்க மத்தியில் அவதாரஞ் செய்த புண்ணிய புருடனெனவும் கூறுவர் சிலர். எவ்வகையினும் அக்காலத்தில் முகமதியர் இந்தியாவில் எங்கும் பரவித் தம் மத விருத்தியையே பெரிதெனக் கொண்டு இந்துக்களை வதைத்து வந்த காலத்தில் சமயசஞ்சீவியைப் போற்றோன்றியவன் சிவாஜி என்பதும், அவனுடைய மதப்பற்றே அவன் வெற்றிக்குக் காரணமென்பதும் ஐயமில்லை. இந்து மதம் பரவுமாறு ஏனையோரை யொப்பப் பிரசங்கங்களும், பிரயத்தனங்களும் செய்திலனேனும் இந்து மதத்தினர் பிறமதத்தில் புகுவதைத் தடுத்துக் கூடியவரைப் பிறமதந் தழுவியவர்களையும் திருப்பி இந்துக்களாக்கினான். அக்காலத்தில் அவன் தோன்றியிரானாயின் ஒரு சமயம் இந்து மதம் சீர்குலைந்து இந்தியா, முகமதியர் வசமாகி 'முகமதிய இந்தியா' எனப் பெயருடையதாயிருந்திருப்பினும் இருக்கும்.

இவ்விதமான பரந்த நோக்கத்துடன் அவன் உற்பவித்தானாயினும் எல்லாவற்றையும் அவன் எண்ணியபடி முடிக்க

யலவில்லை. கொள்ளையடிக்குங்கால் பலவாறு சட்ட விரோதமான காரியங்கள் நிகழ்ந்திருத்தல் கூடுமாயினும் அவன் ஒரே காலத்தில் பலவிடங்களிலுமிருக்க இயலாமையே யதற்குக் காரணம் ஆகும். அவனில்லாக் காலத்தில் நடந்தவைகளுக்கு அவன் உத்தரவாதமாகான். ஒரு நாட்டை ஸ்தாபனஞ் செய்யுங் காலத்தில் அவ்வித நிகழ்ச்சிகள் ஏற்படுவன இயல்பே. சூரத்தின் மொகலாயப் பிரதிநிதிக்கு "என் நாட்டையும் குடிகளையும் காக்கும்பொருட்டு உமது பாதுஷா என்னைப் படை வைத்துக் கொள்ளும்படி செய்து விட்டான். அதனால் அப்படைக்கு அவனுடைய குடிகளே சம்பளமீதல் வேண்டும்" எனச் சிவாஜி கடிதமெழுதியது பொருத்த முடைத்தேயாம். பீஜப்பூர், கோல்கொண்டா, கன்னடம், கர்நாடகம் முதலிய நாடுகளைக் கொள்ளையிட்டதற்கு முகாந்தரமில்லை. அது, மொகலாயரையும் மற்றையோரையும் அச்சுறுத்தாமலும், தன் தனியரசை நிலைநாட்டிக் கொள்ளுமாறும் செய்தமையின் ஏற்றுக்கொள்ளத் தக்கவையே. அதனாற்றான் பிற்காலத்தில் மொகலாயரிடத்தில் அச்சங்கொண்டவர்களுக்கு மகாராஷ்டிர அரசு ஓர் புகலிடமாயிற்று. ஔரங்கசீப்பும் சிவாஜியும் தனித்தனியே பெரிய அவதார புருடர்களேயாயினும் இருவரும் குணத்தில் முற்றிலும் எதிர் நடையானவர்கள்.

சிவாஜியின் ஆட்சி முறையைப்போல் இராஜதந்திரம் வாய்ந்த அரசாட்சி இந்தியாவுக்குப் புதுமையன்று. எல்லா இந்திய மன்னர்களும் ஆண்டு தோறும் படையெடுத்து நாட்டை விருத்தி செய்து கொள்வதைப்போல்தான் சிவாஜியும் செய்தான். பிறநாட்டுச் சமாசாரங்களிலும் அவன் முகமதியர்களைப்போல் நடந்தானாயினும், கொள்கையில் முகமதியர்கள் மற்ற முகமதிய நாடுகளின்மீது படையெடுக்கக் கூடாது; ஆனால் சிவாஜி அதுபோல் மற்ற இந்து நாடுகளின்மீது படை-



யெடுக்காமலிருக்கவில்லை. முகமதியர்கள் நாடுகளை ஸ்தாபனஞ் செய்தாற்போற்றான் சிவாஜியும் தன்னாட்டை ஸ்தாபனஞ் செய்தானேனும் அவர்கள் செலுத்திய அதிகாரத்தையவன் கைக்கொள்ளவில்லை. அவர்களுக்கு மாறாக அவன் மத விஷயத்தில் பிரவேசிக்காமல் எல்லோருக்கும் சமமாக நீதி செலுத்தினான்.

ஆனால் அப்படிப்பட்ட சீரிய நோக்கமும், பரந்த எண்ணமும், மதப்பற்றும், சுதந்திராபிமானமும் வாய்ந்த சிவாஜியும், அவன் பின் வந்தவர்களும் ஏன் ஒரு நிலையான தனியரசை ஸ்தாபிக்கவில்லை? ஏன் இந்துக்களை ஒன்று சேர்க்க முடியவில்லை? ஏன் தேசிய உணர்ச்சியையும் சுதந்திர தாகத்தையும் உண்டுபண்ணவில்லை? என்பன ஆலோசிக்கத் தக்கவைகளே. சிவாஜி மொகலாயருக்கு விரோதமாகக் கிளம்பித் தனியரசு நாட்டி ஆண்ட பத்து வருடங்கள் அவன் எண்ணத்தைப் பூர்த்திசெய்துகொள்ளப் போதியனவாயில்லை யென்பது ஒரு காரணமாயினும் அது உண்மையாகாது. அவனுடைய அரசு பீஷ்வாக்களின் காலத்துடன் முடிவடையாதிருக்குமென்று கூறுவது இயலாது. சிவாஜியும், பாஜிராவ் முதலாவானும் வெற்றியுடன் நாட்டை விருத்தி செய்து கீர்த்தி பெற்றது வைதீக இந்து மதத்தினர்க்கு உணர்ச்சியை யளித்தது. அதனால் சாதாரண மதப்பற்றுடைய மராத்தியர்களை ஒன்று சேர்க்கவும் வைதீக மதத்தைத் தழுவும்படி செய்யவும் இயலவில்லை. அதனால் அவர்களை வருத்தியே வைதீகத்தைத் தழுவும்படி செய்யவேண்டியதாயிற்று. ஒவ்வொருவரும் மற்றவர்களோடு சண்டையிடலாயினர். ஷாகித்திரி மலைக்குக் கிழக்கில் வசித்த அந்தணர்கள் மேற்கில் வசித்தவர்களை வெறுத்தனர். இம்மாதிரி பீஷ்வாக்களைத் தாழ்ந்த வமிசத்தினர்களாக எல்லோரும் கருதினர். எப்பொழுதும் 'மதம் பல்வேறு பிளவுபட்ட கக்ஷிகளாலேயே

வளர்கிறது.' ஆகையால் தேசிய ஒற்றுமைக்கு அது விரோதமாக முடிகிறது. பார்வைக்கு ஒன்றுபட்டவர்களாகக் காண்பித்துக் கொண்டாலும் உள்ளூற பொறாமையும் விரோதமுமே இருக்கின்றன. சிவாஜி அப்படிப்பட்டவர்களை யொன்று சேர்க்க முயன்றான். அவனுடைய முயற்சி வீணாயிற்று. இந்தியாவை பொறுத்த, உள்நாட்டுக் கலகங்களும், ஜாதி வேறுபாடும், மிகுந்துள்ள நாடுகளில் ஒற்றுமை ஏற்படுவது மிகவுமரிது. சிவாஜியின் காலத்திலும் பேஷ்வாக்களின் காலத்திலும் படிப்பின் விருத்தியும், ஜனங்களை ஒன்றுசேர்க்கும் முயற்சியும், சமூகச் சீர்திருத்தமும் செவ்வனே நடைபெறவில்லை. அரசியலும் நிலைபெற்றதாயிருக்கவில்லை.

அக்காலத்தில் நிலத்தைத் தவிர மற்றைப் பொருள்கள் நிலைபெற்றனவாகா. அந்நிலமும் காற்று மழை முதலியவைகளால் நாசமடைந்தன. புதிதாக வெற்றிபெற்ற மன்னர்களும் அந்நிலத்தைப் பழைய குடிகளுக்கே கொடுத்துப் பழைய மிராசுதார்களையே வரி வசூலிக்க நியமித்தனர்; அதனால் அம்மிராசுதார்கள் முறையே தலைமுறை தலைமுறையாக அந்நிலங்களின் ஓர் பகுதிக்கு உரிமையுடையவராயினர். நில உரிமை வழக்குகள் எங்கும் விருத்தியடைந்தன. அக்காலத்தில் சிவாஜி அவ்வுரிமைகளை விசாரித்து நீதி செலுத்த வேண்டியதாயிற்று. வழக்கு விரோதமாக முடிந்தவர்கள், சிவாஜியின் விரோதிகளுடன் சேர்ந்துகொண்டு சிவாஜியின் அரசையே எதிர்க்கலாயினர். அக்காலத்தில் ஒருவருக்கும் தேசிய உணர்ச்சியும், பொதுச் சட்ட திட்டங்களும் கிடையா. மற்றொரு காரணம் என்னவென்றால் ஒரு வகுப்புக்குள்ளேயே பற்பல ஜாதியார்களிருந்ததால், அவர்களுள் ஒற்றுமையும் பொது நோக்கமும் இல்லாமற் போயின.



சிவாஜி தன் ஆயுட்கால முழுவதும் சிறந்த ஒழுக்கமுடையவனாக விருந்தான். அவன் தாய் தந்தையரிடத்தில் பக்தியும், மைந்தர்களிடத்து அன்பும், மனைவிகளிடத்துக் காதலுமுடையவன். அவன் இந்து மதத்தில் பேரன்பும், வைதீக ஒழுக்கமுமுடையவன். அவன் குற்றமற்றவனாகவும் பெரியோரிடத்துப் பக்தியுடையவனாகவும், வேத புராணங்களைக் கேட்பதில் ஆசையுடையவனாகவுமிருந்தான். மதத்தில் பேரன்புடையவனாயினும், பிறமதங்களை நிராகரித்தவனல்ல. அவனிடத்துப் பிறவி வீரனுக்குரிய கண்டவர் மனத்தைக் கவரும் வசீகர சக்தியுமிருந்தது. பிறருடைய குணதிசயங்களைக் கண்ட மாத்திரத்தி லறிந்துகொள்ளும் நுண்ணறிவும் சிவாஜியிடமிருந்தது. போர் செய்வதில் பெருந்திறமையை இயற்கையாகப் பொருந்தப் பெற்றவன் சிவாஜி.

சிவாஜியின் உண்மையான பேரறிவையும், ஆற்றலையுமறியவேண்டுமாயின், அவனுடைய வெற்றிகளாலும், நாட்டாலும் செல்வத்தாலும் மாத்திரம் அறிய முடியாது; ஆனால் அவன் கீர்த்திபெற்ற காலநிலைமையை யறிந்தாற்றான் அவனுடைய பெருமையை யறிதல் இயலும். அவன் இந்தியாவின் மத்திய கால சரித்திரத்தில் ஒரு புதுமையைத் தோற்றுவித்தான். அவனுக்கு உதவி புரிய அப்பொழுது ஒருவருமில்லை. அவன் சுயேச்சை யுற்றபொழுதுதான் மொகலாய அரசு அதனுடைய முழு பலத்தை யடைந்திருந்தது. அப்பொழுது விரோதமாகக் கிளம்பிய சுதேசத் தலைவர்கள் மொகலாயரால் நாற்புறத்திலும் அடக்கப்பட்டனர். அக்காலத்தில் ஒரு சிறிய ஜாகீர்தாரின் புதல்வனான சிவாஜி கிளம்பிச் சுயேச்சையுற்றுத் தன் ஸ்வராஜ்ய ஸ்தாபனஞ் செய்தது உண்மையாகவே ஒரு புதுமைதான். அவனுடைய வெற்றிக்குக் காரணம் முதலில் அவன் தன்னால் இவ்வளவுதான் செய்யக்கூடுமென்பதை யறிந்திருந்தமையே. அவன்

தன் பலம் எவ்வளவு, தான் எதுவரை முன் செல்ல முடியும் எங்கு நிற்கவேண்டும், எவ்விதம் செய்தால் வெற்றியுறலாம் என்பனவற்றை யறிந்திருந்தான்.

"கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைவலியும் வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும்"

என்னும் முன்னோர் மொழியை அவன் பொன்னேபோல் தழுவி வந்தான். அவைகளைச் செவ்வனே அறிந்திராமையாலேதான், அவன் மகன் சாம்பாஜி வெற்றியுறாமல், சிவாஜியின் ஜீவிய காலவேலை முழுவதையும் சிதைவுறும்படி செய்தான். சிவாஜியின் வெற்றிக்குக் காரணம், அவனுடைய உத்யோகஸ்தர்களைக் கண்ட மாத்திரத்தில் அவர்கள் குணநிசயங்களைப் பகுத்தறியும் தெய்வீகப் பிறவிக்குணம் பெற்றிருந்ததேயாகும். எல்லோரும் அவனிடம் அன்புகொண்டிருந்தமையாலும், அவன் எல்லோரையும் சமமாகப் பாவித்து, எவ்வருணத்தாராயினும் படித்தறிந்தவர்களுக்கே உத்தியோகங்களை அவன் வழங்கியமையாலும் அவனுடைய ஆட்சி சீரும் சிறப்புமுற்று விளங்கியது.

காலம் வீரர்களைத் தோற்றுவிக்கின்றது. பற்பல காலங்களில் பற்பல வீரர்கள் தோன்றியுள்ளனர். ஆனால் அவ்வாறு தோன்றிய வீரர்கள் அனைவரும் தம் அருந்தொண்டுகளை ஆற்றிப் பேரும் புகழும் அடையவில்லை; சிலரே அடைந்துள்ளனர். அதற்குக் காரணங்கள் பல. காலத்தில் தோன்றிய வீரர்கள் காலத்தை நன் முறையில் உபயோகிக்காதிருந்ததே முக்கிய காரணம். சிவாஜியும் தக்கநேர காலத்தில் தோன்றியவனே. அவன் காலத்தை யறிந்து நன் முறையில் காலத்தைப் பிரயோஜனப்படுத்தி வந்தான் என்பதை இரண்டொரு உதாரணங்களால் விளக்குவோம்.



மொகலாயவரசு அக்பர் காலத்தில் வலிமை பெற்றுத் தக்காணத்தையும் கவர்ந்து கொண்டது. வட நாட்டிலும் தக்காணத்திலும் மொகலாயர் வலிமையுற்றிருந்தனர். ஆனால் அவர் காலத்தில் இந்துக்களும், முகமதியரும் ஒற்றுமையாகவிருந்தனர். பின்னர், ஷாஜஹான் காலமுதல் வலிமைபெற்றிருந்த மொகலாய வல்லரசு பல்வேறு காரணங்களால் வலிமை குன்ற க்ஷீண தசையை யடையலாயிற்று. ஒவ்வொரு மொகல் மன்னனும் அரசாட்சியைப் பெறத் தந்தையோடு பகைத்துங் கொன்று அரசியலைப் பெற்றுள்ளான். அக்பர் காலத்தில் இருந்த அமைச்சர்களைப்போல் மற்ற மொகல் மன்னர்கள் காலத்தில் அரசனை நன்னெறிப் படுத்தி அரசியலைச் செவ்வனே நடத்துவிக்கும் அமைச்சர்களும் இலராயினர். மற்றும், மதப்பற்று மிக்கு வளர வளர, மொகல் மன்னர் இந்துக்களிடத்தில் வெறுப்புக்கொண்டனர். அதனால் விளைந்த தீங்குகள் பல. சிவாஜியின் காலத்தில் இருந்த மொகல் மன்னன் ஔரங்கசீப். அவன், தான் அரசைப் பெறும் பொருட்டுத் தம்பி தமையன்மார்களையும் தந்தையையும் கொன்றவன். அவன் கொண்டிருந்த மதப்பற்றோ இத்தகையதென்று கூற முடியாது. அரச இன்பங்களை வெறுத்துப் பக்கிரிபோலக் காலங் கழிப்பதென்னும் உறுதியுடன் தன் வாழ்க்கையை நடத்தி வந்தவன் ஔரங்கசீப். ஔரங்கசீப் காலத்திற்குச் சற்று முன்பாகவே இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் இருந்த ஒற்றுமை குலைந்து போயிற்று. ஆகவே இந்துக்கள் அதுமுதற் கொண்டே விடுதலையடைய முயற்சி செய்துவந்தனர். ஔரங்கசீப் காலத்தில் அக்கொள்கை முதிர்ச்சி பெற்றுக் கரும நிலையில் வந்தது.

பீஜபூர் சுல்தான் ஷாஜியைச் சிறை செய்தது சிவாஜிக்குச் சுதந்திரதாகத்தை மிகுவித்தது. அவன் ஷாஜியைச்

சிறை செய்யாமல் சிவாஜிக்குப் பெரும் பதவியை அளித்திருப்பானாயின் சிவாஜியின் சரித்திரம் முற்றிலும் மாறுபட்டிருக்கும். ஔரங்கசீப் சபைக்குச் சிவாஜி சென்றான். அக்காலத்தில் ஔரங்கசீப் அவனுக்குத் தகுந்த மரியாதைகள் செய்து பெரும்பதவியை யளித்திருந்திருப்பினும் சிவாஜியின் சரித்திரம் மாறுபட்டிருக்கக்கூடும். அக்காலங்களில் முகமதியர்கள் நடந்துகொண்ட நடத்தை சிவாஜிக்கு வெறுப்பைத் தந்ததால் அவன் தனியரசு நாட்டத் தலைப்பட்டான். அக்கொள்கை நாளடைவில் அவன் மனத்திலும் வேரூன்றவே அவன் காலத்தை வீணாக்காமல் கருமமே கண்ணாக இருந்தான்.

முகமதியர்கள் தங்கள் மதத்தைப் பரவச் செய்தற்கு வேண்டிய உபாயங்களைப் புரிந்துவந்தனர். சிவாஜிக்கு அவை வெறுப்பைத் தந்தன. அதனால் வைதீக மதம் எங்குச் சீர்குலைந்துவிடுமோ என்னும் அச்சம் அவன் மனத்தைப் புண்படுத்தியது. ஆகவே, சிவாஜி வைதீக மதத்தை நிலைநாட்டவும், இந்துக்களை முகமதியர்களின் கொடுமைகளினின்று தப்புவிக்கவும், காலத்தில் தோன்றிய அவதார புருஷனாய்க் காலத்தை வீணாக்காமல் பாடுபட்டு வந்தான்.

ஆகலால், சிவாஜி, தன் நாட்டைப் பேர்முனையிலேயே ஆண்டு வந்தான். அல்லாவுதீன்கில்ஜியைப் போன்றேனும் தைமூரைப்போன்றேனும், சண்டையிட்டுக் கொள்ளையடித்துக்கொண்டு நீதி செலுத்தியவனாகக் கருதவியலாது. அவனிடம் பற்பல அருங்குணங்களும், சீர்திருத்தங்களும் இருந்தும் அவனுடைய குறுகிய ஆட்சிக்காலத்தில் அவைகளை நிறைவேற்ற முடியவில்லை. அன்றியும் அவன் விரோதிகளை யடக்குவதிலேயே கருத்தாயிருந்தமையின் அப்போர்களின் பயனை அவன் ஆட்சிமுறையில் ஏற்ற காலத்தில் அடைய முடியவில்லை. ஆனால், நாட்டில் இந்துக்களுக்குப் புத்தம்



புது உணர்ச்சி உண்டாக அவனே காரணமாக இருந்தான் என்பது பொய்யாகாது. அவன் தேச உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி முகமதியர் ஆட்சியில் வெறுப்பைத் தோற்றுவித்து இந்துத் தனியரசை நிலைநாட்ட அடிப்படை போட்டவன் என்றே கூறவேண்டும். அவ்வுணர்ச்சியே மக்கள் மனத்தில் வேரூன்றிப் பதிந்தது. அதனால் விளைந்த நன்மை மோகலாய வல்லரசின் வீழ்ச்சியே ஆகும் என்பதைச் சரித்திர நூலாராய்ச்சியுடையார் நன்குணர்வர். ஆனால் அவன் அதை அனுபவிக்கவில்லை. அவனுடைய ஆட்சியிலும் சரித்திரத்திலும் முக்கியமாக உணரவேண்டியது யாதெனின் அவன் தன் மக்களுக்குச் சுதந்தரப்பற்றையும், தேசிய உணர்ச்சியையும் ஊட்டினானென்பதே.

நம் நாட்டை முன்னேற்றமடையச் செய்த மன்னர்களில் அவனே கடைசியானவன். அவன், மற்ற பெரும் மன்னர்களாய் விளங்கிய இரஞ்சித்சிங், அக்பர், ஷர்ஷா முதலியவர்களைப்போல் படிப்பற்றவனாயிருந்தும், அவன் படைத்தலைமை வகிப்பதற்கும் ஒரு நாட்டை நல்வழியில் செங்கோல் செலுத்தி ஆள்வதற்கும், பேர் முனையில் வீரத்தைத் தோற்றுவிப்பதற்கும், தன் கருத்தை எவ்வகையினும் நிறைவேற்றிக் கொள்வதற்கும் போதிய நுண்ணறிவு வாய்க்கப்பெற்றிருந்தான்; சிதறுண்டு கிடந்த மக்களை ஒருங்குச் சேர்த்தான். அன்றியும் மொகலாயரையும் பீஜபூரிகளையும் கண்டு நடுக்கமுற்று எதிர்த்து நிற்க அஞ்சியிருந்த இந்துக்களுக்கு, அவன் எதிர்த்து வெற்றிகொண்டு, இந்துக்களும் அவர்களையெதிர்த்துச் சுதந்தரமடையக் கூடுமென்பதை யுணர்த்தினான். இந்துக்களுக்கும் ஒரு நாட்டையாளும் வன்மையுண்டென்பதை அவன் நிலை நாட்டினான். இந்து மதம் அழிவடையவில்லையென்றும், அது மறுபடியும் தழைத்தோங்குமென்பதையுமறிவித்தான்.

இத்தகைய அரும்பெரும் கொள்கைகளையும், சிறப்பையும் அடைந்த நம் பாரத மணியான சிவாஜியின் சரிதையை நாம் அவனுடைய பக்த நோக்கம், பொது ஜன ஊழியம், தேசியப்பற்று, சுதந்திராபிமானம், அடிமைத்தன்மையை வெறுத்தல், மதாபிமானம், முதலியவைகளைத் தழுவி யோசிப்போர்க்கு அதன்படி நடக்க அவ்வித உணர்ச்சிகளைப் பெறுவோமாயின் நம் பரதகண்டம் அடிமை நீங்கிச் சீரும் சிறப்பும் எய்தி விளங்குமென்பதற் கையமில்லை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று".

முற்றிற்று

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக

Printed at the T. V. C. Press Madras, 31-8-'32